கல்கி அறக்கட்டளை சொற்பொழிவுகள் 1973–74

# தமிழ் இதழ்கள்

ஆசிரியர் :

சோமலெ

சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு

1975

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை
வெளியீடு :

முதற் பதிப்பு— 1975.

167471

© சென்னைப் பல்கலைக் கழகம்

விலை ரூ. 10/-

இரத்தினம் அச்சகம்,
சென்னை-1.

The Kalki Endowment Lectures
1973-74

# A SURVEY OF THE TAMIL PRESS

DR. T. P. M. LIBRARY
MADURAI KAMARAJ UNIVERSITY

SOMALAY

16-09

UNIVERSITY OF MADRAS

1975

# பொருளடக்கம்


அணிந்துரை—துணைவேந்தர் அவர்கள்

முதற்பொழிவு 1

இரண்டாம் பொழிவு 39

மூன்றும் பொழிவு 56

**பிற்சேர்க்கை**

I A Brief Survey of the Tamil Press i

II European Impact on Tamil Journalism x

III Tamil Literary Journals xi

IV செய்தித்தாள்கள் xxi

V பத்திராதிபர்களின் தமிழ்த்தொண்டு xxx

VI தமிழ்ப் பத்திரிகைகள் xxxvii

VII கடந்த கால் நூற்றுண்டுக்காலத்தில் தமிழ் இலக்கியப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும் l

VIII தமிழில் செய்தி இதழ்கள் lv

IX தகவல் சாதனங்களில் மொழிபெயர்ப்புச் சிக்கல் lxi

X குழந்தைகளுக்குப் பத்திரிகை lxviii

XI பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்களின் கருத்து lxxi

XII தமிழ் ஏடுகள் கணக்கிடும் வகைகள் lxxii

XIII சில பழைய இதழ்களைப் பற்றிய விவரங்கள் lxxiii

| | | |
|---|---|---|
| XIV | மறைமலையடிகள் நூலகத்திலுள்ள இதழ்களின் தொகுதிகள் | lxxxi |
| XV | தமிழ் இதழ்கள் பட்டியல் | lxxxiii |
| XVI | தமிழ் நாளிதழ்களின் பட்டியல் | lxxxvii |
| XVII | தரமோ தரம்! | lxxxviii |
| XVIII | S. A. P. Annamlai | lxxxix |
| XIX | எஸ். ஏ. பி. | xc |
| XX | சேலம் மாவட்டத்தில் வெளிவந்த இதழ்கள் | xci |
| XXI | நூல் விவரப் பட்டியல் | xcii |
| XXII | தினத்தந்தியின் 25 ஆண்டுப்பணி | xcv |
| XXIII | நாள்தாள் எழுத்தாளர் கையேடு | xcviii |
| XXIV | பாரதியார் பத்திரிகைக்கு சந்தா ! | ciii |
| XXV | ஏ. பி. சி. சர்டிபிகேட் | ciii |
| XXVI | பொருட் குறிப்பு அகராதி | civ |
| | திருத்தம் | cv |
| | கடைசிச்செய்தி | cvi |
| | நன்றி | cxv |
| | தினத்தந்தி — A. B. C. Certificate | cxvi |
| | குமுதம் ,, ,, | |

# அணிந்துரை

கல்கி அவர்கள் இக்காலத் தமிழ் உரைநடைக்கு, குறிப்பாக வரலாற்று நாவலுக்கு அருந்தொண்டாற்றிய பெருந்தகை. தேசப்பற்று மிக்கவர். அவரது பேச்சில் அறிவொளியும் நகைச்சுவையும் இழைந்தோடக் கண்டோம். தமது எழுத்துவன்மையால் தமிழ்த்தாயின் பொலிவையும் வலிவையும் மேலும் வளர்த்தவர் அவர். அன்னாருடைய நினைவாக, சென்னைப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள அறக் கட்டளையின் சார்பில் ஆண்டுதோறும் தக்காரைக்கொண்டு சொற் பொழிவுகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இந்த வரிசையில் 1974ஆம் ஆண்டுக்கான கல்கி நினைவுச் சொற்பொழிவுகளை, எழுத்துலகத்தோடு தொடர்பு கொண்டவரும் கல்கி அவர்களோடு நெருங்கிப் பழகியவருமான திரு. 'சோமலெ' அவர்கள் ஆற்றியுள்ளார்கள்.

தமிழ்ப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும், அப் பத்திரிகைகள் எந்த அளவிற்குத் தமிழ் நடையை உருவாக்கியுள்ளன, காலத்திற்கும் தேவைக்கும் ஏற்ற அளவில் தமிழ்நடையில் எத்தகைய மாற்றங்களை அவை மேற்கொண்டுள்ளன என்பன போன்றவற்றை விரிவுரையாளர் அவர்கள் வகைப்படுத்திச் சுவையுடன் பேசியுள்ளார்கள். குறிப்பாக, கட்டுரை, கவிதை ஆகிய பல்வேறு துறைகளிலும் பலரை எழுதத்தூண்டிப் பல இலக்கிய கர்த்தாக்கள் தோன்றுவதற்கு எந்த அளவிற்குப் பத்திரிகைகள் உதவியிருக்கின்றன என்பதையும், பொதுமக்களிடம் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டி அரசியல் பொருளாதார நுணுக்கங்களை அவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் பத்திரிகைகள் ஆற்றிய தொண்டு எவ்வளவு அருமையானது என்பதையும் இவ்வுரைகளில் விளக்கியிருப்பதைக் காண்கிறோம்.

நாளிதழ், வார இதழ், மாத இதழ் முதலான பலவகைப்பட்ட இதழ்களோடு தொடர்புள்ள தமிழ்த் தென்றல் திரு. வி. க., திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர், டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, பெரியார் ஈ. வே. ரா., திரு. டி. எஸ். சொக்கலிங்கம், கல்கி உள்ளிட்ட பல எழுத்தாளர்கள் ஆற்றிய அரும் பணிகள் பாராட்டப்பட்டுள்ளன. அன்றியும் இலக்கிய இதழ்கள், ஆராய்ச்சி இதழ்கள், கவிதை இதழ்கள், சமய இதழ்கள், பொது அறிவு இதழ்கள், திரட்டு இதழ்கள் என்ற தலைப்புகளிலும் தமிழ் நாட்டில் பத்திரிகை உலகம் ஆற்றிய தொண்டுகள் ஆராயப்பெற்றுள்ளன. தமது ஆய்வின் பயனாகத் தோன்றிய சில கருத்துகளையும் தேவைகளையும் ஆங்காங்கே வெளியிட்டு அனைவரையும் சிந்திக்கத் தூண்டியிருக்கிறார் திரு. 'சோமலெ'.

பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ள திட்டப்படி நூல் வடிவில் இவ்வுரைக்கோவை இப்போது வெளியிடப்படுகிறது. இந் நூலோடு தொடர்புள்ள-பயனுள்ள சில சேர்க்கைகள் இறுதியில் இணைக்கப் பட்டுள்ளன. தமிழ் நடை வரலாற்றில் பத்திரிகைகளின் பங்கு கணிசமானது என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடியது. ஆகவே தமிழ் உரைநடை வரலாற்றை அறிய விரும்புவோருக்கு இந் நூல் மிக்க பயனை அளிக்கும் என நம்புகிறேன்.

சென்னை
—4—1975

நெ. து. சுந்தரவடிவேலு
துணைவேந்தர்.

DR. T. P. M. LIBRARY. MADURAI KAMARAJ UNIVERSITY

# தமிழ் இதழ்கள்

## முதற்பொழிவு

அன்புக்குரிய தலைவர் அவர்களே! கல்கி அவர்களின் அருமை மகன் திரு. ராஜேந்திரன் அவர்களே! உள் நாட்டிலிருந்தும் வெளி நாட்டிலிருந்தும் வந்திருக்கும் ஆராய்ச்சியாளர்களே, நண்பர்களே!

அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ்த்துமாறு சென்னைப் பல்கலைக் கழகம் என்னைக் கேட்டுக் கொண்டதற்காக, பல்கலைக் கழகத்தாருக்கும், ஆட்சிக் குழுவினருக்கும், அறக்கட்டளைச் சொற் பொழிவாளரைப் பரிந்துரைக்கும் குழுவிற்கும், தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களுக்கும் என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக இந்த அறக்கட்டளைச் சார்பில் பேசுவதில் மகிழ்ச்சி யடைகிறேன். அதற்குக் காரணம் கல்கி அவர்கள் என்பால் பேரன்பு கொண்டிருந்தார்கள். அவர்களுக்கும் எனக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. 'கல்கி' இதழின் சிறப்பு நிருபராக, ஜவஹர்லால் நேருவுடன் நான் சீனாவுக்குச் செல்ல வேண்டுமென்று அவர் விரும்பினார். அவருக்குப் பின்னர் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவர் பதவியை யானே வகிக்கவேண்டுமென்றும் அவர் விரும்பினார்.

கல்கி அவர்கள் இறந்த இருபதாம் ஆண்டில் அப்பெருந் தகைக்கு அஞ்சலியும் வணக்கமும் செலுத்தும் வாய்ப்பு எனக்கு வழங்கப் பெற்றிருப்பதை ஒரு பெருமையாகவே கருதுகிறேன்.

இந்தத் தலைப்பில் பேச நான் ஒரு பத்திரிகைக்காரன் அல்லன். எந்த இதழையும் நான் நடத்தியதும் இல்லை. "நீங்கள் ஏன் ஒரு பத்திரிகை தொடங்கக் கூடாது?" என்று பலர் கேட்கிறார்கள்.

தொடங்கி மூடுவதை விடத் தொடங்காமல் இருப்பதே சாலச் சிறந்தது. பத்திரிகை நடத்துவதில் உள்ள இடர்ப்பாடுகளை, நேரமிருந்தால் கடைசி நாளில் விளக்குவேன். இப்போது ஒரு கதை மட்டும் சொல்லுவேன்.

ஒருவன் பெரிய கோடீசுவரனாக இருந்தான். பணத்தை எப்படிச் செலவு செய்வது என்று அவனுக்குத் தெரியவில்லை.

கோயில்கள் கட்டினுன். அதிலும் அவன் செலவு செய்ததற்கு மேல் உண்டியலில் பணம் சேர்ந்தது. குளங்கள் வெட்டினுன். அவற்றிலிருந்து புதையல் கிடைத்தது. கல்விச் சாலேகள் நிறுவினுன். அவற்றையும் அரசாங்கம் எடுத்துக்கொண்டு நஷ்ட ஈடு கொடுத்தது. இவ்வாறு அறச் செயல்கள் செய்துங் கூட அவனுடைய பணம் குறையவில்லே.

தேர்தலுக்கு நின்ருன். அதில் கூட அவனுடைய பணத்தில் ஒரு பகுதிதான் அழிந்தது. குதிரைப் பந்தயத்துக்குச் சென்ருன். அவன் கட்டிய குதிரைகள் எல்லாம் வெற்றி பெற்றன.

பிறகு சூதாட்டமான பல தொழில்களேச் செய்தான். ஒன்றிலும் அவன் பணம் கரையவில்லே.

கடைசியாக விளம்பர ஆசை மேலிட்டு, ஒரு பத்திரிகையைத் தொடங்கினுன். பத்து ஆண்டுகளில் பணம் முழுவதும் காலியாயிற்று.

'ஆனந்த விகடன்' ஆசிரியர் எஸ். எஸ். வாசன் ஒரு நாளிதழ் தொடங்க எல்லா ஏற்பாடும் செய்து, கடைசியாக அம் முயற்சியைக் கைவிட்டார்.

சன்மார்க்கத் தலேவர் வள்ளல் மகாலிங்கம் அவர்கள் பத்திரிகை நடத்த இயந்திரங்கள் வாங்கிக் கட்டடம் கட்டி ஊழியர்களும் நியமித்த பிறகு, பின்வாங்கினுர்.

கலேத்தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியார் கதையைச் சொல்லவும் வேண்டுமோ? இந்தியாவெங்கும் உள்ள ஆலே அரசர்கள் வியப்படையுமாறு 16 ஆலேகள் நடத்தியவரால் ஒரு நாளிதழைச் செம்மையாக, லாபமாக நடத்த இயலவில்லே.

எனவே கற்பனேயாக நான் ஒன்றும் சொல்லவில்லே. எத்தனேயோ பத்திரிகைகளின் வரலாற்றை வைத்து இவற்றை என்னுல் நிலே நாட்ட முடியும். ஆனுல் நடந்துகொண்டிருக்கும் பத்திரிகைகளின் பெயர்களேச் சொல்லுவது பொருத்தமல்ல. மாத இதழ்கள் பலவற்றின் நிலேயும் இதுவே.

எனவே நான் எந்த இதழையும் தொடங்கவில்லே. தமிழ் நாட்டில் மாஜி மன்னர் ஒருவர் (புதுக்கோட்டை) உள்ளார். மாஜி நீதிபதிகள் 20 பேர் உள்ளனர். மாஜி மந்திரிகள் 50 பேர் உள்ளனர். மாஜி ஜமீன்தார்கள் 300 பேர் உள்ளனர். மாஜி ஆசிரியர்கள் 500 பேர் உள்ளனர்.

எடுத்துக் காட்டாக, காலஞ்சென்ற திருலோக சீத்தாராம் என்ற எழுத்தாளரைப் பற்றிச் சொல்லுவேன். இவர் 36 ஆண்டுகள் சொந்தப் பத்திரிகைகள் நடத்தினர்.

லாப நஷ்டம் பாராமல் காங்கிரஸ் பிரச்சாரத்துக்காக நாட்டு நன்மை ஒன்றையே நோக்கமாகக் கொண்டு துறையூர் இந்திய வாலிபன், விழுப்புரம் பாலபாரதம், ஆர்க்காடு தூதன் இப்படி பல பத்திரிகைகளைப் பல ஊர்களிலிருந்து நடத்தினர். ஒவ்வொன்றும் ஓராண்டு இரண்டு ஆண்டுகள்தான் நடந்தது.

கடைசியாக அவர் விட்டுச் சென்றது 'சிவாஜி' இதழும் 50,000 ரூபாய் கடனும்தான்.

இப்போதும் பத்திரிகைத் துறையில் பலர் பயிற்சியில்லாமல் பலர் ஆரம்பித்துப் பத்திரிகைகளை நடத்துகிறார்கள். கட்டுரை யாளருக்குப் பணம் கொடுப்பது கிடையாது.

வருவாயைப் பற்றிப் பத்திரிகைக்காரர்கள் கவலைப்படாத தேசிய உணர்ச்சி நிறைந்தது முன் காலம். மக்களுக்கு அறிவுரைகளைத் தொகுத்துக் கொடுப்பதே தங்கள் கடமை என்று அவர்கள் எண்ணிப் பொருளாதாரக்கண்ணோட்டத்தை மறந்தனர்.

குறிப்பிட்ட பத்திரிகைக்கு என்று வாசகர் இருப்பது மிகக் குறைவு. முன்பு எல்லாம் சந்தாக் கட்டணம் குறைவு. அதுவும் வராது. ஆகையால் ஆயுள் சந்தாவாக வசூலித்தார்கள். சந்தாதார்களுடைய ஆயுள்வரை பத்திரிகை அனுப்பப்படும் என்பது கருத்து. ஆனல் உண்மையில் பத்திரிகைகளின் ஆயுட்காலத்திற்கே அனுப்பப் பட்டது. காரணம், மூன்று ஆண்டுகளுக்குக்கூடத் தொடர்ந்து ஒரு பத்திரிகையை நடத்துவது அரிதாக இருந்தது.

தமிழ் இதழ்களின் வரலாறு பெரிது. அதைப்பற்றிப் பேசக் குறைந்தது பத்து நாட்கள் வேண்டும். 'விருந்தும் மருந்தும் மூன்று நாள்' என்பது பழைய பழமொழி. மாநாடும் அறக்கட்டளைச் சொற்பொழிவும் மூன்று நாள் என்பது புதிய பழமொழி.

எனவே தமிழ் இதழ்களும் தமிழும் என்பதை மையமாகக் கொண்டு என் பேச்சை அமைப்பேன். இதில் இடம் பெறும் பகுதிகள் வருமாறு :

1. முக்கிய நிகழ்ச்சிகள்
2. பத்திரிகை இயக்கத்தின் தலைவர்கள்
3. பத்திரிகைகளின் தரம்
4. பத்திரிகைகளின் நடை
5. அந்த நடை காலத்துக்குக் காலம் மாறுவது எவ்வாறு? ஏன்?
6. தமிழாசிரியர்கள் அந்த நடையை எவ்வாறு மாற்றியிருக்கிறார்கள்?
7. பத்திரிகைகளின் நடை எந்த அளவில் தமிழாசிரியர்களுடைய நடையை மாற்றியுள்ளது? அதாவது, தமிழ் இதழ்களால் உருவாக்கப்பட்டுள்ள நடையைத் தமிழாசிரியர்கள் எந்த அளவு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்?
8. தமிழ் இதழ்களால் மக்களுடைய பொது அறிவில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி எத்தகையது ?
9. புது எழுத்தாளர்கள் எந்த அளவு உருவாக்கப் பெற்றிருக்கிறார்கள்?
10. எழுத்தாளருக்குக் கொடுக்கப்படும் ஊதியம் எவ்வளவு?
11. பல துறைகளில் நூல்கள் வெளிவர, தமிழ்ப் பத்திரிகைகள் எந்த அளவில் உதவியுள்ளன?
12. தமிழ் நூல்கள் வெளியீட்டிலும் விற்பனையிலும் காணப்படும் தேக்கத்திற்கு, தமிழ்ப் பத்திரிகைகளுக்கு எந்த அளவு பொறுப்பு உண்டு?
13. தமிழ் இதழ்களில் நூல் மதிப்புரைப் பகுதியின் நிலை என்ன?
14. சில குறிப்பிட்ட இதழ்களைப் பற்றிய சில விவரங்கள்
15. இலக்கியத் திரட்டு
16. மொழிபெயர்ப்புப் பிரச்சினை—ஆகியவை பற்றியும் கூறுவேன்.

**ஆதாரங்கள்**

தொடர்பான பல நூல்களைப் படித்தும் தக்கவர் பலரைச் சந்தித்தும் அறிந்து கொண்ட செய்திகளின் பின்னணியில் என் உரை அமையும். ஆனால் நான் விரும்பிய அளவு நூல்கள்

கிடைக்கவில்லை. ஆசிரியர் திரு டி. எஸ். சொக்கலிங்கம் எழுதிய "எனது ராஜினுமா" என்ற நூல் 'தினமணி' பத்திரிகையைப் பற்றியது. ஆனுல் அது 'தினமணி' நூல் நிலையத்திலேயே கிடைக்கவில்லை. மேலும் 'தினத்தந்தி' வெளியீடாகிய வெள்ளி விழா மலரோ, கையேடோ அந்த அலுவலகத்தில் கூடக் கிடைக்க வில்லை. இதுபோல இக்கட்டுக்கள் எத்தனையோ உண்டு.

வாழ்வோடு இணைந்து, பெருவளர்ச்சி பெற்றுத் திகழ்கிறது பத்திரிகைத்துறை. நாழிகைதொறும் வளர்ந்து வரும் அறிவியலால் ஆக்கம் பெற்று, மலர்ந்து வரும் மக்களாட்சி முறையில் ஊக்கம் அடைந்து, மக்களை ஈர்க்கும் ஆற்றல் படைத்து விளங்குகிறது பத்திரிகைத்துறை. பத்திரிகை படிக்காத நாளெல்லாம் பிறவாத நாளே என்னும் அளவுக்கு மக்களின் அன்ருட நடைமுறையில் பத்திரிகை இடம் பெற்றுவிட்டது. இவற்றையெல்லாம் ஆராய வேண்டும் என்பதே என் விருப்பம்.

*முக்கிய நிகழ்ச்சிகள்*

1578-இல் புன்னைக்காயலில் முதல் தடவையாக ஒரு தமிழ் அச்சகம் ஏற்பட்டது.

1831-ல் 'தமிழ்ப் பத்திரிகை' என்ற பெயரில் ஒரு தமிழ் Magazine முதல் தடவையாகத் தோன்றியது. இதுவே தமிழ்ப் பத்திரிகையின் தொடக்கம். இது மாத இதழ்.

மாதப் பத்திரிகை ஏற்பட்டு 28 ஆண்டுகள் கழித்து, 1856-இல் 'தினவர்த்தமானி' என்ற பெயரில் தமிழில் முதல் தடவையாக வார இதழ் ஒன்று ஏற்பட்டது. இதை ரெவரண்டு பெர்சிவல் என்ற பாதிரியார் தொடங்கினுர். வார இதழைத் தமிழில் கொண்டு வருவதற்கு வசதியாக, பெர்சிவல் ஓர் ஆங்கிலத் தமிழ் அகராதி யையும் உருவாக்கினுர். இவ்வகையில் ஏற்பட்ட முதல் முயற்சி இதுவே.

மேற்கண்ட இரண்டு வெளியீடுகளும் கிறிஸ்தவ சமயப் பிரச்சாரத்திற்காகத் தோன்றியன. பல துறை அறிவுக் கட்டுரை களைத் தரும் சஞ்சிகையாக 1892-இல் 'விவேக சிந்தாமணி' ஏற்பட்டது. எனவே இதுவே தமிழில் ஏற்பட்ட முதல் சஞ்சிகை எனலாம்.

'விவேக சிந்தாமணி'யின் ஆசிரியராக திரு சி. வி. சுவாமிநாத ஐயர் 25 ஆண்டுக்காலம் பணியாற்றினுர் என்பது குறிப்பிடத் தக்கது.

இக்காலத்தில் நமக்குப் பழக்கமாகியிருக்கும் வார இதழ் அல்லது கிழமை ஏட்டை உருவாக்கியவர் திரு வி. நடராஜ ஐயர். இவர் பல்லாண்டுகள் 'லோகோபகாரி' என்ற பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தார். இது 60 ஆண்டுகள் நடந்தது.

கோவையிலிருந்து வெளிவந்த **கலாநிதி** என்னும் பத்திரிகை, தமிழ்ப் பகுதி ஒன்றையும் ஆங்கிலப் பகுதி ஒன்றையும் கொண்டு அச்சிடப் பெற்றது. இதன் ஆசிரியர் சேலம் பகடால நரசிம்மலு நாயுடு.

1883-இல் வார இதழாக **சுதேசமித்திரன்** தோன்றியது. பிறகு அது வாரம் மும்முறையாக வெளிவந்தது. 1898-இல் அது நாளிதழாயிற்று. ஓராயிரம் வாசகர்களை, நாள்தோறும் தமிழ்ப் பத்திரிகைப் படிக்கச் செய்யப் பதினைந்து ஆண்டுகள் ஆயிற்று. 1920ஆம் ஆண்டுவரையில் கூட இரண்டாயிரம் பிரதிகள் விற்றால் போதும் என்ற நிலை, தமிழ்ப் பத்திரிகை உலகில் இருந்துவந்தது. ஆகையால் தமிழில் வெளிவந்த முதல் நாளிதழுக்கும் இரண்டாவது நாளிதழுக்கும் நீண்டதொரு கால வெளியீடு இருந்தது இயல்பே.

மிகக் குறைந்த விலையில் ஒரு தமிழ்ப் பத்திரிகையை நடத்திய பெருமை பாலபாரதி ச. து. ச. யோகியாரைச் சேரும். அவர் நடத்திய **பாலபாரதி** இதழின் விலை ஒரு தம்பிடி. அதாவது 1/192 ரூபாய்.

இவ்வாறே தினசரிப் பத்திரிகைகளில் 'காலணாப் பத்திரிகை' என்று வெளிவந்தது. காலணா என்பது ஒரு ரூபாயில் 64இல் ஒரு பங்கு. காலணாப்பத்திரிகையை வெளியிட்டவர்கள் ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம் அவர்களும் சங்கு சுணேசன் அவர்களும் ஆவார்கள். விலையும் விற்பனையும் எப்படியிருந்தபோதிலும் பத்திரிகைகள் பரப்பிய உணர்ச்சி பெரிது. அவற்றின் செல்வாக்கையும் யாரும் குறைத்து மதிப்பிட இயலாது.

### *உரை நடையில் எளிமை*

தமிழில் உரை நடையை வளர்த்தது பத்திரிகைகளே. இவ்வாறு நான் சொல்லும்போது, பத்திரிகைகள் வருவதற்கு முன் வசனம் இல்லையா என்ற கேள்வியைச் சிலர் கேட்கக் கூடும். அதற்கு நான் சொல்லக்கூடிய பதில் வருமாறு: "ஆம், இருந்தது. ஆனால் அந்த வசனம் புதுச்சேரி ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட் குறிப்பில்இருப்பது போன்ற வசனமாக இருந்தது. அதாவது நீண்ட

வாக்கியங்கள் இருந்தன. அவை மைல் கணக்குக்குக் கூடச் செல்லும். அவற்றின் பொருளை யாரும் எளிதில் புரிந்துகொள்ள முடியாது. அரைப்புள்ளி, முழுப்புள்ளி, நிறுத்தல் குறி போன்றவற்றைப் பயன்படுத்தும் பழக்கமோ, ஒரு கருத்துக்கு ஒரு பாரா என்ற ஏற்பாடோ, ஒரு செய்தி அல்லது ஒரு பொருளுக்குத் தலைப்புக் (HEADING) கொடுக்க வேண்டுமென்ற எண்ணமோ அப்போது தமிழ் வசனம் எழுதுபவர்களிடம் நிலவவில்லை. ஒருவரும் அந்நாளில் சீர்பிரித்து எழுதவில்லை. சொற்களுக்கிடையே இடைவெளி விடவும் இல்லை. கல்வெட்டில் எழுதுவது போலவே ஓலையிலும் தாளிலும் எழுதி வந்தார்கள்.

எல்லா இந்திய மொழிகளிலுமே உரைநடை வளர்ந்தது பத்திரிகைகளால்தான். ஏனைய மொழிகளிலும் புலவர்களுக்கும் பத்திரிகைகளுக்கும் நடையில் இடைவெளி உண்டு. ஆனால் தமிழில் உள்ள அளவுக்கு இவ்வளவு அகன்றதாகவோ குறிப்பிடத் தக்கதாகவோ இல்லை.''

இந்த இடத்தில் ஒரு மேற்கோளைப் படித்துக் காட்ட விரும்புகிறேன். இந்த நூல் ஈழ நாட்டில் வெளிவந்தது. நூலின் பெயர் 'உரைநடை வரலாறு;' ஆசிரியர் திரு. வி. செல்வ நாயகம். பக்க எண்: 110.

> தமிழுரை நடை விருத்திக்குச் சாதகமாய் இருந்தவற்றுள் அவ்வக்காலங்களில் எழுந்த பத்திரிகைகள் மிக முக்கியமானவை. பத்திரிகைகள் பலரும் படித்து அறிதற்கெனப் பிரசுரிக்கப்படுபவை; அதனால், அவற்றிற் கையாளப்படும் நடைவகை பலரும் படித்து அறியத்தக்கதாக அக்காலத்து வழங்கும் நடையையொட்டி அமைக்கப்படுதல் முக்கியமாகும். எனவே அவற்றின்கண் அவ்வக்காலத்துக்குரிய நடைவகைகள் கையாளப்பட்டு வந்தமையைக் காணலாகும். 19-ம் நூற்றுண்டிலே தமிழ் நாட்டிலும் யாழ்ப்பாணத்திலும் பல பத்திரிகைகள் பிரசுரிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்திற் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகைகள் உதயதாரகை, இலங்கை நேசன், இலங்காபிமானி, கிறிஸ்தோபகாரி, பாலியர் நேசன், இந்துசாதனம் முதலியன. அவற்றுள், தமிழில் முதன் முதலாகப் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை உதயதாரகை என்பது. இது தொடங்கியது கி. பி. 1841-ம் ஆண்டாகும். அப் பத்திரிகையும் அதன்பின் வந்த ஏனைய பத்திரிகைகளும் தமிழுலகத்திற்குப் பல வழிகளிலும் தொண்டு செய்துள்ளன. சமய கண்டனங்கள்,

தமிழுக்குப் புதியதாகவுள்ள மேலைத் தேசக்கலைகள், புதிய கருத்துக்கள் ஆகியவற்றைத் தமிழுரை நடையில் வெளிப்படுத்துதற்கு அப்பத்திரிகைகள் உதவியாக இருந்தமையால், தமிழிலுரைநடை வளர்ச்சியுறுவதற்கு அவை பெரிதும் உதவின என்றே கூறலாம். பாலியர் நேசன் முதலிய பத்திரிகைகளிலே மாணவர்கள் படித்தறிதற்குரியன வாகக் கட்டுரைகள் முதலியன எழுதப்பட்டமையால், பொது மக்களேயன்றிப் பிள்ளைகளும் படித்தறியக் கூடிய அத்தகைய எளிமையுடையதாக அக்காலத்து உரைநடை அமைதற்கு அபபத்திரிகைகள் செய்த உதவி பாராட்டத் தக்கது. இங்ஙனம் தமிழுரைநடை பொது மக்களுக்குரியதாகவும், பிறமொழிகளில் உள்ள கருத்துக்களை வெளிபடுத்துவதற்கு ஏற்ற கருவியாகவும் அமைந்து பத்திரிகைகள் விளங்கிய மையால், தமிழுரை நடை வரலாற்றில் அவை பாராட்டத்தக்க நிலையில் உள்ளன.

## கவிதை

தமிழ்க் கவிதையையும் பத்திரிகைகள் எளிமையாக்கிவிட்டன. சந்தப் பாக்கள் மரபு மாறாமலும், கருத்தில் பிழை இல்லாமலும் வெளி வருகின்றன. இத்தகைய பாக்களுக்கு முன்னோடியாகச் சித்தர் பாடல்கள் உள்ளன. வெண்பா எழுத இயலாதவர் வெண்டாழிசை எழுதியதுபோலத்தான் கவிதை எழுதத் தெரியாதவர்கள் புதுக் கவிதை எழுதுகிறார்கள். வசனக் கவிதைகளும் தோன்றியுள்ளன. பிழைமலிந்த பலவகையான பாடல்களுக்கும் குறைவில்லை.

## படிக்கும் பழக்கம்

படிக்கும் ஆர்வத்தைப் பத்திரிகைகள் உண்டாக்கியிருக்கின்றன. சிலருக்கு ஏதாவது ஒரு பத்திரிகையைக் கையில் வைத்திருந்தால் தான் இரவில் தூக்கம் வரும். பக்கத்து வீட்டில் தீப்பிடித்தால் கூடப் பத்திரிகையில் வந்தால்தான் நம்புவது என்ற மனநிலை உள்ளவர்களும் இருக்கிறார்கள். பொதுவாக, சிறந்த கட்டுரைகளை விட, பொழுது போக்குக்காகத் துணுக்குகளையும் சிறுகதைகள் நாவல் ஆகியவற்றையுமே பெரும்பாலான வாசகர்கள் படிக்கிறார்கள்.

## எழுதும் பழக்கம்

எழுத்தாளர் தொகை பன்மடங்கு ஆகிவிட்டது. பத்திரிகை நடத்த வேண்டுமென்ற ஆசையும் பலருக்கு ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு கனாக் காண்பவர்கள் மாணவராய் இருக்கும்போது

கையெழுத்துப் பத்திரிகை நடத்துகிறார்கள். இவர்களில் சிலர் பிற்காலத்தில் அச்சுப் பத்திரிகைகளின் ஆசிரியராகவும் ஆகி விடுகின்றனர். எடுத்துக்காட்டு: தமிழக முதல்வர் திரு. கருணாநிதி.

எழுத முடியும் என்ற நம்பிக்கை, எழுதவேண்டும் என்ற ஆர்வம் ஆகியவற்றையும் ஓயாமல் எழுதும் பழக்கத்தையும் ஏற்படுத்தியது இதழ்களே. ஒவ்வொரு துறையிலும் பல எழுத்தாளர்கள் உருவாகியுள்ளனர். எழுத்தாளர்களின் கருப்பொருள்கள் பற்றிய திறனாய்வும் செய்யப்பட்டிருக்கிறது. கண்டன இலக்கியங்கள் உருவாகவும் இதழ்கள் துணைசெய்கின்றன. சமுதாயச் சூழ்நிலையையும் கிராம நகர நிலைகளையும் பலரும் அறியச் செய்து அவற்றின் பின்னணிகளில் படைப்புக்கள் உண்டாகியுள்ளன. வெளிப்படையாகச் சொல்லாமல் சில குறிப்புக்களை இலைமறை காய் மறையாகத் தெரிவிப்பது என்ற பழைய மரபை இதழ்களின் செல்வாக்கால் எழுத்தாளர் பலர் கைவிட்டு விட்டனர்.

## நியூஸ் என்றால் என்ன?

நியூஸ் (News) என்னும் ஆங்கிலச் சொல் New அல்லது புதியது என்பதன் பன்மையாகும். N என்பது North அல்லது வடக்கையும் E என்பது East அல்லது கிழக்கையும் W என்பது West அல்லது மேற்கையும் S என்பது South அல்லது தெற்கையும் குறிக்கும். எனவே News என்பது நான்கு திக்குகளிலும் புதிதாக நிகழ்ந்தவற்றைச் சுட்டும்.

## செய்தி எது?

பத்திரிகைக் கல்வி வகுப்பில் சொல்லிக் கொடுக்கப்படும் முதல் பாடம் வருமாறு:

> "நாய் மனிதனைக் கடிப்பது செய்தியன்று. அது நாயின் இயல்பு. அன்றாட நிகழ்ச்சி.
>
> மனிதன் நாயைக் கடிப்பது அபூர்வமாக மிக அரிதாக நடைபெறக்கூடியது. எனவே அது செய்தி. அதைக் கொட்டை எழுத்தில் வெளியிடவேண்டும்."

இந்தப் பாடத்திற்கேற்பத் தமிழ்ப் பத்திரிகைகள் இயங்குகின்றன. யாழ்ப்பாணத்தில் மூன்று மாதங்களுக்குமுன் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டைப் பற்றி எந்தத் தமிழ்ப்பத்திரிகையும் ஒரு செய்தி கூட வெளியிடவில்லை. ஆனால் கடைசி நாளில் மாநாடு முடிவடைந்த

பிறகு ஒரு கலகம் நடந்து துப்பாக்கிச் சூட்டில் சிலர் மரணம் அடைந் தனர். அதையொட்டிச் செய்தி வெளியிட்டதால் உலகத் தமிழ் மாநாடு பற்றியும் தமிழ்ப் பத்திரிகைகள் குறிப்பிட்டன. அந்தத் துப்பாக்கிச சூடு பற்றிக்கூடத் 'தினமணி' மட்டுமே தலையங்கம் எழுதியது.

தமிழ் நாட்டில் வெளிவரும் ஏடுகள் வெளிநாடுகளிலும் வெளிமாநிலங்களிலும் வாழும் தமிழர்களின் தமிழ் நடையைப் பாதிக்கின்றன. ஆனால் புதுச்சேரியில் வெளிவரும் இதழோ, திருவனந்தபுரத்தில் பிரசுரம் ஆகும் ஏடோ, பினங்கில் பதிப்பிக்கப் படும் தினத்தாளோ, யாழ்ப்பாணத்து அழுத்தகங்களில் (பிரஸ்) வெளி வரும் கிழமை இதழ்களோ, தமிழ் நாட்டில் பெரும்பாலான மக்களைக் கவருவதில்லை. அவற்றை இங்கு யாரும் பயன்படுத்தியோ பின் பற்றியோ எழுதுவதில்லை.

அந்தந்தப் பகுதியின் இயற்கை, அரசியல் சமூகப் பின்னணி களைக் கொண்டும் அங்குள்ள வட்டார வழக்குகளைப் பயன் படுத்தியும் வெளிவரும் இதழ்களை ஆங்காங்கு வாழும் மக்கள் மட்டுமே படிக்கிறார்கள்.

தமிழ் நாட்டு எழுத்தாளர்களோ தமிழ் இலக்கியத்தின் போங்கோ அவற்றால் பாதிக்கப்படவில்லை. எனவே தமிழ் நாட்டிற்கு வெளியே வெளிவரும் நாளிதழ்கள், திங்கள் இதழ்களைப் பற்றி நான் குறிப்பிடப்போவதில்லை.

பத்திரிகைகளால் ஏற்பட்ட முக்கிய விளைவுகளுள் புனை பெயர் போட்டுக்கொண்டு எழுதும் வழக்கத்தைக் குறிப்பிடலாம். கட்டுரையோ கதையோ நன்றாக இருந்தால், நான்தான் சார் இந்தப் பெயரில் எழுதுகிறேன் என்று சொல்லலாம். நன்றாக இல்லா விட்டால் யாரோ எழுதியிருக்கிறார்கள் என்று எழுதியவரும் சேர்ந்து குறை கூறுவார்.

படிப்பவர்களைக் கவருவதற்காகப் பெண்களின் பெயர்களைப் போட்டுக்கொண்டும் ஆண்கள் எழுதுகிறார்கள். 'தினமணி கதிரில்' எழுதும் எழுத்தாளர் ஒருவர் ஆணா பெண்ணா என்ற சர்ச்சை இருந்து வருவதும் உங்களுக்குத் தெரியும்.

சென்ற நூற்றாண்டின் பத்திரிகைகளை நான் பட்டியல் கொடுக்கவிரும்பவில்லை. தமிழ் நாடு அரசினர் தமிழ் வளர்ச்சி

ஆராய்ச்சி மன்றம் 1963 ஆம் ஆண்டில் மு. சண்முகம் பிள்ளை அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு இதை வெளியிட்டிருக்கிறது. தமிழ் நூல் விவர அட்டவணை (The Madras State Tamil Bibliography) முதல் தொகுதியில் மூன்றும் பகுதியிலும் (பக். 282-288) ஐந்தாம் பகுதியிலும் (1021-1091) 19 ஆம் நூற்றுண்டு பத்திரிகைகள் அட்டவணையாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இதழ்களின் பெயர்ப் பட்டியல்களை எல்லாம் நான் படித்தால் அதற்கே மூன்று நாளாகிவிடும். எனவே நூலாக வெளிவந்தால் அப்போது அதில் இந்தப் பட்டியல்களையும் கொடுப்பேன் (பட்டியல் பின்னிணைப்பில் காண்க). வெளிவந்தால் என்று நான் சொல்லக் காரணம் இன்றைய அச்சுக் கூலியும் தாள்விலையும் யாராலும் எட்டிப் பிடிக்கமுடியாத அளவுக்கு உயர்ந்துவிட்டன. தவிரவும், விலை கொடுத்தாலும் அச்சிடுவதற்குத் தாள் கிடைக்காது என்ற நிலையும் இருக்கிறது.

## பத்திரிகை வருவதற்குமுன்

(பத்திரிகைகள் வெளிவருவதற்குமுன் சமயப் பிரசாரகர்கள் மட்டும்தான் தமிழ் எழுத்தாளர்களாக இருந்தனர். அவர்கள் சமய இலக்கியங்களை, குறிப்பாகப் பெரிய புராணத்தையும் சீவக சிந்தாமணியையும் பற்றி எழுதி வந்தார்கள். இந்த முயற்சிகள் சைவ மடங்களின் ஆதரவுடன் நடைபெற்று வந்தன.)

பிற்காலத்தில் சங்க இலக்கியங்களைப் பற்றிப் பண்டிதர்கள் எழுதினுர்கள்.

சமயத்தைப் பற்றி எழுதியபோதும் சரி, சங்க இலக்கியத்தைப் பற்றி எழுதியபோதும் சரி அவர்கள் இலக்கண வரம்புடன் எழுதினுர்கள். குறிப்பிட்ட சிலர் மட்டும் படிப்பதற்காக எழுதினுர்கள். அவர்கள் எழுதியது பலருக்குப் புரியாததைப்பற்றியும் அவர்கள் சிறிதும் கவலைப்படவில்லை.

ஒரு புலவரிடம் ஒருவர் போய் "நீங்கள் எழுதியதில் பாதிதான் விளங்கிற்று, பாதி புரியவில்லை" என்று சொன்னுராம். அதற்கு அந்தப் புலவர் "எந்தப் பகுதி புரிந்தது சொல், அதையும் மாற்றி எழுதி விடுகிறேன்" என்று பதில் சொன்னுர் என்பர்.

தங்களுடைய புலமையையும் அறிவாற்றலையும் சொல்லாட்சியையும் தங்களைப்போன்ற பெரும்புலவர் சிலருக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற ஒரு காரணத்திற்காக மட்டுமே சென்ற நூற்றுண்டில் அறிஞர்கள் எழுதினுர்கள். தங்கள் கருத்துப் பலருக்கும் பரவவேண்டும், பல்லாயிரக்கணக்கான மக்களுக்குத் தெரியும்படி எழுதவேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்கியது பத்திரிகை.

என்னுடைய நண்பர் அ. லெ. நடராஜன் அவர்கள் அடிக்கடி சொல்லுவதுபோல, அந்தக் காலத்தில் சைவ சமயத்தைப் பற்றி எழுதியவர்கள் பெரும்பாலோருக்குப் பிற மதங்களைப் பற்றி ஒன்றும் தெரியாது. தமிழ் இலக்கியங்களைப் பற்றி எழுதியவர்களுக்குப் பிற மொழி இலக்கியங்களில் ஒரு சிறு அளவு கூடத் தெரியாது. இன்றுங்கூட, நம்மில் பலர் இந்த நிலைக்கு விதிவிலக்கு அல்லர்.

வேறு யாராவது எழுதும் கட்டுரைகளில் பொதிந்துள்ள பொருள் அல்லது விஷயத்தை மறந்து விட்டு அதிலுள்ள இலக்கணப் பிழையை மட்டும் தமிழ்ப் புலவர்கள் கோடு போட்டு எண்ணி வந்தார்கள்.

'தொண்டை மண்டலமா? தொண்ட மண்டலமா?' என்பது போன்ற சர்ச்சைகளில் பண்டிதர்கள் ஈடுபட்டிருந்தார்கள்.

## பத்திரிகை இயக்கத் தலைவர்கள்

இனி, பத்திரிகை இயக்கத்தின் தலைவர்களாக விளங்கியவர்களைப்பற்றிச் சொல்லுவேன். அவ்வாறு சொல்லும்போது உரிய பத்திரிகை பற்றியும் தொடர்பான செய்திகளைச் சொல்ல வேண்டியதிருக்கும்.

### ஜி. சுப்பிரமணிய ஐயர்

இவர் தமிழ்ப் பத்திரிகை உலகின் தந்தையாகக் கருதப்படுகிருர். சுதேசமித்திரனை வார இதழாகத் தொடங்கி, பிறகு நாளிதழாக ஆக்கியவர் இவரே. இவர் இந்த இதழில் பத்திராதிபராக (ஆசிரியரை அவ்வாறுதான் குறிப்பிடுவது அந்தக் காலத்து வழக்கம்) இருபது ஆண்டுக்காலம் இருந்தார். ஏராளமான உதவி ஆசிரியர்கள், அலுவலக மேலாளர்கள் என்றெல்லாம் அப்போது யாரும் இல்லை. அன்ருட அலுவல்கள் அனைத்தையுமே அவரே செய்து வந்தார். அவர் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையைத் தொடங்கக் காரணமாக இருந்த 72 பெருந்தலைவர்களுள் ஒருவர். அவருக்கு இருந்த தேசிய உணர்ச்சி எல்லையில்லாதது.

அவர் 12 ஆண்டுகள் தென் ஆப்பிரிக்க சத்தியாக்கிரகத்தைப் பற்றி விடாது பிரசாரம் செய்து 80 தடவை அதைக் குறித்துத் தலையங்கம் எழுதினூர் எனின், எத்துணை நுணுகி அவர் அப் பிரச்சினையை அலசி ஆராய்ந்திருக்க வேண்டும்? தமிழ் மக்களிடையே அரசியல் உணர்வும் காந்தியமும் வேரூன்ற அவர் அரும்பாடுபட்டார். ஆங்கிலம் தெரியாத தமிழர்களுக்கு அரசியல் அறிவு ஊட்டியவர் அவரே ஆவார்.

ஜி. சுப்பிரமணிய ஐயர், தேசிய உணர்ச்சியைப் பரப்புவதிலேயே கண்ணுங்கருத்துமாய் இருந்தார். மொழியைப் பற்றியோ, நடையைப் பற்றியோ, எதுகை மோனையைப் பற்றியோ அவர் கவலைப்பட்டதில்லை.

சுதேசமித்திரன் பத்திரிகையைப் பற்றி 1916-இல் தேசபக்தர் சுப்பிரமணிய சிவா பின்வருமாறு எழுதியிருக்கிறூர்:

> "ஹிஸ் எக்ஸெல்லென்ஸி கவர்னர் யூவர் மெஜஸ்டிஸ் ஒபீடியண்டு செர்வண்டு" என்ற வார்த்தையெல்லாம் சுதேசமித்திரனில் பிரசுரிக்கப்படுகின்றன. சுதேச மித்திரன் அறிவைப் பரப்புகிறதா? அல்லது ஆங்கில பாஷையைப் பரப்புகிறதா?

அந்தக் காலத்துச் சுதேசமித்திரன் நடையில் இன்றைய செய்தியை வெளியிட்டால், அது இப்படி இருக்கும்:

> "மெட்ராஸ் மார்ச் 10:
> ரூலிங் காங்கிரஸ் ஆர்கனைசேஷன் காங்கிரஸ் இரண்டு பொலிட்டிக்கல் பார்ட்டிகளுக்குமிடையே நமது ராஜதானியில் அமுலாகி வரும் எக்ரிமெண்டை மித்திரன் நேயர்கள் அறிவார்கள். தொடர்ந்து நீடிக்கும் என்று நமது விசேஷ நிருபர் தெரிவிக்கிறூர். அதை ரீகன்சிடர் பண்ணவேண்டிய சிட்சுவேசனோ எமர்ஜென்ஸியோ ஒன்றும் இப்போது உண்டான தாகப் பிரஸ்தாபிக்கப்படவில்லை.
>
> இன்று மவுண்ட்ரோடு மகாஜனசபா ஹாலில் கோலாகலமாக நடந்த ஆர்கனிசேஷன் காங்கிரஸ் ஒர்க்கிங் கமிட்டி மீட்டிங்கில் மேற்கண்ட ரிசொல்யூசன் ஸ்ரீமான் காமராஜ் நாடார் உட்பட முக்கியஸ்தர்கள் முன்னிலையில் பிரஸ்தாபிக்கப்பட்டது."

இதுபோன்ற தமிழ் நடையின் எதிர் விளைவுதான் தனித்தமிழ் இயக்கம் தோன்றுவதற்குக் காரணமாயிற்று.

மொழிநடை எப்படியிருந்தபோதிலும், அக்காலத்து மக்கள் சுதேசமித்திரனைப் படிப்பதை விடவில்லை. காரணம் அது ஆங்கில அறிவின் சாரத்தை, பிழிந்து கொடுத்தது. ஏனைய குறை பாடுகள் ஆயிரம் இருந்தாலும் புது விஷயங்களைக் கொடுத்து வாசகர் களுடைய அறிவுப் பசிக்கு அது தீனி போட்டது.

பண்டிதர்கள் ஏதோ சில புராணங்களைப் பற்றி மட்டும் பேசியும் எழுதியும் வந்த சூழ்நிலையில் சுதேசமித்திரன் பத்திரிகை தேசியத்தைப் பற்றியும் இலக்கியத்தைப் பற்றியும் சமயத்தைப் பற்றியும் செய்திகளும் கட்டுரைகளும் வெளியிட்டது. இலக்கணத்தைப் பற்றி அந்தப் பத்திரிகைகளில் பணியாற்றியவர்கள் கவலைப்படவே இல்லை. அது அவர்களுக்குத் தெரியாதது, அவர்கள் படித்தது ஆங்கிலமும் சமஸ்கிருதமும்தான். அந்த அறிவைக் கொண்டு சில சம்பிரதாயச்சொற்களைக் கலந்து தமிழ் எழுத்துக்களில் பத்திரிகைகளை அச்சிட்டார்கள்.

பிழையான தமிழைப் பின்பற்றி எழுதும் பத்திரிகைகளால் மாணவர்களின் தமிழறிவு கெடுகிறது. ஆயினும் மாணவர்கள் அவற்றைப் படிப்பதைத் தடுக்க முடியவில்லை. பத்திரிகைகளின் தமிழ் நடை, அவற்றில் மலிந்துள்ள பிற மொழிக் கலப்பு ஆகியவை பற்றித் தமிழாசிரியர்கள் மிகவும் கவலைப் படுகிறார்கள். பிற மொழிச் சொற்களை அளவுடன் பயன்படுத்தினால் அது ஒன்றும் பெரிய குற்றமாகிவிடாது.

தனித் தமிழில் எழுதினால் சில சொற்களுக்கு உயிரோட்டம் இல்லை. சான்று ICE-FRUIT என்பதைப் பனிப்பழம் என்று தனித் தமிழில் எழுதினால் கதை படிப்பவனின் ஓட்டம் தடைப்படும்.

படித்தவர்கள் அல்லது குறிப்பிட்ட சிலருக்காக மட்டும் எழுதுபவர்கள் ஆறுதலாக உட்கார்ந்து எப்படியும் எழுதலாம். ஷேக்ஸ்பியர் என்பதைச் செகப்பிரியர் என்று எழுதலாம். ஆனால் பொது மக்களோடு தொடர்புள்ள பத்திரிகைகள் அவ்வாறு எழுத இயலாது. அகராதியைப் புரட்டிப் பார்த்துச் சொற்களுக்குப் பொருள் தெரிந்து கொள்ளும் ஓய்வு அல்லது சூழ்நிலை பத்திரிகை படிப்பவனுக்கு இல்லை.

உலகில் ஒவ்வொருநாளும் நடைபெறும் அரசியல், சமூக நிகழ்ச்சிகள், விஞ்ஞானத்துறையில் புதிய கண்டுபிடிப்புகள், சாதனைகள் போன்ற புதிய செய்திகளுக்கே நாளிதழ்கள் சிறப்பிடம்

அளிக்கின்றன. வெளியாகவிருக்கும் சில வினடிகளுக்கு முன் வரை வரும் தகவல்களேயும் அச்சடிக்கவேண்டிய நெருக்கடியில் மிக விரைந்து எழுதும் அல்லது மொழி பெயர்க்கும் கட்டாயம் ஏற்படுவதால் ஆற அமர எண்ணி இலக்கிய இன்பம் வளர்க்கும் வாய்ப்பு நாளிதழ்களுக்குக் கிடையாது.

'F' என்ற ஒலியை அந்த எழுத்தை அச்சிட்டே சில காலம் சுதேசமித்திரன் வழங்கி வந்தது. இவ்வாறு பிற ஓசைகளே எடுத்துக்கொண்டால் நமது சொற்களின் வேர் அழிந்துவிடும் என்ற கருத்து, தமிழாசிரியர்களிடம் நிலவுகிறது. ஓசை இலக்கணம் ஒரு வரப்புப்போல் அமைந்தது. வரப்பு நீங்கிய பயிர் அழிவது போலப் பிற மொழி ஓசையால் தமிழுக்குக் கேடு நேரலாம் என்பது தமிழ்ப் புலவர் கருத்து. வடமொழி இலக்கணம் தெரியாமல் தெலுங்கில் புலமை பெற இயலாது என்பதையும் சில தமிழாசிரியர்கள் இதற்குச் சான்ருகக் காட்டுகிருர்கள்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரை 1904-இல் சுதேசமித்திரன் பத்திரிகை, அதனுடையதுணே ஆசிரியராகச் சேர்த்துக் கொண்டது. இது இந்தப் பத்திரிகையின் பெருமைகளுள் ஒன்று. இதன் பயனுக, கவிதை மட்டுமே எழுதிவந்த பாரதியார், வசனமும் எழுதலானுர்.

"என்னைத் தினசரியில் நித்தமும் எழுதென்று
சென்னைத் தினசரியின் ஆசிரியர் செப்புகின்ருர்;
பாட்டெழுத வேண்டாமாம்; பார்த்தீரா அன்னவரின்
பாட்டின் பயனறியாப் பான்மையினே"

என்று சுப்பிரமணிய பாரதியார் சுதேசமித்திரனில் தாம் பெற்ற அனுபவத்தைப் பாடியுள்ளார்.

சுதேசமித்திரனிலிருந்து விலகிய பிறகு அவர் 'சக்ரவர்த்தினி,' 'கர்மயோகி' என்ற மாத இதழ்களேயும், 'இந்தியா' என்ற வார இதழையும், 'விஜயா' என்ற நாளிதழையும் நடத்தியிருக்கிருர்.

ஜி. சுப்பிரமணிய ஐயருக்குப் பிறகு சுதேசமித்திரன் ஆசிரியராக இருந்தவர் திரு. ஏ. ரெங்கசாமி ஐயங்கார். இவர் பல்லாண்டுகள் மகாத்மா காந்தியடிகளுடைய செயலராக இருந்தார் என்பதிலிருந்து இவரைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

பிற்காலத்தில் சுதேசமித்திரனில் ஆசிரியராக இருந்தவர்களுள் குறிப்பிடத் தக்கவர் சி. ஆர். ஸ்ரீநிவாசன். இவர் பொருளாதார அறிவு நிறைந்தவர். சிறுசிறு சொற்ருெடர்களுடன் ஆழமான

கருத்துக்களைத் தெரிவிக்கும் ஆற்றல் கைவரப்பெற்றவர். 1915-இல் சாதாரண ஊழியராகச் சேர்ந்து 1955-இல் ஆசிரியராக ஒய்வு பெற்று, 1962 வரை கௌரவ ஆசிரியராக இருந்தவர்.

அச்சு இயந்திரங்களின் வளர்ச்சிக்கும் வேகமாகச் செய்திகளை வெளியிட வேண்டிய தேவைக்கும் ஏற்பத் தமிழ் எழுத்துச் சீர் திருத்தத்தை இவர் விரும்பினார். பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் செய்த திருத்தங்களுடன் இவர் மேலும் ஓரிரு திருத்தங்களைச் செய்தார். அந்தத் திட்டப்படி ஒவ்வொரு நாளும் சுதேசமித்திரனில் இரண்டு பத்திகள் அச்சிட்டு வந்தார். லைனோ டைப், மோனோ டைப், டைப் ரைட்டர் ஆகிய இயந்திரங்கள் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத் திற்கு ஏற்ப அமைக்கப்பட வேண்டுமென்று இவர் விரும்பினார்.

தமிழக அரசு இதைப் பற்றிச் சிந்திக்கத் தமிழ் புலவர்களும் ஏனையோரும் கொண்ட ஒரு குழுவை நியமித்தது. சீர்திருத்தம் தேவையில்லை என்று அக்குழு 1951ஆம் ஆண்டு அளவில் முடிவு செய்தது. அந்த முடிவு மிகத் தவறானது என்பது என் கருத்து.

## தமிழ்த் தென்றல் திரு. வி. க.

1917 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 1920 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை 'தேசபக்தன்' என்ற நாளிதழையும், 1920 அக்டோபர் முதல் 1933 இறுதி வரை 'நவசக்தி' என்ற நாளிதழையும் திரு. வி. க. அவர்கள் நடத்தினார்கள். இவற்றின் சிறப்பு மூவகைப் படும்.

1. இவை வெளியிட்ட கருத்து.
2. இவற்றின் நடை.
3. இவை தந்த பல்வகை அறிவு.

தேசபக்தனும் நவசக்தியும் தமிழ்ப் பத்திரிகைகளின் வரலாற்றில் இரு சகாப்தங்கள். அவற்றைப் படித்து உணர்ச்சி யடைந்த தமிழர்கள் பல்லாயிரம் பேர் தேசிய இயக்கத்திற்குத் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் கொடுத்தனர். ஏற்கெனவே தேசிய முகாமில் இருந்தவர்கள் பலர் நல்ல தமிழை எழுதவேண்டும் என்று விரும்பினர். இந்த எண்ணத்தை இவர்களிடம் உண்டாக்கியது திரு. வி. க. வின் எழுத்தே.

சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் 1951-இல் திரு. வி. க. அவர்களுக்கு வாசித்துக் கொடுத்த உபசாரப் பத்திரத்தின் பின்வரும் பகுதிகள் சிறப்பாகக் கவனிக்கத் தக்கவை. இந்தப் பத்திரத்தை எழுதியவர் கல்கி கிருஷ்ணமூர்த்தி.

> "தமிழுக்கும் தமிழருக்கும் தாங்கள் செய்துள்ள சேவை சொல்லில் அடங்காது. தமிழ்ப்பத்திரிகை உலகில் அன்னிய மொழி அமிதமாகப் பெருகி, தமிழோசை மலினப் பட்டிருந்த காலத்தில், தாங்கள் தமிழை வளம் பெறச் செய்தீர்கள். தங்கள் தமிழ் மொழி வளமும் வலுவும் பெற்று வளர்ந்தது. அதனால் நாங்களும் வளர்ந்தோம்.
>
> தாங்கள் தமிழை மட்டும் வளர்க்கவில்லை. தமிழர் களின் நெஞ்சில் தேசிய உணர்ச்சியையும் வளர்த் தீர்கள். தங்கள் எழுத்துக்கள் தமிழ் நாடெங்கும் தமிழோசையையும் சுதந்திர கோஷத்தையும் ஒலிக்கச் செய்தன. தாங்களும் தமிழ் நாடெங்கும் சென்று தமிழோசையைப் பரப்பினீர்கள். தங்கள் தமிழோசை யின் எதிரொலியாக எண்ணற்ற தேச பக்தர்களும் தமிழ்த் தொண்டர்களும் நம் நாட்டில் உருவானார்கள்."

நடைச் சிறப்பு திரு. வி. க. வின் எழுத்துக்கு ஏற்றம் கொடுத்தது. அந்த வகையில் தமிழ் இதழ்கள் நடத்தியவர்களுக்கெல்லாம் திரு. வி. க. வழிகாட்டியாக இருந்தார். ஆங்கிலமும் வடமொழியும் கலந்த மணிப்பிரவாளநடையைச் சுதேசமித்திரன் கையாண்டுவந்த காலத்தில் தேசபக்தனும் நவசக்தியும் நல்ல தமிழில் வந்தன. அக்காலத்தில் 'தேசபக்தன்,' 'நவசக்தி' என்பன வெல்லாம் நல்ல தமிழ்ச் சொற்களாகக் கருதப்பெற்றன. எனவே, எது நல்ல தமிழ் என்பது, காலத்திற்குக் காலம் மாறும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

'தேசபக்தன்' தோன்றிய பிறகே ஒவ்வொரு செய்திக்கும் ஆங்கிலத் தலைப்பு, தமிழ்த் தலைப்பு ஆகிய இரண்டையும் வெளியிடும் பழக்கம் தமிழ்ப் பத்திரிகைகளில் ஒழிந்தது. ஏராளமான புதிய சொற்களையும் திரு. வி. க. உண்டாக்கினார்.

வடமொழியும் ஆங்கிலமும் கலந்து அம்மொழிகளின் சொற் றொடர்களைத் தமிழ் எழுத்தில் அச்சிட்டமையால் தமிழ்ச் செய்தித் தாள் என்று பெயர்பெற்று நாளிதழ்கள் வெளி வந்தபோது எத்தகைய

அரசியல் சிக்கலையும் அலசி ஆராய்ந்து தெளிவாக விளக்க இயலும் என்ற பேருண்மையை நிலைநாட்டியவர் திரு வி. க.

ஓரளவு படித்தவர்களுக்கும் புரியும்படியும், படித்தபின் அவர்கள் உள்ளத்தில் தைக்கும்படியும் கனலைக் கக்கும் நடையில் அவர் எழுதினார்.

கருத்துக்களைத் தொகுத்து ஒரு கவர்ச்சியான தலைப்பிட்டு, அவற்றை வகை செய்து பல உட்பிரிவுகள் ஏற்படுத்தி, ஒவ்வோர் உட்பிரிவையும் பின்பு விளக்கி எழுதுகின்ற அவரது முறை சிறப்பானது. சிறுசிறு சொற்றொடர்கள், அலசி விளங்கும் பாங்கு, அருந்தமிழ்ச் சொற்கள் இவற்றையும் திரு. வி. க. நடத்திய இதழ்களில் காணலாம்.

திரு. வி. க. அவர்களே ஒரு முறை எழுதியது ஈண்டு நினைவு கூர்தற்குரியது:

> "இலக்கணத்தை விடாத பண்டிதர் என்று 1917-இல் தேசபக்தன் பத்திரிகையைப் படித்தவர்கள் என்னைக் குறிப்பிட்டனர். என்னுடைய வாழ்க்கையில் மூவித நடைகள் மருவின. ஒன்று இளமையில் உள்ளது. இன்னொன்று சங்க இலக்கியச் சார்பு பெற்றபோது பொருந்தியது. மற்றொன்று பத்திரிகை உலகை அடைந்த நாளில் அமைந்தது; எனக்கு உரியதாய் உடையதாய் நிலைத்தது.
>
> தேசபக்தனுக்கென்று ஒரு தனி நடைகொண்டேன். சிறுசிறு வாக்கியங்கள் அமைக்கலானேன். எளிமையில் கருத்துக்கள் விளங்கும் முறையைப் பற்றினேன். அந்த நடையை நாடோறும் எழுதிப் பண்பட்டமையால் அதுவே எனக்குரிய இயற்கை யாகியது."

சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள், 'விடுதலை இயக்கத்தில் தமிழ் வளர்த்த வரலாறு' என்ற நூலில் சொல்லியிருப்பது போல,

> "பண்டித நடையில் பேசவும் எழுதவும் பழகிய ஒருவர் பாமரர்களையே நம்பி வெளிவரும் செய்தி இதழின் ஆசிரியராக இருப்பது எளிதன்று. அன்று மட்டுமல்ல. இன்றுங்கூடத்தான். ஆனால், திரு. வி. க. இயல் துறை அறிந்து, திறனை வளர்த்துக்கொண்டு தொண்

> டாற்றும் இயல்புடையவர். அதனால் தாம் பேராசிரிய ராகப் பணி புரிந்தபோது எழுதிய பண்டித நடையைத் திருத்திக்கொண்டு செய்தி இதழுக்குத் தேவைப்படும் எளிய நடையைக் கடைப்பிடித்தார்."

ஒரு நாள் நவசக்தி அலுவலகத்தில் துணை ஆசிரியராக இருந்த கல்கியிடம் அச்சுக்கோக்கும் தலைமை ஊழியர் வந்து, 'இன்று யார் தலையங்கம் எழுதப்போகிறார்கள்?' என்று கேட்டாராம். "ஏன் அப்பா, நீ அதைக் கேட்கிறாய்? வழக்கம்போலத்தான், ஐயா (திரு. வி. க.) தலையங்கம் எழுதுவார். நான் துணைத் தலையங்கம் எழுதுவேன் '' என்றாராம் கல்கி.

'அப்படியானால் இன்று நமது பத்திரிகை வராது' என்று அந்த ஃபோர்மன் சொல்லிவிட்டாராம். காரணம் என்ன என்று வினவ, அவர் சொன்ன பதில் இதுதான் :

"ஆச்சரியக்குறியாகப் போட்டுத் தள்ளிவிடுவார். இங்கு டைப் இல்லை. ஆகையால் ஆச்சரியக் குறி டைப் 5 பெட்டியும் கேள்விக் குறி டைப் 2 பெட்டியும் உடனே டைப் பவுண்டரியிலிருந்து வரவழைத்தால்தான் பத்திரிகை வரும்.''

திரு. வி. க. வினைமுற்றுக்களைத் தம் எழுத்தில் ஏராளமாகப் பயன்படுத்துவார். சான்று:

என்ன நயம் !

என்ன எளிமை !

அந்தோ !

எழுமின் !

விழிமின் !

அரசியல் உணர்ச்சிகளையும் இலக்கிய ஆர்வத்தையும் உண்டாக்குவது அவருடைய குறிக்கோளாய் இருந்தது. அதனாலேயே அவர் அளவு கடந்து வியப்புக்குறிகளைப் போட்டு எழுதினார் என்பர்.

திரு. வி. க. கையாண்ட மற்றொரு முறை—கேள்விகளைத் தாமே கேட்டு அவற்றுக்குப் பதில் சொல்லுவதன் மூலம் சில கருத்துக்களை விளக்குவது. சான்று :

1. முருகன் எவன்? முருகையுடையவன் முருகன்.
2. முருகு என்றால் என்னே?
   முருகு என்பது பல பொருள் குறிக்கும் ஒரு சொல்.
3. கார்ல் மார்க்ஸ் என் செய்தார்?
4. பெல்ஜியம் அவரை ஏற்றதா?
5. அம்மட்டோ?

நவசக்தி வார இதழில் மட்டுமே அக்காலத்தில் பல பொருள்கள் பற்றிய கட்டுரைகளும் நகைச்சுவைக் கட்டுரைகள் கதைகளும் வந்தன. ஆனால் மேல் அட்டையோ பல வண்ண அட்டையோ இன்றி அந்த இதழ் வெளிவந்தது. அக்காலத்தில் சென்னையில் மிகச் சில தமிழ் வாரப் பத்திரிகைகளே இருந்தன. பரலி சு. நெல்லையப்பரின் 'லோகோபகாரி' ஜனப் பா. தாவுத் ஷாவின் 'தாருல் இஸ்லாம்' டாக்டர் வரதராஜுலு நாயுடுவின் 'தமிழ் நாடு' முதலியவையும் காரைக்குடியிலிருந்து 'ஊழியன்' பத்திரிகையும் திருச்சியிலிருந்து 'நகர தூதன்' என்ற பத்திரிகையும் வெளிவந்து கொண்டிருந்தன. இவையெல்லாம் அரசியல் சம்பந்தப்பட்ட பத்திரிகைகள்.

### *அந்தக் காலச் சூழல்*

1920-க்கும் 1930-க்கும் இடைப்பட்ட காலத்துப் பத்திரிகை உலகைப்பற்றி, முதுபெரும் எழுத்தாளர் வெ. சாமிநாத சர்மா, 'எழுத்தாளன்' சிறப்பு மலரில் 1961-ல் எழுதியிருப்பது நம் கவனத்திற்கு உரியது :—

> அப்பொழுதைய தமிழ்ப் பத்திரிகையுலகம், குறுகிய விஸ்தீரண முடையதாகவே இருந்தது. குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய இரண்டு மூன்று பத்திரிகைகளே அதில் உலவிக்கொண்டிருந்தன. இவற்றுள் 'சுதேசமித்திர'னும் 'இந்துநேச'னும் ஓரளவு செல்வாக்குப் பெற்றவையென்று சொல்ல வேண்டும். ஓரளவு பிரசித்தியடைந்திருந்த வார இதழ்களும் மாத சஞ்சிகைகளும் ஏழெட்டுக்கு மேல் இல்லை.
>
> இந்தப் பத்திரிகைகளில் பணிபுரிந்த ஆசிரியர்களின் ஊதியம்? பத்துக் கணக்கில்தான். எனக்கு ஞாபகம் இருக்கிறவரையில், 'சுதேசமித்திரன்' பத்திரிகைக்கு

ஜி. சுப்பிரமணிய ஐயர் ஆசிரியராக இருந்த காலத்தில், பிரதம உதவி ஆசிரியராக இருந்த டி. கோதண்டராமய்யர் என்பவர் வாங்கிய சம்பளம் ஐம்பது ரூபாய்தான்.

தேசபக்தன் முதல் இதழ் 1917-ஆம் வருஷம் டிசம்பர் ஏழாந் தேதி வெளிவந்தது. அதன் ஆசிரிய பீடத்தில் முதன்முதலாக அமர்ந்தவர் திரு. வி. கலியாண சுந்தர முதலியார். உதவி ஆசிரியர்களில் முதன்முதலாக வந்து சேர்ந்தவன் நான். பத்திரிகையைத் தோற்று வித்தவர் எம். சுப்பராய காமத். மங்களூர்க்காரர். அன்னி பெசண்டம்மையாரால் நடத்தப்பட்டு வந்த 'நியு இந்தியா' என்ற பத்திரிகையில் உதவி ஆசிரியராயிருந்து அரும் பணியாற்றி வந்தார். 'நியு இந்தியா' அப்பொழுது சிறந்த தேசீயப் பத்திரிகையாகப் பிரபலமடைந்திருந்தது. பெசண்டம்மையாருக்கு அப்பொழுது நாட்டில் நல்ல செல்வாக்கு. உண்மையான தேசீய உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டவேண்டுமானுல், அது தாய்மொழியின் மூலந்தான் சாத்தியம் என்பதை அவர் நன்கு உணர்ந்தவர். இதை நன்கு தெரிந்துக்கொண்டிருந்த சுப்பராய காமத் 'நியு இந்தியா'வைப்போல் தமிழில் ஒரு தேசீய தினசரிப் பத்திரிகை துவங்க வேண்டுமென்ற தம் விருப்பத்தை அன்னிபெசண்டம்மையாரிடம் தெரிவித்தார். அவரும் அப்படியே தொடங்குமாறு உற்சாகமூட்டித் தம்மாலான உதவியைச் செய்வதாகக் கூறினுர். கூறியதோடு நில்லாமல் மூவாயிரம் ரூபாய் நன்கொடையாக அளித்தார். இதுவே 'தேசபக்த'னுக்கு மூலதனமாயமைந்தது. மூலதனம் கிடைத்துவிட்டால் போதுமா? திறமையான ஆசிரியர் அவசியமல்லவா? சுப்பராய காமத்தும் கலியாண சுந்தர முதலியாரும் சென்னை இராயப்பேட்டையில் வசித்துக்கொண்டிருந்தார்கள். நெருங்கிய நண்பர்கள். முதலியார் அப்பொழுது இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றி வந்தார். அவருடைய புலமையிலும் நாவன்மையிலும் சுப்பராய காமத்துக்கு ஒரே ஈடுபாடு. அதே பிரகாரம் சுப்பராயகாமத் கொங்கணி மொழியைத் தாய் மொழி யாகக் கொண்டிருந்தபோதிலும் தமிழ் மொழியின் இனிமை யிலும், அழகிலும் ஈடுபாடுடையவராக இருப்பதைக் கண்டு முதலியாருக்கு வியப்பு, உற்சாகம். இருவருடைய பரந்த

உள்ளமும் நிறைந்த நாட்டுப் பற்றும் ஒன்றுகூடின. 'தேச பக்தன்' ஆசிரியப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு முதலியாரைக் கேட்டுக் கொண்டார் காமத். முதலியாரும் கல்லூரி ஆசிரியப் பொறுப்பைத் துறந்துவிட்டுப் பத்திரி காசிரியப் பொறுப்பை உற்சாகத்துடன் ஏற்றுக்கொண் டார். 'தேசபக்த'னும் உதயமாயிற்று. அப்பொழு தெல்லாம் தொடக்க விழா, வெளியீட்டு விழா, பாராட்டு விழா, பொன்னுடை போர்த்தும் விழா, இப்படி விழாக் களின் அமளி கிடையாது.

'தேச பக்த'னுக்கு முதன் முதலாக அமைந்த காரி யாலயம், முன் கட்டென்றும், பின் கட்டென்றும் இரண்டு கட்டுகளைக்கொண்ட ஒரு தாழ்ந்த வீடு. முன் கட்டில் நிருவாகப் பகுதி; பின் கட்டில் ஆசிரியர் குழுவினரின் பகுதி, பக்கத்திலுள்ள ஒரு சந்தில் அச்சகம் தனியாக இருந்தது. அச்சடிக்கும் இயந்திரத்துக்கு மின்சார இணைப்புக் கிடையாது; மப்பும் மந்தாரமுமாயிருக்கிற காலத்தில், மெழுகுவர்த்தியை ஏற்றி வைத்துக்கொள்ள வேண்டியிருக்கும். நிருவாகத்தினருக்கும் தொழிலா ளருக்குமிடையே நேசப்பான்மை நிலவியது! அப்பொழுது வேலை நிறுத்த நோய் பரவவில்லை.

ஆசிரியக் குழுவைச் சேர்ந்த எங்களுக்குள் அந்தஸ்து வித்தியாசம் கிடையாது. நாங்கள் பெற்றுவந்த ஊதி யத்தில் கூடுதல் குறைச்சல் இருந்தாலும் நாங்கள் மேற் கொண்ட உழைப்பில் கூடுதல் குறைச்சல் இல்லை. வீட்டி லிருந்து ஏதேனும் பலகாரமோ கட்டுச் சோறோ கொண்டு வருவோம். சிற்றுண்டி நேரத்தில் எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து, எல்லோருடைய பொட்டலங்களையும் பிரித்து, ஆளுக்கொரு கவளம் என்கிற மாதிரிப் பகிர்ந்துகொண்டு சாப்பிடுவோம். இதனால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நாளும் பலவித உணவுவகைகளைச் சுவைத்துப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்துக் கொண்டிருந்தது.

ஆசிரியக் குழுவினராகிய எங்களுக்கு நிர்ணயிக்கப் பட்டிருந்த மாதச் சம்பளமும் ஒரே தடவையில் கிடைக் காது. குறிப்பிட்ட தேதியிலும் கிடைக்காது. ஐந்தும் பத்துமாகத்தான் பெற்றுக்கொள்ளவேண்டும். இப்படிச்

சில்லரை சில்லரையாக நாங்கள் பற்றிக்கொண்டு வந்தாலும் எங்களுக்கும் அது கஷ்டமாகத் தெரியவில்லை. குடும்பக் காலட்சேபம் எப்படியோ நடந்துகொண்டுதான் வந்தது.

அதுபோகட்டும். எங்கள் எழுத்துப் பணிக்கு நாங்கள் உபயோகப்படுத்தி வந்த உபகரணங்களும் மிகப் பழைய மோஸ்தர். ஓர் ஊற்றுப் பேனா உண்டா? எழுதுவதற்கு வழவழப்பான தாள் உண்டா? வசதியாக உட்கார்ந்து எழுதுவதற்குத் தகுதியான மேஜை நாற்காலி உண்டா? மேஜை நாற்காலிகள் இருக்கத்தான் செய்தன. ஆனால் சில மேஜைகளுக்கு 'டிராயர்' இராது; சில நாற்காலிகளுக்கு ஒரு கை இராது; அல்லது ஒரு கால் ஆட்டங் கொடுத்துக்கொண்டிருக்கும். மற்றவர்களுக்கெப்படியோ; என்னுடைய மேஜைக்கு 'டிராயர்' கிடையாது. நாற்காலிகளுக்கு ஒரு கைகிடையாது. பேனாக்கட்டையைக்கூட நான் உபயோகித்ததில்லை. அந்தக் காலத்தில் 'ரிலீப்நிப்' என்று சொல்லிக் காலணாவுக்கு இரண்டு 'நிப்'புகள் கிடைத்துக்கொண்டிருந்தன. அவைகளில் ஒன்றை எடுத்து, வேலங் குச்சியிலோ, வேப்பங் குச்சியிலோ கட்டி எழுதுகோலாக உபயோகிப்பேன். வேலை முடிந்த பிறகு அதை மேஜைமீது வைத்துவிட்டுத்தான் செல்லவேண்டும். மேஜைக்குத்தான் 'டிராயர்' கிடையாதே. மறுநாள் வந்து பார்த்தால் அது மேஜையின்மீது இராது; மாயமாய் மறைந்ததுபோலிருக்கும்! யாரை விசாரிப்பது? எங்கே போய்த் தேடுவது? வேறொருகுச்சியுடன் வேறொரு 'நிப்'பைப்பொருத்தி, எழுத்து வேலையைத் தொடங்க வேண்டியதுதான். இதற்காக என் சட்டைப் பையில் எப்பொழுதும் அதிகப்படியான ஒரு குச்சியும் ஒரு 'நிப்'பும் இருந்து கொண்டே யிருக்கும்.

எங்களுக்கு மின்சார விளக்கு கிடையாது. மின்சார விசிறியா? எங்கள் கற்பனையில் அது சதா சுழன்று கொண்டிருந்தது. ஆசிரிய கூடத்திற்கு மேலே வெறும் மங்களூர் ஓடுதான் வேயப்பட்டிருந்தது. அதற்குக் கீழ் சதுர ஓடு கிடையாது. இதனால் எங்கள் ஆசிரியக்கூடம் பகல் நேரத்தில், அனற் கூடமாகக் காந்தும். எங்கள் உடம்பில் வியர்வை வழிந்தோடும். ஆனால் இவை

யெல்லாம் எங்களுக்குக் கஷ்டமாகத் தோன்றவில்லை. உழைப்பிலே மகிழ்ச்சி கண்டோம். ஒரு நாளைக்கு ஏழெட்டுப் பத்திக்கான செய்திகளை எழுதவேண்டியிருக்கும். இதற்காகச் சளைக்க மாட்டோம். ஏதோ ஒருவித வெறி எங்களை ஆட்கொண்டிருந்தது. அதுதான், நாடு விடுதலை பெறவேண்டு மென்ற வெறி. அதனோடு தாய்மொழிப்பற்றும் சேர்ந்து கொண்டது. கேட்க வேண்டுமா எங்கள் எழுதுகோல் சென்ற வேகத்திற்கு!

'தேச பக்தன்' பத்திரிகையினால் நூற்றுக்கணக்கான தேச பக்தர்கள் தோற்றுவிக்கப் பட்டார்களென்பதைத் தமிழ்நாடு நன்கு அறியும்.

### டாக்டர் பா. வரதராஜுலு நாயுடு

சிக்கலான அரசியல் பிரச்சினைகளை எளிய தமிழில் தெளிவாகவும் விளக்கமாகவும் அழுத்தமாகவும் தெரிவிக்க முடியும் என்பதை உறுதிப்படுத்தியவர் டாக்டர் வரதராஜுலு நாயுடு.

வ. ரா. என்ற புகழ்பெற்ற எழுத்தாளர் கூறியிருப்பதுபோல,

> "பண்டிதர்கள் கூடினால் விளங்காத தமிழ், இங்கிலீஷ் படித்த தமிழர்கள் கூடினால் விளங்காத இங்கிலீஷ் இந்தக் கட்டுப்பாடான குறும்புத் தனத்தைத் தவிடு பொடியாக்கிய ஏகபோக பாக்கியமும் பாத்தியமும் வரதராஜுலு நாயுடு அவர்களுக்கே உரித்தானதாகும். பாமரத் தமிழுக்குப் பெருமையும் பொலிவும் பலமும் உண்டு, என்பதை நிலைநாட்டிய புண்ணியத்தை எவரும் நாயுடு அவர்களுடன் பங்கு போட்டுக் கொள்ள முடியாது".

டாக்டர் வரதராஜுலு 1926ல் பத்திரிகை உலகில் புகுந்து ஏறத்தாழ நான்கு ஆண்டுகள் ஆற்றல் மிக்க அவருடைய பழந் தமிழை எழுதிவந்தார். ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம், துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு ஆகிய பலர் 'தமிழ் நாடு' இதழில் துணை ஆசிரியர்களாய் இருந்தவர்களே. பெரியார் ஈ.வெ.ரா வைத் தமிழ்ப் பத்திரிகை உலகிற்கு ஈர்த்தவர் நாயுடுவே.

### ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம்

தமிழ்ப் பத்திரிகை உலகில் டி. எஸ். சொக்கலிங்கத்திற்குச் சிறப்பிடம் உண்டு. அவர் தொடர்புகொண்டிருந்த இதழ்கள் "தமிழ் நாடு"ம் "தினமணி"யும். "தினமணி"யில் ஏறத்தாழப் பதினைந்து

ஆண்டுகள் ஆசிரியராக இருந்தார். அவர் சொந்தமாகவும் சில பத்திரிகைகளை நடத்தினார். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை-காலணா ($1\frac{1}{2}$ நயாபைசா) விலையுள்ள 'காந்தி' என்ற வாரப்பத்திரிகையும் 'தினசரி' என்ற நாளிதழும். பத்திரிகை உலகில் இவர் கண்ட களங்கள் பல ஆகும். இவர் கொண்ட வெற்றிகள் ஏராளம்.

இன்று தமிழ்மக்களுக்குப் பழகிப்போய்விட்ட தினமணியை இன்றைய வடிவத்திலும் அமைப்பிலும் முறையிலும் உருவாக்கியவர் இவரே. இவர் உருவாக்கிய பத்திரிகை ஆசிரியர்களும் நூற்றுக் கணக்கானவர்கள் ஆவர். ஆகையால் இவரை 'ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம்' என்று சொல்லுவதே மரபு. ஒன்றைத் தாங்கியும் இன்னொன்றைத் தாக்கியும் எழுதும் பிரசாரப் பாணியில் எழுதுவதில் இவர் வல்லவர். இவருடைய வாழ்க்கை வரலாறு, தமிழ்ப் பத்திரிகை உலகின் வரலாறுகும். பத்திரிகைகளில் நாள்தோறும் ஏற்படும் சிக்கல்களை இவர் நன்கு உணர்ந்தவர். இவருடைய கருத்தைக் கீழே காண்போம்:

"பாகிஸ்தானை எந்த தமிழ்ப் புலவராவது மொழி பெயர்க்க முடியுமா? பெடரேஷன் இவைகளுக்குத் தனித் தமிழில் என்ன வார்த்தைகள் இருக்கின்றன? தெர்மா மீட்டர் என்று சொன்னால் சகலருக்கும் புரியும் போது ஒருவருக்கும் புரியாத ஒரு தமிழ்ச் சொல்லடுக்கை உபயோகிக்க வேண்டிய அவசியமென்ன? டாங்கி, விமானம், பெட்ரோல், மோட்டார், பீரங்கி, குண்டு, துப்பாக்கி, தோட்டா ஆகிய வார்த்தைகளை உபயோகிக்காமல் யுத்தச் செய்திகளைச் சொல்லவே முடியாது. டாங்கியும் பெட்ரோலும் மோட்டாரும் ஆங்கிலம். இவற்றை எப்படி மொழி பெயர்ப்பார்கள்? தானே இயங்கும் ஊர்தி என்று ஒவ்வொரு தடவையும் மோட்டாருக்குப் பதில் நீளமாக எழுதுவார்களா? விமானம், பீரங்கி, குண்டு, துப்பாக்கி, தோட்டாவை எடுத்துக் கொள்ளுவோம். இவை எல்லாம் தமிழ் வார்த்தைகள் தானே, என்று நீங்கள் நினைக்கலாம். புலவர்கள் தனித் தமிழ் கொள்கைப்படி இவை தமிழ் வார்த்தைகள் அல்ல. விமானம் சமஸ்கிருதம். பீரங்கி போர்ச்சுக்கேய பாஷையிலிருந்து வந்தது. குண்டு மராத்தி பாஷை. துப்பாக்கி துருக்கி பாஷை. தோட்டா உருதுவிலிருந்து வந்து சேர்ந்தது. இவ்வளவையும் பிறமொழிச் சொற்கள் என்று தள்ளிவிட்டால், இவற்றிற்குப் பதிலாக தனித் தமிழில் எப்படிச் சொல்வார்கள்? விமானத்திற்குப் பறக்கும் வண்டி என்றும்

பீரங்கிக்கு உருண்டு நீண்ட குழாயுள்ள வெடி யென்றும் சொல்லுவார்களா? அப்படிச்சொன்னல் அவை பொருத்தமாயிருக்குமா? அல்லது ஜனங் களுக்குத்தான் புரியுமா?''

''எனது ராஜினுமா'' என்ற இவருடைய நூலிலிருந்து மற்ருெரு பகுதியைத் தருவோம்.

''பிரான்சில் ஜெர்மனியர் பருந்து பாய்ச்சல் விமானங் களை உபயோகித்தார்கள் என்ற செய்தியைத் தமிழ்ப் பத்திரிகைகளில் நீங்கள் படித்திருப்பீர்கள். படிப்பவர்களுக்கு இந்த வாக்கியத்தில் புதிதாக எதுவும் இருப்பதாகத் தெரியாது. ஆனல், பத்திரி கைக் காரர்களுக்குத் தான் அதிலுள்ள கஷ்டம் தெரியும். யுத்தம் நடக்கிற வேகத்தில் எத்தனையோ புது புது வார்த்தைகளும் சொற்ருெடர்களும் சிருஷ்டி யாகின்றன. இவையெல்லாம் தாய் பாஷை பத்திரி கைக்காரர்களின் தலையில் வந்து விடுகின்றன. தந்திகள் எல்லாம் ஆங்கிலத்தில் வருவதால் ஆங்கிலப் பத்திரிகைகளை நடத்துபவர்களுக்கு, மொழி பெயர்க்க வேண்டிய சிரமம் எதுவும் கிடையாது. வந்த வார்த் தைகளை அப்படியே போட்டு விடலாம். தமிழ்ப் பத்திரிகைகள் அதை மொழி பெயர்த்தாக வேண்டும். சாவகாசமாக யோசித்து ஒரு தமிழ் வார்த்தையைக் கண்டு பிடிக்கலாம் என்ற பேச்சுக்கோ இடமில்லை. அன்று வந்த செய்திகள் அன்று மாலைப் பத்திரிகை களில் போயாக வேண்டும். அதற்குள்ளாக வார்த் தையைக் கண்டு பிடிக்கவேண்டும். அவ்வளவு அவசரம், எனவே புதிதாக ஒரு வார்த்தை வந்து விட்டால் பத்திரிகை ஆபீசில் ஏற்படும் பரபரப்பைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஒவ்வொருவரும் மூளையை ஓட்டுவார்கள். ஒவ்வொருவர் ஒவ்வொரு வார்த்தையைச் சொல்லுவார்கள். எல்லாவற்றையும் பார்த்து அவற்றில் எது பொருத்தமானதென்று தோன்றுகிறதோ அது அன்றைய பத்திரிகையில் வரும்.

DIVE-BOMBERS என்ற வார்த்தைக்குப் பருந்து பாய்ச்சல் விமானங்கள் என்ற தமிழ்ப் பெயரைக் கேட்ட பின்பு அது பொருத்தமாயிருக்கிறதென்று அநேகர் ஒப்புக்கொள்ளலாம். ஆனல் அந்த வார்த்தை பத்திரிகை நிலையங்களில் எவ்வளவு வேலையைக் கொடுத்தது என்பது வெளியிலுள்ளவர்களுக்குத் தெரியாது''.

## பெரியார் ஈ. வெ. ரா.

தமிழ்ப் பத்திரிகை இயக்கத்தின் தலைவர்களுள் அடுத்த படியாகக் குறிப்பிடத்தக்கவர் இவரே. இவர் நடத்திய நாளிதழ் 'குடியரசு' என்பது ஆகும். பிற்காலத்தில் இவர் தொடங்கிய 'விடுதலை' இன்றளவும் வெளிவந்துகொண்டிருக்கிறது.

சாதிக் கொடுமை, மூடபக்தி, தீண்டாமை, வலியார் மெலியாரைத் துன்புறுத்தல், கிளிப்பிள்ளை வேதாந்தம், திண்ணைத் தத்துவம் போன்ற பொருள்களைப்பற்றி சீர்திருத்தக் கட்டுரைகள் எழுதினர். இவருடைய நடை லாவகமானது, பச்சையானது, நேரடியானது என்றுகூடச் சொல்லலாம். கேட்பவர், படிப்பவர் மனங்களில் ஆழமாய்ப் பதியக்கூடியது.

பத்திரிகையின் தேவைக்கு ஏற்ப, எழுத்துச் சீர்திருத்தம் செய்ய முன்வந்தவர் இவரே. இவர் செய்த திருத்தம் வருமாறு:

| | | |
|---|---|---|
| லை | — | லை |
| ளை | — | ளை |
| றா | — | றா |
| னா | — | னா |
| ணா | — | ணா |
| னை | — | னை |
| ணை | — | ணை |

பெரியாரின் சிந்தனைப் போக்கினைத் தொடர்ந்து இந்தியா, இலங்கை, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்துவந்த பேராளர்கள் யாழ்ப் பாணத்தில் 1972-இறுதியில் நிகழ்ந்த உலகத் தமிழ் மாநாட்டில் கட்டுரைகள் வாசித்துள்ளனர். பெரியாருடைய எழுத்துச் சீர்திருத் தத்தை ஏற்பதே தமிழக அரசு அவருக்கு நாட்டக்கூடிய உண்மை யான நினைவுச்சின்னமாகும்.

## திரு. ஏ. என். சிவராமன்

சமீபகாலம்வரை பத்திரிகை ஆசிரியர் என்றால் சமூகத்தில் ஒரு பெரிய மதிப்பு இருந்தது. அந்தவகையில் இப்போது பெயரும் புகழும் பெறுபவராக திரு. ஏ. என். சிவராமன் ஒருவரைத்தான் சொல்லமுடியும்.

டி. எஸ். சொக்கலிங்கம், சங்கு சுப்பிரமணியம் போன்ற ஆசிரியர்களைப் பின்பற்றி அறிவுப்பசியுடன் படிக்கும் வாசகர் களுடைய எண்ணிக்கையை மிகுதியாக்கவும் தேசியக் கண்ணோட்டத்தோடு பிரச்சினைகளை அணுகவும் இவர் அரும்பாடு பட்டு வருகிறார். பல துறை அறிவுச் செல்வத்தையெல்லாம் தமிழுக்குத் தருகிறார், தமிழர்களுக்கு வழங்குகிறார்.

திரு. சிவராமனைப் பற்றி, ஆசிரியர் டி. எஸ் சொக்கலிங்கம் 1940 நவம்பர் 25ம் நாள் 'தினமணி' இதழில் பின்வருமாறு எழுதியிருந்தது குறிப்பிடத்தக்கது:—

நண்பர்களுக்கு,

இன்று முதல் ஸ்ரீ ஏ. என். சிவராமன் ''தினமணி''க்கு ஆசிரியரா யிருப்பார். தமிழ் எழுத்தாளர்கள் அனைவரும் ஸ்ரீ. சிவராமனை அறிவார்கள். புத்தகம் படிக்கும் பழக்க முள்ளவர்களும் ஸ்ரீ. சிவராமனை நன்கு அறிவார்கள். ஏனெனில், அவர் எழுதிய 'மாகாண சுயாட்சி' என்ற அற்புதமான புத்தகத்தை ராஜீயத்தில் சிரத்தையுள்ள ஒவ்வொரு தமிழரும் கண்டிப்பாய் படித்திருப்பார்கள். ராஜீய ஞானமும் பொருளாதார ஞானமும் அவருக்கு தளபாடமான விஷயங்கள். தேச பக்தியிலும் அவர் சிறந்தவர். தேச பக்தியோடு தன்னல மறுப்பையே பிரதானமாக அவர் கருதியபடியால்தான் அவருடைய பெயர் இதுவரை பிரபலமாகவில்லை. விளம்பரமில்லாமல் பின்னாலிருந்து உருப்படியான வேலைகளைச்செய்ய வேண்டு மென்ற உயர்ந்த கொள்கையை கொண்டவர்களில் அவர் ஒருவர். இவ்வளவையும் நான் சொல்ல வந்ததற்கு காரணம் ஒன்றே ஒன்றுதான். அதாவது ''தினமணி''யை திறமையாக நடத்துவதற்கு அவர் சகல குணங்களும் வாய்க்கப்பெற்றவர் என்பதுதான்.

''தினமணி''யின் நண்பர்கள் ''தினமணி''யிடம் வைத்திருக்கும் அபிமானத்திற்கு ஒரு காரணம் முக்கிய மானது. அதுதான் நண்பர்களுக்கும் ''தினமணி''க்கும் உள்ள நெருங்கிய தொடர்பு. இந்தத் தொடர்புதான் பரஸ்பர நம்பிக்கையும் அன்பையும் பெருக்கியிருக்கிறது. இந்தத் தொடர்பை ஸ்ரீ சிவராமன் பூர்ணமாக அறிவார். அவர் 1920-இல் ஒத்துழையாமை இயக்கத்திற்காக

காலேஜ் படிப்பை விட்டதிலிருந்து சுமார் 20 வருஷங்களாக அவரும் நானும் அநேகமாய் ஒன்ருகவே ராஜீயத் துறையிலும் பத்திரிகைத் துறையிலும் ஈடுபட்டு வேலை செய்து வந்திருக்கிறேம். ஆகவே, "தினமணி" இதுவரை எந்தக் கொள்கையில் நடத்தப்பட்டு வந்திருக்கிறதென்பதை அவர் அறிவார். அந்தக்கொள்கைக்கு அவரும் ஒரு பங்கு பொறுப்பாளியாகவே இருந்து வந்திருக்கிருர். இந்த முறையில் இதுவரை "தினமணி" நடத்தப்பட்டு வந்திருக்கிறபடியால் "தினமணி"க்கும் அதன் நண்பர்களுக்கும் உள்ள தொடர்பை அவர் பூரணமாய் அறிந்திருக்கிருர் என்பதை நண்பர்கள் தெரிந்து கொள்ளலாம். எனவே அவருடைய ஆசிரியத் தலைமையில் நடைபெறும் "தினமணி" இதுவரை அதன் நண்பர்களிடம் எவ்வளவு அபிமானத்தைப் பெற்று வந்ததோ அதைப்போலவே இனியும் பெற்றுவரும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை.

டி. எஸ். சொக்கலிங்கம்.

திரு. சிவராமன் ஒத்துழையாமை இயக்கத்தில் இரு முறை சிறை சென்றவர். வேதாரண்யம் உப்பு சத்யாக்ரகத்தில் பங்கெடுத்துக் கொண்டவர். மகாத்மா காந்தியடிகளின் 'ஹரிஜன்' வார இதழ் தமிழில் வெளிவர ஏற்பாடுகள் நடைபெற்றபோது, 'தமிழ் ஹரிஜன்' இதழின் ஆசிரியராக மகாத்மாவாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

பழைய காலத்துப் பத்திரிகை ஆசிரியர் - பத்திராதிபர் என்று தான் அப்போது சொல்லுவார்கள் - எப்படிப்பட்டவர்கள் என்பதையும் சொல்ல வேண்டும்.

அவர்களுடைய சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடு இராது.

ஒழுக்கத்தால் அவர்கள் உயர்ந்தவர்களாக இருப்பார்கள். அவர்களுடைய தலையங்கத்துக்குத் தனி மதிப்பு இருந்தது. முதலில், தலையங்கத்தையே படிக்கும் வாசகர்களும் இருந்தனர். தியாக சீலர்களாக அந்த ஆசிரியர்கள் விளங்கிய காரணத்தால் அவர்கள் சொல்லுவதை வேதவாக்காக ஏற்றுப் பின்பற்ற வேண்டும் என்ற எண்ணம் பல்லாயிரக்கணக்கான வாசகர்கட்கு உண்டாயிற்று.

அரசாங்க விளம்பரம் என்பது அந்நாளில் கிடையாது. கனரகத்தொழிற்சாலைகள் இல்லை. இருந்த தொழில் நிலையங்களிலும்

முக்கியமானவையெல்லாம் அக்காலத்தில் ஆங்கிலேயரிடம் இருந்தன. அவர்கள் தமிழ்ப் பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிடுவதில்லை. அந்த நிலையில் பத்திரிகைகளே அரசியலை உருவாக்கின.

முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையில், நாம் இன்று வாழ்கிறோம்.

(1) அரசாங்கச் சட்டங்கள்

சலுகைகள்
பத்திரிகைத் தாள் வினியோகம்
மின்சாரத் துண்டிப்பு
தொழிற்சங்கங்கள் மூலம் தொந்தரவு

(2) வணிக நிறுவனங்களின் விளம்பரங்கள்

(3) அரசியல் கட்சிகளின் சார்புகள்

இவற்றால் பத்திரிகைகளில் அரசினர், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பெருவணிகர்கள் ஆகியோரின் தலையீடும் செல்வாக்கும் பெருகியிருக்கிறது. அவர்களைப் புறக்கணித்துப் பத்திரிகையை நடத்த முடியாது.

இந்த நிலையிலும் திரு ஏ. என். எஸ். போன்ற ஓரிருவர் தங்களுடைய தனிப்பட்ட முத்திரையை ஒரு நாளிதழில் பொறித்து வருவது பாராட்டுக்குரியது, பின்பற்றுவதற்கு உரியது.

ஆசிரியர் ஏ. என். சிவராமன் அவர்கள் மிகச் சிக்கலான விஷயங்களைக்கூட, சிறப்புக் கட்டுரைகள் வாயிலாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல விள்க்கி ஆங்கிலப் பத்திரிகைகளைவிடக் கூடுதலான தரத்துடன் ஒரு தமிழ்ப் பத்திரிகையை நடத்தமுடியும் என்பதை நிலைநாட்டியிருக்கிறார். அவர் எழுத்தில் நாம் முக்கியமாகக் காண்பது - தெளிவு.

அரசியல் நிர்ணய சபை, பொருளாதாரப் பிரச்சினைகள், தேர்தல் முறை, கல்விச் சீர்திருத்தம், பயிற்சிமொழி, நாணய மதிப்புக் குறைப்பு, பல நாடுகளின் அரசியல் வரலாறுகள் ஆகியவற்றையெல்லாம் அவர் பல்லாயிரக்கணக்கான வாசகர்களுக்குப் புரிய வைத்திருக்கிறார்.

'தினமணி'யின் அன்றாட நிர்வாகத்தில் அல்லது ஆசிரியர் அலுவல்களில் அவருடைய பங்கும் பொறுப்பும் மிகக் குறைவு.

'தினமணி'யில் இலக்கணப் பிழைகளையும் கொச்சைத் தமிழ்ச் சொற்களையும் தவிர்க்க அவரால் இயலவில்லை என்பது அவர் எனக்கு 7-8-1968ல் எழுதிய கடிதத்திலிருந்து தெரிகிறது.

> "..........தமிழ் அகராதியில் சாதாரணமாகக காணப் படாத சில சொற்களை உபயோகிப்பது தவிர்க்கப்பட வேண்டியதே என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் 'தினமணி' வாசகர்களுக்குப் பழக்கப்படாத ஒரு சொல் அகப்பட்டால், மொழி பெயர்ப்பு செய்ப வர்கள் அகராதியைப் புரட்டாமலே அதை உபயோ கித்து விடுவார்கள்".

எண்ணெய் என்பதை 'எண்ணை' என்று கொச்சையாக எழுதுவது 'தினமணி'யின் மரபுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

## திரு. சி. பா. ஆதித்தன்

(தினத் தந்தி, மாலை முரசு பத்திரிகைகளை நிறுவியர் சி. பா. ஆதித்தனார் என்பது தெரிந்ததே. அவருடைய நோக்கம், சாதாரணக் கூலியாள், ரிக்ஷா இழுப்பவன் ஆகியோரையும் பத்திரிகை படிக்கச் செய்ய வேண்டும் என்பது. அந்த நோக்கத்தை அவர் நிறைவேற்றிவிட்டார். எனவே அவர்களுக்கு அக்கறையுள்ள செய்திகளை மட்டும் அவர் வெளியிடுகிறார். அவர்களுக்குப் புரியும் நடையைக் கையாளுகிறார். "நாங்கள் ஒரு தினத்தந்தி நாளிதழ் நடத்துகிறோமே தவிர, திருவள்ளுவர்போல திருக்குறள் நடத்தவில்லை" என்று அவர் சொல்லுவது வழக்கம்.

'நாளிதழ்' என்பது காலையிலே பூத்து, மாலையிலே மலரும் மலரைப் போன்றது... 'பேச்சுத் தமிழ் உயர உயர எங்கள் நடையும் மாறும்' என்று அவர் சொல்லுவார். அவர் மேலும் தெரிவித் திருப்பதாவது:

"சாதாரணமாகத் தங்களுக்குத் தெரிந்ததைப் பிறருக்குச் சொல்லுவதற்காகப் பத்திரிகைகளை நடத்துவார்கள். சிலர் என்ன நடந்தது, நடந்ததை எடுத்துச் சொல்லுவதற்கு இதழ்கள் நடத்து வார்கள். சிலர் மக்கள் எதை எதிர்பார்க்கிறார்களோ எதை விரும்பு கிறார்களோ அதற்காக பத்திரிகை நடத்துவார்கள். நான் மூன்றாவது சொன்ன பத்திரிகையை நடத்த முன்வந்திருக்கிறேன்".

மக்கள் தமிழ் என்ற புதிய தமிழை ஆதித்தனர் உருவாக்கி யிருக்கிறர். புலவர் தமிழைக் கல்கி எளிய தமிழாக்கினர். அதைத் 'தினத்தந்தி' மக்கள் தமிழ் ஆக்கிற்று. சான்று:

| புலவர்களின் தமிழ் | கல்கி-யின் தமிழ் | மக்கள் தமிழ் |
|---|---|---|
| புள் | பறவை | குருவி |

'தினத்தந்தி' என்ற பெயரே DAILY TELEGRAPH என்ற ஆங்கில இதழின் பெயரின் மொழி பெயர்ப்பே. ஆதித்தனர் லண்டனில் வெளிவந்து பல லட்சம் மக்களைக் கவரும் தினசரிகளை-அவற்றின் விற்பனைத் தந்திரங்களை - தக்க மாறுதல்களுடன் கையாண்டு தமிழார்வத்தையும் ஓரளவு புகுத்தி வெற்றி கண்டுள் ளார். ஓரே சமயம் பல ஊர்களிலிருந்து இதழ் வெளிவரும் ஏற்பாட்டையும் நிறைவேற்றியிருக்கிறர்.

படிப்பவர்களுக்குப் புரிவதற்காக ஒரு 'பொம்மை' (நாட்டுப் புறத்தான) தினத்தந்தியில் வைத்துள்ளனர். அவனுக்குப் புரிந் தால்தான் - புரிந்த பிறகே - எந்தச் செய்தியும் வெளியிடுவர். மேலும் பழந்தமிழ்நாட்டு விளையாட்டுக்களுக்கும் தமிழ் மொழி பற்றிய செய்திகளுக்கும் தினத்தந்தி சிறப்பிடம் தருகிறது.

கையேடு (Style book) வெளியிட்டிருப்பதும் தினத்தந்தியின் தனிச்சிறப்பு. எத்தகைய சொற்களை உபயோகிக்கலாம், பதிப்பு முறை என்ன, எத்தனை எழுத்துக்களுக்கு மேற்கண்ட சொற்களைத் தவிர்க்க வேண்டும், எவ்வாறு எழுதினல் எல்லோருக்கும் புரியும் என்பன இதில் அடங்கியிருக்கும். இதில் கண்ட சட்டதிட்டங்கள், விதிகள் ஆகியவற்றை வழிகாட்டியாகக் கொண்டே ஒவ்வொரு நாளும், உதவி ஆசிரியர்கள் 'தினத்தந்தி'யை உருவாக்குகிறர்கள்.

சில சொற்களைத் தினத்தந்தி கையாளும் முறை குறிப்பிடத் தக்கது.

கௌஹத்தி — கவுகத்தி

பங்களாதேஷ் — வங்காள தேசம்

கருத்துப்படம் வெளியிடுவதும் 'தினத்தந்தி' வளர்த்துள்ள முறைகளில் ஒன்று. இதைக் கூறும்போது ஒன்றைத் தெரிவிப்பது என் கடமை. சித்திரம் தீட்டுபவர்கள் தமிழ்ப் பத்திரிகை

களின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளனர். இவ்வகையில் ஆனந்தவிகடனில் சில்பி காட்டியுள்ள கைவண்ணம் ஈடும் இணையும் இல்லாதது. கோபுலு, மணியம், ஸ்ரீதர், மாயா, வர்ணம், வினு, ஜெயராஜ், எஸ். பாலு, அமுதசுரபி ஓவியர் ஸ்ரீபா ஆகியோரின் பணியும் பாராட்டுக்குரியது.

குறிப்பாக, தீபாவளி மலர்கள் இவர்களுடைய கலைப் புலமை யையும் கற்பனைத் திறனையும் காட்ட உதவுகின்றன.

*தினத்தந்தி வெளியீடுகள் :*

ராணிமுத்து வரிசை என்ற நூல்களைத் தினத்தந்தி வெளி யிடுவது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. அது ஒரு தலை சிறந்த முயற்சி. ஏற்கெனவே வெளிவந்து மக்களிடம் ஆதரவு பெற்ற நூல்களைப் பலரும் படிப்பதற்கு ஏற்ப மலிவான விலையில் வெளி யிடுகிறார்கள். ஒவ்வொரு மாதமும் இதுபோன்று ஒரு நூலை வெளியிடுகிறார்கள். பதினாயிரக் கணக்கில் ஒரு ரூபாய் விலையில் புத்தகங்கள் கிடைக்கச் செய்யும் முயற்சி போற்றுதற்குரியது. இதன் சிறப்பியல்புகள் சில :

1. விலை மலிவாக இருப்பது.
2. ஆசிரியரைப் பற்றிய அறிமுகம் அடங்கியிருப்பது.
3. மாவட்டப் பேச்சுத் தமிழ் அல்லது கிளைமொழிச் சொற் களுக்கு ஏற்றம் கொடுக்கும் நூல்களைத் தேர்ந் தெடுப்பது.
4. ஒவ்வோர் இதழிலும் முதல் பத்துப் பக்கங்களில் பல வகைச் செய்திகள், பயனுள்ள துணுக்குகள், அறிவுரைகள் வெளியிடுவது.

*கிரந்த எழுத்துக்கள் :*

ஸ, ஷ, ஜ, ஹ, ஸ்ரீ என்ற எழுத்துக்களைத் தமிழில் உபயோகிப்பது பற்றி, பெரிய சர்ச்சை இருந்து வருகிறது. ஆனால், இதில் வருத்தத்திற்குரியது என்ன எனின், பெரும்பாலோர்க்கு இந்த எழுத்துக்களின் வரலாறு தெரியாமல் இருப்பதே. இவை தமிழ் நாட்டுக்கே உரியன. தமிழ்நாட்டில் எழுதப்பட்ட சமஸ்கிருத நூல் களில் சில ஒலிகளைக் குறிக்க இந்த எழுத்துக்கள் பயன்படுத்தப்

பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டுக்கு வெளியே உருவான வடமொழி நூல் ஒன்றிலேனும் இந்த எழுத்துக்கள் கையாளப்படவில்லை.

தமிழாசிரியர்கள் பெரும்பாலும் இந்த எழுத்துக்களைப் புறக் கணித்து வருகின்றனர். இந்த எழுத்துக்களைக் கைவிட்டால் பின் வரும் சொற்களை எவ்வாறு எழுதுவது என்பதைச் சிந்திக்க வேண்டும்.

அளவைச் சொல்:

ஹெக்டர்

நாடுகளின் பெயர்கள்:

ரஷ்யா
ஜப்பான்
ஆஸ்திரேலியா
இஸ்ரேல்
பாக்கிஸ்தான்
ஸ்ரீலங்கா
ஆப்கனிஸ்தான்

மாநிலங்களின் பெயர்கள்:

ராஜஸ்தான்
ஜம்மு-காஷ்மீர்
மீஜோ-ராம்

கட்டிடங்களின் பெயர்கள்:

தாஜ்மஹால்

வாகனங்களின் பெயர்கள்:

ரிக்ஷா
பஸ்
ஜீப்

ஆட்களின் பெயர்கள்:

கார்ல் மார்க்ஸ்

ஸ்டாலின்

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்

அரவிந்தகோஷ்

கே. கே. ஷா

ஜாகிர் ஹுசேன்

எம். ஜி. ராமச்சந்திரன்

சிவாஜி கணேசன்

ஆஸ்டின்

ஜவஹர்லால் நேரு

ராஜாஜி

ஸ்டான்லி

பதவிப் பெயர்கள் :

ஷெரீப்

விளையாட்டுக்களின்பெயர்கள் :

டென்னிஸ்

ஐஸ் ஹாக்கி

சர்க்கஸ்

சாலைகளின் பெயர்கள் :

ஹபிபுல்லா ரோடு

பஸுலுல்லா ரோடு

ஆதாரங்களின் பெயர்கள் :

பாஸ்போர்ட்

நகரங்களின் பெயர்கள் :

மாஸ்கோ

டாஷ்கெண்ட்

சான் பிரான்சிஸ்கோ

சில தமிழாசிரியர்கள் 'ஜப்பானே' 'சப்பான்' என்று எழுதிவருகிறார்கள். இவ்வாறு எழுதுவது சப்பென்று (காரசாரமில்லாமல்) இருக்கிறது. இன்னும், ஷெரீப் என்பதைச் சென்னை நகர முதல்வர் என்று மொழி பெயர்க்கிறார்கள். இவ்வாறு மொழி பெயர்த்தால் பழங்காலத்துக் கிரேக்க நாட்டில் நகரங்கள் தனி அரசுகளாக இருந்ததுபோல சென்னை நகரம் ஒரு தனி அரசாக இயங்கியதாகவும் அந்நகருக்கென்று ஒரு முதலமைச்சர் இருந்ததாகவும் பிற்காலத்தவர் நினைக்கக்கூடும். இவ்வாறு ஏற்படக்கூடிய குழப்பங்களைப் பற்றியெல்லாம் தமிழாசிரியர்களுக்குக் கவலையே கிடையாது. எப்படியாவது கிரந்த எழுத்துக்கள் ஒழிந்தால் அவர்கள் மகிழ்வர்.

சர்வதேச ஒலிமுறை எழுத்துக்களுள் தேவையான சில ஒலிகளை ஏற்றுக்கொள்ளுவதே அறிவுடைமை.

வெப்பம் மிகுந்த மாவட்டங்களில் புதன்கிழமை சனிக்கிழமைகளில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பது வழக்கம். வாழ்க்கையை வீணாக்கி, பயனுள்ள செயல் எதையும் செய்யாமல், ஒருவர் உயிர் நீத்தால், "அவன் புதன்கிழமை, சனிக்கிழமை தவறாமல் எண்ணெய் தேய்த்துக் குளித்தான்" என்று அவன் இறந்த நாளில் பிணத்தின் பின்னே செல்லுபவர்கள் சொல்லுவார்கள். இதுபோல 20ஆம் நூற்றாண்டுத் தமிழாசிரியர்களைப் பற்றி, "அவர்கள் செய்ததெல்லாம் எங்கெங்கே ஸ்ரீ, ஷ, ஜ, ஹ, ஸ என்ற எழுத்துக்கள் உள்ளன என்று தேடிக்கொண்டிருந்தார்கள்" என்ற அவச்சொல்லுக்கு ஆளாக வேண்டாம் என்பது என் கருத்து.

வரம்பு மீறியோ தேவையில்லாமலோ இந்த எழுத்துக்களைப் பயன்படுத்த வேண்டுவதில்லை. இலக்கிய நூல்களில் இந்த எழுத்துக்கள் தவிர்க்கப்படலாம். ஏனைய துறை நூல்களுக்கு, தேவைக்கு ஏற்ப, இவற்றை அளவுடன் பயன்படுத்திக் கொள்ளலாம். டாக்டர் மு. வ. இவ்வகையில் வழி வகுத்துள்ளார். அவர் எழுதிய வாழ்க்கை வரலாற்று நூலான "ஜார்ஜ பெர்னார்டுஷா" என்பது இவ்வகையில் குறிப்பிடத் தக்கது. இது தொடர்பாகவும் கலைச் சொல் ஆக்கத் தொடர்பாகவும் திரு எம். ஆர். பெருமாள் முதலியார் கூறும் கருத்துக்கள் சிந்தனைக்குரியன.

"கருத்துக்கள் நம்முடையனவாய் இருந்தால் சொற்களும் நம்முடையவையாய் இருக்கும். இருக்க வேண்டும். கருத்துக்களும் கருவிகளும் வெளிநாட்டுக் கண்டுபிடிப்பாயிருக்கும்போது அவற்றிக்குத் தமிழ்ப்

பெயர்களை கண்டுபிடிக்க முயல்வது புதிய கருத்துக்கள் தோன்றுவதற்கும் புதிய கருவிகள் படைக்கப்படுவதற்கும் பயன்படா.

கல்வி நிலைய ஆசிரியர்களும் நூலாசிரியர்களும் இப்போதிருக்கின்ற தமிழ்க் கலைச் சொற்களைப் பயன்படுத்துவதோடு பன்னாட்டுக் கலைச் சொற்களையும் கட்டாயமாய்ப் பயன்படுத்தவேண்டுமென்று தமிழக அரசும் வற்புறுத்துகிறது.

மொழி முதல் இடை கடை ஆகிய மூவிடங்களையும் வேறு எழுத்தோடு புணராமல் ஆங்கில எழுத்துக்களான g, d, b, என்னும் எழுத்துக்கள் இருக்கின்ற ஒலிகளும் the என்னுஞ் சொல்லுள்ள தகர ஒலியும் Chair என்னும் சொல்லிலுள்ள சகர ஒலியும் f, z என்னும் எழுத்துக்கள் குறிக்கிற ஒலிளும் தமிழில் தேவை.

Man என்னுஞ் சொல்லிலுள்ள ஏகாரமும் Four என்னும் சொல்லிலுள்ள ஓகாரமும் தமிழில் தேவை. இவற்றைத் தவிர ஜ, ஷ, ஸ, ஹ, ஸ்ரீ என்னும் எழுத்துக்களைத் தேவையான இடங்களில் தடையின்றிக் கையாளலாம். அன்றியும் பு, ர, ல ஆகிய எழுத்துக்களை மொழி முதல் எழுத்துக்களாய்ப் பயன்படுத்தவும் தயங்கக்கூடாது.

## தமிழ் நாளிதழ்களின் குறைபாடுகள் :

பொதுவாக, தமிழ் நாளிதழ்களின் தரம் குறைவு: அருகேயுள்ள கேரளத்தில் வெளிவரும் மலையாள மொழி நாளிதழ்களோடு ஒப்பிட்டால் மலையாள இதழ்களின் தரம் சிறந்தது. அங்கு இனக் கவர்ச்சிக்குச் சிறப்பிடம் கிடையாது.

மற்றும் ஒரு குறைபாடு. தமிழ் நாளிதழ்களைப் படிப்பவர்களில் சிலர், தமிழ் இதழைப் படிப்பதோடு நிற்பதில்லை. ஓர் ஆங்கில இதழையும் படிக்கிறார்கள். காரணம், வெளிநாட்டுச் செய்திகளோ, பல துறைகளில் நிகழும் மாறுதல்களைப் பற்றிய குறிப்புக்களோ பெரும்பாலான தமிழ் இதழ்களில் வருவதில்லை. இதற்கு முற்றிலும் மாறாக, மலையாள நாளிதழ்கள், வாசகரின் அறிவுப் பசியைத் தீர்க்கும் அளவுக்கு எல்லாச் செய்திகளையும் தருகின்றன. எனவே அங்கு ஆங்கில இதழ்களைப் படிப்பவர்கள் தொகையை விரல்விட்டு எண்ணிவிடலாம். மலையாள இதழ்களை மட்டும் படித்துவிட்டு

இருக்கக்கூடிய சூழ்நிலை கேரளத்தில் ஆங்கிலம் படித்தவர்களிடம் இருக்கிறது. தமிழ்நாட்டின் நிலை அதனின்றும் மாறுபட்டது. ஆங்கிலத்தாள்களைப் படித்துப் பழகிப்போனவர்கள் தமிழ் இதழ்களை மட்டும் படித்தால் வயிறு நிறையச் சாப்பிட்டவர்களைப் பஞ்ச காலத்தில் அளவுச் சாப்பாடு சாப்பிடச் சொல்லுவதுபோன்று இருக்கிறது.

பெண்களும் பத்திரிகைகளைப் படிக்கத் தொடங்கிய பிறகு அவர்களைக் கவருவதற்காகச் சமையல், தையல், வீட்டுக் குறிப்பு, குழந்தை வளர்ப்பு ஆகிய பல துறைகள் பற்றியும் முதலில் சிறு குறிப்புக்களும் பிறகு விரிவான கட்டுரைகளும் பின்னர் தனி இதழ்களும் வெளிவந்தன. பெண்களே எழுதும் நிலையும் அவர்களே ஆசிரியராக இருந்து பத்திரிகை நடத்துவதும் பிற்காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சிகளாகும்.

இவ்வாறு வாழ்க்கைக்குப் பயன்படும்வண்ணம் பத்திரிகைகள் பெருகிக்கொண்டிருந்த காலத்தில் திரைப்படங்கள் அளவு கடந்த செல்வாக்குப் பெற்றன. திரைப்படத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கும் பொழுதுபோக்குப் பத்திரிகைகள் தோன்றித் தமிழ்நாட்டு மக்களின் உணர்வைக் கெடுத்துவிட்டன. இனக் கவர்ச்சிக் கட்டுரைகளும் கதைகளும் இலலாமல் பத்திரிகைகள் வெளிவருவது அருமை. அட்டைப் படத்திலாவது இனக் கவர்ச்சி வேண்டும் என்ற நிலை இருக்கிறது. இதே காலத்தில் ஓரளவு தினசரிகளும் பேரளவு கிழமை ஏடுகளும் இசை, நாடகம், நடனம் பற்றிய திறனாய்வுகளை வெளியிட்டன. இதனால் குறிப்பிட்ட ஒரு சிறு வட்டத்திற்குள் அடங்கிக் கிடந்த கலை மூன்று, நான்கு சாதிகளில் செல்வாக்குள்ள சிலரிடமும் அரண்மனைகளிலும் மட்டும் தனியார் சொத்துப்போல இருந்த கலை, விடுதலை பெற்று எங்கும் பரவிற்று. இப்போது தமிழ்க் கலைகள் உலகெங்கும் புகழடைந்துள்ளன.

# இரண்டாம் நாள் சொற்பொழிவு 12-3-74

தமிழ் இதழ்களும் தமிழும் என்ற தலைப்பில் நேற்று, சில பொதுவான செய்திகளையும் குறிப்புக்களையும் தெரிவித்தேன். அதன் பிறகு நாளிதழ்கள் (தினசரிகள்) சிலவற்றையும் அவற்றின் ஆசிரியர்களாக இருந்து அருந்தொண்டாற்றிய பெருமக்கள் சிலரைப் பற்றியும் விரிவாகச் சொன்னேன்.

இன்று, வார இதழ்கள், திங்கள் இதழ்கள் ஆகிய சிலவற்றைப் பற்றியும் அவற்றின் ஆசிரியர்களைப் பற்றியும் முதலில் கூறுவேன்.

வார இதழ்களில் முக்கியமானதும் காலத்தால் முந்தியதும் "ஆனந்த விகடன்" இதழ் ஆகும்.

## ஆனந்த விகடன் திரு. எஸ். எஸ். வாசன்

இந்த இதழை எஸ். எஸ். வாசன் அவர்கள் தொடங்கினார்கள். வியாபாரப் பொருள்கள் சிலவற்றை விற்பனை செய்வதற்கு உதவும் கருவியாக, ஒரு விளம்பர ஏடாக வாசன் அவர்கள் இதை நடத்தி வந்தார்கள். அரசியல் கொள்கையோ, இலக்கிய ஈடுபாடோ வேறு எந்தவிதமான லட்சியமோ அவருக்கு இல்லை. 'ஆனந்த விகடன்' என்ற பெயருடன் விகடகவி பூதலூர் வைத்யநாத ஐயர் என்பவர் ஒரு மாதப் பத்திரிகையை நடத்தி வந்தார். அந்தப் பெயரை வைத்துக்கொள்ளும் உரிமையை அவரிடமிருந்து திரு எஸ். எஸ். வாசன் விலை கொடுத்து வாங்கிக் கொண்டார். அவர் கொடுத்த விலை ஓர் எழுத்துக்கு 25 ரூபாய் வீதம், 8 எழுத்துக்களுக்கு ரூ. 200/- ('ஆனந்த விகடன்' என்ற எட்டு எழுத்துக்கள் கொண்ட சொல்லுக்கு). 'ஆனந்த விகடன்' என்ற பெயர் ஓர் எழுத்தாளரை ஈர்த்தது. அதனால் ஏற்பட்ட மாறுதல்கள் ஏராளம்.

யார் அந்த எழுத்தாளர்? தமிழ்த் தென்றல் திரு வி. க. அவர்களுடைய "நவசக்தி" நாளிதழில் உதவி ஆசிரியராகப் பணி புரிந்த கல்கி கிருஷ்ணமூர்த்திதான் அந்த எழுத்தாளர்!

நவசக்தி இதழில் அவ்வப்போது நகைச்சுவைக் கட்டுரைகளையும் கிருஷ்ணமூர்த்தி எழுதி வந்தார். "ஏட்டிக்குப் போட்டி" என்பது அவர் ஆனந்த விகடனில் எழுதிய முதல் கட்டுரை.

அகில இந்தியக் காங்கிரஸ் மகாசபை மாநாட்டிற்குப் பூரிக்குச் சென்றிருந்த அனுபவத்தின் அடிப்படையில் "பூரி யாத்திரை" என்ற தலைப்பில் ஒரு நகைச்சுவைக் கட்டுரையை, கல்கி என்ற புனை பெயரில் எழுதி அதைத் தேசபக்தர் பரலி சு. நெல்லையப்பர் மூலமாக ஆனந்த விகடனுக்குக் கொடுத்தனுப்பினர்.

திரு. வாசனும் அவருடைய தாயாரும் அந்தக் கட்டுரைகளைப் படித்துச் சிரித்து மகிழ்ந்தார்கள். அந்தக் கட்டுரை அடுத்த இதழிலேயே அச்சிடப்பெற்றது. மாத இதழாக இருந்த ஆனந்த விகடனை வார இதழாக மாற்றுவது என்று, அவ்விரு கட்டுரைகளையும் படித்ததும் வாசன் முடிவு செய்துவிட்டார்.

அந்தக் கட்டுரைகள் ஒவ்வொன்றுக்கும் கல்கிக்கு ரூ. 25/- கொடுத்தார்கள். அப்போது ஒரு பவுன் விலை ரூ. 20-தான். எனவே அது இன்றைய மதிப்பில் ரூ. 500க்குச் சமம் ஆகும். தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் ஒரு கதை எழுதுமாறு திரு. வாசன், திரு. கல்கியைக் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான் 'ஆனந்த விகட'னை எந்த முறையில் நடத்துவது என்பதைப்பற்றி வாசன் சிந்திக்கத் தொடங்கினர். எந்தெந்தப் பகுதிகளைச் சேர்க்கலாம் என்பதை முடிவு செய்வதற்காக, இங்கிலாந்திலிருந்து சில சஞ்சிகைகளை வரவழைத்தார். அவற்றுள் சில வருமாறு:

**மாத இதழ்கள் :**

ஸ்டிராண்டு

விண்ட்சர்

சேம்பர்ஸ் மகசீன்

**வார இதழ்கள்:**

பஞ்ச்

ஹ்யூமரிஸ்ட்

பாசிங் ஷோ

டிட் பிட்ஸ்

அப்போது திரு. கல்கி, நவசக்தி இதழிலிருந்து விலகி திருச்செங்கோட்டிற்குச் சென்று, காந்தி ஆசிரமத்தில் தங்கிக் கொண்டிருந்தார். ராஜாஜி அவர்கள் நடத்திய "விமோசனம்"

என்ற மதுவிலக்கு இதழின் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்து 'ஏட்டிக்குப் போட்டி' என்ற தொடர் கட்டுரையைக் காரசாரமாக எழுதி இடையிடையே திரு. வாசனுடன் தொடர்பு கொண்டிருந்தார். கதையையும் தலையங்கக் கட்டுரையையும் வி. பி. பி. பார்சலில் அனுப்புவார். அதை திரு. வாசன் பணம் கட்டி எடுத்துக்கொண்டு வெளியிடுவார். வாசன் கையாண்ட வி. பி. பி. முறையை, திரு. கல்கி, வாசனிடமே கடைப்பிடித்தார்.

மேற்குறிப்பிட்ட ஆங்கில இதழ்களில் நகைச்சுவை மிளிரும் சிறு கதைகளும் சுருக்கமான கட்டுரைகளும் வேடிக்கைப் படங்களான கேலிச் சித்திரங்களும் இருந்தன. ஆனால் அரசியல் கட்டுரைகளை அவை வெளியிடவில்லை. தலையங்கம் என்பது இராது; இன்றுங்கூட இந்த இதழ்களில் தலையங்கம் இல்லை.

கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய மூச்செல்லாம் அரசியல். நாட்டு விடுதலை இயக்கத்தில் அவர் இரண்டறக் கலந்திருந்தார். எனவே, அரசியல் கட்டுரைகளை எழுதித் தமிழ் மக்களிடம் ஓர் எழுச்சியையும் விழிப்பையும் உண்டாக்கிவிடுவது என்று அவர் உறுதி கொண்டார். அரசியல் கட்டுரையையே ஆசிரியர் எழுதும் தலைப்புக் கட்டுரையாக வெளியிட்டார்.

"பஞ்ச்" இதழ் இங்கிலாந்தின் நடப்புக்களையும் பொழுது போக்குச் சங்கங்களில் பேசப்படும் செய்திகளையும் கிண்டலான ஒரு தலைப்பில் சுருக்கமாயும் வேடிக்கையாயும் விமரிசனம் செய்தது. இதைப் பின்பற்றி ஒவ்வோர் இதழிலும் ஆனந்த விகடன் துணை ஆசிரியர்களை எழுதச் செய்தார், கல்கி. "துக்கடா" என்ற பெயரில் வெளிவந்த இந்தப் பகுதி வாசகர்களை மிகவும் கவர்ந்தது. இதன் பயனாக "பஞ்ச்" "ஆனந்த விகடன்" இரண்டையும் படித்த தமிழர்கள் ஆனந்த விகடனுக்கு The Punch of South India என்று பட்டம் சூட்டினர்.

இந்தக் கட்டத்தில் ஆனந்த விகடனின் புகழ் பெரிதும் பரவிற்று. திரு. வாசனுடைய வற்புறுத்தலுக்கு இணங்க "விமோசனம்" என்ற இதழிலிருந்து கல்கியும் "தாருல் இஸ்லாம்" இதழிலிருந்து கோபால கிருஷ்ணன் என்ற கோபுவும் விலகி ஆனந்த விகடனில் சேர்ந்தனர். உடனே அது மாதம் இருமுறை இதழாக்கப்பட்டது.

"கர்நாடகம்" என்ற புனைபெயரில் கல்கி, நாடகங்களைப்பற்றித் திறனாய்வு செய்தார். அவருக்குமுன் ஒருவரும் எந்தத் தமிழ் இதழிலும் நாடகங்களைப்பற்றி எழுதியதில்லை.

நகைச்சுவையாக ஆங்கிலத்தில் எழுதும் எழுத்தாளர்களேயும் தமிழில் எழுதும்படி கல்கி தூண்டினர். இவ்வகையில் குறிப்பிடத் தக்க ஒருவர் திரு. எஸ். வி. வி. என்ற விஜயராகவாச்சாரி. இதழ் முழுக்க முழுக்க நகைச்சுவையாக எழுதியதால் அதைப் படித்துச் சிரித்துச் சிரித்து வாசகர்களின் வயிறு வலித்தது. எனவே இதற்கு ஒரு மாற்றாக பி. ஸ்ரீ.யின் கம்பராமாயணக் கட்டுரைகள் வெளியிடப் பட்டன.

இதன்பிறகு 'அரசியல் நிருபர் சரடு', 'பெரியவர்களுடன் கற்பனைப் பேட்டிகள்', 'உபய குசலோபரி' என்ற பெயர்களில் ஆசிரியர் தம் வாசகர்களுடன் பேசும் பகுதிகள் வெளிவந்தன. மேலும், "எங்களூர் செய்தி" என்ற தலைப்பில் அந்தந்த ஊரார் எழுதியனுப்பும் சுவையான குறிப்புகளும், நேயர் கடிதங்களும் சேர்க்கப் பெற்றன.

நேயர் கடிதங்கள் என்பது Letters to the Editor. தங்களுடைய பெயரை அச்சில் பார்க்க விரும்பும் இளைஞர்களுக்கும் எழுதிப் பழக வேண்டும் என்று ஆசைப்படுபவர்களுக்கும் இந்தப் பகுதி வாய்ப்பு அளிக்கிறது. எனவே இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் எல்லா இதழ்களும் இப் பகுதிக்கு நிறைய இடம் ஒதுக்குகிறார்கள். பம்பாயிலிருந்து வெளிவரும் ஆங்கிலம் மற்றும் இந்திய மொழி இதழ்களிலும் இந்த முறையைப் பின்பற்றுகிறார்கள். எந்த இதழுக்கும் இரண்டு கடிதங்களை அனுப்பினால் அவற்றுள் ஒன்றை யேனும் கட்டாயம் வெளியிடுவார்கள். தமிழ் இதழ்களில் இந்த நிலை உருவாகும் நாள் எந்நாளோ !

ஆனந்த விகடன் காரியாலயத்தில் துமிலன் சேர்ந்த பிறகு சிறுவர் பகுதியும் சிறப்பிடம் பெற்றது. நான்கு பக்கங்கள்கொண்ட "சிறுவர் அனுபந்தம்" வண்ணத்தாளில் அச்சிடப் பெற்றது. இதை, கோபு உருவாக்கி வந்தார் என்று கேள்வி.

"அப்பளக் கச்சேரி" என்ற தலைப்பில் பெண்களுக்குப் பயன் படும் செய்திகளை ஒரு பெண் பெயரில் ஓர் ஆடவர் எழுதிவந்தார். அப்போது பெண் எழுத்தாளர்கள் தோன்றவில்லை.

எதிர்பாராத அளவுக்கு ஆனந்த விகடன் வார இதழாகிப் பல்லாயிரக்கணக்கான வாசகர்களைப் பெற்று, தமிழ்ப் பத்திரிகை உலகத்தைத் திணற வைத்தது. ஆனந்த விகடனுடைய பெருமைக்

கெல்லாம் 'கல்கி'யே காரணமாவார். அவருக்கு முழு உரிமை கொடுத்தவர், வாசன். கல்கிக்கு உறுதுணையாக இருந்து அவருடைய முயற்சி வெற்றிபெற உதவியவர்களுள் துமிலன், கோபாலகிருஷ்ணன், பார்த்தசாரதி, ஓவியர் மாலி, தேவன், சாவி, நாடோடி, ரூலி, பத்மனுபன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

திரு. எஸ். எஸ். வாசன் தடை ஒன்று விதித்தார். ''ஆனந்த விகடனில்'' வரும் எந்தக் கட்டுரையிலும் கதையிலும்

பிணம்

கோழை

சாம்பல்

என்பன போன்ற சில சொற்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதே அந்தத் தடை. மங்கலமில்லாத சொற்களை விலக்கவேண்டும் என்று அவர் நினைத்தது வரவேற்கத் தக்கது.

மகா கனம் ஸ்ரீநிவாச சாஸ்திரி போன்ற ஆங்கிலப் மொழிப் பெரும்புலவர்களையும் தமிழில் எழுதச்செய்த பெருமையும் ஆனந்த விகடனைச் சேரும்.

பகுத்தறிவுப் போட்டி மூலம் புதிய தமிழ்ச் சொற்களைப் பலரும் அறியச் செய்ததும் ஆனந்தவிகடனின் சாதனை.

ஆனந்த விகடனுடைய தமிழ் நடை பிராமணத் தமிழிலும், கதைகள் தஞ்சை மாவட்ட பிராமணர்களுடைய வாழ்க்கையை மையமாகக் கொண்டும் இருந்தன. திரு எஸ். எஸ். வாசனே இதை உணர்ந்து இந்த இரு போக்குகளையும் மாற்றும்படி உதவி ஆசிரியர்களிடம் கூறினர். அந்த மாறுதல்களைச் செய்த பிறகுதான் ஆனந்தவிகடனின் விற்பனை ஒரு நூறுயிரத்தைத் தாண்டிற்று.

மகா மகா உபாத்தியாயர் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை அவர்களைக் கொண்டே ஆனந்த விகடன் வெளியிட்டது. இவ்வாறே முன்னுள் முதலமைச்சர் பூ. ச. குமாரசாமி ராஜா அவர்களுடைய இளமை வரலாறும் ஆனந்த விகடனில் வெளிவந்தது.

பயண நூல்கள் பல வெளிவரவும் ஆனந்த விகடன் காரண மாக இருந்திருக்கிறது. மத்திய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின் வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்கள் ஆனந்த விகடன்

மூலமாகத்தான் எழுத்து வடிவம் பெற்றன. இவ்வாறே, தலைவர் காமராஜ் அவர்களுடைய ரஷ்யப் பயணம், முன்னாள் தொழில் அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களைக் கொண்டு, ஆனந்த விகடனில் இடம் பெற்றது. இதைத் தொடர்ந்து திரு. மணியன் எழுதியுள்ள ஏராளமான பயணக் கட்டுரைகள் பல்லாயிரக்கணக்கானவர்களை ஈர்த்து, ஆனந்த விகடனுக்குப் பெருமை தந்திருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

சிறுகதைத் துறையில் ஆனந்த விகடனின் பங்கு குறிப்பிடத் தக்கது. ''மாணவர் திட்டம்'' என்ற ஏற்பாட்டால், மாணவர் பலர் ஆனந்த விகடனில கட்டுரை எழுதலாயினர்.

அடுத்து எனக்குத் தோன்றுவது சிறுகதை, தொடர்கதை களுக்கான பரிசுத் திட்டங்களை ஏற்படுத்தி அந்தத் துறைகளில் புதிய படைப்புக்கள் ஏற்பட ஆனந்த விகடன் துணை செய்திருப்பது, இது, பாராட்டுதற்குரியது.

மாவட்ட மலர்களும் மாவட்ட மணம் கமழும் கதைகளும் வெளியிட்டிருப்பதற்காக நான் ஆனந்த விகடனைப் போற்றுகிறேன். ஆனால் அவற்றில் அதிகமான அரசியல் கலப்புக் காணப்படுகிறது. அவ்வப்போது பதவியில் இருப்பவர்களைப் பற்றிய தேவையில்லாத குறிப்புக்கள் இந்த மலர்களில் இடம் பெறுகின்றன.

மேலும் என்போன்ற எழுத்தாளர்கள் பல ஆண்டுகளாகப் பாடுபட்டுத் திரட்டிய குறிப்புக்களும் யார் யார் பெயராலோ ஆனந்த விகடனில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் பற்றி நான் ஆனந்த விகடன் ஆசிரியருக்கு எழுதிய கடிதத்திற்கு எனக்குக் கிடைத்த பதிலையும் இங்கே படித்துக் காட்ட விரும்பு கிறேன்.

## *26—6—1970*

*"விகடன் தயாரித்தளிக்கும் மலர்களில் தாங்கள் சேகரித்த அபூர்வச் செய்திகள் சில இடம் பெற்றி ருப்பதை ஒப்புக்கொள்கிறோம். அவற்றிற்குரிய சன்மானத்தை விரைவில் அனுப்பி வைக்கிறோம். இதைப்போல் இன்னும் தாங்கள் தனிச் சிறப்புடன் திரட்டிய செய்திகள் எவற்றையாவது நாங்கள் உபயோகிப்பதாக இருந்தால் உபயோகிக்கும் தகவல் களுக்கு உரிய அன்பளிப்பை அனுப்புகிறோம். அதற் கான தங்கள் ஒப்புதலை எதிர் பார்க்கிறோம்.*

> தங்கள் புத்தகங்களிலிருந்து வாசக அன்பர்கள் எடுத்து அனுப்பிய விவரங்கள், ஏற்றுக் கொள்ளப் பட்டு பெயர்க்குறிப்பு இல்லாமல் வெளியிடப் பட்டிருந்தால் அன்பு கூர்ந்து எங்களுக்கு அவற்றைச் சுட்டிக் காட்டி எழுதுங்கள். அவற்றிற்கான அன்பளிப்பையும் அனுப்புகிறோம்.
>
> அரிய பணியை மேற்கொண்டு பாராட்டத் தக்க வெற்றி பெற்றிருக்கும் ஒரு சிறந்த எழுத்தாளருக்கு உரிய கௌரவத்தை வழங்க விகடன் ஒருபோதும் தயங்காது."

'அருணுசல மகிமை' முதலிய பக்திக் கட்டுரைகளும் கவர்ச்சியானமுறையில் ஆனந்த விகடனில் வெளிவருவதும் போற்றத் தக்கது.

கொத்தமங்கலம் சுப்புவின் எழுத்துக்களுக்கு இடம் அளித்து ஆனந்தவிகடன் நாட்டுப்புற இலக்கியத்தையும் பரப்பியிருக்கிறது.

ஏற்கெனவே ஆனந்த விகடனில் எழுதாத பலர் — டாக்டர் மு. வரதராசன், இப்போது டாக்டர் அவ்வை நடராசன் ஆகியவர்களைத் தொடர்ந்து ஆனந்தவிகடன் எழுதச்செய்து வருவதையும் வரவேற்கிறேன்.

## 'கல்கி'

கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இறந்து இப்போது 20 ஆண்டுகள் ஆகின்றன. ஆயினும் அவரளவுக்கு பத்திரிகைத் துறைக்கும் அந்தத் துறை வாயிலாகத் தமிழ் மொழிக்கும் இலக்கியத்துக்கும் பணி புரிந்த வேறு ஓர் ஆசிரியரைச் சொல்ல முடியவில்லை. இதிலிருந்தே இவருடைய பணி, ஈடும் இணையும் இல்லாதது என்பதை அறியலாம்.

இவர் செய்த பணிகளுக்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல இவர் புதிதாகத் தொடங்கிய கல்கி ஏடு வெற்றியாக அமைந்தது. இன்றளவும் அது தரம் குறையாத ஏடாக இருந்துவருவது அதன் தனிச்சிறப்பு.

திரு. கல்கி தமிழ் நாட்டு வரலாற்றை ஆழ்ந்து படித்து நாவல்கள் எழுதினர். அவ்வாறு பிறர் எழுதுவதற்கும் வழி காட்டினர். ஒவ்வொரு வாரமும் தொடர்ந்து எழுத வேண்டிய இன்றியமையாமை அவருக்கு ஏற்பட்டது. அதற்கு வேண்டிய தகுதிகள் அனைத்தும் அவரிடம் ஒருங்கே குடிகொண்டிருந்தன.

தமிழ்நாட்டு வரலாற்றை நிலைக்களமாக வைத்து நாவல்கள் எழுதினால் எத்தனை வாரங்களுக்கு வேண்டுமாயினும் நீட்டிச் சுவை குன்றாமல் எழுதிக்கொண்டே போகலாம் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. கதையைப் பல நிகழ்ச்சிகளால் பின்னிக்கொண்டே போகும் பாணியையும் அவர் திறமையாகக் கையாண்டார். கதையை விடுவிப்பதற்காக தற்செயலாகச் சில நிகழ்ச்சிகளையும் கற்பனை செய்து கொண்டார். எந்தக் கதையையும் பெரியதொரு பீடிகையுடன் (முகவுரையுடன்) தொடங்குவது அவருடைய மரபு.

எனவே தமிழ்ப் புனைகதை இலக்கியத்திற்கு அழகும் மெருகும் ஊட்டிய இலக்கியக் கலைஞர்களில் கல்கிக்குச் சிறப்பான இடம் உண்டு. சிறுகதை, புதினம் ஆகிய இரண்டிற்கும் இடைப்பட்ட குறுநாவல் முதலிய அனைத்துத் துறையிலும் அவரது கை பழகிப் பண்பட்டிருந்தது. தனக்குப் பின்னே வந்த எழுத்தாளர்களுக்கு அவர் ஒரு வழிகாட்டியாய்த் திகழ்ந்தார்.

பழுவேட்டரையர், சம்புவரையர், பூதிவிக்கிரமகேசரி, மலையமான் மிலாடுடையார் முதலிய பெயர்களையும் கோப்பரகேசரி, இராஜகேசரி முதலிய பட்டங்களையும் வரலாற்றுத் தொடர்புடைய தமது புதுமைக் கதைகளில் திரு. கல்கி பயன்படுத்தியிருக்கிறார். வரலாற்றில் இடம் பெற்ற உண்மையான பாத்திரங்களையே கதைகளில் திரு. கல்கி குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனந்த விகடனில் அவர் தியாக பூமி என்ற தொடர்கதை எழுதிவந்தபோது திரு. எஸ். எஸ். வாசன் சொன்னதை இங்கே படிக்க விரும்புகிறேன்.

> "தமிழ் நாட்டில் தொடர் கதைக்கு ஒரு மதிப்பும் அசையாத ஸ்தானமும் சம்பாதித்துக் கொடுத்தவர் கல்கி."

அவர் இறந்துவிட்டதாகச் சில பத்திரிகைகளில் தவறான செய்தி ஒன்று வந்துவிட்டது. அப்போது,

> "செத்ததுதான் செத்தாரே, சிவகாமியின் சபதத்தை முடித்துவிட்டுச் செத்தாரா!"

என்று மக்கள் ஏங்கினார்கள்.

அமெரிக்க இதழான 'நியூயார்க் ஹெரால்டு ட்ரிபியூன்' உலகச் சிறுகதைப் போட்டி நடத்தியபோது அதன் உட்பகுதியாகத் தமிழ்

மொழியிலும் சிறுகதைப் போட்டி அமைத்து அக்கதைகளில் சில, உலகக் கதைகளுடன் இடம்பெறச் செய்தவர் திரு. கல்கியே ஆவார்.

கல்கி வார இதழின் வெள்ளிவிழாப் போட்டி, இலக்கிய உருவகங்கள் உண்டாகப் பயனுள்ள ஒரு கருத்தரங்காக அமைந்தது.

தமிழ் இசை இயக்கத்துக்கு திரு. கல்கி கொடுத்த ஆதரவு மிகப் பெரியது. இவ்வாறே இசை, நாடக, நடன நிகழ்ச்சிகளைப் பற்றி அவர் செய்த திறனாய்வுகள் கலை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தன.

இலங்கையிலுள்ள பொலன்னுறுவை போன்ற பழம் பெரும் நகரங்களுக்குச் சென்றபோது, அங்கே தாம் கண்ட பழங்காலச் சிலைகள், கோயில்கள் ஆகியவற்றைப் பார்த்துத் தம்முடன் அழைத்துச் சென்ற ஓவியர் வாயிலாகப் படங்களை வரைந்து வெளியிட்டார்.

கல்கியின் எழுத்தால் ஏற்றம்பெற்ற நிறுவனங்கள் எத்துணையோ. வாலாஜாபாத் இந்துமத பாடசாலைக்கு கல்கி 1940-இல் முதன் முறையாக வந்து 'பாலாறும் பகற்கனவும்' என்ற கட்டுரையை வெளியிட்டு நாட்டுமக்களின் உள்ளங்களில் இப் பாடசாலைக்கு நல்லிடம் தேடிவைத்தார். அடுத்தபடியாக இப் பாடசாலையைப் பார்வையிட்டபோது 'நனவு கனவாயிற்று' என்றும், கடைசி முறையாக 1953-இல் இங்கு வந்து மாணவர் இல்லக் கட்டிடத்தைத் திறந்து வைத்தபின் 'ஒன்றும் இயலாதவரின் உயர் பெரும் சாதனை' என்றும் வானளாவப் பாராட்டியிருந்தார்.

பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் "ஆற்றங் கரையிலே", என்ற ஒரு நூலை எழுதியிருப்பதைப் பலர் அறிவீர்கள். இக்கட்டுரைகளெல்லாம் முதலில் கல்கி இதழில் வெளி வந்தவையே. கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய தூண்டுதல் இல்லாவிட்டால் சேதுப்பிள்ளை ஒருபோதும் இவற்றை எழுதியிருக்க மாட்டார். ஒவ்வொரு வாரமும் கல்கி அலுவலகத்தார் சேதுப்பிள்ளை அவர்களிடம் வந்து "வெள்ளிக்கிழமை பத்திரிகை வரவேண்டும், வியாழக்கிழமை பைண்டு ஆகவேண்டும், செவ்வாய்க்கிழமைக்குள் கம்போசிங் முடியவேண்டும்" என்று தொந்தரவு செய்து விடாப் பிடியாக அவரை வற்புறுத்தி அவர் சொல்ல, கட்டுரையை எழுதிக் கொண்டு போவார்கள்.

தமிழ்ப் புலவர்கள் பலருடன் திரு. கல்கிக்குத் தொடர்பு இருந்தது. பெரும்புலவர் ஜெகவீர பாண்டியனாரின் குமரேச வெண்பாவில் வரும் கதைகளுக்கு திரு. கல்கி படம் போட்டு விளம்பரப்படுத்தினார்.

(டி. கே. சியின் கம்பராமாயணம், ராஜாஜியின் வியாசர் விருந்து ஆகியவையும் விவசாயக் கட்டுரைகளும் கல்கி இதழில் வெளிவந்தது குறிப்பிடத் தக்கது.

யோகாசனப் பயிற்சிப் பேராசிரியரான பெங்களூர் சுந்தரத்தைக் கொண்டு உடலை எப்படி ஆரோக்கியமாக வைத்துக்கொள்வது என்பது பற்றி "ஆனந்த ரகசியம்" என்ற தலைப்பில் தொடர் கட்டுரைகள் எழுதச் செய்தவர் திரு. கல்கியே. பிறகு 'வலிவும் வனப்பும்' என்ற தலைப்பில் கட்டுரைகள் எழுதச் செய்தார். பின்னர் சென்னை வி. என். குமாரசுவாமி அவர்களைக் கொண்டு 'ஆஸ்த்துமாவிற்கு யோகாசனம்' என்ற கட்டுரைகளை கல்கி இதழில் பிரசுரித்தார். இவற்றைப் படித்த பலர் தலைகீழாக நின்றார்கள். சிரசாசனம் செய்தார்கள். உடல் வலிமை பெற்றார்கள்.)

கல்கியுடைய நகைச்சுவையைப் பற்றி நான் சொல்லி, நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. 40 ஆண்டுகளுக்கு முன் 'ஓ மாம்பழமே' என்று அவர் எழுதிய கட்டுரை, அதை அந்நாளில் படித்தவர்கள் மனத்தைவிட்டு இன்றுகூட அகலவில்லை. அவருடைய எழுத்தில் அழுத்தமும், கருத்தில் உறுதியும் இருந்தன. தூய தமிழ்ச்சொற்கள் பலவற்றை அவர் பயன்படுத்தினார். இலக்கியத்தில் மட்டுமே வழங்கி வந்த பெயர்கள் பலவற்றைப் பாமர மக்களும் அறியும்படி செய்தார். பழைய கட்டிடங்களின் பெயர்கள், இடங்களின் பெயர்கள், கோயில்களின் பெயர்கள், தமிழ்நாட்டில் ஆங்காங்கே இருக்கும் பாலங்கள் ஆறுகள் இவற்றின் பெயர்களைக் கூடக் கல்கி நாடறியச் செய்தார். எத்துணையோ பழந்தமிழ்ச் சொற்களையும், வழக்கொழிந்துபோன பழைய தமிழ்ப் பட்டங்களையும் அவர் கையாண்டு அவற்றுக்குப் புத்துயிரும் புதுவாழ்வும் கொடுத்தார். அவருடைய நாவல்களிலும் கதைகளிலும் மேற்கோள்களாகப் பழைய பாடல்களைச் சுவைபடக் கூறினார். 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்; மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்' என்ற தேவாரத்தைச் சிவகாமியின் சபதத்தில் தெரிவித்திருப்பது என் மனத்தைவிட்டு அகலாது.

கல்கியினுடைய பெருமைக்கெல்லாம் அடிப்படை :

1. ராஜாஜியிடமிருந்து அவர் பெற்ற அரசியல் அறிவு
2. திரு. வி. க. விடம் அவர் பயின்ற பழந்தமிழ்
3. சதாசிவப் பண்டாரத்தாரிடம் அவர் கற்றுக்கொண்ட தமிழக வரலாறு
4. ரசிகமணி டி. கே. சி.யுடன் பழகி அவர் அறிந்த மறுமலர்ச்சித் தமிழும் கம்பராமாயணத் தெளிவு
5. இசைக் குயில் எம். எஸ். - இடமிருந்து அவர் பெற்ற இசை அறிவு

என்று கூறலாம்.

பிறர் எழுதுவதையும் படித்துப் பார்த்து அந்த எழுத்தாளர்களைப் பாராட்டும் குணம் திரு. கல்கியிடம் குடிகொண்டிருந்தது. இந்த இயல்பு நிறைந்த மற்றொரு பெரியவர் காலஞ்சென்ற வ. ராமசாமி ஐயங்கார் என்ற வ. ரா. ஒரு நல்ல கட்டுரையை வ ரா. படித்து விட்டால் 'அந்த எழுத்தாளர் யார்? அல்லது புனைபெயருள்ள ஆசாமி யார்? என்று துருவி விசாரித்து அவர் இருக்கும் இடத்தையும் கண்டு பிடித்து அந்த எழுத்தாளரைக் கட்டிப்பிடித்துப் பாராட்டாவிட்டால் வ. ரா. வுக்குத் தூக்கம் வராது !

சத்திய கங்கையில், பகீரதன் எழுதியிருக்கும் பின்வரும் பகுதி, நம் கவனத்திற்கு உரியது.

## புதிய கல்கி

'கல்கி' பத்திரிகை இப்போது ஜிலுஜிலுவென்று இருக்கிறது. ஒரு மறுமலர்ச்சி அதில் தோன்றியிருக்கிறது. ஏதோ காயகல்பம் சாப்பிட்டுவிட்டு வந்தது மாதிரி புத்திளமையுடன் பொலிகிறது. பொற்கொல்லர்கள் நகையணிகளை ஒவ்வொரு பகுதியாக நுணுக்கமாகக் கவனித்து நகாசு செய்வது போல ஒவ்வொரு பக்கத்தையும் மெருகு கொடுத்திருக்கிறார்கள்.

முழு ஆசிரியப் பொறுப்பையும் மேற்கொண்ட பிறகு கல்கியின் குமாரர் திரு. ராஜேந்திரனின் கைவரிசைகள் ஒன்றன்பின் ஒன்றாக வெளிவர வசதி ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.

திரு. ராஜேந்திரன் உற்சாகி; பத்திரிகை என்ருல் உயிரையே விடச் சித்தமாக இருப்பவர். பழைமை புதுமை இரண்டையும் நன்கு அறிந்தவர்.

அட்டைப் படத்திலிருந்து கடைசிப் பக்கம் வரை அவர் மாறுதல்களைக் கொண்டுவந்திருக்கிருர். பத்திரிகையின் லே-அவுட்டே மாறியிருக்கிறது. அதுவே வெற்றிவழி திறந்து விட்டதற்கு அறிகுறி.

ஒரு பத்திரிகைக்கு லே-அவுட்தான் உயிர்நாடி. எந்த இதழில் எந்தப் பக்கத்தைப் புரட்டினுலும் அது அதற்கு முன் பார்த்திராத புதுமையாக இருக்கவேண்டும். சரக்கு இரண்டாம் பட்சமாக இருந்தால்கூட அதன் லே-அவுட் மட்டும் புதுமையாக இருந்தால் போதும்—சரக்கு விலை போய்விடும்.

தமிழ்நாட்டில் ஒரு பத்திரிகை 'லே-அவுட்'களை மட்டும் வாரந்தவருமல் விலைகொடுத்தது வாங்கிப் பயன் படுத்துகிறது என்பது பல பேருக்குத் தெரியாது.

### குமுதம்: எஸ். ஏ. பி.

(இந்தியாவிலேயே வேறு எந்த நாளிதழையும் விடக் கூடுதலான அளவு விற்பனையாகும் இதழ் என்ற நிலையை "குமுதம்" பெற்றிருக்கிறது. இப்போது இது ஐந்தேகால் லட்சம் பிரதிகள்வரை விற்பதாகத் தெரிகிறது. ஆனுல் இந்த நிலையை அது திடீரென்று அடையவில்லை. திட்டமிட்ட வளர்ச்சியால் அதனுடைய விற்பனை இந்த அளவுக்குப் பெருகியிருக்கிறது)

'குமுதம்' முதல் இதழ் 2,000 பிரதிகள் மட்டுமே விற்பனை யாயிற்று. முதல் இரண்டு ஆண்டுகளில் 5000 பிரதிகள் அச்சிட்டார்கள். அவற்றில் 3000 விற்பனையாகாமல் திரும்ப வந்துவிடும். ஆனுல் அதனுல் எஸ். ஏ. பி. சிறிதும் தளர்ச்சியடையவில்லை. இருபது ஆண்டுகள் வரை அது நஷ்டத்தில் நடந்ததாகவும் கேள்விப் படுகிறேன். அக்காலத்தில் 'கல்கண்டு' - இதழில் குமுதத்துக்கு விளம்பரம் செய்தார்கள்.

இப்போது வேறு எந்த இதழையும் படிக்காத பலர் குமுதத்தை மட்டும் படிக்கிருர்கள். எனவே ஒரு புதிய வாசகர் கூட்டத்தைக் குமுதம் உருவாக்கியிருக்கிறது. ஆனுல் குமுதம் உருவாக்கியுள்ள

வாசகர்கள் சிறு துணுக்குகளை மட்டுமே படிக்கும்படி பழக்கப்படுத்தப்பட்டு விட்டார்கள். இதனால் பெரிய நூல்களைப் படிக்கின்ற இயல்பு இப்போது குறைந்து வருகிறது. நமது அரசு பல கோடி ரூபாய் செலவு செய்து, நூல் நிலையங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் நூற்றுக் கணக்கில் ஏற்படுத்தியுங்கூட அங்குள்ள பல நூல்கள் கைபடாமல் இருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கலாம், பத்திரிகைகள் வாசகர்களிடையே உருவாக்கியிருக்கின்ற உணர்ச்சிகளும் கவர்ச்சிகளும் அவற்றுள் ஒன்று எனலாம்.

'கேட்டு எழுதியவர்', ''தகவல் தந்தவர்'' என்ற குறிப்புக்களுடன் சிறு சிறு செய்திகளைக் குமுதம் வெளியிடுகிறது. இதனால் பொதுக் கூட்டங்களுக்குச் செல்லுபவர்களிடம், ''நாம் கேட்கும் பேச்சைக் கூர்ந்து கேட்கவேண்டும், பால்பாயிண்ட் பென்சிலும், தாளும் கொண்டு போகவேண்டும், குமுதத்திற்கு ஏதாவது எழுதி அனுப்பலாம்'' என்ற மனநிலை பல இளைஞர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

குமுதம் இதழை நடத்தும் திரு. எஸ். ஏ. பி. நல்ல எழுத்தாளர். ஆயினும் அவர் ஏதாவது எழுதுவாரே தவிர, அவருடைய சொந்த ஆளுடமையை Personality-ஐ அதில் அவர் காட்டிக்கொள்வதில்லை. தகுதி நிறைந்த தம்முடைய உறவினர்களைப்பற்றிய செய்திகளையும் அவர் வெளியிடுவதில்லை. சான்று : ஜே. ஆர். டி. டாட்டாவுக்கு முன்னரே, விமானம் ஓட்டும் லைசன்சு பெற்றவரும் சென்னை ஃபிளையிங் கிளப்பைத் தோற்றுவித்தவரும் இந்தியாவிலேயே சொந்த விமானம் வைத்திருந்தவர்களுள் முதல்வருமான அவருடைய சிறிய தந்தையார் எஸ். ஏ. ஏ. அண்ணாமலைச் செட்டியாரைப்பற்றிக் கூட அவர் எழுதக் கூச்சப்பட்டார்.

குமுதம் பல புதிய எழுத்தாளர்களை ஊக்குவித்திருக்கிறது. அவர்களில் பலர் ஆரம்ப எழுத்தாளர்கள் ஆவர்.

குமுதத்தினுடைய வெற்றிக்கு மற்றொரு காரணம் திரு. எஸ். ஏ. பி.யும் திரு. பார்த்தசாரதியும் அல்லும் பகலும் அறுபது நாழிகையும் குமுதத்தின் வளர்ச்சியிலேயே சிந்தனை செலுத்துகிறார்கள். உலகத்தில் வேறு எதிலும் அவர்களுக்கு ஈடுபாடு அணுவளவும் கிடையாது.

குமுதம் கடைப்பிடிக்கும் நடை எளிய நடை; அது பெரும்பாலும் பேச்சு நடையாகவும் இருக்கும். நடை மூலம் உணர்ச்சியை

வெளிப்படுத்துவதுதான் அவர்களுடைய நோக்கம். வேறு இதழ்களில் "இறங்கினுன்" என்று அச்சிடுவதை "குமுதம்"

இ

ற

ங்

கி

ளு

ன்

என்று அச்சிடும். அவர்களுக்கு முக்கியத்துவம் உணர்ச்சிதான். அந்த உணர்ச்சி பெரும்பாலும் பாலுணர்ச்சியாகவும் இருக்கும். குறிப்பாகவும் சிறப்பாகவும் கல்லூரி மாணவர்களேயும் மாணவிகளேயும் ஈர்ப்பதையே குமுதம் இலட்சியமாகக் கொண்டிருக்கிறது. இந்த முயற்சியில் குமுதம் பெரும் வெற்றி கண்டிருக்கிறது.

ஆகையால் குமுதத்தைப் பின்பற்றவும் குமுதத்துடன் போட்டியிடவும் பல இதழ்கள் முயன்று வருகின்றன. ஆனுல் அந்த முயற்சிகள் "கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி" போலத் தான் உள்ளன.

குமுதம் பல புதிய உத்திகளேக் கையாளுகிறது. இந்த வாரம் என்ன இருக்கும்? அடுத்த வாரம் என்ன வரும்? என்று சொல்ல முடியாத நிலேயில் ஒவ்வோர் இதழும் உருவாகிறது. தலே எது, வால் எது என்று கண்டுபிடிக்க முடியாது. யார் எழுதினுலும் குமுதத்தில் வெளியிடுவார்கள். படித்துப் பார்க்காமல் குப்பைத் தொட்டியில் போடமாட்டார்கள் என்ற எண்ணம் குமுதத்தைப் பற்றிப் பலரிடையே நிலவி வருகிறது.

கட்டுரை கதைகளின் தலேப்பை TYPE SET இல்லாமல் அழகுக் கலேயாகப் படமாக எடுத்துப் படிக்கத் தூண்டும்படி கவர்ச்சியாக வெளியிடுகிருர்கள்.

பொருள்களே விற்கும் கடைகளில் அனுபவம் பெற்ற விற்பனேயாளர்கள் வெவ்வேறு இடங்களில் மாற்றி மாற்றி அடுக்கிக் கடைக்குள் நுழைவோரை மகிழச்செய்வது போல 'குமுதம்' இதழில் ஆசிரியரின் தலேப்புக் கட்டுரை திடீர் திடீரென்று இடம் மாறும். எனவே இதழ் முழுவதையும் படிக்கவேண்டும் என்ற ஆர்வமும் உண்டாகிவிடுகிறது.

(மேற்கத்திய தொழில் நுணுக்க முறைகளையும் தந்திரங்களையும் குமுதம் கையாளுகிறது. அதற்காகப் பல பக்கங்களைச் செலவு செய்ய அவர்கள் தயங்குவது இல்லை. மட்டமான நகைச்சுவை களையும் வெளியிடும் தமிழ்நாட்டுப் பத்திரிகை மரபுக்குக் குமுதமும் விலக்கு அன்று.)

14-3-74 குமுதத்தில் 'இந்த வாரத்து நாடகம்' என்பதிலிருந்து ஒரு பகுதியைப் படித்துக் காட்டுகிறேன். அதிலிருந்து குமுதத்தின் நடையைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

> " ஜீவா. நீயும் பொண்ணுன்னு இறக்கறதுனுலே தான்
> உடறேன். முன்சீப் பொண்ணென்ன ஆர்மி சீஃப்
> பெண்ணுக இருந்தாலும் கூடத் தூக்கிக் கொண்டு
> போய் விடுவேன் ராவோடு ராவா. ஜாக்கிரதை!
> டேய், இது தேருதுடா — வாடா!"

இதே இதழில் வெளிவந்திருக்கும் ஒரு கவிதையை இப்போது படிப்பேன்.

> " தூக்கிக் கட்டிய கச்சையும்
> துவளக் கட்டிய கொண்டையும்
> நீக்கிக் கட்டிய புடவையும்
> நெகிழக் கட்டிய இடையுடன்
> ஆக்கிக் கட்டிய பருவமோ? அதன் பேர்
> உந்தன் உருவமோ"

குமுதம் சில காலம் அந்த இதழுடன் அன்பளிப்பாக ஒரு சிறு நூலையும் வழங்கிற்று. அவற்றுள் ஒன்று சென்னை நகரத்தின் பழங்கால மேயர்களுடன் தான் பெற்ற அனுபவத்தைப் பற்றி மாநகராட்சி ஊழியர் ஒருவர் எழுதியது. இவ்வாறு இதற்குமுன் பேனுப் பிடிக்காதவர்களையெல்லாம் எழுத வைத்தது பாராட்டுதற் குரியது. 'ரிக்ஷாக்காரனைப் படிக்கவைத்தவர் ஆதித்தன். டபேதாரை எழுத வைத்தவர் எஸ். ஏ. பி.' என்று சொல்லுவேன்.

புகழ் பெற்ற எழுத்தாளர்கள் எழுதுவதற்காக ''வைர மோதிரக் கதை'' என்ற தொடரில் குமுதம் பல கதைகளை வெளியிட்டது.

படங்கள், அமைப்பு முறை, கதைகளின் உட்பொருள் ஆகிய யாவும் கவர்ச்சி என்ற ஒரே கண்ணோட்டத்துடன் தேர்ந்தெடுக்கப் படுகின்றன. இந்த வார இதழில் வெளிவந்திருக்கிற ஒரு திரைப் பட விமர்சனத்தின் தலைப்பு.

ஷ் ஷ் ஷ் ஷ் ஷுட்

குமுதம் கடைப்பிடிக்கும் முறைகள் எதுவானுலும் ''தமிழில் நிறைய விற்பனையாவது பஞ்சாங்கமும், ரயில்வே அட்டவணையும் தான்'' என்ற சொற்றொடரைக் குமுதம் பொய்யாக்கிவிட்டது.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே அதிகமாக விற்கும் இதழ் குமுதமே. இதன் வெற்றி ரகசியம் என்ன ?

1. அதைச் சந்தையிலும் படிக்கலாம். எவ்வளவு சந்தடியான இடத்திலும் அதைப் படிக்க முடியும் அதன் அமைப்பும் அடங்கலும் அத்தகையன.
2. ஏறக்குறைய எந்தப் பக்கத்திலும் ஒரு துணுக் காவது இருக்கும்.
3. இன்ன பகுதிகள் இன்ன இடத்தில் தான் இருக்கும் என்ற நிலை இல்லாமல் எந்தப் பகுதியும் எங்கும் இருக்கலாம் என்பதும் பொருளடக்கம் இல்லாமல் வெளியிடுவதும் இந்த இதழில் ஒரு கவர்ச்சியாக உள்ளது.
4. குனேகா மணத்தோடும் சில இதழ்களை வழங்கு கிறார்கள்.
5. சினிமா, விமர்சனத்தில் கையாளும் பாணி. இதற்கு எடுத்துக்காட்டு:

   தாய் மகளுக்குக் கட்டிய தாலி: ஒரு பக்கத்தில் அடிப்பக்கத்தில் ''வெட்கக் கேடு''

   ஆயிரத்தில் ஒருவன் : ''படத்தில் கத்திச் சண்டை கத்தாமல் சண்டை''

   ஸ்ரீ வள்ளி: ஒருபக்கம் முழுவதும் முருகா முருகா

வாழ்க்கை வரலாற்றுத் தொடர் கட்டுரைகளையும் குமுதம் வெளி யிட்டிருக்கிறது. அவற்றுள் முக்கியமானவை தலைவர் காமராஜர் வரலாறு, சினிமா அதிபர் ஏ. வி. எம். எழுதிய சுயசரிதம்.

## தினமணி கதிர்: சாவி

திரு. சாவி அவர்கள் ஆனந்த விகடனிலும் திரு. சின்ன அண்ணாமலை நடத்திய 'வெள்ளி மணி'யிலும் பணியாற்றியவர். அவருடைய கற்பனை வளத்திற்கும் நகைச்சுவைக்கும் சான்ருக

இருப்பது "வாஷிங்டன் திருமணம்". கல்கி அவர்கள் பாணியை இவர் பின்பற்றுகிறார். எழுத்தில் மட்டுமன்று; பொதுவாழ்விலும் கூடத்தான். எழுத்தாளர்களை ஊக்குவிப்பதிலும் தகுதியும் பண்பும் உடைய பலரைப் பாராட்டுவதிலும் இவர் கைதேர்ந்தவர். சுற்றுலாத் துறையில் ஈடுபாடுடையவர்.

குமுதத்தை விஞ்சவேண்டும் என்பது இவருடைய ஆசை. சில குறிப்பிட்ட கதை எழுத்தாளர்கள் தினமணி கதிரால் பெரும் புகழ் பெற்றுள்ளார்கள். குட்டிக் கதைகள், அக்கரைச் சிரிப்பு என்ற பகுதிகளும், இனக் கவர்ச்சி அடிப்படையில் சிறு கதைகளும் இந்த இதழில் குறிப்பிடத் தக்கவை.

பல்கலைக் கழகத் துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்களின் பயணக் கட்டுரைகளும், மற்றும் இசைப் புலவர்கள், இசை நிகழ்ச்சிகள் பற்றிய வரலாறுகளும் விமர்சனங்களும் கதிரில் வெளிவருகின்றன.

(தந்திரக் கணக்குகள், ரெட் லைட் ஏரியா பற்றிய விவரங்கள் ஆகியவற்றாலும், கலைஞர் முதல்வர் அவர்களுடைய 'நெஞ்சுக்கு நீதி' என்ற கட்டுரை ஆகியவற்றாலும் தினமணி கதிரைப் படிப்பதற்கு என்று ஒரு வாசகர் கூட்டம் இருக்கிறது. இசை, நாடகம் முதலிய கலைகளுக்கும் சிறப்பாக நாதசுவரக் கலைக்கும் கதிர் புரிந்து வரும் பணி போற்றுதற்குரியது. ஆனாலும், வீட்டில் இந்த இதழை வைத்துக்கொள்ளப் பலரும் தயங்குகின்றனர். இந்தக் கருத்து, வேறு பல இதழ்களுக்கும் பொருந்தும்.)

## ஆண்டு மலர்களும் தீபாவளி மலர்களும்

தமிழ் வார இதழ்களும் ஓரிரு திங்கள் இதழ்களும் வெளியிடும் சிறப்பு மலர்கள் பாராட்டக்கூடிய கலைப் படைப்புக்களாக உள்ளன.

இவற்றில் வெளிவரும் கதைகளும் அரிய கட்டுரைகளும் வரலாறு, சமயம் ஆகியவை தொடர்பாக வரைபடங்களுடன் பிரசுரிக்கப்படும் சுவையான பகுதிகளும் வரலாற்றுச் செய்திகளுக்கு விளக்கம் தரும் வண்ணப் படங்களும் ஓவியங்களும் பயணக்

கட்டுரைகளும் வாசகர்களைக் கவர்ந்துள்ளன. பேணி வைத்திருந்து பல ஆண்டுகளுக்குப் பின்னரும் படிக்கவும் பார்த்து மகிழவும் ஏற்ற கருவூலங்களாக இவை உள்ளன. இவற்றோடு ஒப்பிட்டுச் சொல்லக் கூடிய வெளியீடுகள் வங்கமொழியில் மட்டுமே நவராத்திரிக் காலத்தில் "பூஜா நம்பர்ஸ்" என்ற பெயரில் வெளிவருகின்றன.

அண்மைக்காலத்தில் பொருளாதாரக் காரணங்களாலும், குறிப்பிட்ட வழுவழுப்பான தாள் (ஆர்ட் பேப்பர்) கிடைக்காமையாலும் பல மாதங்களுக்கு முன்னர் இருந்தே உருவாக்க வேண்டிய சிக்கல்களாலும் பல இதழ்கள் சிறப்பு மலர்களைக் கைவிட்டிருப்பது வருத்தத்திற்குரியது.

———

## 3-ஆம் நாள் சொற்பொழிவு 13—3—74

'ஜர்னலிசம்' அதாவது பத்திரிகை இயல் அல்லது இதழ் இயல் என்னும் துறை, நாளிதழ்கள் வாயிலாகவும் வார ஏடுகள் அல்லது கிழமை இதழ்கள் வாயிலாகவும் எவ்வாறு தமிழில் வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதை முதல் இரண்டு நாட்களில் ஓரளவு தெரிவிததேன்.

இன்று மேலும் சில வார மாத இதழ்கள் அல்லது திங்கள் ஏடுகள்பற்றிச் சில கருத்துக்கள் கூறுவேன். இவற்றின் எண்ணிக்கை சில நூறு இருக்கலாம். அனைத்தையும் பற்றிச் சொல்ல இயலாது. மேலும், இப்போது வெளிவராவிட்டாலும் ஏற்கெனவே வெளிவந்து மறைந்துவிட்ட பல மாத இதழ்களும் உள்ளன.

நாம் முதல்நாளில் தெரிவித்ததுபோல, காலமென்னும் கடுங் காற்றில் எதிர் நிற்க இயலாமல் பல இதழ்கள் தலை சாய்ந்துவிட்டன. சென்ற நூற்றுண்டில் அச்சுச் சட்டத்தின் கடுமையும் அயலவர் ஆட்சியின் கண்சாணிப்பும் கல்வியறிவு, சிற்றூர்களில் பரவா திருந்ததும் இதற்குக் காரணம் எனலாம். இந்திய விடுதலைக்குப் பின்னரும் பல இதழ்கள் தோன்றி மறைந்துள்ளன. இதற்குக் காரணம் 'சுற்றுப்புறச் சூழ்நிலையையும் தங்களுடைய வசதிகளையும் எடைபோட்டுப் பாராமல் திடீரென்று பலர் பத்திரிகை தொடங் கியது ஒன்று. மற்றொரு காரணம் அரசியல் கட்சிகளுடைய ஆதரவும் பொருளாதார வசதியும் நிறைந்த பெரிய ஏடுகளுடன் போட்டிபோட இயலாமை. மூன்ருவது காரணம் விளம்பரங்கள் பெற இயலாமை.

நாளிதழாக! இருந்து பிறகு வார இதழ்களாக மாறியவையும் உண்டு. சான்று: 'ஜனசக்தி', 'தமிழ் நாடு' (மதுரை)

### ஆனந்தபோதினி, பிரசண்டவிகடன்

காலத்தால் முந்திய இதழ்களுள் 'ஆனந்த போதினி' என்ற மாத இதழும் 'பிரசண்ட விகடன்' என்ற மாதமிருமுறை இதழும் குறிபபிடத் தக்கவை முதுபெரும் எழுத்தாளர் திரு நாரண துரைக் கண்ணன் இவற்றின் ஆசிரியராக முப்பத்தைந்து ஆண்டுக்காலம்

பணிபுரிந்திருக்கின்றூர்கள். தமிழ் அறிஞர்களையும் இலக்கியப் படைப்பாளர்களையும் உருவாக்க, இவை பேருதவி புரிநதிருக் கின்றன. நாரண துரைக்கண்ணன் அவர்களுககுமுன், ஆரணி குப்புசாமி முதலியார் 'ஆனந்த போதினி' ஆசிரியராக இருந்தார்கள்.

ரா. பி. சேதுப்பிள்ளை, பாஸ்கரத் தொண்டைமான், அசலாம்பிகை அம்மையார், பொ. திரிகூட சுந்தரம் பிள்ளை, பாலபாரதி ச. து. சு. யோகியார் போன்றவர்கள் ஆனந்த போதினியில் தொடர்ந்து எழுதிப் புகழ்பெற்றிருக்கின்றனர். இந்த இதழில் இலக்கியக் கட்டுரைகளும் சமயக் கட்டுரைகளும் சிறப்பிடம் பெற்றிருக்கின்றன. மகளிருக்கும் குழந்தைகளுக்குமான பகுதிகளைத் தொடங்கிய முதல் இதழ் இதுவே.

கட்டுரை, கதை முதலியன எழுதுபவர்களுக்குப் பணம் கொடுக்கும் பழக்கம் இப்போதுங்கூடச் சில இதழ்களில் இல்லை. குறிப்பாக மாத இதழ்கள் கொடுக்கும் பணமும் மிகக் குறைவு. அவற்றை, காலத்தில கொடுப்பதும் இல்லை. இதழ்கள் தொடஙகப் பெற்ற காலததில் அந்த அலுவலகங்களிலிருநது எழுத்தாளர் களுககுப் பணம் கொடுக்கப்படவில்லை. அப்போது எழுதியவர்களும் பணத்தை எதிாபார்க்கவில்லை. எழுத்தாளர்களிடம் கட்டுரை கவிதை கதை கேட்கும் ஆசிரியர்களும்

'விஷயதானம்'

செய்யுங்கள் என்றுதான் கேட்பார்கள்.

பூமிதானம்

போல விஷயதானமும் ஒருவகையான கொடையாக அன்பளிப்பாக இருந்துவந்தது.

விஷயதானம் என்பதை மாற்றி எழுதுபவர்களுக்குச் சன்மானம் தரும் பழக்கத்தை உண்டாக்கிய தமிழ் இதழ் 'ஆனந்த போதினி'யே. இந்த இதழைத் தொடங்கியவர் கரபாத்திரம் சிவப்பிரகாச சுவாமிகள் என்ற துறவி ஆவார்.

இந்த இதழைப் பார்த்துத்தான் 'ஆனந்த விகடன்' போன்ற இதழ்கள் வெளிவரத் தொடங்கின. ஞானபோதினி, விவேக போதினி என்ற இதழ்களும் இதே காலத்தில் வெளிவந்தன.

DR. T. P. M. LIBRARY, MADURAI KAMARAJ UNIVERSITY

குறிப்பிட வேண்டிய மற்றொரு இதழ் 'பிரசண்ட விகடன்'. சிறுகதை, தொடர்கதை, நாடகம், கவிதை என்ற பகுதிகளோடு மட்டும் அமையாது அரசியல் துறைக்கும் இந்த இதழ் சிறப்பிடம் கொடுத்தது.

இந்த இதழின் தொடக்ககாலத்தில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், சுவாமி சுத்தானந்த பாரதியார், ச. து. சு. யோகியார் போன்ற கவிஞர்களின் கவிதைகளை திரு. நாரண துரைக்கண்ணன் வெளியிட்டிருக்கிறார். கவிஞர்கள் வாணிதாசன், கம்பதாசன், சுரதா, கண்ணதாசன் போன்றோரும், டாக்டர் மு. வ., சிதம்பர ரகுநாதன், கு. அழகிரிசாமி, அகிலன், ஜெயகாந்தன் ஆகியோரும் இந்த இதழில் இருபது, முப்பது ஆண்டுகளுக்கு முன்னரே எழுதியிருக்கிறார்கள்.

தமிழ் இலக்கண மரபிற்கு மாறுகச் சிலர் எழுதிவந்த போக்கைப் 'பிரசண்ட விகடன்' வன்மையாகக் கண்டித்தது. தமிழை எப்படி எழுதவேண்டும் இலக்கிய நடையிலா, பேச்சு நடையிலா என்ற தலைப்பில் "பிரசண்ட விகடன்" ஆறு மாத காலத்திற்கு ஒரு பட்டி மண்டபத்தையே அதன் இதழ்களில் நடத்திற்று. அந்தச் செயலைப் பாராட்டுவதற்காக டாக்டர் மு. வரதராசன், 'பிரசண்ட விகடன்' அலுவலகத்திற்குச் சென்றிருந்தார். அன்று முதல் அவருக்கும் 'பிரசண்ட விகடனுக்கும்' நெருங்கிய தொடர்பு உண்டாயிற்று.

"விஜய விகடன்", 'விநோதன்', "திருமகள்", 'கலைவாணி', "பொன்னி" முதலிய பல இதழ்கள் பிற்காலத்தில் தனித் தன்மை பெற்றிருந்த போதிலும் அவை தொடங்கியபோது 'பிரசண்ட விகடனை'யே வழிகாட்டியாகக் கொண்டிருந்தன.

## ஜன விநோதினி

இது 1870ல் தொடங்கப் பெற்றது. இதில் தாய்மார்களுக்குப் பயன்படும் குறிப்புக்களும் நல்வழிக்குரிய திட்டங்களும் இந்திய வரலாற்று நிகழ்ச்சிகளைப் பின்னணியாகக் கொண்ட கதைகளும் முழுப்பக்க வண்ணப் படங்களும் வழிப்பயணம், துணிச்சலான செயல்கள் ஆகியவற்றைப் பற்றிய விவரங்களும் ஒருங்கே அடங்கியிருந்தன. இந்த இதழ் 1870 முதல் 1890 வரை துரைத்தனக் கல்விச் சங்கத்தாரால் வெளியிடப் பெற்றுச் சீருடனும் சிறப்புடனும் நிகழ்ந்தது. இதிலுள்ள கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து இந்த

பெயரில் நூல்வடிவில் பல தொகுதிகளாகப் பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார் பிற்காலத்தில் வெவியிட்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

படங்கள் நிறைந்தும், அறிவு விளக்கங்கள் மிகுந்தும் சிறு கதைகள் கொண்டும் 1887இல் வெளியான "மகாராணி" என்ற இதழ் 19ஆம் நூற்றுண்டில் புகழ் பெற்றிருந்தது. அந்த நூற்றுண்டில் வந்த ஏனைய இதழ்கள் வருமாறு:

| | |
|---|---|
| "விவேக போதினி" | (1887) |
| "ஜனுபிமானி" | |
| "விநோத ரசமஞ்சரி" | (1891) |
| "விவேக சிந்தாமணி" | (1892) |
| "ஞான போதினி" | (1900) |

இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் வெளிவந்த சில இதழ்கள் வருமாறு:

| | |
|---|---|
| "ஞான சாகரம்" | (1902) |
| "சக்கரவர்த்தினி" | (1905) |
| "மாதர் போதினி" | (1911) |

"மாதர் போதினி" தொகுதி முப்பதில் அதாவது 22-9-1914இல் வெளியான இதழிலே "சந்திரலோக யாத்திரை" என்று நிலாப் பயணம் குறித்து ஒரு கட்டுரையை வெளியிட்டிருப்பது நம் சிந்தனையைக் கவரவல்லது.

## இலக்கிய இதழ்கள்

ஏராளமான இலக்கிய இதழ்கள் தமிழில் வெளிவந்திருக் கின்றன. அவற்றுல் சில, நீண்டு வாழாமல் போனுலும் அவற்றின் பணி வாழுகிறது. எனவே அவற்றையும் இடையிடையே குறிப் பிடுவேன்.

## செந்தமிழ்

பழங்கால இலக்கியப் பத்திரிகைகளிலே முதல் இடம் பெற்றுள்ளது "செநதமிழ்". இது 1902 முதல் மாத இதழாக வெளி வருகிறது. சேதுபதி மன்னரால் தொடங்கி வைக்கப்பட்ட மதுரைத்

தமிழ்ச் சங்கத்தால் இன்றுவரை நடத்தப்பெற்று வருகிறது. இதன் தொடக்ககால ஆசிரியராக திரு. ரா. இராகவ ஐயங்கார் இருந்தார். தமிழ்ப் புலமை பெற்ற ஆசிரியர்களின் ஆராய்ச்சி நிரம்பிய கட்டுரைகளைக் கொண்ட இலக்கியப் பெட்டகம் இது எனக் கருதப் படும் திங்கள் இதழாகும். எல்லா மொழிகளையும் எழுதவல்ல ஏகலிபி என்றும் ஒன்றிற்குப் பாண்டியன் எனப் பெயரிட்டும் திரு. நாராயணய்யங்கார் இதில் ஒரு தொடர் கட்டுரை வரைந் துள்ளார். இது வரலாற்று மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படக் கூடியதாகும்.

## ஞானசாகரம்

தனித் தமிழ் இயக்கத்தின் தந்தையாகிய மறைமலையடிகள் 1902 ஆம் ஆண்டில் இந்த இதழைத் தொடங்கிப் பல ஆண்டுகள் நடத்தினார்கள். இலக்கியம், ஆராய்ச்சி, திறனாய்வு போன்ற பல துறைகளில் இவர்கள் எழுதியதால் 'அறிவுக் கடல்' எனப் புகழ் பெற்றார்கள்.

ஞானசாகரத்தில் மறைமலை அடிகள் எழுதி வந்த நடைக்குப் பின் வரும் மேற்கோளைத் தருவோம். இந்த மேற்கோளில் இரண்டு வாக்கியங்கள் மட்டுமே உள்ளன என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

> "நமது பொதுநிலைக் கழக முதன் மாணவரும் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியருமான மணி, திருநாவுக்கரசு முதலியார் பிரசோற்பத்தி வைகாசி 10 ஆம் நாள் சனிக்கிழமை (23–5–1931) முற்பகலில் திடீரென இம்மண்ணுலக வாழ்வு நீத்து விண்ணுலகு புகுந்த செய்தி இத்தமிழ் நாட்டவர் எல்லோரையும் திடுக்கிடச் செய்து, அவருக்குப் பெருந் துயரைத் தருவதொன்றாய் எங்கும் பரவலாயிற்று. முகிழ்ந்து மணங்கமழ்ந்து அழகாய் மலரும் பருவத்தே ஓர் அரிய செங்கழு நீர்ப் பூ அதனருமையறியான் ஒருவனாற் கிள்ளியெறியப் பட்டு அழிந்தாற் போலவும், மறை நிலாக் காலத்தே திணிந்து பரந்த இருளின்கட் செல்லும் நெறி இது வெனக் காட்டுதற்கு ஏற்றி வைத்த ஒரு பேரொளி விளக்குச் சடுதியில் வீசிய சூறைக் காற்றினால் அவிந்து மறைந்தாற் போலவும் நீண்டநாள் வறுமையால் வருந்திய ஒருவன் புதையலாய்க் கண்டெடுத்த பொன் நிறைந்த குடம் ஒன்று வன்

நெஞ்சக் கள்வனொருவனாற் கவர்ந்து கொள்ளப் பட்டாற் போலவும் இத்தமிழ் நாட்டுக்கு ஒரு கல்வி மலராய், ஓர் அறிவு விளக்காய், ஓர் அருங்குணப் புதையலாய்த் தோன்றிய இவ்விளைஞர் தமது 43 ஆம் ஆண்டில் கதுமெனக் கூற்றுவனாற் கவரப் பட்டது ஒரு பெருங் கொடுமையன்றோ?''

## ஞானபானு

இது தேசபக்தர் சுப்ரமணிய சிவா அவர்களால் மயிலாப்பூரி லிரிந்து 1913 முதல் வெளியிடப் பெற்றது. தமிழ் நடை, மொழிப் பயிற்சி பற்றிய கட்டுரைகள் இதில் வெளி வந்துள்ளன.

## செந்தமிழ்ச் செல்வி

சிறந்த தமிழ் ஆராய்ச்சித் திங்களிதழான ''செந்தமிழ்ச் செல்வி'' 1923 சனவரி முதல் தொடர்ந்து தென் இந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் நடத்தப் பெற்று வருகின்றது. இன்னும் இரு ஆண்டுகளில் அதன் 'பொன் விழா' கொண்டாடப் பெறவிருக்கின்றது. தொடக்க காலத்திலிருந்து அதன் ஆசிரியராக இருந்து வரும் தாமரைச் செல்வர் திரு. வ. சுப்பையா பிள்ளை வயதால் பவள விழாக் கண்டவர்கள். எனினும், உள்ளத்தால் நம்மில் பலரைவிட இளைஞர் ஆவார்கள். கடந்த 48 ஆண்டுகளில் செல்வி தமிழுக்கு ஆற்றியுள்ள தொண்டு பாராட்டுதற்குரியதாகும். மறைமலையடிகளாரின் தனித்தமி ழியக்கத்தைப் பரப்புவதற்கு இவ்விதழ் தொடக்க கால முதல் பாடு பட்டு வருகின்றது. இதில் மறைமலையடிகள், கா. சு. பிள்ளை, பா. வே. மாணிக்க நாயக்கர், மணி திருநாவுக்கரசு முதலியார், ந. மு. வே. நாட்டார், டாக்டர் மு. வரதராசனார் போன்ற பல பேரறிஞர்கள் சமயம், இலக்கியம், இலக்கணம் வரலாறு போன்ற பல துறைகளில் கட்டுரைகள் எழுதியுள்ளனர். தமிழ்நாட்டு வரலாற்றின் சில பகுதிகளை ஆழமாக அறிந்து கொள்வதற்குச் 'செல்வி' பேருதவி புரிகின்றது. அண்மையில் பி. எல். சாமி, கீ. இராமலிங்கனார், தேவநேயப்பாவாணர் ஆகியோர் அறிவியல் தமிழ், ஆட்சித்துறைத் தமிழ், மொழிபியல் தமிழ் போன்றவற்றைத் தங்கள் கட்டுரைகளின் வாயிலாகச் 'செந்தமிழ்ச் செல்வி'யில் எழுதி வருகின்றனர்.

சுப்பையா பிள்ளை அவர்களின் வரலாறும் அனுபவங்களும் இந்த இதழில் இடம்பெறுமல் தனி நூலாக வருவது நன்று.

## தமிழ்ப் பொழில்

இதைக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் 1925 முதல் வெளியிட்டு வருகின்றது. 'பொழிற்றெண்டர்' என்ற பெயரில் சிறந்த ஆராய்ச்சியாளரும் ஞானியாரடிகளின் மாணவருமான க. வெள்ளை வாரணர் எழுதும் இலக்கியக் கட்டுரைகளையும் வேறு பலர் எழுதும் சொல்லாராய்ச்சிக் கட்டுரைகளையும் நல்ல தமிழில் வெளியிட்டு வருகிறது. தமிழின் பழைய இலக்கியத்தைப் பேணிக் காத்துவரும் இவ்விதழ் இலக்கிய மாணவர்களுக்கு இன்பம் பயக்ககூடிய நல்லிதழாகும்.

## கலா நிலையம்

இது 1928 முதல் 1935 வரை வார இதழாக வெளிவந்தது. கலா நிலையம் ஆசிரியர் டி. என். சேஷாசலம் அவர்கள் கம்பனைக் கற்பதும், கற்பிப்பதும் கம்பன் காட்டிய வழியில் ஒழுகுதலையுமே வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். இவர் இந்த இதழ் வழியாகக் கம்பன் புகழ் பரப்பிக் கனித் தமிழ் வளர்த்துக் கம்பனுடைய இலக்கியச் சுவையை மக்களிடம் புகட்டி வந்தார்.

இவ்விதழ் கம்பராமாயணக் கட்டுரைகளுடன் நைடதம், மதங்க சூளாமணி உரைகளையும் தாங்கி வாரந்தொறும் இலக்கியப் பணி புரிந்து வந்தது.

இவ்வாறே திருக்குறளைப் பற்றிய விளக்கங்களுக்கும் திறனாய் வுக்குமாக 'முப்பால் ஒளி' என்ற பெயரில் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை அவர்கள் ஓர் இதழை வெளியிட்டு வந்தார்கள்.

சரஸ்வதி, எழுத்து, முதலிய பல இதழ்களும் பல கோணங்களில் திறனாய்வு செய்கின்றன.

## புதுமை இலக்கிய ஏடுகள்

**மணிக்கொடி :**

இந்த இதழ் ஏராளமான புதிய எழுத்தாளர்களை உருவாக்கிற்று. சிறு கதைக்கும் தொடர்கதைக்கும் இது ஏற்றம் கொடுத்தது. கடன் பட்டும், பட்டினி கிடந்தும் பல அன்பர்கள் 'மணிக்கொடியை' நடத்தினார்கள். தியாகம் நிறைந்த பரிசோதனை என்று மணிக் கொடியின் வரலாற்றைச் சுருக்கமாகச் சொல்லலாம்.

தமிழ்ச் சிறுகதைக்கும் தொடர்கதைக்கும் ஓரளவு வடிவம் கொடுத்த பெருமையும், பல்லாயிரக்கணக்கான வாசகர்களுடைய உள்ளங்களைக் கவர்ந்த எழுத்தாளர்களை உருவாக்கிய பெருமையும் மணிக்கொடிக்கும் மணிககொடி ஆசிரியர் திரு. சீனிவாசனுக்கும் உண்டு.

மணிக்கொடியில் எழுதியவர்கள் எல்லா மொழிச் சொற்களையும் போட்டு 'ரொப்பி'னார்கள். 'சொல்பம்', 'கல்பனை', 'ஒத்தன்', 'எடக்கு', 'நோப்பாளம்', 'லக்ஷோபலக்ஷம்', 'தஸ்தாவேசு', 'கஜானா', 'ஷரத்து', 'ஜாலக்', 'யாதாஸ்து', 'சபாஷ்', 'ஜாப்தா', 'அங்குரார்ப்பணம்', 'அபிலாஷை', 'டபாய்த்தான்', 'கப்சா விட்டான்', 'ஜோப்படி அடித்தான்', 'அபேஸ் பண்ணினான்' என்ற வார்த்தைகளையெல்லாம் தாராளமாகப் பயன்படுத்தினார்கள்.

மணிக்கொடியில் வந்த படைப்புக்களில் தரமும் பொருள் ஆழமும் கற்பனை வளமும் இருந்ததால் அந்தக் காலத்தில் அதைப் படித்தவர்கள் அதனுடைய கலப்பு நடையைக் குறை சொல்லவில்லை.

## கலைமகள்

'கலைமகள்' இதழ் 'திரிவேணி' எனும் ஆங்கிய இலக்கிய இதழைப்போலச் சிறந்து நடத்த வேண்டி 1932இல் தொடங்கப்பட்ட மாத இதழாகும். இது நான்காண்டுகள்வரை கௌரவ ஆசிரியரான டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்களின் மேற்பார்வையில் வெளிவந்தது.

முதல் இதழில் பின்வரும் கட்டுரைகள் இருந்தன.

| | | |
|---|---|---|
| *வாழ்த்து | ... | ரா. இராகவையங்கார் |
| கலைமகள் வாழ்த்து | ... | கி. வா. ஜகந்நாதன் |
| முன்னுரை | ... | உ. வே. சாமிநாத ஐயர் |
| மகாபலிபுரம் | ... | க. அ. நீலகண்ட சாஸ்திரி |
| செடிகளும் மிருகங்களின் தொண்டும் | ... | எம். எஸ். சபேச ஐயர் |
| செந்நிறப்பூ | ... | பி. என். அப்புசாமி |
| பூச்சி மகாநாடு | ... | டி. கே. விசுவநாத ஐயர் |
| பாம்புகள் | ... | எம். ஏகாம்பரநாத ஐயர் |

* முதல் இதழில் வாழ்த்து என்ற சொல்லையும் இரண்டாவது இதழில் வணக்கம் என்ற சொல்லையும் பயன்படுத்திய கலைமகள் இன்று?

| | | |
|---|---|---|
| மிருகங்களின் தோல் | ... | எம். கிருஷ்ணன் |
| தமிழ் வேந்தரின் இமயப் படைப்பு | ... | மு. இராகவையங்கார் |
| உ. வே. சாமிநாத ஐயரவர்கள் | ... | இராமச்சந்திர ஐயர் |
| சைவ சமயம் | ... | எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை |
| தமிழ் வசனம் | ... | ஸ்ரீ |
| நாமும் வள்ளுவரும் | ... | டி. கே. சிதம்பரநாத முதலியார் |
| அச்சு வித்தையின் வரலாறு | ... | எஸ். வையாபுரிப் பிள்ளை |
| சென்னை அரசியல்முறை | ... | டி. சிவராம சேதுப்பிள்ளை |
| சங்கராந்தி தேவன் பிறந்த நாள் | ... | கார்க்கியர் |
| மாதர் பகுதி | ... | விசாலாட்சி அம்மாள் |
| சிறுவர் பகுதி | ... | லக்ஷிமி அம்மாள் |
| குறிப்பும் திரட்டும் | ... | |

இவ்வாறு கலைமகளின் பழந்தொகுதிகளில் விஞ்ஞானம், இலக்கியம் போன்ற ஆழமான பொருள்களைப்பற்றி விவரமான கட்டுரைகள் உள்ளன. 1936 முதல் கி. வா. ஜகந்நாதன் அவர்கள் முற்றிலும் ஆசிரியப் பொறுப்பில் இருந்து வருகிறார்கள். அக்காலத்திலிருந்தே இந்த இதழின் தரம் மாறி, கலைமகள் படிப்படியாக 'கதை மகள்' ஆகிவிட்டது. பல்வேறு வகைப்பட்ட பொருள்களைப்பற்றிக் கட்டுரைகள் வெளிவந்த இந்த இதழில் இப்போது கதைகளுக்கே பெரும்பகுதி ஒதுக்கப்படுகிறது. 'ஆறு கதைகள், எட்டுக் கதைகள்' என்று சுவரொட்டியிலேயே அச்சிட்டுப் பறைசாற்றுகிறார்கள். இதுவே அனைத்துத் தமிழ் இதழ்களின் இன்றைய போக்கு.

புதுமைப் பித்தன், கு. ப. ராஜகோபாலன் போன்ற புகழ்பெற்ற எழுத்தாளர்கள் கலைமகளில் கதை எழுதியிருக்கிறார்கள். இலக்கியக் கதைகளை முதலில் வெளியிட்டதும் "கலைமகள்"தான்.

நாராயணசாமி ஐயர் நாவல் பரிசுத் திட்டத்தில் அகிலன் பரிசு பெற்று, கலைமகள் இதழ் வாயிலாக நாடறிந்த எழுத்தாளர் ஆனார்.

மராட்டிய எழுத்தாளர் காண்டேகரையும் வங்க நாவலாசிரியர் பலரையும் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தியது கலைமகளே.

காலத்தின் கோலத்தால் அட்டையிலும் உள்ளேயும் தரமில்லாத படங்களைக் கலைமகளும் வெளியிட்டு வருகிறது என்பதை யாரும் மறுக்க இயலாது. 'வயது' என்பதை 'வயசு' என்றும், 'மனம்' என்பதை 'மனசு' என்றும் எழுதுவது கலைமகளின் மரபாக இருந்து வருகிறது. சொத்துப் பத்து, மந்திரி கிந்திரி போன்ற துணைச் சொற்களும் காணப்படுகின்றன.

அக்காலத்தில் கலைமகள் ஆசிரியர் குழுவில் ஒருவராக அனவரத விநாயகம் பிள்ளை இருந்தார்கள். நூல் வரலாறும் கால ஆராய்ச்சியும் இவருக்கு மிகவும் விருப்பமான பொருள்களாகும். ஆசிரியர்களின் காலத்தையும், பல நூல்களையும் நன்கு ஆராய்ந்து பல கட்டுரைகளை எழுதியுள்ளார். தமிழ் நூல்களின் காலக் குறிப்பு, தமிழ்ப் புராணங்கள் என்ற தலைப்புகளில் இவர் எழுதிய கட்டுரைகள் பல, கலைமகளில் தொடர்ச்சியாக வெளிவந்தன. ஒவ்வொரு பொருளும் ஒரு சிறந்த பொருட்களஞ்சியமாக அமைந்திருந்தது.

## பொன்னி

இப்போது மலேசிய நாட்டில் கோலாலம்பூரில் 'தமிழ் நேசன்' நாளிதழின் ஆசிரியராக இருக்கும் முருகு சுப்பிரமணியம் அவர்களும், இப்போது முரசொலி நாளிதழின் மேலாளராக இருக்கும் அரு. பெரியணன் அவர்களும் தனித்தமிழ் ஆர்வத்தால் 1947-இல் புதுக்கோட்டையில் இதை மாத இதழாகத் தொடங்கி பின்னர் மாதம் இருமுறை இதழாகச் சென்னையிலிருந்து வெளியிட்டனர்.

அகிலன், சுகி. சுப்பிரமணியம், பேராசிரியர் அன்பழகன், இராதாமணாளன், டி. கே. சீனிவாசன், மா. இளஞ்செழியன், விந்தன், கா. திரவியம், நாரா. நாச்சியப்பன், குலோத்துங்கன் என்ற புனைபெயரில் எழுதிய டாக்டர் வி. சி. குழந்தைசாமி ஆகிய எழுத்தாளர் பலரைத் தமிழகத்துக்குப் பொன்னி தந்திருக்கிறது.

"கவிதை எது?" என்பது பற்றியும் தமிழ் அன்பர்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியைப் பொன்னி உண்டாக்கியிருக்கிறது. "எழுத்தாளர் பேட்டி" வெளியிட்டதும் பொன்னியின் குறிப்பிடத் தக்க பணி எனலாம். பொன்னி பொங்கல் மலர்கள் தனித் தமிழ்

இயக்கத்தின் கலைமலர்களாக, அவ்வியக்கத்தின் மணத்தைப் பரப்பித் தமிழர் செவ்விதழில் புன்னகை மலரச் செய்தன.

கலை நலமும் தமிழும் சிறக்க வேண்டுமென்ற குறிக்கோளையே மூல பலமாகக்கொண்டு பொன்னி பணியாற்றி வந்தது. பாரதி தாசன் பரம்பரை என்ற கவிஞர் உலகத்தை உருவாக்கியது 'பொன்னி'தான்.

மலர்த் துறையில் பொன்னி ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. கட்டுரைகள், கதைகள், கவிதைகள், நாடகம் என்ற 50 படைப் புக்களைப் பல ஓவியர்களின் கைவண்ணத்தால் சித்திரப் பூஞ்சோலையாக மிளிர்ந்து கண்ணுக்கினிய கலை விருந்தாய்ப் படைத்து, தமிழ் எழுத்துக்கும் இலக்கியத்துக்கும் ஏற்றம் தந்து தமிழ் இளைஞரின் ஆர்வங்களைத் தூண்டிவிட்டது.

## தமிழ்த்தென்றல்

விருதுநகரிலிருந்து வெளிவந்த "தமிழ்த் தென்றல்" என்ற இதழிலும் இடையிடையே கருத்து வளம் நிறைந்த இலக்கியக் கட்டுரைகள் வெளிவந்தன. வி. வி. ராமசாமி அவர்களை ஆசிரிய ராகக் கொண்ட இந்த மாத இதழில் தொடர்ந்து மொழியாராய்ச்சிக் கட்டுரைகளும் வெளிவந்தன.

## தீபம்

நா. பார்த்தசாரதி அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'தீபம்' இதழில் 'மணிக்கொடி காலம்' என்ற தலைப்பில் தொடர்ச்சியாக பல கட்டுரைகள் வந்திருக்கின்றன. வேறு சில இத்ழ்களைப் பற்றியும் இப்போது கட்டுரைகள் வந்துகொண்டிருககின்றன. முதிய எழுத்தாளர்களைப் பேட்டி கண்டு எழுதப்படும் 'இலக்கியச் சந்திப்பு' அவர்கள் கருத்துக்களைத் தொகுத்துக் கொடுக்கிறது. இது தீபத்தின் சிறப்பான கூறு. தமிழ்நாட்டுக்கு வெளியே நிகழும் தமிழ் வளர்ச்சி விவரங்களைத் தெரிவிபபதும் தீபத்தின் உள்ளாந்த குறிக்கோள்.

## கண்ணதாசன்

கவிஞர் கண்ணதாசனை ஆசிரியராகக் கொண்டு சில ஆண்டு இடைவெளிக்குப் பின் இந்த மாத இதழ் மீண்டும் வெளிவந்து கொண்டிருக்கிறது. கவிதையிலும் ஏனைய துறைகளிலும் ஈடுபாடுள் ளவர்களை ஆட்கொள்ளும் அல்லது வயப்படுத்தும் படைப்புக்கள்

இதில் உள்ளன: ஏனைய இதழ்களில் எழுதும் கண்ணதாசனின் எழுத்துக்கள், அரசியல் காரணங்களுக்காகவும் பணத்துக்காகவும் எழுதப்படுகின்றன என்பது இந்த இதழில் அவர் படைக்கும் கவிதை கட்டுரைகளிலிருந்து ஏற்படும் முடிவு ஆகும். கண்ணதாசன் இதழில் அவர் எழுதும்போது அவருடைய ஆளுடைமையைப் பார்க்கிறோம். பழமைத் தமிழுக்கும் புதுமைத் தமிழுக்கும் ஏற்பட்ட திருமணம்போல, பழகுதமிழும் பழந்தமிழ் இலக்கியத்தில் ஊறிய தமிழும் இரண்டறக் கலக்கக் காணுகிறோம்.

நாட்டுப்புற இலக்கியத்திற்கு ஏற்றம்தரும் வகையில் தமிழகத்துக் குட்டி தேவதைகளைப்பற்றிய விவரங்களும் கர்ண பரம்பரைச் செய்திகளும் இந்த இதழில வெளிவரவிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

## புதுமைக் குரல்

திரு. கே. டி. கோசல்ராம் அவர்கள் இலக்கிய ஆர்வத்தால் சில காலம் இதை மாத இதழாக நடத்தினார்கள். இலக்கியச் சுவையுள்ள கட்டுரைகள் தொடக்க இதழ்களில் வெளிவந்தன.

## உமா

ஆரம்பக் காலத்துக் குமுதம் பாணியில் திரு. ஜி. உமாபதி இதைத் தொடங்கினார். விவரமான சில கட்டுரைகளும் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. எழுதிய அரசியல் கட்டுரைகளும் பூவை ஆறுமுகம் எழுதிய சுவையான கதைகளும் இதில் வந்தன.

## நண்பன்

ஈராண்டுக் காலம்கூட நடைபெறாத இந்த இதழ், தமிழ் இதழ்களின் வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. படத்திலோ, எழுத்திலோ, நடையிலோ தரம் குறையாது இது வெளிவந்தது. திரு. மீ. ப. சோமசுந்தரம் (சோமு) அவர்களை ஆசிரியராகக் கொண்டு மூதறிஞர் ராஜாஜி அவர்களின் விருப்பப்படி ஒவ்வொரு கட்டுரையும் வெளியிடப்பட்டது. மயிலை சீனி வேங்கடசாமிபோன்ற ஆராய்ச்சி அறிஞர்களும் கதை நாடகத் துறைகளில் வல்லுனர்களும் இந்த இதழுக்கு விஷயதானம் செய்தார்கள். விஷயதானம் போன்ற சொற்களை இந்த இதழ் பயன்படுத்தவில்லை. எந்த எழுத்தாளருக்கும் பணம் கொடுக்கும் வசதி இந்த இதழுக்கு இல்லை, எனவே அவ்வாறு சொன்னேன்.

## அஞ்சுகம்

குழித்தலையிலிருந்து மீ. சு. இளமுருகு பொற்செல்வி அவர்கள் இதை வெளியிட்டு வருகிறார்கள். பொதுவாக இவர்களுடைய கடைந்தெடுத்த தமிழ் உணர்ச்சியும் சிறப்பாக இவர்கள் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களிடம் கொண்டுள்ள ஈடுபாடும் அரசியல் சார்பில்லாமல் எழுதும் சில கட்டுரைகளும் சிறு குறிப்புக்களும் பாராட்டுக்குரியன.

## ஞானரதம்

இந்த இதழில் தமிழ்க் கட்டுரைகளில் அப்படியே ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதிவிடுகின்றனர். பல கட்டுரைகளிலும் இதைப் பார்க்கிறோம். இது இந்த இதழின் கொள்கை போலும். சில கட்டுரைகள் அல்லது குறிப்புக்களின் தலைப்பும் ஆங்கிலத்தில் தரப்பட்டிருக்கிறது.

மரபை மீறி எழுதுவதற்கு அடிப்படை வகுப்பதற்காகவும் இனக் கவர்ச்சி எழுத்துக்கு ஏற்றம் கொடுப்பதற்காகவும் இந்த இதழ் தோன்றியது போலும்.

## தென்மொழி

பெருஞ்சித்திரன் அவர்களை ஆசிரியராகக்கொண்டு தனித் தமிழ் இயக்கத்தின் திங்கள் இதழாக இது கடலூரில் 1964-இல் பிறந்து இப்போது சென்னையிலிருந்து. வெளிவருகிறது. தனித்தன்மையுடைய இந்த இதழில் சமஸ்கிருத என்றுதான் எழுதுவார்கள். சொற்பிறப்புப்பற்றிய வரலாறும் பல விளக்கங்களும் வெளிவருவது பாராட்டிற்குரியது.

மடக்கை என்னும் கணக்கியல்பற்றிய கட்டுரைகளும் அரும்பி வருகின்றன.

கொள்கை உறுதி படைத்த ஈராயிரம் பேர் இந்த இதழை விடாமல் படித்துக் கழிபேருவகை அடைந்து அவற்றைத் தொகுத்து வைத்துத் தொடர்ந்து பயன்படுத்தி வருகிறார்கள்.

## கவிதை இதழ்கள்

இவற்றுள் புகழ்பெற்றது பாரதிதாசன் நடத்திய 'குயில்'.

கவிஞர்கள் சுரதா, தெசிணி, பொன்னடியான், ப. பரமசிவன் என்பவர்கள் முறையே 'சுரதா', 'கவிதை', 'முல்லைச் சரம்',

'எழிலோவியம்' என்னும் பெயர்களில் கவிதை இதழ்களை நடத்தி வருகிறார்கள்.

## ஆராய்ச்சி இதழ்கள்

நாள் இதழ்கள், வார இதழ்கள் முதலியன உடனுக்குடன் அழிந்துவிடும். புது இதழ் படைப்பதே அவற்றின் கடமை. ஆராய்ச்சி ஏடுகளிலேயே, காலத்தால் அழியாத இலக்கியத்தை எதிர்பார்க்கலாம்.

### ஆராய்ச்சி

பாளையங்கோட்டையிலிருந்து பேராசிரியர் நா. வானமாமலை அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் 'ஆராய்ச்சி' என்னும் காலாண்டு இதழ் 'ஆய்வுத் தமிழ்' வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபடுவது எனலாம். 1969-இல் தொடங்கப்பெற்ற இவ்விதழில் மானிட இயல், அறிவியல், சமூகவியல், தமிழ் இலக்கியம், இலக்கணம் போன்ற பல்வேறு துறைகளில் சிறந்த அறிஞர் பலர் இதுவரை ஏறத்தாழ 120 ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியிருக்கின்றனர்.

"அறிவு விஞ்ஞான முறையியல்களின் வழியே சென்று அறியக்கூடியது. ஒவ்வொரு துறைக்கும் சிறப்பான ஆய்வுமுறை நோக்கு உள்ளது. இவ்வாய்வு முறையில் தமிழியல் ஆய்வுகளில் அண்மைக்காலப் புதுமையாக நுழைந்துள்ளது. இதனை வளர்ப்பதே ஆராய்ச்சி இதழின் நோக்கம் என்று அதன் ஆசிரியர் கூறுகிறார். கடந்த நான்கு ஆண்டுகளாக இவ்விதழ் ஆய்வுத் தமிழைப் பத்திரிகைத் துறையில் சிறப்பாக வளர்த்து வருகிறது. பல உள்நாட்டு அறிஞர்களுடன் வெளிநாட்டறிஞர்களும் இளம் ஆராய்ச்சியாளர்களும் மாணவர்களும் இவ்விதழில் பல்வேறு துறைகளில் கட்டுரைகள் எழுதி வருகின்றனர்.

கடைசியாக வெளிவந்த இதழ், வரலாற்றுச் சிறப்புடையதாகும்.

### கொங்கு

ஈரோடு புலவர் செ. இராசு அவர்களை ஆசிரியராகவும் பொறியிலாளர் கொடுமுடி (கொடியன்) சண்முகம் அவர்களை வெளியிடுவோராகவும் கொண்டு இந்த இதழ் 1972 முதல் சென்னையிலிருந்து வெளிவருகிறது. கல்வெட்டுத் துறைக்கும் கொங்கு நாட்டு வரலாற்று ஆராய்ச்சிக்கும் இந்த இதழ் செய்து

வரும் பணி மிகப் பெரியது. இன்னும் கூடுதலான அன்பர்கள் இந்த இதழைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.

அண்மையில் இந்த இதழில் எழுத்துச் சீர்திருத்தத்தைப் பற்றியும் யாழ்ப்பாணத் தமிழ் விழாவைப் பற்றியும் அரிய கட்டுரைகள் வந்துள்ளன.

### பிற துறைகள்

ஏனைய துறைகளிலும் தமிழில் வெளிவரும் பருவ இதழ்களின் எண்ணிக்கை மிகப் பெரிது. அவையனைத்தையும் தொட்டுக் காட்ட இயலாது. சுட்டிக்காட்டவேனும் முயலுவேன்.

### சமய இதழ்கள்

இந்து சமயத்தைப் பற்றியும் கிருஸ்தவ இஸ்லாமிய சமயங்களைப் பற்றியும் பல இதழ்கள் வெளிவருகின்றன.

முதலில் வெளிவந்த தமிழ் இதழை கிருஸ்தவ மிஷனரிமார்கள் சமயப் பிரசாரத்துக்காக வெளியிட்டார்கள். தொடர்ந்து இவ்வகையில் பல இதழ்களை தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் தமிழில் அச்சிட்டனர். இவற்றிற்கு எதிர்ப்பாக இந்துக்களும் இதழ்களை நடத்தினார்கள். பிறகு சைவ வைணவப் போட்டி ஏற்பட்டு ஒன்றைக் கூட்டியும் மற்றொன்றை உயர்த்தியும் எழுதும் இதழ்கள் வெளிவந்தன. இவ்வகையில் சில இதழ்களில் சித்தாந்த ரத்னாகரம் சோமசுந்தர நாயக்கரின் சண்டமாருதக் கருத்துக்கள் வெளிவந்தது குறிப்பிடத் தக்கது.

சமயத்துறையில் குறிப்பிடத்தக்க சில இதழ்கள் வருமாறு :

சித்தாந்தம்
திருப்புகழ் அமிர்தம்
அருள்
திருவருள்
ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்
சுவாமி சித்பவானந்தரின் தர்ம சக்கரம்.

### ஞானசம்பந்தம், குமரகுருபரன்

இவற்றில் சமயக் கட்டுரைகளும் இலக்கியக் கட்டுரைகளும் கவிதைகளும் அருள் நூல்களின் பொழிப்புரைகளும் ஆங்கில மொழி

பெயர்ப்புக்களும் அந்தந்த ஆதீனத்துச் செய்திகளும் மகாசந்நி தானங்களின் அருளாசியுரைகளும் இடம் பெறுகின்றன.

வள்ளலார் கருத்துக்களைப் பரப்ப சென்னை இராமலிங்கர் பணி மன்றம், டாக்டர் அவ்வை நடராஜன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு ஒரு திங்கள் இதழைச் சில காலம்வெளியிட்டது.

குருகுலம் (வாலாசாபாத்); இந்து மத பாடசாலைச் செய்தி களுடன் சமயக் கட்டுரைகளையும் வெளியிட்ட வா. தி. மாசிலாமணி முதலியார் காலம் வரை இந்த இதழ் வந்தது.

**தியாக பூமி** என்னும் வார இதழ் ஹிந்து மதம், தர்மம், பண்பாடு வாழ்க்கை முறை நம்பிக்கைகள் மகான்கள் பற்றிய அறிவைப் பரப்பி வருகிறது.

**திருக்கோயில்** என்னும் திங்கள் இதழ் 1958 முதல் சிறந்த முறையில் பயனுள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் தல விளக்கக் குறிப்புக்களுடனும் இந்து அற நிறுவன ஆட்சித் துறையினரால் திரு. ந. ரா. முருகவேள் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பெற்று வருகிறது.

தமிழ் நாட்டுச் சமணர்கள் **'அணுவிரதம்'** என்னும் இதழை நல்ல தமிழில் நடத்தி வருகிறார்கள்.

கிறிஸ்தவர்கள் தமிழ் நாட்டின் பல் பகுதிகளிலிருந்தும் ஐம்பதுக்கு மேற்பட்ட இதழ்களை நடத்தி வருகிறார்கள். இந்த இதழ்களிலும் இஸ்லாமிய சமயத்தைப் பற்றி வரும் சில இதழ் களிலும் இந்துக்களும் படித்துப் பயன்பெறக்கூடிய பல செய்திகளும் குறிப்புக்களும் வரலாறுகளும் உள்ளன.

## சோதிடம்

சோதிடத் துறையில் வெளிவரும் இதழ்களாவன.

மாதஜோதிடம்

விதி

தலையெழுத்து

எதிர்காலம்

## பொருளாதாரம்

இந்தத் துறையில் 'பொருள்' என்ற பெயரில் 10 ஆண்டு களுக்கு முன் சிறந்ததொரு இதழ் வெளிவந்தது. திரு. பத்மநாப ராஜு அதை நல்ல முறையில் நடத்தி வந்தார். அச்சுக்கூலி கூடக் கொடுக்க இயலாத நிலையில் அந்த இதழ் கைவிடப்பட்டது.

## தொழில் துறை

தொழில் துறையில் வெளிவந்து நின்று விட்ட இதழ்களுள் பொருட் சிறப்பாலும் நடைச் சிறப்பாலும் குறிப்பிடத் தக்கது 'தையற்கலை' என்பது. இதைத் தையற்கலை மணி திரு. சுந்தரம் நடத்தி வந்தார்.

குறிப்பிடத் தக்க ஏனைய இதழ்களுள் சில:

மோட்டார்

டிரான்சிஸ்டர் மெக்கானிஸம்

கைத்தறி

## பனைச் செல்வம்

பனைத் தொழில் வளர்ச்சிக்காக சென்னை மாநில பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் இந்த மாத இதழை 15 ஆண்டுகள் நடத்தியது. பனைமரத்தின் வளம் பெருக்க வெளி வந்த ஒரே பத்திரிகை பனைச் செல்வம். இதிலும் அவ்வப்போது நல்ல தமிழில் இலக்கியக் கட்டுரைகளும் கவிதைகளும் வெளிவந்தன.

## பொது அறிவு இதழ்கள்

சக்தி:

இந்தத் துறையில் சக்திக்கு அழியா இடம் உண்டு. 1939-இல் இராமச்சந்திரபுரத்தில் தோன்றி 1940-இல் சென்னை யிலிருந்து பெரிய அளவில் வெளிவந்தது. பின்னர் இதன் வடிவம் சுருங்கிய போதிலும் புதிய முறையில் எடுப்பிலும், தொடுப்பிலும் முடிப்பிலும் மிகவும் எழில் நிரம்பியதாக வெளிவந்தது. இது திரு. வை. கோவிந்தனை நிர்வாகியாகவும் தி. ஜ. ர., சுப. நாராயணன், ரகுநாதன் ஆகியோரை ஆசிரியர்களாகவும் கொண்டு பல ஆண்டுகள் நடைபெற்றது. முகப்பில் தமிழ்ப் பெருமக்களின் உருவப் படங்களைத் தாங்கி, புதுமை நோக்குடன் விரிந்த மனப் பான்மையுடன் நடைபெற்ற திங்கள் இதழ் இதுவாகும்.

'சக்தி' வாயிலாகத் தங்களுடைய பொது அறிவை வளர்த்துக் கொண்டவர் பல்லாயிரவர். 'சக்தி' ஒரு புதிய முயற்சி. இதற்கு முன் இவ்வளவு அழகாக எந்த இதழும் தமிழில் வெளிவரவில்லை. இனி வெளிவரும் என்பதும் சந்தேகமே' என்று எண்ணத் தோன்றும் படி 'சக்தி' சிறப்பாக வெளிவந்தது. படங்களை நன்ருகவும், அடிக்கடியும் வெளியிட்டுத் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு முன்மாதிரி யாக விளங்கியதும் சக்திதான். நிழற்படம், கல்வெட்டு, பூகோளம், அறிவியல், உலக நாடுகள் பற்றிய கட்டுரைகளைத் தந்தது 'சக்தி'. வெளிநாட்டு ஆசிரியர்களைத் தமிழகத்துக்கு அறிமுகப்படுத்தியதும் 'சக்தி' இதழே.

**திங்கள் :**

இதுவும் ஒரு சிறந்த இதழ். 1956 ஜனவரி முதல் 1957 ஆகஸ்டு வரை வெளிவந்தது. எதிர் பார்த்த ஆதரவு கிடைக் காததால் இந்த இதழும் கைவிடப்பட்டது. இதை நடத்தியவர் பேசும் படம் என்ற இதழின் ஆசிரியர் திரு. டி. வி. ராமநாத். அவர் "திங்கள்" இதழில் பின்வருமாறு எழுதினர்.

> "பள்ளிச் சிறுவர் முதல் முதியோர் வரை எல்லோ ருக்கும் பயன் தரத்தக்க விஷயங்கள் மாதாமாதம் நமது பத்திரிகையில் பிரசுரமாகும். படங்களுடன் பல விஷயங்களைச் சுலபமாக விளக்கலாம். இந்த நோக்கத்துடனே படக்கட்டுரைகள் அமைக்கப் பட்டுள்ளன ஏராளமான விஷயங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள இப்படக் கட்டுரைகள் உதவும். பல்வேறு விஷயங்களைப் பற்றிய கட்டுரைகள், படக் கட்டுரைகள் தொடர்ந்து வெளிவரும்."

**கல்கண்டு :**

புகழ் பெற்ற எழுத்தாளர் தமிழ்வாணனை ஆசிரியராகக் கொண்டது இந்த வார இதழ். மிகப் பல துணுக்குகளும் ஒரு சில தொடர்கதைகளும் ஏராளமான கேள்வி–பதில்களும் வள்ளலார் பற்றிய சிறு செய்திகளும் ஆசிரியர் ஆற்றும் சொற்பொழிவுகளும் இதில் இடம் பெறுகின்றன. இளைஞர்களிடம் இந்த இதழுக்கு நல்ல செல்வாக்கு இருந்து வருகிறது.

உவமைகளும் சிறு சிறு வாக்கியங்களும் உடையது தமிழ் வாணன் நடை. எழுத்து அமைப்பும் வாக்கிய அமைப்பும் விரை வுக்கும் அழகுக்கும் பெரிதும் உதவுகின்றன.

துணுக்குகள் வெளியிடும் துறையில் கல்கண்டு ஒரு மைல் கல்.

கல்கண்டு இதழில் விளம்பரம் செய்துதான் 'குமுதம்' இன்றைய நிலையை அடைந்தது என்பதை முன்னரே தெரிவித்துள்ளோம். விமானப் பதிப்பு அச்சிடும் தமிழ்ப் பத்திரிகைகள் இரண்டுதான் ஒன்று கல்கண்டு, மற்றொன்று குமுதம்.

## திரட்டு இதழ்கள்

**மஞ்சரி :**

"ரீடர்ஸ் டைஜஸ்டு" இதழைப் பின்பற்றி இது உருவாகியிருக்கிறது. ஆனால் அமைபபிலோ, மொழி நடையிலோ இந்த இதழுக்கும் ரீடர்ஸ் டைஜஸ்ட்டுககும் ஏணி வைத்தாலும் எட்டாது. கொச்சையான நடையைப் படிப்படியாகவேனும் கைவிடலாமே?

**கூரியர் :**

ஐக்கிய நாட்டு அவையின் ஓர் அங்கமான ஐக்கிய நாடுகள் கல்வி அறிவியல், பணபாட்டு நிறுவனமாகிய 'யூனெஸ்கோ' நடத்தும் மாத இதழ் 'கூரியர்' ஆகும். கூரியர் என்பது பிரெஞ்சுச் சொல். இதன் பொருள் "தூதன்".

பிரெஞ்சு, ஆங்கிலப் பதிப்புக்களைத் தொடர்ந்து உலகின் பல்வேறு மொழிகளிலும் இது மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப் பெறுகின்றது. தமிழ்ப் பதிப்பு வெளிவரக் காரணமாக இருந்தவர். அதற்காக வழி வகுத்தவர் டாக்டர் மால்கோல்ம் ஆதிசேஷய்யா ஆவார்.

பொதுவாக உலக மக்களினத்திற்குப் பயன்படக்கூடிய கல்வி, அறிவியல், பண்பாட்டியல் போன்ற பல துறைகளில் ஒவ்வோர் இதழுக்கும் ஒரு பொருளை எடுத்துக்கொண்டு அப்பொருளில் சிறந்த அறிவு படைத்த உலகப் பேரறிஞர்களைக் கொண்டு கட்டுரைகளை எழுதச் செய்து வெளியிடுகின்றது. 'கூரியர்' தமிழ் இதழைத் தென்மொழிகள் புத்தக டிரஸ்ட் 1967 ஜூலையிலிருந்து வெளியிட்டு வருகின்றது. இது திங்களிதழேயாயினும் ஆண்டுக்கு இரு திங்களில் இவ்விதழ் வெளிவராது. பல்வேறு துறைகளில் கட்டுரைகள் வெளிவருவதால் பலதுறைகள் புதுப்புதுச் சொற்கள் இவ்விதழ் வழி படைக்கப் பெறுகின்றன. இது இவ்விதழ் தமிழ் மொழிக்குச் செய்யும் பெருந்தொண்டாகும்.

மேலும் இதுவரை தமிழில் எழுதப் பெறாத பல்வேறு துறைகளைப் பற்றிய கட்டுரைகள் இவ்விதழில் இடம் பெறுவதால்

பல புதுத்துறைகள் தமிழில் உருவாகின்றன. இதன் பதிப்பாசிரியர் அவ்வப்போது மாறுவதுண்டு. இப்போது பதிப்பாசிரியராக இருப்பவர் தாமரைச் செல்வர் நெ. து. சுந்தர வடிவேலு அவர்கள்.

இது கவர்ச்சிப் படமில்லாத தமிழ் இதழ்; பொழுதுபோக்கு இதழுமன்று; அறிவுச் செல்வங்களையெல்லாம் அள்ளி வந்து, நம்முன் கொட்டிவிட முயலும் உலக இதழ். எனவே எத்தனை பேர் வாங்குவார்கள் என்பதை ஊகிக்கலாம்.

**குமரி மலர்:**

திரு. ஏ. கே. செட்டியார் 1943 முதல் நடத்தி வருகிறார். இரண்டாவது உலகப் போர்க் காலத்தில் பத்திரிகை தொடங்குவதற்குக் கட்டுப்பாடு இருந்தது. இந்தத் தடையை வெல்லுவதற்காக மாதம் ஒரு புத்தகம் வெளியிடுவதற்காகத் திட்டமிட்டு 'குமரி மலர்' என்னும் மாத இதழை அவர் 'பெங்குவின் நியூ ரைட்டிங்' அடிப்படையில் அமைத்துக் கொண்டார். ஓராண்டுக்கு ஒரு முறைதான் ஓர் ஆசிரியருடைய கட்டுரை வெளியிடப்படும் என்ற ஏற்பாடும் தொடக்கத்தில் இருந்து வந்தது. அறிவுப் பசி மிக்கவர்களுக்குக் குமரி மலர் ஒரு நல்ல விருந்தாக இருந்து வருகிறது. குமரி மலர் முன்னர் சில ஆண்டு மலர்களையும் வெளியிட்டு வந்தது. அவை மிகச் சிறப்பாக அமைந்தன.

**தாமரை:**

திட்டமிட்டுக் குறிப்பிட்ட அரசியல் பொருளாதார சமூகக் கருத்துக்களையும் முற்போக்கு இலக்கியத்தையும் வாசகர்களிடையே உருவாக்கி வரும் இதழ் இது. செம்மையான முறையில் வெளியிடப்பட்டு வருகிறது. நாட்டுப் பாடல்கள் பலவற்றை வெளியிட்ட பெருமை தாமரைக்கு உண்டு.

**நூலகம்:**

நூலகத்துறை பற்றிய சிறந்த ஏடு இது. ஏனைய மொழியினரும் பாராட்டும் வண்ணம் இது வெளிவருகிறது. புதிய தமிழ் நூல்கள் இதில் மதிப்புரை செய்யப்படுகின்றன. இலக்கிய மேதைகளின் வரலாறுகளும் வாழும் எழுத்தாளர்களுடைய பேட்டிகளும் விவரமாக வெளிவருகின்றன. இந்த இதழை நடத்தும் திருமதி லெட்சுமி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பணி போற்றுவதற்குரியது.

## அறிவியல் இதழ்கள்

**தமிழர் நேசன் :**

அறிவியல் ஏடு என்று குறிப்பிடக்கூடிய முதல் தமிழ் இதழ் தமிழர் நேசன் என்பது. இது 1917-இல் நிறுவப்பெற்ற தமிழர் கல்விச் சங்கத்தின் வெளியீடு. முதலில் இரண்டு திங்கள்களுக்கு ஒரு முறையும், பிறகு மாத இதழாகவும் வெளிவந்தது. இவ்விதழின் ஆசிரியர்களுள் ஒருவராக, திரு. பெ. நா. அப்புஸ்வாமி பணியாற்றினுர். 12 ஆண்டுக்காலம் இவ்விதழ் நடைபெற்றது.

**கலைக்கதிர் :**

இரண்டாம் உலகப் போருக்குப்பின் உலகில் அறிவியலிலும், தொழிலியலிலும் வியத்தகு மாற்றங்களும் முன்னேற்றங்களும் ஏற்பட்டுள்ளன. இவற்றை அடிமைப் பட்டிருந்த நம் நாடு உணராது போயிற்று. எனவே புதுப்புது அறிவியல் கருத்துக்களைத் தமிழ் மக்கள் தமிழில் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நிலையை உணர்ந்து அப்பணிக்காகத் தோன்றிய அறிவியல் இதழே 'கலைக் கதிர்' ஆகும். அதன் ஆசிரியரான திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்கள் அதனை 1948-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தொடங்கி தொடர்ந்து 25 ஆண்டுகளாக நடத்தி அண்மையில் அதன் வெள்ளி விழாவையும் கொண்டாடியுள்ளார். கலைக்கதிரில் அறிவியல், தொழில் நுட்பம், மருத்துவம், உளவியல், பொருளாதாரம், வேளாண்மை, வரலாறு, இலக்கியம் ஆகிய துறைகளில் புலமை சான்ற பேரறிஞர்கள் தமிழில் கட்டுரைகள் எழுதி வருகின்றனர். ஆண்டுதோறும் பொங்கல் மலரையும் கதிர் வெளியிடுகின்றது. மேலும் ஏதாவது ஒரு பொருளை எடுத்துக் கொண்டு அதில் பெரிதும் திறன் வாய்ந்த அறிஞர்களைக் கொண்டு கட்டுரைகளை எழுதச் செய்து சிறப்பு மலர்களும் அவ்வப்போது வெளியிடுவதுண்டு. பயிற்சி மொழி மலர், அறிவியல் வளர்ச்சி மலர், அணு மலர், பொருளாதாரச் சிறப்பிதழ் போன்ற மலர்களைக் குறிப்பிடலாம். சுருங்கக்கூறின் அறிவியல் தமிழைப் பத்திரிகை வாயிலாக வளர்த்த பெருமையும் புதிய கலைச் சொற்களைப் படைத்த பெருமையும் கலைக் கதிரையே சாரும் எனலாம்.

## எழுத்தாளர் ஏடுகள்

எழுத்தைத் தொழிலாகக் கொண்ட எழுத்தாளர்கள் நலன் கருதி, தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் வாயிலாக சென்னையிலிருந்து 'பாரதி' என்ற திங்கள் இதழும் எழுத்தாளர் மாநாட்டை ஒட்டிப் பயினுள்ள ஆண்டுமலரும் வெளிவந்தன.

திருச்சியிலிருந்து கவிதாமணி அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் விடாது நடத்திவரும் எழுத்தாளன் பயன் கருதாமல் செய்யப்படும் பணி ஆகும். இவ்விதழில் வெளிவந்த ஆண்டுமலர்கள் கருத்துக் கருவூலங்களாகவும் பேணி வைத்திருக்கத்தக்க கலைச் செல்வங்களாகவும் மிளிர்கின்றன. ஆங்கிலத்திலும் சில படைப்புக்கள் எழுத்தாளனில் இடம் பெறுகின்றன. ரெட்டியார் ஏற்கெனவே கிராம ஊழியன் முதலிய சில இதழ்களை நடத்தியவர்.

## அரசியல் - இலக்கிய ஏடுகள்

இரு மொழிகளிலும் கட்டுரைகள் வெளியிட்ட ஏடுகளுள் 1952 முதல் 1966 வரை வெளிவந்த தமிழ்க் கல்சர் குறிப்பிடத் தக்கது. தமிழியல் ஆய்வில் இந்த இதழின் பங்கும் பாங்கும் பாராட்டுக் குரியன. தமிழறிஞர்களும் ஆர்வலர்களுமான தனிநாயக அடிகள் முதலிய சிலர் இதை நடத்தி வந்தனர்: உலகத் தமிழ் மாநாடுகள் கூடியதற்கு இவ்விதழே தலையூற்று; விடிவெள்ளி என்பதை நன்றி யுள்ள தமிழகம் மறவாது.

**ஊழியன் :**

பத்திரிகைகள் அனைத்தும் அரசியல் மயமாக இருந்த நாட்களில் சில இதழ்கள் அரசியலோடு இலக்கியத்திற்கும் இடம் தந்தன. 'ஊழியன்' என்னும் வார இதழ் சில காலம் காரைக்குடியி லிருந்தும் சிலகாலம் சென்னையிலிருந்தும் வெளிவந்தன. நல்ல தமிழும் விறுவிறுப்பான நடையும் உணர்ச்சியூட்டும் ஆற்றலும் கொண்டு இந்த இதழில் கட்டுரைகளும் குறிப்புக்களும் எழுதப் பெற்றன. திரு. வி. க.-வின் இலக்கிய மரபு நடையை இந்த இதழ் பின்பற்றியது.

இதன் ஆசிரியர் தமிழ்க்கடல் ராய. சொ. துணை ஆசிரியர்க ளாக புதுமைப் பித்தன், தி. ஜ. ர. ஆகியோர் பணிபுரிந்தனர்.

**குமரன் :**

திரு. சொ. முருகப்பா அவர்கள் இந்த இதழைக் காரைக்குடியி லிருந்து 25 ஆண்டுகள் நடத்தினார்கள். பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்களின் தமிழ் மணம் கமழும் கட்டுரைகள் முதலில் இந்த இதழில்தான் வெளிவந்தன.

சுவாமி விபுலானந்தர், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை ஆகியோரைத் தமிழ் நாட்டிற்கு அறிமுகப்படுத்தியது 'குமரனே'.

"இட்டிலுக்கு வந்தது இடர்" என்ற வெண்பாப் போட்டியையும் இந்த இதழ் நடத்திற்று.

**இலக்கியம் :**

பேராசிரியர் சி. இலக்குவனுர் இந்த இதழைத் திருநெல்வேலியிலிருந்து ஓராண்டுக் காலம் நடத்தினுர்.

**தமிழர் நாடு :**

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் திருச்சிராப்பள்ளியிலிருந்து 1943 முதல் 45 வரை திங்கள் இதழாகவும் 1946 முதல் 48 வரை வார இதழாகவும் தமிழ், தமிழர், தமிழ் நாடு என்ற கொள்கைகளுக்காக நடத்தினுர்கள்.

இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் இந்த இதழ் பெரும் பங்கு புரிந்தது. புதிய எழுத்தாளர் பலரையும் உருவாக்கியது.

**நித்திலம்:**

இது கலை - இலக்கியத் திங்கள் இதழ். இசைப் பேரறிஞர் ப. சுந்தரேசன் அவர்களின் மேற்பார்வையில் குடந்தையிலிருந்து வெளிவருகிறது.

**நாடோடி :**

இந்த இதழ் பத்து ஆண்டுகள் நடைபெற்றது. நாடக விமர்சனம் நகைச் சுவைக் கட்டுரைகள், பயணக் கட்டுரைகளை வெளியிட்டது. ஆனந்த விகடனில் திரு. எம். வெங்கடராமன் உதவியாசிரியராய் 1936-இல் சேர்ந்தார். 'கல்கி' அவர்கள் இவரை ஒரு புனைபெயர் வைத்துக் கொள்ளச் சொன்னுர். நாடோடி என்பது (WAYFARER) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இவருடைய தமிழாக்கம்.

## மருத்துவத் துறை

மருத்துவத் துறையில் ஆயுர்வேத பாஸ்கரன் (1908), வைத்தியப் போதினி (1910), சித்தர் திரு உள்ளம் (1920), தமிழ் வைத்தியக் களஞ்சியம் (1922), தமிழ் வைத்தியம் (1923), மருத்துவன் (1929), 'மூலிகை மணி' முதலான பதினைந்திற்கும் மேற்பட்ட இதழ்கள் வெளிவந்துள்ளன. 'மூலிகை மணி' தொடர்ந்து நடந்து வருகிறது. 'மூலிகை மருந்து' 'நந்தி' 'ஹோமியோபதி' என்னும் இதழ்களும் வருகின்றன.

துறைதொறும் :

வேளாண்மைத் துறையில் 1903 முதல் பல பத்திரிகைகள் வந்துள்ளன. கூட்டுறவு, நாட்டு நிர்வாகம் முதலிய துறைகளிலும் 1910 முதலே பத்திரிகைகள் வந்துள்ளன. ''மாதச் சட்டப் பத்திரிகை'' என்னும் சட்டத் தமிழ் இதழ் 1893-இல் தொடங்கியுள்ளது. இத்துறையில் வெளிவந்த வக்கீல் குமாஸ்தா ஜர்னல் (1914), பத்திரலேகரி (1922), வக்கீல் (1949), 'லாயர்' முதலியனவும் குறிப்பிடத் தக்கவை.

இவை தவிர அச்சுத் தொழில், ஆடல் பாடல், விஞ்ஞானம் முதலான துறைகளிலும் 1900 முதலே இதழ்கள் வருகின்றன. 1900 ஆண்டில் தொடங்கப்பட்ட 'விநோத விசித்திரப் பத்திரிகை' மருந்துகள், களிம்புகள், வாண வேடிக்கை முதலியவற்றைப் பற்றியது.

## அரசியல் கட்சிகளின் ஏடுகள்

பல்வேறு அரசியல் கட்சிகளும் தமிழ் நாட்டில் நூற்றுக்கு மேற்பட்ட இதழ்களை நடத்துகின்றன. இவற்றில் கட்சிக் கண்ணோட்டத்துடன் கட்சிக்காரர்கள் எழுதி வருகின்றனர். இலக்கிய ஈடுபாடு உடையவர்கள் எழுதுவதற்கு வேறு மேடை கிடைக்காதபோது கட்சி ஏடுகளைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

குறிப்பாக அறிஞர் சி. என். அண்ணாதுரை அவர்களுடைய ஏடுகளும் அவருடைய எழுத்தால் கவரப்பட்டு எழுதவேண்டும் என்ற அவாக்கொண்டு தாங்களும் ஏடுகள் தொடங்கியவர்களும் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் தொகை இருநூறு இருக்கலாம். இவர்களுள் கலைஞர் மு. கருணாநிதியின் சொல்லாட்சி நிறைந்த, எழுச்சியூட்டும் எழுத்தும் நடையும் 'முரசொலி'க்குப் புகழ் தேடித் தந்துள.

அரசியல் ஏடுகளை நடத்தியவர்களுள் பரலி சு. நெல்லையப்பர் குறிப்பிடத் தக்கவர். இவர் முதலில் தொடர்புகொண்டு துணையாசிரியராகப் பொறுப்பேற்றது, கவியரசர் சுப்பிரமணிய பாரதியாரின் 'சூரியோதயம்' பத்திரிகையுடனும் பிறகு, 'பாரதி' 'தேசபக்தன்' இதழ்களுடனும் நெருங்கிய தொடர்புகொண்டு இறுதியாக லோகோபகாரி ஆசிரியர் ஆனார்; அதன் உரிமையாளரும் ஆகி அந்த இதழ் வலிவும் பொலிவும் பெறச் செய்தார். அது அவருடைய இதயத்தோடு இதயமாக, உடலோடு உடலாக, குருதியோடு குருதியாக இரண்டறக் கலந்து இணைந்திருந்தது.

துக்ளக் :

திரு. 'சோ'வை ஆசிரியராகக் கொண்ட 'துக்ளக்' (அரசியல் பத்திரிகை) இலக்கியச் சார்பான ஓரிரு அரசியல் கட்டுரைகளையும் தருகிறது. நகைச்சுவையும் கருத்துச்சுவையும் இந்த இதழின் சிறப்பு. மக்களைச் சிரிக்கவைப்பதிலும் சிந்திக்கவைப்பதிலும் 'சோ' வல்லவர்; அரசியல் வாதிகளுக்கு 5 ரூபாய் பரிசு வழங்கும் ஒரு திட்டத்தையும் இவர் உண்டாக்கியுள்ளார். சில சமயம் சிலர் மனம் புண்பட்டாலும் பிறகு அவர்களே படித்துச் சிரிக்கக்கூடிய வகையிலும், மக்கள் பலரும் விரும்பும் வகையிலும் எழுதுவதில் இவர் கைதேர்ந்தவர். அரசியல் தலைவர்களின் சொல்லையும் செயலையும் கருப்பொருளாகக் கொண்டு தவறுகளைச் சுட்டிக்காட்டி அங்கதம் அல்லது நையாண்டிச் (Satire) கலையை எழுத்தில் இவர் வளர்த்துள்ளார்.

## சமூக ஏடுகள்

பல சமூகத்தினருக்கும் உரிய ஏடுகள் ஏராளமாக வெளி வருகின்றன. இவற்றில் அந்தந்தச் சாதிகளைப்பற்றிய செய்திகள் ஓரளவே உள்ளன. இவற்றில் விற்பனை மிகக் குறைவு.

இந்த இதழ்களின் ஆசிரியர்கள் இலக்கியத்திலும் வரலாற்றிலும் ஈடுபாடுடையவர்களாதலால் இந்தத் துறையில் தங்கள் கருத்துக்களை இவற்றின் மூலம் பரப்பி வருகிறார்கள்.

## அரசினர் ஏடுகள்

எல்லா அரசுகளும் தங்கள் சாதனைகளை விளக்கும் பத்திரிகைகளை நடத்துகின்றன. எனினும், அவற்றுள் எதையும் பொதுமக்கள் விரும்பி வாங்கிப் படிப்பதில்லை. தமிழக அரசு நடத்தும் 'தமிழரசு' ஒன்றுமட்டும் பொதுமக்களிடமும் விற்பனையாகும் பத்திரிகையாக உள்ளது. அது தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் தொண்டு செய்து வருகிறது.

தமிழ் நாடு அரசின் பல்வேறு துறைகளிலும் வெளியிடப்பெற்ற 'பாக்கிய லட்சுமி', சௌபாக்கியம், மேழிச் செல்வம், இன்காம், ஆரோக்கிய மார்க்கம், மெட்ராஸ் ஹெல்த் எஜுகேஷன், சீரணி (கிராம நலம்) ஆகிய 7 பத்திரிகைகளையும் ஒருங்கிணைத்து 1-7-1970-ல் தமிழ்நாடு அரசு, 'தமிழரசு' என்னும் பெயரில் திங்கள் இருமுறை இதழ் ஒன்றை நிறுவியது.

'தமிழரசு' இதழில் 'வெண்பாப் போட்டி' துவக்கப் பெற்று, தமிழ்க் கவிஞர்களுக்கு ஊக்கமும், கவிதைத் துறை வளர நல்லதொரு சூழ்நிலையும் உருவாகியுள்ளது. இதுவரை 67 வெண்பாப் போட்டிகள் நடைபெற்றுள்ளன. முதலமைச்சர் கலைஞர், இவ்விதழில் எழுதிய 'இனியவை இருபது' என்ற பயணக் கட்டுரைத் தொடர், நூல் வடிவில் வெளிவந்துள்ளது.

## இந்திய அரசின் இதழ்கள்

சென்னையிலிருந்து இந்திய அரசு இரண்டு தமிழ் இதழ்களை வெளியிடுகிறது. ஒன்று திட்டம் என்னும் மாத இதழ்.

மற்றொன்று பொதுமக்கள் படிப்பதற்காக அஞ்சல் நிலையங்கள், இரயில் நிலையங்கள், வங்கிகள் ஆகியவற்றில் ஒட்டப்படும் சுவரொட்டி நாளிதழ். இதன் பெயர் தாய்நாடு. இந்த இரண்டும் நல்ல அச்சுடனும் நல்ல நடையிலும் படங்களுடனும் கவர்ச்சியான முறையிலும் பொருள் நிறைந்த குறிப்புக்களுடனும் வெளிவருவது பாராட்டுக்குரியது.

## தொழிற்சாலை இதழ்கள்

ஏராளமான இதழ்கள் இந்த வகையில் தமிழ் நாட்டில் ஆங்கிலத்தில் வெளிவருகின்றன. ஆனால் இவற்றில் ஒரு சில மட்டுமே தமிழுக்கும் இடமளிக்கின்றன.

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் முயற்சியால், தென் சென்னை மின்சாரக் கழகத்தின் இதழில் தமிழ் மணம் கமழ்ந்தது. அந்தக் குழுவையே அரசு ஏற்றுக் கொண்டு விட்டபடியால் அந்த இதழ் இனி வெளிவராது.

சக்தி சர்க்கரை ஆலை வெளியிடும் செய்தி மடல் பல விவரங்களைத் தாங்கி வெளிவருகிறது. ஆனால் அதன் அமைப்பும் நடையும் கவர்ச்சியாக இருக்கலாம்.

கோவை லெட்சுமி ஆலை முதலிய பல நிறுவனங்களின் கூட்டு வெளியீடான Limex என்னும் இதழில் தமிழில் ஓரிரு கட்டுரைகளும் கவிதைகளும் வெளிவருகின்றன.

இந்த வகை இதழ்களில் தமிழ்ப் பகுதி கூடுதலாக இடம்பெற முயலுவதே நம் போன்றவர்களின் அடுத்த முயற்சியாக இருக்க வேண்டும்.

## பிற இதழ்கள்

இவை தவிர குழந்தைகளுக்கான இதழ்கள், பெண்களுக்காக வெளிவரும் இதழ்கள், சினிமா இதழ்கள், நாடகக் கலை இதழ்கள் முதலியன ஏராளமாக உள்ளன.

## தோன்றி மறைந்த இதழ்

மறைந்த இதழ்கள் எண்ணிலடங்காத அளவின. ஆனால் அவற்றால் ஏற்பட்ட பயன்? — கவிமணியின் வாழ்த்துப் பாக்களின் வாயிலாகத் தமிழுக்குச் சில நல்ல பாடல்கள் கிடைத்ததாகும். சான்று:

### நேதாஜி

வங்கம் வளர்த்த சிங்கமென வையம் முழுதும் ஒருங்குபுகழ்
எங்கள் வீரன் நேதாஜி இனிய பெயரால் எழுந்துதமிழ்
பொங்கி வளரும் திருநாடு போற்ற வரும்இப் பத்திரிகை
மங்கை பாகன் அருளாலே வாழ்க! வாழ்க! வாழ்கவே!

### சக்தி

கல்வி வளரக் கலைவளர நாடெங்கும்
செல்வம் வளரத் திருவளர—நல்வழிசேர்
புத்தி வளரப் புகழ்வளரத் தோன்றுமிச்
சத்தி வளர்க தழைத்து.

### சௌபாக்கியம்

ஔவை வளர்த்த அமுதத் தமிழ்மொழியை
செவ்வையுறக் காட்டிச் சிறந்தோங்கி—இவ்வுலகில்
பல்லாண்டு சௌபாக்கியம் பார்மீது வாழ்ந்திடுக
எல்லோரும் போற்ற இனிது.

## நடை

தமிழ் இதழ்களின் நடையைப்பற்றி இப்போது சில கூறுவேன். அவசரமாக மிக விரைவில் செய்திகளை வெளியிட வேண்டிய நாளிதழ்களின் நடையில் சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும். அது தவிர்க்க முடியாதது. ஆனால் வார இதழ்களிலும், மாத இதழ்களிலும் நல்ல தமிழ் கையாளப்படவேண்டும்.

| | | |
|---|---|---|
| சொற்கள் ஓடுவது | — | பத்திரிகை |
| சொற்கள் நடப்பது | — | நூல் |
| சொற்கள் நடனமாடுவது | — | கவிதை |

என்று ஓர் அன்பர் கூறியுள்ளார். நாள் இதழில் எதுகை/மோனைக்கு நேரமில்லை. எப்படி முடிக்கலாம் என்று சிந்தித்து முடிவு செய்வதற்குள் மறுநாள் இதழ் வெளிவந்துவிடும். ஆனால் இத்தகைய இடர்ப்பாடு சஞ்சிகைகளுக்கு இல்லை.

### நடையில் மாறுதல்

நாளிதழ் ஆயினும் சரி, வார இதழ் ஆயினும் சரி, திங்கள் இதழ் ஆயினும் சரி. எந்த இதழை எடுத்துக்கொண்டாலும் கடந்த 50 ஆண்டுக் காலத்தில் அதனுடைய நடை மாறியிருக்கிறது.

இன்றைய சுதேசமித்திரனின் நடை, 40 ஆண்டுகளுக்கு முந்திய சுதேசமித்திரன் நடையன்று.

இந்த வாரத்து ஆனந்த விகடன் இதழின் நடை 20 ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த ஆனந்த விகடன் நடையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது.

எந்த இதழை எடுத்துக்கொண்டாலும் 15 ஆண்டுகளுக்குமுன் அதே இதழின் ஒரு படியை எடுத்து ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த உண்மை புலனாகும்.

தினத் தந்தியில்கூட 10 ஆண்டுகளுக்குமுன்

படார் படார்
டமீல்
ஐயோ என அலறினன்
வீச் வீச்
குசு குசு என்று

என்ற ஒலிக் குறிப்புச் சொற்களையும்

குளு குளு குற்றாலம்
சுறுக் சுறுக்

என்ற மெய்யுணர்வைக் குறிக்கும் சொற்களையும்

பளிச் சென்று
வெடுக் கென்று

என்ற விரைவுக் குறிப்புச் சொற்களையும் பயன்படுத்தினர்கள். அவற்றை இப்போது அவர்கள் புதிதாகத் தொடங்கியுள்ள ‘மாலை

முரசு' இதழுக்கு மாற்றிவிட்டு, தினத்தந்தியின் தரத்தை ஓரளவு உயர்த்தியிருக்கிறார்கள்.

> 'பட்சி ஜாலங்கள் விருட்சங்களிலிருந்து கானம் செய்
> தால்தான் சுகிர்தமாய் இருக்குமோ?

என்று எழுதிய பத்திரிகைகள் இப்போது

> 'பறவை இனங்கள் மரங்களிலிருந்து பாட்டிசைத்தால்
> இனிதாய் இராதோ'

என்று எழுத முன்வந்துள.

எந்த இதழிலும் முந்திய அளவுக்குக் கொச்சைச் சொற்களோ இலக்கணப் பிழைகளோ இல்லை. இந்த மாறுதலுக்கு காரணங்களாக

1. பரவலான கல்வி வளர்ச்சி
2. மக்களின் உணர்ச்சி
3. தமிழாசிரியர்களுடைய பணி

ஆகிய மூன்றையும் குறிப்பிடலாம். இந்தத் துறையில் பலர் விரும்பக்கூடிய மாறுதல்களைப் படிப்படியாகத்தான் எதிர் பார்க்கலாம்.

மொழிப் பயிற்சி உடையவர்கள் இதழ் அலுவலகங்கள் அனைத் திலும் இருப்பது இன்றியமையாதது.

> " இலக்கணமும் இலக்கியமும் தெரியாதான்
> ஏடெழுதல் கேடு நல்கும்
> தலைக்கணையில் நெருப்பிட்டுத் தலைவைத்துத்
> துயில்வது போல் பகைவனைப் போய்
> நிலைப்புற்ற தமிழ் ஏட்டில்
> ஆசிரியனுக்குவது நீங்க வேண்டும்
> கலைப்பண்பும் உயர்நினைப்பும் உடையவரே
> ஏடெழுதும் கணக்காயர்கள் "

தமிழ் இதழ்கள் பலவற்றிலுள்ள குறைபாடுகளைப் பற்றித் திரு. வி. க. குறிப்பிடுகையில்

> " தமிழைப்போல் உயர்ந்தமொழி
> தரணியெங்கும் கண்டதில்லை
> தமிழரைப்போல் மொழிக்கொலையில்
> தலைசிறந்தோர் எவருளரே ! "

என்று உள்ளம் நொந்து, நெஞ்சம் குமுறியிருக்கிறார்.

## தமிழாசிரியர்களின் நடை

நான் முதல் நாளில் சொன்னதுபோல, முப்பது ஆண்டுகளுக்கு முன் தமிழ்ப் பெரும் புலவர்கள் தங்களைப் போன்ற பெரும் புலவர்களின் மதிப்பைப் பெறுவதற்கு மட்டுமே எழுதினர்கள். பத்திரிகை படிக்கும் பல்லாயிரவரும் தங்கள் எழுத்தைப் படிக்க வேண்டும் என்ற எண்ணம் தமிழ்ப் புலவர்களுக்கும் இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் அவர்களும் முன்போல இலக்கியங்களைப் பற்றி மட்டும் எழுதாமல் வாழ்க்கை வரலாற்று நூல்கள், சிறு கதைகள், தொடர் கதைகள் ஆகியவற்றையும் எழுத முன் வந்திருக்கின்றனர்.

மறைமலையடிகள், பேராசிரியர் சோமசுந்தர பாரதியார், நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் போன்றவர்கள் எழுதிய கடுமையான நடையையும் நீண்ட வாக்கியங்களையும் உரைவேந்தர் ஔவை துரைசாமி பிள்ளை, புலவர் வெள்ளை வாரணனர், டாக்டர் வ. சுப. மாணிக்கம் ஆகிய ஒரு சிலர் மட்டுமே கையாளுகின்றனர். இவர்கள் விதிவிலக்கானவர்கள்.

இப்போது பெரும்பாலான புலவர்கள் சிறு வாக்கியங்களைத் தான் எழுதுகிறார்கள்.

நுண்மான் நுழைபுலம்

மக்கட்டொகை

நூனிலயம்

தனிப்பாடற்றிரட்டு

வாணாள்

என்றெல்லாம் எழுதும் புலவர்கள் இந்நாளில் குறைவு. சீர் பிரித்து எழுதும் பழக்கம் அவர்களிடம் பரவிவிட்டது.

இந்த இயல்பு அச்சு இயந்திரம் உண்டான உடனேயே ஓரளவு உருவாகிவிட்டது. அந்தக் கருவியின் பயனாய் எண்ணற்ற நூல்கள் வெளிவந்ததும், இராமலிங்க வள்ளலார் கூட அவருடைய திருவருட்பாவை எளிய நடையில் எழுதலானர் என்று 'பாரதீய வித்யாபவன்' வெளியீடான இராமலிங்க சுவாமிகள் என்ற நூலில் டாக்டர் அண்ணாமலை கூறியுள்ளார்.

## புதிய எழுத்தாளர்கள் உருவாக்கமும் நூல் வெளியீடும்

பத்திரிகைகளில் கட்டுரைகளாக வெளிவந்து பிறகு நூலாக்குவது வழக்கமாகிவிட்டது. இதில் சில வசதிகள் இருக்கின்றன. ஏற்கெனவே வாசகர் பலர் படித்திருப்பதால் கட்டுரையின் தன்மையும் தரமும் பலருக்கும் தெரிந்து விளம்பரமாக அமைகிறது.

ரோட்டரி இயந்திரத்தில் மீண்டும் நூலாக அச்சிடப்படும் போது அடக்கவிலை குறைவாக அடங்குகிறது.

இதழ்களின் ஆசிரியர்கள் நூல் எழுதி அந்த அலுவலகத்தின் மூலம் வெளியிடும்போது ஆயிரக்கணக்கான விற்பனை ஏஜெண்டுகள் இருப்பதால், நூல் எங்கும் பரவுவதற்கு வழி பிறக்கிறது. விற்ற பணமும் ஒழுங்காக வந்து சேருகிறது. இல்லாவிட்டால் இதழின் ஏஜென்சி விற்பனை உரிமை தொடர்ந்து இராதே!

ஓர் இதழில் தொடர்ந்து கட்டுரைகள் வருவதால் ஆயிரக்கணக்கானவர் அதைப் படிக்கிறார்கள். அவர்கள் தெரிவிக்கும் கருத்துக்களுக்கேற்ப, திருத்தங்கள் செய்தும் விளக்கங்கள் கூறியும் நூலை அச்சிட வாய்ப்பு உண்டாகிறது. கட்டுரைகளைப் படிப்பவர்களில் ஒரு சிலர் நுட்பமாக ஆராய்ந்து பயனுள்ள புதிய செய்திகளைத் தெரிவிக்கின்றனர். தொடர்ந்து அவர்களுடன் தொடர்பு கொண்டு நலம் பெறுவது சிறந்த எழுத்தாளரின் கடமை.

இயல்பாக ஒரு கட்டுரையாளர் பயன்படுத்தும் சொற்கள் தேவையில்லாமல் சிலரைப் புண்படுத்துகின்றன. தனிப்பட்டவர்களைப் பற்றியும் குறிப்பிட்ட இனங்களைப் பற்றியும் எழுதும்போது மிக எச்சரிக்கையாக எழுத வேண்டியிருக்கிறது. இதழ்களில் சுருக்கமான கட்டுரை எழுதிப் பழகுவது நல்ல பயிற்சியாக இருக்கும்.

இதழ்களில் வெளியான கட்டுரைகளை நூலாக்கும்போது தகுந்த திருத்தங்களைச் செய்து சரிபார்த்து அச்சுக்குக் கொடுக்க வேண்டும். ஆனால் பல எழுத்தாளர்கள் இவற்றைப் பற்றிச் சிறிதும் கவலைப்படுவதில்லை. அவர்களிடத்தில் ஈடுபாடுள்ள, ஆனால் பதிப்புத்துறையில் சிறிதும் பயிற்சியில்லாத சிலர் ஏற்கெனவே வெளிவந்த கட்டுரைகளை வெட்டி, தாள்களில் ஒட்டி அச்சகத்தில் கொடுத்து விடுகிறார்கள். இதனால் நூல் வெளியீட்டுத் துறையில் ஏற்படும் குறைபாடுகள் சொல்லும் தரமன்று.

இத்தகைய கட்டுரைகள் அவசர அவசரமாக அந்தந்த இதழுக்கு எழுதப்பட்டன. பிறகு தொகுத்து நூலாக்கும்போது பெரும்பாலும் மாறுதல் இல்லாமலும், நூலுக்கு வேண்டியவாறு திருத்தம்—செப்பம் செய்யப்படாமலும் வெளியிடுவது தவறு. இவ் வகையில் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவருடைய நாவல்களை நூலாக்கியபோது, கல்கி இதழில் வெளிவந்தவாறே அச்சிடாமல் சில நிகழ்ச்சிகளைகளைச் சுருக்கியும் சில பகுதிகளைக் கைவிட்டும் உருவாக்கியிருந்தார் என்பதையும் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

## வட்டார வழக்குகள்

படிக்கும் பழக்கத்தைப் பொதுமக்களிடம் வளர்த்தது பத்திரிகை இயக்கமே என்று தங்குதடையின்றிச் சொல்லலாம். இதன் பயனாக, நூல்கள் வெளியீடு பெருக்கம் கண்டது. நூலகங் களும் எங்கும் நிறுவப்படலாயின.

ஆனந்த விகடன் இதழில் தஞ்சை மாவட்டத்துச் சிறு நிலக் கிழார்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு, கலைக் கண்ணோடு நுகர்ந்து பல நிகழ்ச்சிகளை எழுத்தாளர்கள் தங்கள் படைப்புக்களில் தஞ்சைப் பேச்சுமொழியில் படம் பிடித்துக்காட்டி னார்கள். இதைத் தொடர்ந்து திருநெல்வேலிக் காரர்களும் ஏனைய மாவட்டத்தாரும் தங்கள் தங்கள் கைவரிசையைக் காட்டினார்கள். இதன் பயனாய் வட்டார வழக்கு, தமிழ் நூல்களில் இடம் பெறலாயிற்று.

வட்டார வழக்கு நிறைந்த நாவல்களில் ஆர். சண்முகசுந்தரம் எழுதிய அறுவடை, சட்டி சுட்டது என்பன கோவை மாவட்டத்துக் கவுண்டர்களின் வாழ்க்கையை நம் கண் எதிரே நிறுத்தும் கலைச் செல்வங்களாக விளங்குகின்றன. இவ்வாறே சி. சு. செல்லப்பா எழுதிய வாடிவாசல் எனும் நூலில் மதுரை மாவட்ட மறவர் வாழ்வு ஊடும் பாவுமாக உள்ளது.

நீல பத்மநாபனின் **தலைமுறைகள்** நாஞ்சில் நாட்டு இரணியல் செட்டியார்களைப் பற்றியது.

பூவை ஆறுமுகம் படைத்த **தங்கச் சம்பா** தஞ்சை மாவட்ட வாழ்வைப் புதிய கோணத்தில் காட்டுகிறது.

ஹெப்சிபா ஜேசுதாசன் எழுதிய **புத்தம் வீடு** தென் கேரளத் திலும் நாஞ்சில் நாட்டிலும் கிறிஸ்தவக் குடும்பங்களில் பனையேறிகளைப் பற்றியது. இந்நூலும் சுந்தர ராமசாமியின் **புளிய**

மரத்தின் கதையும் இதழ்களில் வெளிவரவில்லை. ஆனால் நாவல்களைப் படிக்கும் பசியை இதழ்கள் உண்டாக்கி, வட்டாரச் செய்திகளைப் பின்னணியாகக் கொண்டு வெளியிட்ட சூழ்நிலையில் இவை உருவாயின.

## தமிழ் நூல்கள்

பத்திரிகை என்ற அமைப்பின் காரணமாகத் தான் இன்று தமிழில் ஏராளமான நூல்களையும் பலபொருள் நூல்களையும் காண்கிறோம்.

ஜெகவீர பாண்டியனார் மாத இதழ் தொடங்கியிராவிட்டால் திருக்குறள் குமரேச வெண்பா வெளிவந்திராது. அவர்களுடைய 'புலவர் உலகம்' என்னும் இதழ் மூலம் 'கம்பன் கலை நிலை' என்ற இலக்கிய ஆய்வுரை வெளிவந்தது. குமரனிலும் ஆனந்த போதினியிலும் சேதுப்பிள்ளையவர்கள் எழுதிய கட்டுரைகள் 'ஆனந்த குமரன்' என்ற பெயரில் வந்தன.

மறைமலையடிகளாரின் நூல்கள் பல, 'ஞானசாகரம்' இதழில் அவர் எழுதியவற்றின் தொகுப்பே.

பழந்தமிழ் இலக்கியங்களில் புதைந்து கிடக்கும் அரிய கருத்துக்களை யெல்லாம் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை, ரசிக மணி டி. கே. சி. போன்ற பலரும் கல்லி எழுத்து ஒளிவிடச் செய்தது 'கல்கி' இதழ்.

டாக்டர் மு. வ. அவர்களுடைய பாவை என்னும் நாவல் லோகோபகாரியிலும் அந்த நாள் என்னும் நூல் தமிழ் முரசு இதழிலும் வெளிவந்தன. தமிழ் முரசு, செங்கோல் போன்ற ஏடுகள் கைவசமிருந்த காரணத்தாலேயே சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களால் இந்த அளவுக்கு எழுதிக் குவிக்க முடிந்தது.

வ. திருவரங்கம் பிள்ளை அவர்கள் 'செந்தமிழ்க் களஞ்சியம்' என்ற திங்கள் இதழை வெளியிட்டு மறைமலையடிகளாருக்கு மாதம் ரூபாய் 100/- கொடுத்து எழுதச் சொன்னார்கள். அதன் விளைவே மறைமலை அடிகளாரின் 'திருவாசக விரிவுரை'.

செந்துறை முத்து என்னும் ஓர் எழுத்தாளர் பத்திரிகைகளில் எழுதியதைத் தொகுத்து 100 நூல்களாக வெளியிட்டுள்ளார்.

கவியரசர் பாரதியாரைப் பற்றி அறிய உதவும் 'பாரதி தமிழ்' என்ற பெருநூலைப் பெரியசாமித்தூரன் அவர்கள் பழைய இதழ்களைக் கொண்டே தொகுத்துள்ளார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்சி இதழ்கள் மூலம் நூலாசிரியர் ஆனவர் நூற்றுக்கு மேற்பட்டவர் ஆவர்.

தமிழில் வெளிவந்திருக்கும் பயண நூல்கள், வாழ்க்கை வரலாற்று நூல்கள் யாவுமே பத்திரிகையில் வெளிவந்தவையே.

என் கருத்தில் தமிழில் வெளிவந்துள்ள நூல்களில் பாதிக்கும் மேற்பட்ட நூல்கள் பத்திரிகைகளால் தான் வெளிவந்திருக்கின்றன. இந்த இயக்கம் இல்லாவிட்டால் அவை வெளிவந்திரா.

## தமிழ் நூல்களின் விற்பனை

சராசரித் தமிழனால் நூல்கள், இதழ்கள் படிப்பதற்கு ஒரு மாதத்திற்கு ரூ. 30 முதல் ரூ. 35 வரைதான் செலவிட முடியும். இந்தப் பணம் முழுவதும் பலவகையான இதழ்கள் வாங்குவதற்கே செலவாகி விடுகிறது. அதனால் அவர்களிடம் நூல்கள் வாங்கு வதற்கு மேற்கொண்டு பணம் இல்லை. மேலும், இந்த இதழ்களைப் படித்த அளவில் அவர்களுடைய அறிவுப் பசி அடங்கிவிடுகிறது. வார இதழ்களில் வரும் தொடர்கதைகளையும் கட்டுரைகளையும் பைண்டு செய்து வைத்துக்கொள்கிறார்கள். அதுவே அவர்களுடைய புத்தகம் ஆகிவிடுகிறது. அத்தகைய தொகுப்புகளே அவர் களுடைய நூலகம்.

பல நூறாயிரம் விற்பனையாகும் இதழ்கள், தங்கள் பெரு வருவாயில் ஒரு பகுதியைச் செலவிட்டு, தரமான நூல்களை வெளியிடலாம். விற்பனை செய்வதற்கு நல்ல ஏற்பாடும் கட்டுக்கோப்பான நிறுவனமும் இருந்தால், தமிழ் இதழ்கள் அமெரிக்காவில் READERS DIGEST வெளியிடுவதுபோலச் சில தமிழ் நூல்களை வெளியிட அல்லது மீண்டும் அச்சிட, நூல் வெளியீட்டுத்துறையை ஏற்படுத்த வேண்டும். இந்த வகையில் 'ராணிமுத்து' ஏற்பாடு பின்பற்றத் தக்கது.

'தினமணி' அலுவலக வெளியீடுகளான ராஜாஜி எழுதிய 'வியாசர் விருந்து'ம் மகாபாரதமும், ஆசிரியர் ஏ. என். சிவராமன் எழுதிய பொருளாதார நூல்களும் பல்லாயிரம் நூல்கள் விற்பனை

யாகியுள்ளன. காகித வசதியும், அச்சு வசதியும் அடக்கவிலே, மலிவாக அமைந்ததும், பரவலான விற்பனை அமைப்பு இருந்ததும் இதற்குக் காரணங்களாகும்.

## நூல் மதிப்புரை

தமிழ் இதழ்களில் நூல் மதிப்புரைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. அவை, புத்தக மதிப்புரை என்ற ஒரு பகுதியைத் தொடர்ந்து வைத்திருப்பதற்குக் காரணமே வெளியீட்டகங்களிடமிருந்து அன்பளிப்பாகப் புதிய நூல்களைப் பெற்று ஒரு நூலகத்தை உருவாக்கிக் கொள்ளலாம் என்பதே.

பல இதழ்களில் எத்துணையோ மாதங்களுக்குப் பின்னர் நூல் மதிப்புரை வெளிவருகிறது. அந்த அளவிலாவது செய்கிறார்களே என்று நாம் மன நிறைவு அடைய வேண்டும்.

ஆங்கில இதழ்கள், தமிழ் நூல்களை மதிப்புரை செய்வதைப் புறக்கணிக்கின்றன. வங்கமொழி நூல்களைப் பொறுத்தவரை இதற்கு முற்றிலும் மாறுபட்ட நிலையைக் கல்கத்தாவில் வெளிவரும் ஆங்கிலத்தாள்களில் பார்க்கிறோம்.

முன்னர் தென்மொழிகள் புத்தகக் கழகம், **புத்தக நண்பன்** என்ற பெயரில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஓர் இதழை வெளியிட்டது. அதில் புத்தகத்துறைச் செய்திகளும், புதிய புத்தகங்களைப் பற்றிய விளக்கங்களும் இருந்தன. ஆதரவு இல்லாததால் அந்த இதழைத் தென் மொழிகள் புத்தகக் கழகம் கைவிட்டது.

இந்தப் பணியை இப்போது 'நூலகம்' என்னும் இதழ் மட்டுமே செய்து வருகிறது.

புது நூல்களுக்கு மதிப்புரை எழுதுவதில் 'கல்கி' ஆர்வம் காட்டினார். ஜி. டி. நாயுடு எழுதிய 'நான் கண்ட உலகம்' என்ற நூலைப்பற்றி அவர் ஒரு தலையங்கமே எழுதிவிட்டார்.

அத்தி பூத்தாற்போல்தான் குமுதத்தில் புத்தக மதிப்புரை வரும். அவர்கள் கருத்தாக எதையும் தெரிவிக்காமல் நூலிலிருந்து சில பகுதிகளை மட்டும் அச்சிட்டு விடுவது 'குமுதம்' பாணி.

## தரக்குறைவு

சமீப காலத்தில் சில பிரபல தமிழ்ப் பத்திரிகைகள் 'நியூவேவ்' பாணியில் தரக்குறைவான கதைகளும் படங்களும் வெளியிட்டு நம்

பண்பாட்டுக்கும் இலக்கியத் தரத்திற்கும் பெரும் கேடு விளைவித்து வருகின்றன. இத்தகைய கதைகளை சில ஆண் எழுத்தாளர்கள் பெண்கள் பெயரைத் தாங்கி எழுதுகிறார்கள். இதனால் நம் பெண்ணினத்தின் கௌரவத்திற்கும் பெரும் கேடு விளைகிறது. இப் போக்கைக் கண்டிக்க திரு. நாரண துரைக்கண்ணன் அவர்கள் தலைமையில் தமிழ் வாசகர் சங்கம் மேற்கொண்டிருக்கும் முயற்சி களுக்கு மக்கள் பெரிய அளவில் ஆதரவு தரவேண்டும்.

## எழுத்தாளர்கள்

தமிழ் நாட்டிற்கு வெளியே மலேசியாவிலும் ஸ்ரீலங்காவிலும் வட இந்தியாவிலும் தமிழ் ஆர்வமுள்ள எழுத்தாளர் பலர் இருக் கிறார்கள்.

இன்னும் கேரளத்திலும் ஆந்திராவிலும் நன்றாக எழுதும் தகுதி படைத்த பலர் இருக்கிறார்கள்.

அண்மையில் மைசூருக்குச் சென்றிருந்தபோது அங்குள்ள Central Institute of Indian Languages என்ற சிறந்த அமைப்பிற்குப் போயிருந்தேன். பிறமொழியாளர்களான ஆசிரியர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் அந்தப் பேராசிரியர்கள் தமிழ் நாட்டு இதழ்களில் தங்கள் எழுத்துக்கள் இடம் பெறுவதில்லை என்று குறைப்படுகிறார்கள்.

## பழைய தொகுப்புக்கள்

தமிழ் இதழ்களின் பழைய தொகுப்புக்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. அவற்றைப் பேணுவதற்கென்று தனி நூலகம் வேண்டும்.

வெளி நாடுகளில் வெளியிடப்படும் எல்லாத் தமிழ் இதழ்களையும் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வரவழைக்க வேண்டும்.

## 'ஸ்டைல்புக்'

தமிழ் இதழ்களுக்கு ஒரு Style Book (கையேடு) வேண்டும்.

## பெயர்க் குறிப்பு அகராதி

இலண்டன் Times பத்திரிகை அதில் வெளிவரும் ஒவ்வொரு செய்திக்கும் கட்டுரைக்கும் ஒரு பெயர்க் குறிப்பு அகராதி வெளி யிடுகிறது. இதுபோல Index to Tamil Periodical Literature

ஆண்டுதோறும் வெளிவந்தால் உரிய இதழில் சம்மந்தப்பட்ட கட்டுரையைப் புரட்டிப் பார்க்க ஆராய்ச்சியாளர்களுக்கும், அரசினர்களுக்கும்கூட அது பயன்படும்.

## பத்திரிகை இயல் பயிற்சி

பத்திரிகை இயல் அல்லது இதழ் இயல் (Journalism) வகுப்பை ஏதாவது ஒரு பல்கலைக் கழகம் தமிழிலும் நடத்த வேண்டும்.

## ஆராய்ச்சிக்குரிய தலைப்புக்கள்

முதுகலை வகுப்பு மாணவர்களும் ஆராய்ச்சிப் பட்டம்பெற விழைபவர்களும் இந்த முயற்சியை அடுத்து மேலும் ஆராய்வதற்குரிய சில தலைப்புகளைத் தருவேன்.

(1) தமிழ் இதழ்களில் வழிவழியாக மாறிவரும் தமிழ்நடை.

(2) தமிழ் இதழ்களில் திரைப்படங்களின் செல்வாக்கு.

(3) தமிழ் இதழ்களில் மேலைநாட்டு நாகரிகம், இலக்கியம் ஆகியவற்றின் தாக்கம்.

(4) நாளிதழ்களின் நடைக்கும் பருவ இதழ்களின் (Periodicals) நடைக்கும் உள்ள வேறுபாடுகள்.

(5) தமிழ் இதழ்களும் எழுத்துச் சீர்திருத்த முயற்சிகளும்.

## மொழிபெயர்ப்பு

மொழி பெயர்ப்புக் குறித்துப் பயன்தரும் சில கட்டுரைகளைப் பின் இணைப்பாகக் கொடுத்துள்ளேன்.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் காலமானபோது, இந்தியக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள், Periyar E. V. Ramasamy was a colourful personality என்று சொல்லியிருந்தார்கள். இதை ஒவ்வொரு தமிழ்த் தினசரியும் ஒவ்வொரு வகையாக மொழி பெயர்த்து வெளியிட்டது.

பொதுவாக இதுவரை வந்துகொண்டிருந்த தமிழ் அமெரிக்கன் ரிப்போர்ட்டரும் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் சோவியத் நாடு இதழும் நல்ல முறையில் மொழிபெயர்ப்புப் பணி செய்துள்ளன. ஆனால் நம்மில் பலர் மேலுறையைப் பிரிக்காமலேயே இந்த இதழ்களைப் பழைய பத்திரிகைக் கடைக்குப் போட்டு விடுகிறோம்.

# தமிழ் இதழ்களின் விளைவுகள்

தமிழ் இதழ்களினுல் ஏற்பட்ட விளைவுகளைச் சுருக்கமாகச் சொல்லுவேன்.

(1) படிக்கும் பழக்கம் பெருகியிருக்கிறது. பெரும்பகுதியான மக்கள் படிப்பது சிறுகதை, தொடர்கதை, துணுக்குகள்தான்.

(2) தமிழ் உரைநடை ஏற்றம் பெற்றிருக்கிறது.

(3) கவிதை எளிமையாகியிருக்கிறது.

(4) எழுத்தாளர் தொகை பல மடங்காகப் பெருகியிருக்கிறது. எதைப்பற்றியும் தமிழில் எழுத முடியும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. எத்துறையைப் பற்றியும் சுவையாயும் இனிமையாயும் எழுதினுல் படிப்பவர்களை ஈர்க்கலாம் என்பது உறுதியாகிவிட்டது. தொடர்ந்து பத்திரிகை படிக்கும் வாசகருடைய எழுத்தில் அந்த மொழி நடை ஓரளவு நிலைபேறு பெறுகின்றது.

(5) இலக்கிய வகைகளில் சிறுகதை என்ற பிரிவே வாசகர் தொகையைப் பன்மடங்கு ஆக்கிற்று. படிக்க எளிதாகவும், விரைந்து படித்து முடித்துவிட வசதியாகவும் இருப்பதால் வார மாத இதழ்களுக்குச் சிறுகதை இன்றியமையாததாகி விட்டது. சிறு கதைப் போட்டி என்று விளம்பரப்படுத்தி விட்டால் எழுத்துப்பயிற்சி பெற முனைபவர் பலரும் கருத்தாழம் இல்லாவிட்டாலும் தம் கற்பனை, கிண்டல் திறமைகளைக்காட்டத் தயங்குவதில்லை.

(6) வாசகரை இழுப்பதையே பத்திரிகைகள் தங்களுடைய நோக்கமாகக் கொண்டுள்ளன. திருத்துவது அன்று! அவற்றின் குறிக்கோள் விற்பனையைப் பெருக்குவது அதாவது லட்சம் மட்டுமே. லட்சியமன்று. தின்றதையே தின்று தெவிட்டக்கூடிய நிலையில் கதைகளையே வெளியிடுகின்றனர்.

அறிவுக்கு வேலையில்லை. உணர்ச்சியை ஊட்டுவதற்குத் தான் எங்கள் ஏடு என்ற கருத்தோடு படங்கள் நிறைந்த பத்திரிகை,

தமிழில் இன்று வெளிவரும் நாள் இதழ்கள் சிலவற்றிலிருந்து ஆசிரியர் குறிப்புக்களை இங்கே தருவோம். முதல் குறிப்பு, "தினமணி"யிலிருந்து எடுக்கப்பட்டது. இது பல்லாயிரம் தமிழ் மக்களால் நாள்தோறும் படிக்கப்படும் இதழ். இப்பகுதியிலிருந்து, "தினமணி"யின் தமிழ் நடையை ஓரளவு அறியலாம்.

**தினமணி 21—11—51**

## மணிக் குண்டு

மணியை அறிவிக்கும் குண்டு சுடுவது சென்னை நகரில் நெடுநாளைய பழக்கம். அதைச் சுட்ட பீரங்கிக்கும் கிராக்கி வரவே யுத்த காலத்தில் அது நின்று விட்டது. பகீரத முயற்சி செய்து ஒரு பீரங்கியை இப்போது வரவழைத்துள்ளனர். விரைவில் மணிக் குண்டு போடுவார்கள் என்று தெரிகிறது. பழக்கத்தைப் புதுப்பிக்கையில், நெடுநாள் இருந்தது போல இரவு எட்டு மணிக்குப் போடுவதுதான் மிகச் சிறந்ததாயிருக்கும். இடைக்காலத்தில் தோன்றிய 4-மணிக் குண்டு ஏற்பாடு அவ்வளவு சிறந்ததல்ல. வேலைக் கால இரைச்சலில் நகரின் பல பகுதிகளில் அது கேட்கவே இல்லை. இரவில் எட்டு மணிக்குப் போடுவதால் பலவகை அனுகூலமுண்டு. கடற்கரையில் இருப்பவர்களும் கடிகாரம் இல்லாத மற்றவர்களும் காலாகாலத்தில் வீடு திரும்பவேண்டும் என்ற எச்சரிக்கையாகவும் இருக்கும். தவிர முன்னெல்லாம் நகரில் சம்பிரதாயமாக குண்டு சப்தம் கேட்டுத்தான் இராச் சாப்பாட்டுக்குப் போவார்கள்; அதனால்தான் "தண்ட சோற்று ராமா, குண்டு போட்டு வாடா" என்ற பழமொழிகூட வந்தது என்று நினைக்கிறோம். அதை மதித்தாவது எட்டு மணிக்குண்டாக வைத்துக் கொள்ளலாமே?

அடுத்த குறிப்பு, "தமிழ் நாடு" என்னும் நாள் இதழிலிருந்து எடுக்கப்பட்டது. இது தமிழ் வளர்த்த மதுரையிலிருந்து 1951 முதல் வெளிவருவது. இவ் இதழில் நல்ல தமிழ்ச் சொற்கள் பயன்படுத்தப் படுவது குறிப்பாகக் கவனிக்கத்தக்கது.

**தமிழ் நாடு 4—3—60**

## அன்னைக்கு அருகதை இல்லையா ?

கல்லூரிப் பாடமொழியாக ஆங்கிலமே தொடர்ந்து இருக்கவேண்டுமென்று கேரளப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு முடிவு செய்துள்ளது. ஆங்கிலம் உலக மொழி என்பதையும், அறிவின் கருவூலமாக அது விளங்குவதையும் யாரும் மறுப்பதற்கில்லை. எனினும், ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர், அதன் வாயிலாகவே உயர்நிலைக் கல்வியறிவைப் பெறவேண்டும் என்னும் வற்புறுத்தல் காரணமற்றதென்பது நடுநிலை நின்று ஆராய்வார்க்கு நன்கு புலனாகும்.

பல்கலைக் கழகப் பாட மொழியாக இருக்க ஆங்கிலமே தகுதியுடையதென்றும், அதன் மூலமே இன்றைய கலை, விஞ்ஞான அறிவைப் பெறமுடியுமெனவும் சிலர் துணிந்து கூறுகின்றனர். இது உண்மையானால், மற்றெல்லோரைக் காட்டிலும் ஆங்கிலேயர்கள் கலை, விஞ்ஞானத் துறைகளில் முன்னேறி இருக்கவேண்டும். ஆனால், நேரடியாக நாம் காண்பதென்ன? ஆங்கிலத்திற்கு மாறாகத் தமது தாய்மொழியில் தொடக்க முதல், பல்கலைக் கழகம் வரை கல்விபெறும் உருசியர்கள் இன்று விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் முன்னணியில் நிற்கின்றனர். மேலும், தமது தாய்மொழியையே பல்கலைக் கழகப் பாட மொழியாகக் கொண்டுள்ள செருமானியர், பிரெஞ்சுக்காரர், இத்தாலியர், சப்பானியர் முதலியோர் ஆங்கிலேயர்க்கு எவ்வகையிலும் தாழ்ந்துவிடவில்லை.

இவற்றினின்றும் பல்கலைக் கழகப் பாடங்களைக் கற்பிக்கத் தாய்மொழியினும் ஆங்கிலமே சிறந்தது என்ற வாதம் அடிப்படை அற்றது என்ற உண்மை தெற்றென விளங்கும்.

ஆயின், பல்வேறு மொழிகள் வழங்கும் பாரதத்தில் ஆங்கிலத்தை அகற்றிவிட்டால் ஒரு மாநிலத்தைச் சேர்ந்த பல்கலைக் கழகங்களில் பயில்வோர், மற்ற பகுதிகளில் கற்றவரோடு கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள முடியுமா என்று சிலர் ஐயுறுகின்றனர். ஆனால், இத்தகைய அச்சத்திற்குச் சிறிதும் காரணமில்லை. ஏனெனில் தாய்மொழி பாடமொழியாயினும், ஆங்கிலம் தொடர்ந்து பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கற்பிக்கப்படும் ஆதலின், அதில் போதிய பயிற்சி பெற்ற பட்டதாரிகளும் அறிஞர்களும் மற்றவர்களுடன் கலந்துரையாடவும், கருத்தைப் பரிமாறிக்கொள்ளவும், உலக வல்லுநர்களின் புதிய சாதனைகளை ஆங்கிலத்தின் வாயிலாகப் படித்துணர்வதிலும் எத்தகைய இடர்ப்பாடும் இருக்காது. எனவே, தாய் மொழிக்கு உரிய இடத்தை இனியும் மறுத்து வருதல் பொருத்தமானதெனத் தோன்றவில்லை.

"தமிழ் நாடு" என்னும் பெயரோடு தமிழில் பத்திரிகை தொடங்கிய டாக்டர் வரதராசலு நாயுடுவின் மொழிப்பணியைப் பற்றி முன்னொரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளோம். வ. ரா. கூறியதுபோல, "பண்டிதர்கள் கூடினால் விளங்காத தமிழ். இங்கிலீஷ் படித்த

தமிழர்கள் கூடினுல் விளங்காத இங்கிலீஷ்—இந்தக் கட்டுப்பாடான குறும்புத் தனத்தை தவிடுபொடியாக்கிய ஏகபோக பாக்கியமும் பாத்தியமும் வரதராசுலு நாயுடு அவர்களுக்கே உரித்தானதாகும். பாமரத் தமிழுக்குப் பெருமையும் பொலிவும் பலமும் உண்டு என்பதை நிலை நாட்டிய புண்ணியத்தை எவரும் நாயுடு அவர்களுடன் பங்குபோட்டுக் கொள்ள முடியாது.''

இதே காலத்தில் ''குடியரசு'' பத்திரிகையை ஈ.வே ரா. தொடங்கினர். இவரது கருத்துக்கள் எதுவாயிருப்பினும், இலக்கியத் தொண்டினை மறைக்கவோ, குறைக்கவோ நாம் விரும்பவில்லை. சாதிக் கொடுமை, மூடபக்தி, தீண்டாமை, வலியார் மெலியாரைத் துன்புறுத்தல், கிளிப்பிள்ளை வேதாந்தம், திண்ணைத் தத்துவம போன்ற பொருள்களைப் பற்றிச் சீர்திருத்தக் கட்டுரைகள் எழுதிய சிறப்பு இவருக்கே உரியது. ஏனையோருள், ''தினமணி'' ஆசிரியர் ஆ. நா. சிவராமன் ''சுதந்திரச் சங்கு'' ஆசிரியர் சங்கு சுப்ரமணியம் ஆகியோருடைய பணியையும் இங்கே நாம் நினைவிற் கொள்ளலாம்.

தமிழகத்துக்கு வெளியே இருந்து வெளிவரும் நாள் இதழ்கள் வீரகேசரி, தினகரன், தமிழ் முரசு, தமிழ் நேசன், ரசிக ரஞ்சினி முதலியன. இவை தமிழ் நாட்டில் வெளியாகும் பல நாளிதழ்களைவிடச் சிறந்த தமிழ் நடையில் வெளிவந்து கொண்டிருப்பது கடல் கடந்த தமிழர்களின் மொழிப்பற்றுக்குச் சான்ருகும். புதிய எழுத்தாளர்களை இவை ஊக்குவிக்கின்றன.

ஏராளமான நாள் இதழ்கள் தமிழில் வெளிவந்துங் கூட அவற்றின் தரம் உயர்ந்ததாக இல்லை. தமிழில் வெளிவரும் எல்லா நாள் இதழ்களையும் படித்தால்கூட ஆங்கிலத்தில் வெளிவரும், ஒரு இதழிலுள்ள செய்திகள்கூடத் தெரிந்துகொள்ள இயலாது. வயிறு புடைக்க விருந்துண்டவன் பங்கீட்டு அரிசியை உண்ண வேண்டிய நிலைதான், ஆங்கில நாள் இதழைப் படித்தவன் தமிழ் நாள் இதழைப் படிக்கும்போது ஏற்படுகிறது. நமக்கு எவ்வளவுதான் தமிழ் மொழி வெறி இருப்பினும் இந்த உண்மையை ஒப்புக்கொண்டேயாக வேண்டும்.

## இலக்கியப் பத்திரிகைகள் :

இலக்கிய இதழ்களுள் மதுரைத் தமிழ்ச் சங்கச் சார்பில் வெளிவரும் செந்தமிழும், சைவ சித்தாந்த சமாஜத்தின் வெளியீடான சித்தாந்தமும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. செந்தமிழின் முதற் பதினைந்து தொகுதிகளில் மு. ரா. கந்தசாமிக் கவிராயர், ரா. இராகவ ஐயங்கார், து. அ. கோபிநாத ராவ், வெ. ப. சுப்பிரமணிய முதலியார், மகா வித்துவான் கணேசய்யர் ஆகியோரது ஆராய்ச்சிக் கட்டுரைகள் உள.

கரந்தைத் தமிழ்ச் சங்கம் நடத்திவரும் தமிழ்ப் பொழில் 'பொழிற் ருெண்டர்' என்ற பெயரில் சிறந்த ஆராய்ச்சியாளரும் ஞானியாரடி

களின் மாணவருமான க. வெள்ளைவாரணர் எழுதும் இலக்கியக் கட்டுரைகளையும் வேறு பலர் எழுதும் சொல்லாராய்ச்சிக் கட்டுரை களையும் நல்ல தமிழில் வெளியிட்டு வருகிறது. திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நடத்திவரும் 'செந்தமிழ்ச் செல்வி' தமிழ்ப் புலவர் பலரின் கட்டுரைகளுடன் திங்கள்தோறும் தோன்றி வருகிறது.

கோயம்புத்தூரிலிருந்து வெளிவரும் கலைக்கதிர் என்ற திங்கள் ஏடு அறிவியல் கட்டுரைகளைப் பெற்றுச் சிறப்பாக அமைந்துள்ளது. தமிழார்வம் மிக்க கல்லூரி மாணவர்களின் மனத்தைக் கவரும் பண்புடன் தெள்ளிய தமிழ் நடையில் 'கலைக்கதிர்' வெளிவருகிறது. புதிய நூல்களைப் பகுதி பகுதியாக வெளியிடுவதும் இந்த இதழின் சிறப்பு.

வார இதழ்களும் தமிழில் மிகுதியாக வெளிவருகின்றன; இவை தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்றுள்ளன. எனினும் "ஆத்துக்கு", "அமக்களம்", "தண்ணி" "நேத்து" என்ற சொற்களையும், அப்போது என்பதை 'அப்ப' என்றும் பெண் பிள்ளை என்பதை 'பொம்புளப் பிள்ளை என்றும் எழுதும் இதழ்களும் உள. இந்த நிலை இப்போது சிறிது சிறிதாக மாறி வருகிறது.

வடசொற்களையும் கொச்சையான நடையையும் பயன்படுத்தும் தமிழ் இதழ்களுக்கு, மகாத்மா காந்தியடிகளை விடச் சிறந்த வழி காட்டியை நாம் குறிப்பிட இயலாது. அவர் நடத்திய 'நவஜீவன்' வாயிலாக இத்தகைய போக்குக்களைத் தடை செய்ய அவர் முயன்றார் குஜராத்தி மொழியில் தாம் எழுதிய அனைத்திலும், தூய நடையையே அடிகள் கையாண்டார் என்பதையும் இங்கே தெரிவிக்க விரும்பு கிறோம்.*

இலக்கிய நலன் ஆய்தல் பற்றிய இதழ் ஒன்று தமிழ் நாட்டில் 1928-இல் தோன்றி, சில ஆண்டுகள் மட்டும் வெளிவந்து பின்னர் நின்றுவிட்டது. இச்சிறந்த இதழ் "கலா நிலையம்" என்ற பெயருடன் சேஷாத்திரி என்பவரால் வெளியிடப்பெற்றது. இவ் இதழ் கம்ப ராமாயணக் கட்டுரைகளையும், நைடதம், மதங்க சூளாமணி உரை களையும் தாங்கி வாரந்தோறும் இலக்கியப் பணி புரிந்து வந்தது. மறைந்துபோன இதழ்களுள் மேலும் குறிப்பிடத் தக்கவை: யாழ்ப் பாணத்துக் கலா நிலையத்தார் வெளியிட்ட "ஞாயிறு" வை. கோவிந்தன் நடத்திய "சக்தி" ஆகியவை.

---

* In this connection, Mahatma Gandhi's services to Gujarathi literature must not be overlooked. He wrote chaste Gujarati in all his works, especially NAVAJIVAN and thus indirectly discouraged, though partially, the modern trend of writers to use Sanskrit words copiously — A. M. P. Karai, Asst. Ed., Bombay Chronicle in SOUTH INDIAN JOURNALIST, Special annual Number Nov. 1952.

"நல்வழி" என்னும் உடல்நலக் குறிப்புக்கள் அடங்கிய இதழும் வெளிவந்து கொண்டிருக்கின்றது. "பிரசண்ட விகடன்" வாயிலாக நாரண. துரைக்கண்ணன் எழுதும் கட்டுரைகள் தமிழ் மக்களால் பெரிதும் படிக்கப்பட்டு வருகின்றன.

"பொன்னி" என்னும் இதழ் தனித் தமிழில் சில காலம் வெளி வந்தது. பின்னர் இந்த இதழில் வெளிவந்த எழுத்தாளர் பேட்டி சிறப்பாக அமைந்திருந்தது. தனித் தமிழ் இயக்கம்பற்றி இந்த இதழில் பல அறிஞர்கள் சில ஆண்டுகளுக்கு முன் எழுதினர்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழகேசரி கணேசய்யர் அவர்களுடைய அகநானூற்று உரையை வெளியிட்டிருக்கிறது. இலக்கியக் கட்டுரைகளும், செய்திகளும், நூல் மதிப்புரைகளும், எழுத்தாளர் வரலாறுகளும் ஈழ நாடு இதழில் வாரந்தோறும் வெளிவருகின்றன.

தமிழ்மொழிப் பணி செய்யும் ஆங்கில இதழ்களையும் இங்கே குறிப்பிட வேண்டும். பேரறிஞர் J. M. நல்லசாமிப் பிள்ளை அவர்களை ஆசிரியராகக்கொண்ட சித்தாந்த தீபிகை என்னும் இதழ் அரிய தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தும், தமிழரது மொழி இலக்கணம் சமயம் தத்துவம் பற்றிக் கட்டுரைகள் வெளியிட்டும் பல ஆண்டுகள் தொண்டாற்றிற்று. இப்போது இலக்கியம், தமிழர் வரலாறு ஆகிய துறைகளைப் பற்றிய அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் 'Tamil Culture' என்னும் ஆங்கில இதழ் சென்னையிலிருந்து வெளிவருகிறது; இவ்வகையில் தனிநாயக அடிகளார், திரு. சுப்பையா ஆகியோரது பணி போற்றற்குரியது; தமிழர் அனைவரும் அவர்களது முயற்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் தருவார்களாக.

"பூஞ்சோலை" என்னும் சிறுவர் இதழ் இலக்கணப் பிழை இல்லாத எளிய நடையில் சிந்தனைக்குச் சிறந்த விருந்தெனப் புகழ்பெற்ற கட்டுரைகளுடன் வெளிவந்தது.

சென்னையிலிருந்து வெளிவரும் "தாருல் இஸ்லாம்" என்ற பத்திரிகை முஸ்லிம் அறிஞர்களால் வெளியிடப்பட்டு வருகிறது. இவ் இதழில் முஸ்லிம் சமயம் பற்றிய செய்திகள் மட்டுமன்றி, அரசியல் பொருளாதாரச் செய்திகளும் இடம் பெறுகின்றன. இதன் ஆசிரியர் தாவுத்ஷாவும் இவரது மகன் அப்துல் ஜாபரும் தமிழ்ப் பற்று மிக்கவர்கள். 'சௌபாக்கியம்' ஆண்டு மலர் சிறந்த கட்டுரைகளுடன் செந்தமிழ் நடையில் மகளிர்க்காக வெளிவருகிறது.

ஸ்ரீ லங்கா என்ற மாத இதழ் இலங்கை அரசாங்கச் செய்திப் பகுதியினராலும் கிராம நலம் சென்னை அரசாங்கத்தாராலும் செந்தமிழில் வெளியிடப்பட்டு வருகின்றன; இவ் இதழ்களில் இலக்கியச் சார்புடைய கட்டுரைகளும் இடம் பெறுகின்றன.

ஒரு மொழியின் வளர்ச்சி அம்மொழியிலுள்ள சொல் வளத்தைப் பொறுத்தது. சொல்வளம் இருப்பதுமட்டும் போதியதாகாது; அச்

சொற்களைப் பல்லாயிரவர் அறிந்திருத்தலும் இன்றியமையாதது. இதையொட்டியே ரீடர்ஸ் டைஜஸ்ட் போன்ற ஆங்கில மொழி இதழ்களில் Increase Your Word-Power என்ற பகுதி வெளிவருகிறது. தமிழ் இதழ்களிலும் இத்தகைய பகுதி ஒன்று இருந்தால், அரிய சொற்களைப் பலரும் அறிய உதவியாக இருக்கும்.

தமிழ் மொழித் துறையில் அவ்வப்போது ஏற்படும் மாறுதல்களைத் தெரிவிக்கும் இதழ் தமிழில் இல்லாதது ஒரு குறையாகும். ஆங்கிலத்தில் இத்தகைய இதழ்கள் மிகுதியாக உள்ளன. இந்தியன் பி.இ என்.'' * (Indian P.E N.) என்ற பெயருடன் உலக எழுத்தாளர் குழுவின் இந்தியக் கிளை, மொழித்துறை நிகழ்ச்சிகளைத் ஒரு திங்கள் இதழில் வெளியிட்டு வருகிறது. "ஆந்திர சாஹித்ய பரிஷத்"தும் "பரிஷத் பத்ரிகா'' ஒன்றை வெளியிட்டு வருகிறது. தமிழ் மொழியிலும் இத்தகைய வெளியீடு இன்றியமையாதது.

எழுதி முடித்து, ஆனால் வெளிவராதிருக்கும் நூல்களைப் பகுதி பகுதியாகத் தம் இதழ்களில் அச்சிடும் திங்கள் இதழ்களும் தமிழ் மொழியில் தோன்றுதல் வேண்டும்.

"Books of the Month and Books to Come" என்பது போன்ற திங்கள் இதழ்கள் ஆங்கில மொழியில் வெளிவருகின்றன. வெளிவர விருக்கும் நூல்களைப் பற்றிய செய்திகளை இவ்விதழ்கள் முன்கூட்டித் தருகின்றன. மக்களின் வாழ்க்கை, எண்ணங்கள்—இவை இலக்கி யத்தில் எவ்வாறு இடம் பெறுகின்றன என்பதையும் இந்த இதழ்களின் வாயிலாக அறியலாம் ஒவ்வொரு திங்களிலும் பலப்பல துறைகளில் வெளியாகும் நூல்களைப் பற்றிய குறிப்புக்கள் இந்த ஏட்டில் உள்ளன. நூல் மதிப்புரைகளையும் காணலாம். நூலை உருவாக்கும் ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர், விற்பவர் ஆகியோருடைய அலுவல்களைப் பற்றியும் இவற்றின் வாயிலாக அறியலாம். புகழ்பெற்ற எழுத்தாளர்கள்,

---

* P.E.N.—Poets, Philosophers
Editors, Essayists
Novelists, Newspapermen.

பி.இ.என். என்னும் எழுத்துக்கள் கவிஞர்கள், தத்துவ ஞானிகள், இதழ் ஆசிரியர்கள், கட்டுரையாளர்கள், நாவல் எழுதுவோர், செய்தித் தாளில் பணியாற்று பவர்கள் ஆகியோரைக் குறிப்பிடுவது ஆகும். எனினும் இலக்கியத் துறையில் பணி யாற்றும் எழுத்தாளர் அனைவரும் இக் குழுவின் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப் படுகின்றனர். மொழி பெயர்ப்பாளர்களும் இக்குழுவில் உள்ளனர். இது 1921-இல் தொடங்கப்பெற்றது. இலக்கிய நலங் கருதிப் பல நாடுகளிடையே நல்லுறவை நிலை நாட்டவும், பேச்சு—எழுத்து உரிமைகளைக் காக்கவும் இக் குழு பாடுபடுகிறது. அரசியற் கிளர்ச்சியில் "பி.இ.என்.'' ஈடுபடுவதில்லை. பிறநாட்டு எழுத்தாளர்களுடன் நட்புக் கொள்வது, இக்குழுவின் உறுப்பினராயிருந்தால் எளிதாகும்.

நூல் மதிப்புரை எழுதுவோர் ஆகியோரின் வாழ்க்கை வரலாறு, சிறப்பியல்புகள் பற்றிய சிறு கட்டுரைகளும் இந்த இதழ்களில் வெளிவருவதுண்டு. இந்த அடிப்படையில் தென்னிந்திய மொழிகளைப்பற்றி Book News என்னும் இதழ் 1958 முதல் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது.

அமெரிக்காவில் தலைசிறந்த நூலாசிரியர்களாக விளங்கும் ஜான் கந்தர், வால்டர் டுராண்டி, வர்ஜினியா கௌலிஸ், வின்சண்ட ஷியன் ஆகியோரெல்லாம் செய்தி இதழ்களுடன் தொடர்பு கொண்டவர்களே என்பதை இங்கே தெரிவிப்பது பொருந்தும். இத்தாலியில் நாள் இதழ்களில் மூன்றும் பக்கத்தில் ஓரளவு இலக்கிய நடையில் கட்டுரைகள் வெளிவருவதையும் இங்குக் குறிப்பிடலாம். இதைப்பற்றி பி. எம். பாசினெட்டி என்ற புகழ்பெற்ற இத்தாலிய எழுத்தாளர் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருப்பதையும் கீழே தந்திருக்கிறோம்.*

தென் அமெரிக்க நாடுகளில், எழுதப் படிக்கத் தெரிந்தவர் தொகை கூடுவதற்கு, நாள் இதழ்கள் மிக்க உதவி செய்துள்ளன. 4, 5 மாதங்களுக்கு, எளிய முறையில் எழுத்துக்களையும் பாடல்களையும் அச்சிட்டு கல்வி வளரத் துணைபுரிந்தன. இதுபோல, தமிழ் இதழ்களும் செய்யலாம்.

செய்தி இதழ்களில் ஈடுபட்டிருப்பவர்கள் மன உறுதி கொள்வார்களானால் தமிழ் மொழி மேன்மேலும் வளருவதற்கு அவர்கள் பேருதவியாக இருக்கலாம். ஏனெனில், "பொன்னி" எழுத்தாளர் பேட்டியில் கல்வி கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்டதுபோல:

> இந்தியாவில் தமிழ்ப் பத்திரிகைகளுக்குச் செல்வாக்கு மிகுதி. மற்ற பத்திரிகைகளைவிட நம் தமிழ்ப் பத்திரிகைகளின் வாசகர்கள் மிகப்பலர். வங்காளத்தில் அதிக வினியோகமுள்ளனவாகக் கொள்ளப்படும் "ஆனந்த பசார்", "யுகாந்தர்" ஆகிய சில பத்திரிகைகளே உள்ளன. வங்கநாட்டைக் காட்டிலும் தமிழ்நாட்டில் மக்கள் தொகை குறைவாக இருந்தும்கூடப் பல பத்திரிகைகள் அங்கிலையை எய்தி உள்ளன. இவை தணிக்கைக் கணக்குகளிலிருந்து நன்ருக வெளியாகியிருக்கின்றன. பத்திரிகை

---

* The "third page" of the daily newspapers is traditionaly devoted to literary articles and travel pieces..........Italian writers don't live on their books, and they must depend on newspapers and on periodicals that pay, when they don't depend on film—scripts. These articles are a kind of half—literary, half—personal essays; there are writers who keep a sort of public diary.

—*P. M. Pasinetti in his articls*
THE INCREDIBLE ITALIANS.

உலகுக்கும் இப்போதைக் காட்டிலும் நல்ல எதிர் காலம் இனி உண்டு. தமிழ் நாட்டில் புதிய பத்திரிகைகள் போட்டிக்கு வந்து முன்னேறியும், பழைய பத்திரிகைகளின் வளர்ச்சி தடைபடவில்லை. வாசகர்கள் தொகை அந்த அளவுக்குப் பெருகி வருகிறது.

'நவமணி' என்னும் புதிய நாள் வெளியீட்டின் முதல் இதழில் (10—9—1960) இல் கி. வா. ஜகந்நாதன் எழுதியிருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

இன்று சங்கம் இல்லை மன்னர்கள் இல்லை. தமிழை வளர்க்கப் பத்திரிகைகள் இருக்கின்றன. அரசாங்கமும் வளர்க்க முன் வந்திருக்கிறது. ஆனால், அது நின்று நிதானமாகத்தான் வேலைசெய்யும். பத்திரிகைகளோ அருவி வேகத்தில் வேலை செய்கின்றன.

ஆகவே தமிழை வளர்க்கும் பொறுப்பைப் பத்திரிகைகள் இன்று மேற்கொண்டிருக்கின்றன. புது வெள்ளம் வரும்போது அதில் எல்லாம் வரும்; தெளிந்த பிறகுதான் நீர் நல்லது என்று சொல்ல இயலும். இது வரையில் எதையும் விரைவிலே சொல்லி விட வேண்டும் என்று பத்திரிகைகள் போட்டி போட்டன. உரைநடையில் எழுதும் பழக்கமும், வாசிக்கும் பழக்கமும் வந்துவிட்டன. இனிப் போகப் போவதில்லை.

இனிமேல் உரைநடையில் இலக்கியங்கள் உருவாக வேண்டும். அதற்கு ஏற்றவகையில் பத்திரிகைகள் சிந்தித்து ஆவன செய்யவேண்டும். சங்கம் வளர்த்த தமிழை, இந்தக் கால முறைப்படி வெவ்வேறு துறைகளில் பத்திரிகைகள் வளர்க்க வேண்டும். இப்போது வளர்ந்தது போதாது; பரப்பும் ஆழமும் ஒருங்கே அமைந்து வளர வேண்டும்; வளரத்தான் போகிறது. ஏன்? வளர்ந்துதான் வருகிறதே!

## V

# பத்திராதிபர்களின் தமிழ்த் தொண்டு

ஆக்கூர் அனந்தாச்சாரி

(எழுத்தாளன்: சிறப்புமலர் 1961)

ஆனையைப் பார்க்க யாருமே ஆசைப்படாமல் இருக்கமாட்டார்கள். அதேபோல் தான் தேரும். அதைக்கண்டு களிக்கக் குழந்தைகளும், கிழவர்களும் கூடிவிடுவார்கள். பெண்களைப் பற்றியோ சொல்ல வேண்டியதே இல்லை. தேர், நிலைக்கு வந்து நின்று விட்டதானால்

அப்போதேற்படும் குதூகலட் அளவு கடந்த தாகும். குருக்கள் தமது மணியைக் கலகலவென்று அடித்து ஆரத்தி எடுப்பார். மக்கள் ஜெய கோஷம் செய்து கைகளைத் தட்டி ஆர்ப்பரிப்பார்கள். அதிர்வேட்டுப் போடுபவன் மிச்சமுள்ள மருந்தையெல்லாம் கெட்டித்து வேட்டுககு மேல் வேட்டுப் போட்டு ஊரையே செவிடுபடச் செய்வான். தேர் நிலைக்கு வந்து விடுவதென்பது அவ்வளவு உற்சாக மூட்டும் ஆவேச மான சம்பவம்.

நமது நாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்தது ஒரு பெரியதொரு தேர் நிலைக்கு வந்து நின்றதைப்போன்ற சம்பவமே யாகும். அந்த ஆனந்தக் கொண்டாட்டத்திலேயே அனைவரும் இருந்து வருகிறோம். 'வாராது போல வந்த மாமணியான' சுயராஜ்யம் கிடைத்து விட்டது, என்ற பேரு வகையில் எக்களிப்போடு இருக்கிறோம். சர்க்கார் பிரசார இலாகா உள் பட எல்லோரும் அந்த ஆனந்த கோஷத்திலேயே பெரிதும் ஆழ்ந் திருக்கிறோம்.

இந்தச் சுயராஜ்யத் தேர் எப்படி நிலைக்கு வந்து சேர்ந்தது. இதை எத்தனை பேர் தொட்டு இழுத்தனர்; எத்தனை பேர் உலுக்கு மரம் போட்டனர். தேரின் ரோதைகள் சரியான பக்கம் திரும்புவதற்காகச் சக்கரத்தின் அடியில் அமர்ந்து கட்டைகளை மாறி மாறிப் போட்டுத் தேரை நடத்தி வந்த ஆசாமிகள் எத்தகைய அரும்பாடு பட்டிருக் கிறார்கள். என்பனவற்றை நினைத்துப் பார்க்க நாம் கடமைப்பட்டிருக் கிறோம்.

பூரிஜகந்நாதத்தில் ஓடிய தேர் அக்காலத்தில் பிரதி வருஷமும் சிலபேரை 'காவு' வாங்கிக் கொள்வது வழக்கம். அதேபோல இந்தச் சுயராஜ்யத் தேரை கரடு முரடான கடும் பாதையில் லாகவமாகச் செலுத்திவந்த எத்தனையோ சிற்பிகள் அதன் சக்கரத்தடியிலே பலியாகி விட்டனர். வடங்களைப் பற்றி இழுத்தவர்களிலும் எண்ணிறந்த பேர் இந்தத் தேருக்குப் பலியாகியிருக்கின்றனர். அவைகளையெல்லாம் நினைக்க வேண்டிய சந்தர்ப்பம் இப்போதுதான் ஏற்பட்டிருக்கிறது.

தேருக்கு உலுக்கு மரம் போடும் வினைஞர்களுக்கும், சக்கரத்தடியில் அமர்ந்த தச்சர்களுக்கும் நிகரானவர்கள் அந்தக் காலத்தில் பத்திரிகை நடத்தியவர்கள் ஆவார்கள். கண்களில் விளக்கெண்ணெய் போட்டுக் கொண்டு பிரிட்டிஷ் ஆட்சியின் போலீஸ் இலாகா அப்போது பிரசாரங் களைக் கவனித்துக் கொண்டிருந்தது. இம்மென்றால் நடவடிக்கை எடுப்பார்கள். ஏனென்றால் ஜாமீன் கேட்பார்கள். அப்படிக் கவனிப் போடிருந்த சர்க்காரையும் ஏய்க்க வேண்டும். அதே சமயத்தில் மக்களுக்கும் சுதந்திர ஆவேசத்தை ஊட்டவேண்டும். இந் நுட்பமான கஷ்டமான அரும்பணியைச் செய்து வந்தவர்கள் பத்திரிகாசிரியர்கள்.

அந்தக் காலத்துத் தமிழ்ப் பத்திரிகைகளின் இதழ்களை இன்று எடுத்துப் படித்தாலும் உற்சாக மூட்டுவனவாக இருக்கின்றன. பழைய

போராட்டக் காலத்தை அப்படியே நினைவூட்டுவனவாக இருக்கின்றன. இந்தக் காலத்துச் சில பத்திரிகைகளைப் போல் பொழுது போக்குக்கருவி களாக இல்லாமல் தேசத்துக்குத் தொண்டு செய்யும் கருவூலங்களாக அத்தனைப் பத்திரிகைகளும் திகழ்ந்தன.

அந்தக் காலத்துத் தமிழ்ப் பத்திரிகைகளான சுதேசமித்திரன், இந்தியா, நவசக்தி, சுதந்திரச் சங்கு, லோகோபகாரி, பாலபாரதி, தினமணி முதலியன தேசபக்தியை ஊட்டியது மட்டுமின்றி இன்றைக்குள்ள தமிழ் உரைநடைக்கே சிறந்த உருவமளித்தன என்பதை நாம் மறந்து விடலாகாது; ஐம்பது வருஷங்களுக்கு முன்னே தமிழ் உரை நடையே உருப்படியாக இல்லை. மேடைப் பிரசங்கியாக இருக்கிறவன், வினைச்சொற்களைச் சேர்க்காமல் கூட ஒரு கருத்தைச் சாடைமூலமாக வெளியிட்டு விடமுடியும். ஆனால் எழுத்து, என்றாலோ அந்தத் தந்திரங்கள் பலிக்காது. இலக்கியமரபு மாறாமல் வார்த்தைக் கோவைகள் இருந்தாக வேண்டும். இப்படித் தேசத்துக்கு மட்டுமின்றி நம் செந் தமிழ் மொழிக்கும் அரிய பணி ஆற்றிய பெருமை அந்தப் பத்திரிகை களையே சாரும்.

"சொல்லவும் கூடுவதில்லை — அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை;
இந்த வசை யெனக் கெய்திடலாமோ?
என்றந்தப் பேதை உரைத்தான் சென்றிடுவீர்
எட்டுத்திக்கும் — கலைச் செல்வங்கள் யாவுங்
கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!'

என்று பாரதியார் எழுதினாரே அதை ஊன்றிக் கவனிக்க வேண்டும். அப்படி அவர் ஐம்பது வருடங்களுக்கு முன் எச்சரிக்கை செய்ததை ஏற்று அரிய தமிழ்த் தொண்டும் செய்து வந்தன நமது பத்திரிகைகள்.

ஹிந்து பத்திரிகையை ஸ்தாபித்தவர் ஜி. சுப்பிரமணிய அய்யர். அவரே தான் 'சுதேசமித்திரன்' தமிழ்ப் பத்திரிகையையும் தொடங்கித் துணிந்து எழுதிவந்தார். புலவர்கள் சிலர் அகநானூற்றைப்பற்றிப் பேசுவார்கள். வள்ளுவருக்கு விருத்தியுரை கூறுவார்கள். ஆனால் ஒரு பிரிட்டிஷ் ராஜதந்திரி வெளியிட்ட ஓர் அறிக்கையைத் தமிழில் எடுத்துச் சொல்லுமையா என்றால் விழிப்பர்; புது அரசியலைப்பற்றி வார்த்தைகளே தமிழில் இல்லாதிருந்த காலம். அப்படி 'சுதேசமித்திரன் தோற்றுவித்த ஒரு அருஞ்செயலைக் கவி சுப்பிரமணி பாரதியார் நடத்திய 'இந்தியா' பத்திரிகை வளர்த்தது. திரு. வி. கல்யாணசுந்தரனார் நடத்திய "நவ சக்தி"யில் அது தென்றலாக மாறி, தமிழ்க் காற்றாக வீசிற்று.

தமிழிலே பொருளாதாரச் சொற்களையும், 'சமஷ்டி' 'ஜனநாயகம்' போன்ற அரசியல் சொற்களையும் புகுத்தித் தலையங்கங்கள் எழுதிச் சிறப்பு செய்தவர் ஏர்க்காடு அரங்கசாமி அய்யங்கார். அவர் 'சுதேச மித்திரன்' ஆசிரியராக இருந்தபோது அப்பத்திரிகையின் சேவை மறக்க

முடியாதது. தற்போதைய ஆசிரியர் ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாசன் அவர்களும் அம்முறையையே பின்பற்றி வருகின்றார்.

தேசத்தலைவர்கள் தங்கள் பிரசாரத்துக்கென்று ஒவ்வொரு பத்திரிகையைத் தங்கள் ஆயுதமாகக் கொண்டிருந்தனர். பாரதி தமது 'இந்தியா' பத்திரிகையில்தான் கார்ட்டூன்கள் போடும் பழக்கத்தை ஆரம்பித்தார். அந்தப் பத்திரிகையில்தான் சிரஞ்சீவியான பல கவிதைகளையும் எழுதினார். ஆவேசமூட்டத்தக்க சொற்களைப் பிரயோகித்து எழுதுவதில் பாரதியாருக்கு இணை பாரதியாரேதான்.

பாரதியாரின் 'இந்தியா' பத்திரிகை ஆயிரம் பிரதிகளுக்குமேல் வாரந்தோறும் வெளியிடப்பட்டதில்லை. ஆனால் ஒவ்வொரு பத்திரிகையையும் குறைந்தது ஐம்பது பேராவது படித்து வந்தார்கள். அவருடைய பத்திரிகைக்குப் 'பழமையே' கிடையாது, எப்போதும் புதுமைதான். போனமாதம் வெளியான 'இந்தியா' பத்திரிகையை இந்த மாதம் வைத்துக்கொண்டு படித்து ஒருவர் ரஸிப்பார். இன்னொருவர் அதன் வரிகளை அப்படியே எழுதி வைத்துக் கொள்வார். பாரதியார் வாரா வாரம் எழுதிய கட்டுரைகளை அப்படியே பெரிய நோட்டுப் புத்தகங்களில் எழுதி வைத்துக்கொண்டவர்களுமுண்டு. இப்போது அம்மாதிரி எங்கேயாகிலும் நடப்பதாக நாம் கேள்விப்படுகிறோமா?

'தேசபக்தன்' பத்திரிகையின் தலையங்கங்களாகவும் 'நவசக்தி' பத்திரிகையின் தலையங்கங்களாகவும் திரு. வி. கலியாண சுந்தரனார் எழுதிய தலையங்கங்கள் பல இன்று 'தமிழ்த்தென்றல்' என்ற பெருமை பெற்று சர்வகலாசாலை பாடப்புத்தகங்களில் ஏறியிருக்கிறது.

'வாதப்பிரதிவாதம்' என்பதே ஒரு கலை. அந்தக் காலத்தில் பத்திரிகைகள் ஒன்றோடொன்று போரிடுவதுமுண்டு. குறிப்பிட்ட தலைவர்களின் தவற்றை எடுத்துக்கூறி வாதம் நடத்துவதுண்டு. இப்போதும் 'வாதப்பிரதிவாதங்கள்' நிகழ்கின்றன. அப்போது நிறைந்திருந்த "பண்பு" மட்டும் இப்போது மருந்துக்குக்கூடக் காணோம்.

காலஞ்சென்ற ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆசிரியராக இருந்து நடத்திய காலத்தில் 'ஆனந்த விகடனி'ல் அநேக 'வாதப் பிரதி வாதங்கள்' நிகழ்த்தியிருக்கிறார். டாக்டர் வரதராஜலு நாயுடு அவர்கள் நடத்தி வந்த 'தமிழ்நாடு' பத்திரிகையும் வாதப் பிரதிவாத மேடையாகப் பல தடவை திகழ்ந்ததுண்டு.

ஒரு விஷயம் பத்திரிகைகளில் வெளி வந்துவிட்டதென்றால் அதை வேதவாக்காகவும், சத்தியமாகவும் மக்கள் அக்காலத்தில் மதித்தனர். அப்படி ஜனங்கள் மதிக்கிறார்களென்பதை அறிந்து பத்திரிகாசிரியர்களும் ஜாக்கிரதையாகப் பிரசுரித்து வந்தனர். பத்திரிகைகளில் வந்த தலையங்கங்களை ஜனங்கள் மதித்தது மட்டுமா? பிரிட்டிஷ்

சர்க்காரும் ஒவ்வொரு சிறிய பத்திரிகையின் கருத்தையும் மதித்து வந்தனர்: அரசாங்கக் காரியாலயங்களிலும் பத்திரிகாசிரியன் என்றால் ஒரு கௌரவம் இருந்து வந்தது. இப்போதோ அந்நிலைமை பெருமளவுக்கு மாறிவிட்டது.

ஆந்திரகேசரி ஸ்ரீ டி. பிரகாசம் ஆங்கிலத்தில் "ஸ்வராஜ்யா" பத்திரிகை வெளியிட்டதுபோல, தமிழிலும் "ஸ்வராஜ்யா" என்ற தினசரிப் பத்திரிகையை நடத்தி வந்தார். அதில் சேவை செய்தவர்கள் அனைவரும் பழுத்த தேசபக்தர்கள். ஸ்வாமி சுத்தானந்த பாரதியார், வ. ராமஸ்வாமி அய்யங்கார் (வ.ரா.) எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் முதலியவர்கள். சுத்தானந்த பாரதியாரின் தமிழ்ச் சேவை தமிழ்நாடு அறிந்ததே. வ. ரா. அவர்கள் பாரதியாரின் அத்யந்த சீடராக இருந்த சமூக சீர்திருத்தவாதி. எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் ஒரு சிறந்த ஆசிரியர். அவர் எழுதிய சரித்திரக் கதைகளும், தேச பக்தர்களின் வாழ்க்கை வரலாறுகளும் அக்காலத்தில் சுதந்திர இயக்கத் தொண்டர்களுக்கு உணர்ச்சி ஊட்டின. எத்தகைய தியாகத்துக்கும் தயாராகயிருக்கும்படியான துணிவு ஏற்படுமாறு செய்து வந்தன.

பத்திரிகை உலகுக்குத் தொண்டு செய்த காஞ்சீபுரம் ஸ்ரீ கிருஷ்ணசாமி சர்மா, சுரேந்திர நாத் ஆர்யா முதலியவர்களின் பெயர்களையும் தமிழகம் மறந்துவிட்டது. ஆனால் வ. வே. சு. அய்யரின் சேவையை அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது. அவர் 'தேச பக்தன்' தினசரிப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தபோது நாட்டின் அரசியல் திருப்பத்துக்குக் காரணமாயிருந்தார். அனிபெசண்டு அம்மையார் அப்போது 'ஹோம் ரூல்' இயக்கத்தோடு 'நியூ இந்தியா' பத்திரிகையையும் நடத்தி வந்தார். காங்கிரஸ் கிளர்ச்சி அதிகரித்து வந்த வேகத்தில் அனிபெஸண்டின் தலைமையை அகற்ற வேண்டிய தருணம் வந்தது. அப்போது அந்தக் கைங்கர்யத்தைச் செய்தவர் 'தேச பக்தன்' ஆசிரியர் வ. வே. சு. அய்யர். பிற்காலத்தில் சேரன் மாதேவி குருகுல ஆசிரியராக இருந்த காலத்தில் அவர் நடத்திய 'பால பாரதி' என்ற மாதப் பத்திரிகையும் சிறப்பு மிக்க இலக்கிய ஏடாகும். அதில் வெளிவந்த பல சிறு கதைகள்தான் தொகுக்கப்பட்டு இன்று 'மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள்' என்ற நூலாக விளங்குகிறது. முதன் முதலிலே நவரசம் ததும்பத் தமிழில் சிறு கதைகள் எழுதிக் காட்டியவர் வ. வே. சு. அய்யர்தான். வீரக் கதைகள், வீழ்ச்சிக் கதைகள், காதல் கதைகள் எல்லாவிதக் கதைகளும் அவர் எழுதித் தமிழ் மொழியை அலங்கரித்தவர். கம்ப ராமாயண ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆங்கிலத்தில் 'ஜென்ம பூமி' என்ற வாரப் பத்திரிகையில் தான் முதலில் பிரசுரமாயிற்று. கம்பனைப் பற்றிய ஆராய்ச்சிகளே முதன் முதலில் தொடங்கியவரும் அந்தப் பத்திரிகாசிரியரே! ஆனால் சீமைக்குச் சென்று அங்கு தேச வெறி பிடித்துப் புரட்சி இயக்கங்களுக்குத் தலைமை வகித்த அந்தப் பேரறிஞர் ஐரோப்பாவில் சுற்றிக் கொண்டிருந்த காலத்திலும் கம்பராமாயணத்தையும், குறளையும் தம் உடனேயே வைத்துக் கொண்டிருந்தவர். தேசபக்தியோடு மொழிப்

பற்றும் அவரைப் பற்றிக்கொண்டிருந்தது. அ, உ, ங, சு என்ற தமிழ் இலக்கங்களையே தமிழில் உபயோகிக்க வேண்டுமென்ற திடமான அபிப்ராயம் கொண்டிருந்தார். பத்திரிகை மூலம் சிறந்த இலக்கியத் தொண்டு செய்தவர்களில் அ. மாதவையாவும் ஒருவர். சர்க்கார் உத்தியோகஸ்தராக இருந்த அவர் தமிழுக்காக உழைக்க விரும்பி 'பஞ்சாமிர்தம்' என்ற ஒரு சிறந்த பத்திரிகையை நடத்திவந்தார். விஞ்ஞானச் சொற்களடங்கிய கட்டுரைகளைத் தமிழில் எழுத முடியும் என நிருபித்தவர் மாதவையா. பேராசிரியர் அ. ஸ்ரீநிவாச ராகவன் தம் சஞ்சிகை மூலம் செய்த இலக்கியத் தொண்டை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

தமிழ்ப் பத்திரிகைகள் மூலம் வேதாந்தக் கருத்துக்கள் பரிமாறிக் கொண்டிருந்தவர் பி, ராஜம் அய்யரும், சுப்பிரமணிய சிவாவும். சுப்பிரமணிய சிவா என்பவர் தேசத்துக்குச் செய்த அரிய சேவையையும் தொண்டையும் தமிழகம் எப்படி மறந்தது என்பதுதான் புரியவில்லை. அவர் கால்நடையாகவே தமிழ்நாடு முழுவதும் தன் சீடர்களோடு பிரயாணம் செய்தவண்ணமிருந்தவர். அவர் நடத்திய பத்திரிகையின் பெயர் 'ஞான பானு'. அந்தப் பத்திரிகையில்தான் கவி சுப்பிரமணிய பாரதியாரின் 'சின்னச்சங்கரன்' கதையின் பாகங்கள் வெளியாயிற்று. அந்தப் பத்திரிகை மறைந்த வேகத்தில் மகாகவியின் அழகிய கதை நூலொன்றும் மறைந்து போய்விட்டது.

ஸ்ரீரங்கம் ராமானுஜலு நாயுடு என்பவர் 'பிரஜானுகூலன்' என்ற பத்திரிகையின் மூலம் அக்காலத்தில் நல்ல கருத்துக்களைப் பரப்பிக் கொண்டிருந்தார். அந்த அடிச்சுவட்டில் 'கற்பகம்' 'விவேகானந்தம்' 'ஆனந்த போதினி' என்ற பத்திரிகைகள் தோன்றி, தமிழ்த் தொண்டு ஆற்றி வந்தன.

தமிழ் மொழியுள்ளளவும் மறக்க முடியாத பத்திரிகை பரலி சு. நெல்லையப்பர் நடத்திவந்த 'லோகோபகாரி' பத்திரிகை. அந்தப் பத்திரிகையில்தான் பாரதியாரின் மிகச் சிறந்த கடிதங்களும், எழுத்துக்களும் வெளியாயின.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் காந்தீயத் திருப்பணியில் ஆக்க வேலைகள் பல ஆற்றியவர். அதற்கெனவே திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தை நிறுவியவர். அங்கிருந்து வெளியான 'விமோசனம்' என்ற பத்திரிகையில்தான் மதுவிலக்கு இயக்கம் தமிழகத்தில் பிரசாரம் செய்யப்பட்டது. 'கள்' என்ற அரக்கன் நம் நாட்டினின்று நீங்குவதற்கு, அதிசயமான தொண்டு செய்த பத்திரிகை 'விமோசனம்' ஆகும்.

தமிழ் நாட்டில் நடந்த சுதந்திரப் போராட்டத்தில் பெரும் பங்கு எடுத்துக்கொண்டது 'சுதந்திரச் சங்கு'. சுதந்திர வேள்வியில் அக்கினிக் குஞ்சாக விளங்கியது. தன் எழுத்தின் மூலம் தேசியக்கனலை மூட்டிக் கொழுந்து விட்டெரியும்படிச் செய்தது. பத்திரிகை எட்டுப்

பக்கம்தான். விலேயோ காலணுதான். அதற்கிருந்த செல்வாக்கை அளவிடவே முடியாது. 'சங்கின்' பிரசாரயந்திரத்தின் சக்தியைக் கண்டு வெள்ளை அரசாங்கமே நடுங்கியது. 'சங்குக்கு' சத்தியாக்கிரகமே உயிர். தர்மமே அதன் மூச்சு. காந்தியடிகளே அதன் தெய்வம். அது வெள்ளையரசாங்கத்தின் அடக்குமுறைப் பாணத்திற்குக் கொஞ்சமும் பணியாமல் தலை நிமிர்ந்து செயலாற்றி வந்தது. 'சுதந்திரச் சங்கை'த் துவக்கிய சங்கு கணேசனும், அதன் ஆசிரியராக இருந்த சங்கு சுப்பிரமணியமும்தான் இவ்வளவு பெருமைக்கும் உரியவர்கள்.

பழமையான தேசபக்தர் குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கம் பல்வேறு பத்திரிகைகளுக்கு ஆசிரியராக இருந்து சிறப்பாகத் தொண்டாற்றினர். அன்னுருக்குப் பிறகு ஸ்ரீ ஏ. என். சிவராமன் அவர்கள் 'தினமணி'யின் ஆசிரியர் பதவி ஏற்றுச் சிறப்புற நடத்தி வருகிருர். துணை ஆசிரியரான ஸ்ரீ ஏ. ஜி. வெங்கடாச்சாரி யாரும் 'தினமணி'யின் மூலம் சிறந்த முறையில் தொண்டாற்றி வருகிருர்.

'ஆனந்த விகடன்' ஆசிரியர் எஸ். எஸ். வாசனும் 'கல்கி' மூலம் டி. சதாசிவமும் தங்கள் பங்கைச் செலுத்தி வருகின்றனர். சிறந்த தேச பக்தரான ரா. நாராயண அய்யங்கார் பல்வேறு பத்திரிகைகளின்—சிறப்பாக—'ஹிந்துஸ்தான்' ஆசிரியராக இருந்து ஆற்றிய தொண்டு அளவிடவே முடியாது. இன்னும் திருச்சி தேசபக்தரான டி. வி. சுவாமிநாத சாஸ்திரியார் 'களிராட்டை' மூலம் செய்த சேவையும் சாதாரணமானதன்று. தமிழ்மணி, தினசரி, ஜெயபாரதி, ஹனுமான், சிவாஜி, குடிநூல், மணிக்கொடி, பிரசண்ட விகடன், காந்தி முதலிய பல பத்திரிகைகளும் நாட்டின் சுதந்திரத்துக்கு உழைத்திருக்கின்றன. இவைகளனைத்துமே தாய்நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் செய்த சேவை இணையற்றது.

'பத்திரிகை தர்மம்' காற்றில் பறந்து போய்க்கொண்டிருக்கும் இக் காலத்தில் 'எழுத்து தெய்வம்' - 'எழுது கோல் தெய்வம்' என்கிற பாரதி வாக்கை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். தெய்வீகம் பொருந்திய எழுத்தை கௌரவமான முறையில், நல்ல காரியத்துக்காக உபயோகிக்க வேண்டியது மிகவும் அவசியம். தற்கால எழுத்தாளர்கள் அன்பைப் பரப்ப முயலவேண்டும். பாரதியைப் பின்பற்றி, சுயநலமற்ற முறையில் தொண்டாற்றி எழுத்தாளர்களின் கௌரவம் அதிகரிக்கும்படி செய்ய வேண்டுமென்பதே எனது பிரார்த்தனை.

VI

# தமிழ்ப் பத்திரிகைகள்

**'அச்சுக்கலை' மா. சு. சம்பந்தன்**

உலகை அறிவுலகு என்றும், பண உலகு என்றும், ஆட்சி உலகு என்றும் பாகுபடுத்திச் சொல்வார்கள். அறிவைக் கொடுக்கும் பத்திரிகையும் இன்று தனக்கென்று ஒரு தனி இடத்தை இவ்வுலகில் தேடிக் கொண்டு விட்டது. ஆம். வல்லரசுகளுக்கு இருக்கும் செல்வாக்கைவிட போர்க்குணம் படைத்தவர்களுக்கு உள்ள பலத்தை விட, அறிவாளிகளுக்குத் தரப்படும் மேன்மையை விடப் பத்திரிகைக்கு அதிக செல்வாக்கும் பலமும் மேன்மையும் இன்று கிடைத்திருக்கின்றன. இதனால் அது உலகப் போக்கையே மாற்றக்கூடிய வல்லமை பெற்றதாக நனி சிறந்து விளங்குகிறது.

உலகில் பத்திரிகை தோன்றியது பல நூற்றாண்டுகளுக்கு முன்பு என்றாலும், அது தற்கால வடிவத்தைப் பெற்று, ஏறக்குறைய 350 ஆண்டுகளே ஆகின்றன; மேனாடுகளில் அரசியல், இலக்கியம், விஞ்ஞானம், பொழுதுபோக்கு, கலைத்துறை என்னும் பல்வேறு வகையிலும் நாளுக்கு நாள் புதுமையைக் கூட்டி எழிலாகவும் ஒயிலாகவும் அது நடந்தேறி வருகிறது. தமிழ் நாட்டில் பத்திரிகை கால் கொண்டு சுமார் 150 ஆண்டு காலமாகிறது. இந்தக் காலக் கட்டத்திற்குள் அது மேனாடுகளைப்போல் அத்தனை வகையிலும் வளர்ச்சி பெற்றுள்ளதாகச் சொல்ல முடியாது. தமிழ் பேசுவோரின் எண்ணிக்கைக்கு ஏற்ற வகையில் அது பெருகியிருப்பதாகவும் கூறமுடியாது.

## துவக்க காலம்

தமிழ்மொழியில் உரை நடையை வளர்த்தும், சிறு கதையைப் பெருக்கியும், அகராதியை அறிமுகப்படுத்தியும், அச்சையும் அச்சுப் பொறியையும் வழக்கிற்கு வரச்செய்த கிறித்தவப் பாதிரிமார்களே, தமிழ்ப் பத்திரிகை வெளியிடுவதிலும் துவக்கத்தில் பெரிதும் ஆர்வங் காட்டி முன்னின்றுள்ளார்கள்.

முதன் முதல் தமிழ்மொழி இடம்பெற்ற பத்திரிகை "சிலோன் கெஜட்" டாகும். இது 1802இல் தொடங்கப்பட்டுத் தமிழ், சிங்களம், ஆங்கிலம் என்னும் முப்பகுதிகளைக் கொண்டு வெளிவந்தது. சென்னையிலிருந்த கிறிஸ்த்தவ சமயப் பிரசாரக் கழகம் 1831இல் "தமிழ்ப் பத்திரிகை" (Tamil Magazine) என்ற செய்தி இதழை முழுதும் தமிழிலேயே முதன் முதல் வெளியிட்டுப் பெருமையடைந்துள்ளது. இதுதான் தமிழில் வெளிவந்த முதல் செய்தி இதழாகும். இதற்குப் பின்னர் 1833இல் "விருத்தாந்தி" எனும் இதழும், 1835இல் "மெட்ராஸ் கிரானிக்கல்" எனும் இதழும் (இதில் தமிழ், தெலுங்கு இடம் பெற்றி

ருந்தன) இதனை யடுத்து 1855இல் "இராஜவர்த்தினி" எனும் மாத மும்முறை இதழும் (இதில் ஆங்கில இதழ்களில் வெளியான செய்தி களின் தமிழ் மொழி பெயர்ப்புகள் மட்டுமே இடம் பெற்றிருந்தன) வெளியிடப்பட்டன. 1852இல் "தினவர்த்தமானி" எனும் முதல் தமிழ்க் கிழமை இதழை மேதகு பீ. பெர்சிவல் எனும் பாதிரியார் சென்னையில் தொடங்கி வைத்தார். இவருக்கு உதவியாகத் தமிழ்ப் பதிப்புத் துறை யின் முன்னோடியான சி. வை. தாமோதரம் பிள்ளை இருந்தார். இதில் செய்திகள் மட்டுமின்றி இலக்கியம், விஞ்ஞானம் முதலிய பொருள் குறித்தும் எழுதப்பட்டு வந்தன. இது தமிழ் மக்களிடையே நல்ல செல்வாக்கும் பெற்று வாரந்தோறும் சுமார் 784 படிகளுக்கு மேல் செல வழிந்தது. இதே காலத்தில் "சுதேசாபிமானி" என்ற இதழும் நடை பெற்று வந்தது.

1841இல் தொடங்கிய "உதயதாரகை" எனும் மாத இருமுறை இதழ்தான் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த முதல் தமிழ் இதழாகும்; இது பத்தாண்டுகள் வரை நடந்துள்ளது; கல்வி, இலக்கியம், சமயம் ஆகியவை பற்றி விளக்கம் செய்தது. 1848இல் கொழும்பு நகரில் "இலங்கை நேசன்" என்ற மாத இதழ் வெளிவந்தது. 1859இல் யாழ்ப்பாணத்தி லிருந்து "பாலியர் நேசன்" எனும் இதழ் வெளியாயிற்று. "சத்தியவேத பாதுகாவலன்" எனும் பெயரில் 1876இல் கிறித்துவ இதழும், "இந்து சாதனம்" எனும் பெயரில் 1889இல் சைவசமய இதழும் யாழ்ப்பாணத் தில் தோன்றின. கண்டியில் 1892இல் "ஞானதீபம்" எனும் பெயரிலும் (இதன் ஆசிரியர் எம். சி. சித்திலப்பை. இது இஸ்லாமியருக்காக நடத்தப் பெற்றது) யாழ்ப்பாணத்தில் "ஞானசித்தி" எனும் பெயரிலும் இதழ்கள் வெளியாகியுள்ளன.

மலேயாவில் பினங்கு நகரில் 1888இல் "இந்துநேசன்" எனும் பெயரில் மாத இருமுறை இதழ் தொடங்கப்பட்டுள்ளது. அதே காலத் தில் "பினங்கு விஜய சேதனம்" என்ற இதழும் வெளிவந்தது; இது ஓராண்டு வரை நடைபெற்றது. மேலும் "பினங்கு வர்த்தமானி" "உலகநேசன்" எனும் இரு இதழ்கள் 1897இல் வெளிவந்துள்ளன. பேராக்கிலிருந்து "தேசாபிமானி" என்ற மாத இருமுறை இதழ் 1896-97 வாக்கில் வெளியாகியது. இதன் ஆசிரியர் அம்பலவாண பிள்ளையாவார். சிங்கப்பூரில் சிங்கைநேசன் எனும் இதழ் 1887இல் துவக்கப்பட்டு 1890 வரை மூன்றாண்டுகள் நடைபெற்றுள்ளது. கோலாலம்பூரில் "தமிழ் நேசன்" பெயரில் ஒரு கிழமை இதழ் 1924இல் திரு. சி. நரசிம்மையங் காரால் தொடங்கப்பட்டு, பின்னர் நாளிதழாக மாறி, தற்போது திரு. முருகு. சுப்பிரமணியத்தை ஆசிரியராகக் கொண்டு மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. சிங்கப்பூரில் "தமிழ்முரசு" எனும் பெயரில் 6-7-1935இல் வார இதழாக ஒரு காசு விலையில் தொடங்கப்பட்ட இதழ், பின்னர், வார மும்முறையாகவும் நாளிதழாகவும் மாறி 15 காசு விலையில் விற்கப்பட்டுப் புகழேணியில் உள்ளது.

இங்குச் சில முக்கிய செய்திகளை இடைமறுத்துக்கூற வேண்டியுள்ளது: சமயப் பரப்புதலுக்குப் பத்திரிகை மிகவும் பயன்படும் என்று கருதியே கிறித்தவ பாதிரிமார் தமிழில் இதழைத் தொடங்கி நடத்தினர். இதனைக் கண்ட ஏனைய சமயத்தினரும் தத்தம் சமயப் பெருமையை நிலைநாட்டவேண்டிப் புதுப்புது இதழ்களைக்கொண்டு வந்தனர். இப்படியாகச் சமயப் போட்டிகளிடையே தமிழ்நாட்டில் பத்திரிகையைக் கருவியாகக் கொள்ளும் வழக்கமும் பத்திரிகை படிக்க வேண்டிய ஆர்வமும் இயல்பும் ஒருங்கே வளரத் தொடங்கின. இதற்குச் சான்று சிலவற்றைக் கீழே தருகிறேன்.

கிறித்தவம்: சிநேகபோதன் (1875) ஆர். ஆர். எமடோஸ், பாளையங்கோட்டை; வேதவிளக்கன் (1890) டி. வேதநாயகம், சென்னை, வேதபோதமாத தோழி (1929) ஹார்வுட், சென்னை; புத்துயிர் (1950) எஸ். தேவஇரக்கம், பாளையங்கோட்டை. இந்துமதம்: இந்துமத சீர்திருத்தி (1883) கே. ஆறுமுகம் பிள்ளை, பாளையங்கோட்டை; சித்தாந்தம் (1912) பூவை கலியாணசுந்தர முதலியார், சென்னை; திராவிட பாகவதன் (1914) டி. கே. சீனிவாச அய்யங்கார், சென்னை; இராமாநுஜன் (1918) ஸ்ரீரங்காச்சாரி, உடையார்பட்டி; சமரசமார்க்கம் (1927) எஸ். சாமிநாதய்யர், சென்னை; மாதவமித்திரன் (1929) பி. ரங்காச்சாரியார், கும்பகோணம். இஸ்லாம்: இஸ்லாம் நேசன் (1909), சுல்தான் சையத் அஹமத் ராவுத்தர், மதுரை; தத்துவ இஸ்லாம் (1921) நாச்சியார் கோயில் முஸ்லீம் சங்கம்; தாருல் இஸ்லாம் (1922) ப. தாவுத்ஷா, நாச்சியார் கோயில் & சென்னை. ஜைனம்: தருமசீலன் (1918) தி. ஆதிநயினார், சென்னை.

இச் சமயப் பத்திரிகைகளுக்கு அடுத்தபடியாக விரைந்து வளரத் தொடங்கிய பத்திரிகைகள் சமூகப் பத்திரிகைகளே யாகும். வேறு சமூகங்கள் அரசாங்கத்தில் உத்தியோகம், மரியாதை முதலிய சலுகைகள் பெற முந்தத் தொடங்கின. வெள்ளை ஆட்சியினரும் பிரித்தாள்வதில் தான் தங்கள் ஆட்சி நிலைத்து நிற்கும் என்று கருதி, சில சமூகங்களுக்குத் தனிச் சலுகைகள் காட்டத் தொடங்கினர். இதனால் ஒவ்வொரு சமூகமும் பிற சமூகங்களைக் காட்டிலும் தமது சமூகமே உயர்ந்தது என்பதைச் சுட்டிக்காட்டப் பலவித ஆதாரங்களைத் திரட்டிச் சொல்ல முற்பட்டன. அவைகளுக்குப் பத்திரிகைகளே ஏற்ற கருவிகளாகத் தோன்றின. எனவே புதிய புதிய சமூகப் பத்திரிகைகள் தோற்றுவிக்கப்பட்டன. அவற்றில் குறிப்பிடத்தக்கன:

சான்றோர்குல விவேக போதினி (1909) எ. டி. கோவிந்தசாமி நாடார், கேளிரியம் (தஞ்சை); வன்னியகுல க்ஷத்திரிய தீபம் (1912) கே. ஆலால சுந்தரம் பிள்ளை, காஞ்சீபுரம்; விஸ்வகாமன் (1913) பி. கலியாணசுந்தர ஆசாரி, சென்னை; நாட்டுக்கோட்டை வைசியம் (1914) பி. எஸ். ஆண்டியப்ப பிள்ளை. நாட்டுக்கோட்டை சமூகத்தினரின் மேன்மைக்காக வேண்டி பாளையங்கோட்டையிலிருந்து 12-2-1914 முதல் நடத்தப்பட்ட மாத இதழ்; பரதபோதினி (1918) பவுல். வி. ராயர்,

தூத்துக்குடி. பரத சமூக சங்கத்தின் வெளியீடு; செங்குந்தன் (1921) சி. எஸ். நாகலிங்க முதலியார், சென்னை; குகவேளாளர் (1922) டி. பி. பரிமணப் பல்லவராயர், உத்தமச்சேரி (திருச்சி); மறவர்குல தூதன் (1923) ஏ. துரைசிங்க ராஜபாண்டியன், தூத்துக்குடி; வைசியன் (1923) எஸ். வி. கே. வீரபத்திர செட்டி, அருப்புக்கோட்டை; இந்திரகுல போதினி (1924) ஏ. ஜி. சீனிவாசகம் பிள்ளை. தேவேந்திரகுல வேளாள சமூக முன்னேற்றத்திற்காக வேண்டி ஆம்பூரிலிருந்து வெளிவந்த மாத இதழ்; தீனபந்து (1924) எஸ். இ. பெட்போர்டு. தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வேலூரிலிருந்து நடத்தப்பட்ட வார இதழ்; வணிகமித்திரன் (1924) கே. ஏ. டி. ஞானசம்பந்தம் செட்டியார் வணிக சமூகத்தின் மேன்மைக்காகச் சென்னையிலிருந்து வெளிவந்த மாத இதழ்; ப்ராம்மணன் (1925) டி. கே. ஜகன்னாதாச்சாரியார், சென்னை; கருணீக மித்திரன் (1926) டி. துரைசாமிப் பிள்ளை, சென்னை; ரெட்டிகுலராணி (1929) பி. பாலசுந்தர ரெட்டி, விழுப்புரம்; யாதவமித்திரன் (1929) இ. மா. கோபாலகிருஷ்ண கோனார், மதுரை; அகம்படியார் குலசேகரன் (1930) ஆர். செல்லம்பிள்ளை, மதுரை; சௌராஷ்டிரமணி (1952) பி. ஆர். கோவிந்தசாமி, கும்பகோணம்; ஆயிரவைசியன் (1955) பி. எஸ். செட்டியார், சென்னை. இப்படிச் சமய, சமூக பத்திரிகைகளைத் தொடங்கி நடத்தியவர்களில் பலர் நல்ல அறிவாளிகளாகவும் தத்தம் கொள்கைகளை அழுத்தம் திருத்தமாகக் கூறுவதில் கை தேர்ந்தவர்களாகவும் இருந்துள்ளனர்.

இவ்விதம் சமய, சமூகப் பத்திரிகைகளின் பின் விளைவாகத்தான் தமிழ்நாட்டில் அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்படத் தொடங்கியது. பொதுவாக இந்திய மொழிகளில் தொடங்கப்பட்ட பத்திரிகைகள் யாவும் 1867ஆம் ஆண்டு வரையில் பெரும்பாலும் இலக்கியம், சமயம், சமூகம் போன்ற எல்லைக்கோட்டுக்குள்ளேதான் சுற்றிச் சுற்றி வலம் வந்துள்ளன. அவை அரசியலிலோ, நிர்வாகத்துறையிலோ அதிகக் கவனம் செலுத்தியதில்லை. அன்றியும் அக்காலத்தில் பத்திரிகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் கடுமையாக அமுலில் இருந்தது. தந்திச் செய்திகள் அதிகமாக இங்கு வழக்கிற்கு வரவில்லை. ஆகவே, தமிழ்நாட்டு இதழ்களும் இப்பொதுவிதிக்குப் புறம்பாகப் போக முடியவில்லை.

1857இல் ஏற்பட்ட சிப்பாய்க் கிளர்ச்சிக்குப் பின்னர்த்தான் இந்தியாவில் அரசியல் ஆர்வமும், எழுச்சியும் நாடு முழுவதும் பரவலாயிற்று. இதன் பின்னர் ஏற்பட்ட நாட்டுணர்ச்சியும், அயல் ஆட்சியை நீக்கி நல்லாட்சியைக் காண வேண்டும் என்ற வேணவாவும் ஒரு சில முன்னணித் தலைவர்களுக்குள் ஏற்படத் தொடங்கியது. கட்சி அமைப்பு ஏற்படாததற்கு முன்பு அவர்கள் பத்திரிகைகள் மூலம் மக்களைத் தட்டியெழுப்ப முடியும் என்று உறுதியாக நம்பி, துணிந்து பத்திரிகைத் துறையில் காலெடுத்து வைத்தனர். அவர்கள் தொடக்கத்தில் ஆங்கில ஏடுகளையும், பிறகு தாய்மொழி ஏடுகளையும் துவக்கி மிகவும் போராட்டத்துடன் நடத்தி வந்தனர். பின்னர் அரசியல் இயக்கம், சமூக இயக்கம், பகுத்தறிவு இயக்கம், மறுமலர்ச்சி இயக்கம் ஆகியவற்றின் சார்பில் பல இதழ்கள் தோன்றியுள்ளன.

## தேசிய இதழ்கள்

திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர், "சுதேசமித்திரன்" என்ற கிழமை இதழை 1882இல் தொடங்கி வைத்தார். இது படிப்படியாகச் செல்வாக்குப்பெற்று வளர்ந்து தினசரியாகியது. இது அக்காலத்தில் நாள் தோறும் 1500 படிகள் செலவானது மிகவும் அரிய சாதனையாக இருந்தது. நாட்டுணர்வை ஏற்படுத்தி, எழுச்சியை யுண்டாக்கி, தமிழ்மக்களின் உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்திச் சக்தி மிக்க நாளிதழாகச் சுதேசமித்திரன் முற்காலத்தில் விளங்கியது. அன்று முதல் இன்று வரை அண்மையில் சிறிது நின்றிருந்தாலும் தொடர்ந்து வெளிவரும் மிகப் பழைய நாளிதழ் மித்திரனுகும். இதில்தான் சுப்பிரமணிய பாரதியார் துணையாசிரியராக இருந்தார்; திரு. சி. ஆர். சீனிவாசன் நீண்டகாலம் ஆசிரியப் பொறுப்பேற்றிருந்தார். மித்திரன் நிதானப் போக்கிற்கும் வைதீகக் கருத்துக்கும் என்றும் பேர்போனதாகும்.

(விடுதலை வேட்கை மிக்க சுப்பிரமணிய பாரதியாரால் 1907இல் "இந்தியா" என்னும் பெயரில் ஒரு கிழமை இதழ் தோற்றுவிக்கப் பட்டது. பின்னர் இது நாளிதழாக மாறி மூன்றுண்டுகள் வரை தொல்லைகளுக்கிடையே சென்னையிலும் புதுவையிலுமாக நடைபெற்று நின்று விட்டது. இது முன்னிலும் விடுதலையார்வத்தைப் பெருக்கியது. தமிழ்ச் செய்தித் தாள்களில் முதன் முதல் அரசியல் கருத்துப்படத்தை (கார்ட்டுன்) வெளியிட்ட பெருமை இதனையே சாரும்.) உயர்திரு. டாக்டர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுரின் தமையனுர் பெயர் அஷ்டாவதானம் தெ. பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் என்பதாகும். இவர் "இன்றைய சமாசாரம்" என்ற பெயரில் காலணு விலையில் நாளிதழைத் துவக்கி நடத்தினுர். இதில் முழுக்க செய்திகளே நிறைந்திருக்கும், ஆனுல் தலையங்கம் இராது. இவ்விதழ் ஒன்றரை ஆண்டு வரை ஓடி நின்றுவிட்டது. இதே ஆசிரியரால் "பாரதி", "தேசபந்து" என்னும் இதழ்களும் தோற்றுவிக்கப்பட்டன; என்றுலும் அவையும் நிலைக்கவில்லை.

தமிழ்த்தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனுர் "தேசபக்தன்" நாளிதழை 7–12–1917 முதல் $2\frac{1}{2}$ ஆண்டுக்காலம் வரை ஆசிரியராக இருந்து விறுவிறுப்பாக நடத்தினுர். "நவசக்தி" என்பது திரு. வி. க. வினுல் 22–10–1920 முதல் 1940 வரை சொந்தமாக நடத்தப்பெற்ற கிழமை இதழாகும். இது வார இதழாகவும், வார மும்முறை இதழாகவும் சில காலம் வெளிவந்தது. தமிழை முறையாகப் படித்து, தமிழாசிரியராகத் தொண்டாற்றி, உலகியலறிவு மிகுந்து, அரசியலில் மிகத தீவிரம் காட்டி, சிறந்த பேச்சாளராகவும், தொழிலாளர் தலைவராகவும் விளங்கிய திரு. வி. க. தமிழ்ப்பத்திரிகை உலகில் நுழைந்ததற்குப் பிறகு தான், அரசியல் உலகும் பத்திரிகையுலகும் தூய தமிழ்மயமாயின. தமிழறிந்தவர் ஓர் இதழ் நடத்தினுல் எவ்வளவு வீரத்தையும் ஆற்றலை

யும் மாறுதலையும் உண்டாக்க முடியும் என்பதற்குத் திரு. வி. க. நடத்திய ‘தேசபக்தனை’ விட வேறு எடுத்துக்காட்டு வேண்டியதில்லை.

இவ்விரண்டு இதழ்களால் தமிழ் மக்கள் தமிழுணர்வும் விடுதலை யார்வமும் மிக்குற்று ஏற்றமும் எழுச்சியும் பெற்றனர். திரு. வி. க. விடம் பத்திரிகைப் பயிற்சி பெற்றவர்களே, வெ. சாமிநாதசர்மாவும், ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி)யும் ஆவர். ஒவ்வொருவரும் தனித்தனியே பின்னர் இதழ்கள் நடத்திப் பெருமை பெற்றனர். பிற நாளிதழ்களும் திரு. வி. க. செய்த திருந்திய நடையிலே செயலாற்றின.

‘சுயராஜ்யா’ என்னும் இதழ் தமிழிலும், தெலுங்கிலும், ஆங்கிலத் திலுமாக தங்கட்டூர் பிரகாசத்தினுல் 1922இல் நாளிதழாக நடத்தப் பெற்றது. திருவாளர்கள் பி. எஸ். செட்டியார், எம். எஸ். செட்டியார், எம் எஸ். சுப்பிரமணிய ஐயர், வ. ரா. போன்றவர் தமிழ் இதழிற்குத் துணையாசிரியராக இருந்து, நாட்டு விடுதலையார்வத்தால், மாதக் கணக்கில் சம்பளம் தராதபோதும் அதனைத் தாங்கிக்கொண்டு பணி செய்தனர். தமிழ் நாட்டுக் காங்கிரஸ் இதற்குப் பண உதவி செய்தும் கூடத் தொடர்ந்து நடைபெருது நின்றுவிட்டது.

டாக்டர் பி. வரதராஜுலு நாயுடுவால் சேலத்திலிருந்து வார இதழாக 1922இல் தொடங்கிய “தமிழ் நாடு” பின்னர், சென்னையில் நாளிதழாகிச் சிறப்பாக நடத்தப்பட்டது. இதில் திருவாளர்கள் டி. எஸ். சொக்கலிங்கம், ரா. வெங்கட்டராஜலு, பி. எஸ். செட்டியார் போன்ருேர் துணையாசிரியராக இருந்து திறம்படச் செயல்பட்டு இதழை வெற்றிகர மாக நடத்தினர். “எழுதுவதில் ‘தமிழ் நாடு’ ஒரு புதிய நடையைத் தோற்றுவித்தது. பேசும் முறையையே ஓரளவு இலக்கணத்துடன் அமைத்து, நடையில் உயிரும் வேகமும் ததும்பி நிற்கும்படி செய்தது. அது மக்களுக்குப் பெரிதும் பிடித்துப் புகழ்பெற்று ‘மித்திர’னுக்குப் போட்டியாக நல்ல இதழாக நடைபெற்றது” என்று திரு. துமிலன் எழுதியுள்ளதை நாம் அறிந்து போற்றவேண்டி ஒன்ருகும். திரு. நாயுடு வின் அரசியல் கொள்கை காரணமாகத் ‘தமிழ் நாடு’ செல்வாக்கிழந்து நின்றுபோக வேண்டியதாயிற்று.

1930இல் திரு. சங்கு கணேசனுல் துவக்கி நடத்தப்பெற்ற வார இதழ் ‘சுதந்திரச் சங்கு’. பிறகு வாரம்மும்முறையாகித் தீவிரமான அரசியல் போராட்ட இதழாகத் திகழ்ந்தது. அடுத்து இது நாளி தழாகவும் மாறியது. இதற்குத் திருவாளர்கள் சங்கு சுப்பிரமணியம், கே. சடகோபன் ஆகியோர் துணையாசிரியர்களாக இருந்து இணைந்து பணிபுரிந்தனர். இதன் முதல் பக்கத்தில் தீவிரமான கருத்துப்படம் இருக்கும். இது சூடான நடையைக் கையாண்டதால், மக்கள் இதனை விரும்பி வாங்கிப் படித்தனர். இதனுல் பதினுயிரக் கணக்கில் சங்கு செலவாயிற்று. தமிழ் நாட்டில் முதன் முதல் அந்த அளவிற்கு விற்பனையை எட்டிய இதழ் சுதந்திரச் சங்குதான். சங்குவிற்குப் பிறகு

தான் 'ஏஜென்சி' முறை என்ற ஒன்று ஏற்பட்டு நாளடைவில் அது தொழிலாகவும் வளர்ச்சி பெற்றது.

"தினமணி" 1934இல் பத்திரிகையுலகில் அனுபவமிக்க திரு. சதானந்தத்தால் துவக்கி வைக்கப்பட்ட நாளிதழாகும். இத்துடன் 'இந்தியா' இணைக்கப்பட்டது என்று தொடக்கத்தில் தலைப்பில் போடப் பட்டிருக்கும். இதன் ஆசிரியராகத் திரு. டி. எஸ். சொக்கலிங்கம் எட்டு ஆண்டுகள் வரை நிலைத்து நின்றார்; விறு விறுப்பானதும் காரசார மிக்கதுமான நடையில் தலையங்கங்கள் வரைந்தார். இவருக்குத் துணை யாகத் திருவாளர்கள் ஏ. என். சிவராமன், ஏ. ஜி. வேங்கடாச்சாரி, ரா. வேங்கடராஜுலு, புதுமைப்பித்தன் போன்றோர் இருந்தனர். இவர் களது ஒத்துழைப்புடன் புது மிடுக்குடன் எடுப்பான தோற்றத்துடன் நல்ல அமைப்புடன் செய்திகளைத் திரட்டி அவற்றிற்குரிய தலைப்பிட்டு, விளக்கமாகவும் அதே சமயத்தில் சுருக்கமாகவும் தலையங்கங்கள் தீட்டி நல்லதோர் நாளிதழாகத் 'தினமணி' வளர்ந்து புகழ் பெற்றது. இப் பொழுது 'தினமணி' சென்னையிலும் மதுரையிலுமாக வெளியிடப்பட்டு வருகிறது. திரு. டி. எஸ். சொக்கலிங்கம் 'தினசரி'யை 1944இல் நாளித ழாகத் தொடங்கிச் சில ஆண்டுகள் வரை தமது எழுத்தாற்றலாலும் தமது கட்சி பலத்தாலும் அதை நடத்தி வந்தார். என்றாலும் திறம்பட்ட நிர்வாக வலு இல்லாததால் இதனை அவர் தொடர்ந்து நடத்த முடிய வில்லை. டி. எஸ். சொக்கலிங்கம் எழுதிய பல தலையங்கங்கள் இன்றும் நல்ல எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றன. 'ஜாமின் கெடுபிடி' போன்ற வற்றை இன்று படித்தாலும் அவை உயிர்துடிப்புடன் மிளிர்வதைக் காணலாம். "ஊழியன்" திரு. ராய. சொக்கலிங்கத்தை ஆசிரியராகவும் புதுமைப்பித்தன், தி. ஜ. ர. ஆகியோரைத் துணையாசிரியராகவும் கொண்டு சென்னையில் நடத்தப்பெற்ற நாளிதழாகும். ராய. சொ. திரு. வி. க. வின் இலக்கிய மரபு நடையைப் பின்பற்றினார். இதுவும் சில ஆண்டுகளுக்குப் பிறகு நின்று விட்டது.

திரு. எஸ்.வி. சாமியால் துவக்கப்பட்ட மாத இதழ் "பாரததேவி". நாளடைவில் நாளிதழாகவும் மாறியது. திருவாளர்கள் வா. ரா. ந. ராமரத்தினம் போன்றோர் இதன் ஆசிரியர்களாக இருந்தனர். இது கார சாரமாக எழுதி காங்கிரஸ் கட்சியைப் பின்பற்றி வந்த நாளிதழாகும். பின்னர் இது திரு. மீ. பக்தவத்சலத்தின் நிர்வாகத்தின் கீழ்ச் சில காலம், நடைபெற்று நின்று போனது. அண்மையில் "நவசக்தி", "ஜயபேரிகை" "ஜயக்கொடி", "தினச்செய்தி", "நாத்திகம்", "மணிக்கொடி" போன்ற நாளேடுகள் தோன்றிக் காங்கிரசைப் பின் பற்றுவனவாக உள்ளன.

## பிற இயக்க இதழ்கள்

"திராவிடன்" என்பது 1917இல் நீதிக்கட்சியினரால் தொடங்கி நடத்தப்பெற்ற நாளிதழாகும். இதன் ஆசிரியராக முதலில் திரு. பக்தவத்சலம் என்பவர் இருந்து, அடுக்குத்தொடர் உத்தியைக்

கையாண்டு எதிரிகளும் திராவிடனைப் படிக்கும்படி செய்தார். 'திராவிடன்' 'தேசபக்த'னுடனும் 'சுதேசமித்திர'னுடனும் அடிக்கடி கருத்துப் போர் தொடுப்பதுண்டு. இவை சூடும் சுவையும் நிரம்பி யிருக்கும். திரு. மணி. திருநாவுக்கரசு முதலியார் என்னும் மறைமலை யடிகளின் முதல் மாணவர் இதற்கு ஆசிரியராகவும் இருந்துள்ளார். நீதிக் கட்சியின் ஆட்சிக்குப் பின் இது நிலைத்து நிற்க முடியவில்லை. 'திராவிட'னுக்குப் பிறகு நீதிக் கட்சிக் கொள்கையை ஆதரித்த நாளிதழ் 'விடுதலை'. முதலில் சென்னையிலும் பிறகு ஈரோட்டிலும் மறுபடியும் சென்னையிலுமாக மாறி மாறி இது நடைபெற்று வந்துள்ளது. இதற்குத் திருவாளர்கள் பண்டித முத்துச்சாமி பிள்ளையும், சாமி சிதம்பரனும், சி. என். அண்ணுதுரையும், எஸ். குருசாமியும் ஆசிரியர்களாக இருந்துள்ளனர். திரு. சி. என். ஏ இதற்கு ஆசிரியராக இருந்த காலத்தில் தான், அவரது எழுத்தாற்றலைப் பல்வேறு துறைகளில் எடுத்துக்காட்ட நல்ல வாய்ப்பு ஏற்பட்டது. அவரது விறு விறுப்பானதும் எழுச்சியும் உணர்ச்சியும் ஊட்டக் கூடியதுமான வீரநடை பல்லோரை 'விடுதலை'யைப் படிக்கத் தூண்டியது; அதைப் படிப்போர் எண்ணிக்கையைப் பெருக்கியது; காங்கிரஸ் கட்சி ஏடுகளுக்குச் சுடச்சுடப் பதிலளிக்கக்கூடிய நாளிதழாகச் செய்தது. 'மறைந்தாயோ செல்வமே!' என்ற தலைப்பில் மறைந்த பன்னீர்ச்செல்வத்தைப்பற்றி அவர் எழுதிய இரங்கல் தலையங்கம், இன்று படித்தாலும் எவரையும் இரக்கத்தில் ஆழ்த்தும் வன்மையுடையதாகும். 'கல்கத்தா காய்ச்சல்' 'அதிர்ச்சி வைத்தியம்' போன்ற தலையங்கங்கள் புகழ்பெற்றவையாகும். இவருக்குப் பின் திரு. எஸ். குருசாமியால் உணர்ச்சியும் கிளர்ச்சியும் உண்டாக்கக் கூடிய தலையங்கங்களும், 'குத்தூசி'ப் பகுதிகளும், 'விடுதலை'க்குச் செல்வாக்கைத் தேடித் தந்தன. தற்போது திரு. கே. வீரமணி இதன் ஆசிரியராக உள்ளார். திராவிடக் கழகத் தலைவர் பெரியார் ஈ. வே. ரா. வின் கொள்கையை எடுத்துக் கூறும் நாளிதழாக இது உள்ளது.

சென்னையிலிருந்து சில ஆண்டுகளாக நடத்தப் பெற்ற நாளிதழ் 'சுதந்திரன்'. இதில் திருவாளர்கள் இரா. நெடுஞ்செழியன், இராதா மணாளன் போன்றோர் துணையாசிரியர்களாக இருந்து மரபு குன்றாத் தமிழில் செய்திகளைத் தந்துவந்தனர்; மாற்றாரும் போற்றும் நடுநிலைப் போக்குடைய நாளிதழாக இது விளங்கியது.

திரு. பா. தாவுத்ஷா அவர்களால் நடத்தப்பெற்ற கிழமை இதழ் "தாருல் இஸ்லாம்". பின்னர் நாளிதழாக மாறியது. நன்றாகத் தமிழை எழுதவும் பேசவும் வல்ல திரு. தாவுத்ஷாவால் இது திறம்பட நடத்தப் பெற்றது. இஸ்லாமிய சமூக ஆதரவு இருந்தும் இது நீடித்து நடைபெற வில்லை. இஸ்லாமிய சமுதாயத்திற்காக நடத்தப்பெற்ற மற்றொரு நாளிதழ் "முஸ்லீம்". இதுவும் சென்னையில் சில காலம் நடைபெற்று நின்றுபோனது.

"அறமுரசு" என்பதும் இஸ்லாமிய சமுதாய நாளிதழாகும். இதன் ஆசிரியர் வி. நூர்முகம்மது. வெளியிடுவோர்: மௌல்வி எச். முகம்மது இக்லீஸ். சென்னையிலிருந்து மே 1971 முதல் வெளிவந்து கொண்டிருக்கிறது.

சென்னையில் இருந்த 'லிபரேட்டர்' நிறுவனத்தாரால் நடத்தப்பட்ட நாளிதழ் "எங்கள் நாடு" திரு. வி. க. வினுல் தொடங்கி வைக்கப்பட்டது. ஆங்கில நாளிதழ்களைப் போல் செய்திகளை அழகாகத் தருவது, நல்ல தலைப்புகள் போடுவது, கவர்ச்சியான தோற்றத்துடன் ஏற்றமுடன் 'எங்கள் நாடு' வெளிவந்துகொண்டிருந்தது. இதில் திருவாளர்கள் பூங்காவனம், அஜீஸ், சடகோபன், மா. சு. ச. ஆகியோர் துணையாசிரியராக இருந்தனர். நிர்வாகத்தினரின் விருப்பு வெறுப்புக் காரணமாகத் தொடர்ந்து நடைபெருது துவண்டு விட்டது.

"ஜனசக்தி" 1937இல் ப. ஜீவானந்தத்தை ஆசிரியராகக் கொண்டு துவக்கப்பட்ட கிழமை இதழாகும். சமதர்மக் கொள்கை கொண்டு தொழிலாளர் நலத்தை நாடும் இதழாக நடத்தப்பெற்று வருகிறது. நாளிதழாகவும் சில காலம் நடத்தப்பெற்றுள்ளது. இப்பொழுது மீண்டும் கிழமை இதழாகச் சுருங்கியுள்ளது. இதற்குத் தோழர்கள் கே. முத்தையா, மாயாண்டி பாரதி முதலியோர் துணையாசிரியர்களாக இருந்துள்ளார்கள். தற்போது திரு. மணலி கந்தசாமியை ஆசிரியராகக் கொண்டு வெளிவருகிறது. "மாலைமணி" நாளிதழ் திரு. சி. என். அண்ணுத்துரையை ஆசிரியராகக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளைப் பரப்ப 10-8-1949இல் தொடங்கப்பட்டது. திருவாளர்கள் இரா. நெடுஞ்செழியன், காஞ்சி கலியாணசுந்தரம் ஆகியோர் இதற்குத் துணையாசிரியராக இருந்துள்ளனர். கழகக் கருத்து இதழாக முதலில் வெளிவந்த நாளிதழ் இதுதான். இதில் தலைப்புக்களும் தலையங்கங்களும் கவர்ச்சிகரமாக இருக்கும். சிலகாலம் நடைபெற்று இது நின்றுவிட்டது. பின்னர் இதே பெயரில் திரு. பி. எஸ். இளங்கோவை ஆசிரியராகக் கொண்டு சென்னையில் கிழமை இதழாக வெளிவந்தது. அடுத்து நாளிதழாக மாறித் தொடர்ந்து நடைபெற்றது. இது காங்கிரஸ் நாளிதழ்களுக்குத் தகுந்த முறையில் பதிலடி தரும் ஏடாக விளங்கியது.

"தினத்தந்தி" 'தந்தி'யை திரு. சி பா. ஆதித்தனுர் 1942-இல் மதுரையில் துவக்கினுர். அப்போது 1000 படிகள்தாம் அச்சடிக்கப்பட்டன. தற்போது சென்னை, மதுரை, திருச்சி, கோவை, திருநெல்வேலி ஆகிய நகரங்களில் "தினத் தந்தி" ஒரே நேரத்தில் சுமார் 3 லட்சம் படிகள் அச்சிடப்பட்டு வெளியாகின்றது. தமிழறியாதாரையும் தமிழ் படிக்கச் செய்துவிடுகின்றது 'தந்தி'!

தமிழ்நாட்டில் கூட்டுறவு முறையில் நடத்தப்பட்டுவரும் ஒரு நாளிதழ் "நவமணி" சென்னையிலிருந்து பல ஆண்டுகளாகக் கட்சிப் பற்றற்றமுறையில் செய்திகளை விரிவாகக் கொடுத்து வருகிறது, நவமணி, "எரியீட்டி" என்பது திரு. கலைமணியை ஆசிரியராகக்

கொண்டு சென்னையில் கிழமை இதழாகச் சில காலம் நடைபெற்றுப் பின்னர் நாளேடாக ஆகியுள்ளது. அறிஞர் சி. என். அண்ணாத்துரையின் ஆசிரியப் பொறுப்பில் தொடங்கியது "நம் நாடு". பின்னர் இரா. நெடுஞ்செழியன், சி. பி. சிற்றரசு, இரா. செழியன் ஆகியோர் ஆசிரியராக இருந்தனர். இதன் நிர்வாக ஆசிரியராக காஞ்சி கல்யாணசுந்தரம் தொடக்க முதல் இருநது வருகிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் அதிகாரபூர்வமான நாளிதழாகிய இது கொள்கை விளக்கமும் கருத்து விளக்கமும் செய்துவரும் நாளிதழாகும்; சென்னையிலிருந்து வெளியாகிறது. இது பொறுப்புமிக்க தலையங்கங்களைத் தாங்கிவருகிறது. "முரசொலி" திரு. மு. கருணாநிதியை முதல் ஆசிரியராகக் கொண்டு துவக்கப்பட்ட வார இதழ். பின்னர் நாளிதழாக மாறி, தி. மு க.வின் கொள்கையை விறுவிறுப்புடனும் கவர்ச்சியாகவும் உணர்ச்சியும் எழுச்சியும் கொள்ளும் வண்ணம் எழுதிப் புகழ்பெற்று வருகிறது. இதன் தற்போதைய ஆசிரியர் முரசொலி மாறன் ஆவர். 'சுழல்விளக்கு', 'மறவன் மடல்' போன்ற பகுதிகள் படிப்பவர்கள் மனத்தில் பசுமரத் தாணிபோல பதியக்கூடியனவாக உள்ளன 'மறவன் மடல்' என்ற பெயரில் தனிக்கிழமை இதழும் இப்போது வெளியாகிறது. திரு கே. முத்தையாவின் ஆசிரியப் பொறுப்பில் மதுரையிலிருந்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)யின் சார்பில் வெளியாகும் நாளிதழ் 'தீக்கதிர்'. 'செம்மலர்' இதே கட்சியின் கொள்கையைத் தாங்கி மதுரையிலிருந்து வெளியாகும் மாத இதழ்.

## மற்ற இதழ்கள்

1830இல் முழுவதும் தமிழாக வெளிவந்த மாத இதழ் "தமிழ்ப் பத்திரிகை" ஆகும். இதற்குப் பின் 1852இல் வெளியான "தின வர்த்தமானி"க்குத் தனித்த சிறப்புண்டு. இது செய்திகளைத் தந்ததோடு, இலக்கியம், விஞ்ஞானம் முதலிய துறைகளில் கவனம் செலுத்திப் புகழோடு விளங்கியது. சுதேசமித்திரன் (1882) துவங்குவதற்குமுன் வரை "தின வர்த்தமானியே" தமிழ் மக்களிடம் நிரம்பச் செல்வாக்குப் பெற்றிருந்த முதல் கிழமை இதழாகும். 1840இல் நாகர்கோயிலிலிருந்து தமிழில் வெளியிடப்பட்ட "பாலதீபிகை" எனும் இதழ்தான், இந்தியாவிலேயே சிறுவர்களுக்காகத் தொடங்கப்பட்ட முதல் இதழாகக் கூறப் படுகிறது. தமிழில் வெளிவந்த பெண்களுக்கான "அமிர்தவசனி"யின் முதல் இதழ் 1860இல் வெளிவந்தது. இது இந்துப் பெண்களின் மேன்மைக்காக வேண்டிப் பாடுபட்டது; இதில் கிறித்தவப் பெண் மணிகளும் ஈடுபாடு காட்டினர். இதனைத் தொடர்ந்து, 'ஜன விநோதினி' 1870இல் தொடங்கப்பட்டது. இதில் தாய்மார்களுக்குப் பயன்படும் குறிப்புக்களும், நல்வழிக்குரிய திட்டங்களும் இந்திய வரலாற்றிலிருந்து எடுக்கப்பட்ட உண்மைக் கதைகளும், முழுப்பக்க வண்ணப் படங்களும், வழிப்பயணம், துணிச்சலான செயல்கள் ஆகியவைபற்றிய விவரங்களும் ஒருங்கே அடங்கி யிருக்கும். இது 1870 முதல் 20 ஆண்டுகளாகத் துரைத்தனக் கல்விச் சங்கத்தாரால் வெளியிடப்பட்டு,

முன்னுளில் புகழ்பெற்ற இதழாகத் திகழ்ந்தது. இதில் வெளிவந்த கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து இதே பெயரில் பல தொகுதிகளாகப் பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார் பின்னுளில் வெளியிட்டுள்ளார் என்பது இங்குக் குறிப்பிடத் தகுந்ததாகும். படங்கள் நிறைந்தும், அறிவு விளக்கங்கள் மிகுந்தும், சிறுகதைகள் கொண்டும் 1887இல் வெளியான "மகாராணி"யும் அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த இதழ்களில் ஒன்ருகும். மற்ற இதழ்களில் "விவேகபோதினி' (1887), "விநோத ரசமஞ்சரி" (1891), "விவேக சிந்தாமணி" (1892), "மாதர் போதினி", (1911), "சக்கரவர்த்தினி" (1905), "ஜனுபிமானி", "ஞான சாகரம்" (1902), "ஞானபோதினி" (1900) முதலியவை குறிப்பிடத் தக்கனவாகும். இதில் 'மாதர் போதினி' தொகுதி முப்பதில் அதாவது 22-9-1914இல் வெளியான இதழிலே 'சந்திரலோக யாத்திரை' என்று நிலாப் பயணம் குறித்து வெளிவந்த கட்டுரை இடம் பெற்றிருக்கிறது.

பழங்கால இலக்கியப் பத்திரிகைகளிலே முதல் இடம் பெற்றுள்ளது "செந்தமிழ்" (1902) எனும் மாத இதழாகும். இது சேதுபதி மன்னரால் தொடங்கி வைக்கப்பட்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் இன்றுவரை நடத்தப்பட்டு வருகிறது. இதன் தொடக்ககால ஆசிரியராக திரு. ரா. இராகவ ஐயங்கார் இருந்தார்: தமிழ்ப் புலமை பெற்ற ஆசிரியர்களால் ஆராய்ச்சி நிரம்பிய கட்டுரைகள் எழுதப்பட்டு, இலக்கியப் பெட்டகம் எனக் கருதப்பட்டு வரும் திங்கள் இதழாகும். எல்லா மொழிகளையும் இடரின்றி எழுதவல்ல ஏகலிபி என்னும் ஒன்றிற்குப் பாண்டியன் எனப் பெயரிட்டுத் திரு. நாராயணையங்கார் இதில் ஒரு தொடர்கட்டுரை வரைந்துள்ளார். இது வரலாற்று மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படக் கூடியதாகும். "ஞானசாகரம்" (1902) எனும் இதழுக்கு மறைமலையடிகள் ஆசிரியராக இருந்து இலக்கியம், ஆராய்ச்சி, திறனுய்வு போன்ற பல துறைகளில் தொடர்ந்து எழுதி வெளியிட்டு அறிவுக் கடல் எனப் புகழ் பெற்றுள்ளார். "ஆனந்த போதினி" எனும் மாத இதழ் 1915இல் தொடங்கப்பட்டு, ஆரணி குப்புசாமி முதலியார் முதல் நாரண துரைக்கண்ணன் வரை பல ஆசிரியர்களைக் கொண்டு, முற்காலத்தில் புகழ்பெற்றிருந்த அறிவாளிகளின் எழுத்தோவியங்களை நிரம்பப்பெற்று, வெள்ளி விழாவைக் கொண்டாடி, பொன் விழாவைக் காணவேண்டிய நேரத்தில் நின்றுபோனது வருந்தத்தக்கது.

"செந்தமிழ்ச் செல்வி" எனும் திங்கள் இதழ் 1923 முதல் சென்னையிலிருந்து சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகிறது. இதில் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் வரலாற்றுக்கும் பயன்படும் அரிய கட்டுரைகள் வெளிவருகின்றன. இதன் சிலம்புகளுக்கு என்றுமே ஏற்றமுண்டு. "தமிழ்ப் பொழில்" 1925 முதல் தஞ்சையிலுள்ள கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினரால் வெளியிடப்பட்டுவரும் மாத இதழாகும். இது தமிழின் பழைய இலக்கியத்தைப் பேணிக் காத்து வருகிறது. இதிலும் பல அரிய

கருத்துக்கள் தொடர்ந்து வெளிவருகின்றன. இது இலக்கிய மாணவர்களுக்கு இன்பம் பயக்கக்கூடிய நல்லிதழாக உள்ளது.

''கலைமகள்'' இது 'திரிவேணி' எனும் ஆங்கில இலக்கிய இதழைப் போலச் சிறந்து நடத்தவேண்டி 1932இல் தொடங்கப்பட்ட மாத இதழாகும். இது நான்காண்டுகள்வரை கௌரவ ஆசிரியர்கள் மேற்பார்வையிலும் 1936 முதல் திரு. கி. வா. ஜகன்னாதன் ஆசிரியப் பொறுப்பிலும் நடைபெற்று வருகிறது. இதன் பழந்தொகுதிகளில் விஞ்ஞானம், இலக்கியம் முதலிய பொருளாழமிக்க 22 'விஷயங்கள்' வெளியிடப்பட்டுள்ளன. பின்னர்ப் பொதுமக்கள் எல்லோரும் வாங்கிப் படிக்கும் வண்ணம் அதன் 'உள்ளுறை' சுருங்கி எளிமையாகி விட்டது.

திருவாளர் எஸ். ஜி. இராமானுஜுலு நாயுடுவை ஆசிரியராகக் கொண்டு 1904இல் திருச்சியிலிருந்து ''பிரஜாநுகூலனும்'' சென்னையிலிருந்து ''அமிர்தகுணபோதினி' யும், ''ஆனந்தகுண போதினி''யும் வெளியாகியுள்ளன. சீர்திருத்தக் கருத்துக் கொண்டவரான திரு. அ. மாதவய்யாவை ஆசிரியராகக் கொண்டு ''தமிழர் நேசன்'' எனும் மாத இதழ் 12 ஆண்டுகள் நடைபெற்றுச் சிறப்படைந்துள்ளது. இதே ஆசிரியரால் ''பஞ்சாமிர்தம்'' எனும் திங்கள் இதழ் பலபொருள் பற்றிப் படங்களுடன் கூடி 1924 முதல் வெளியிடப்பட்டது.

மாத இதழ்களில் ''சக்தி''க்கு அழியா இடம் உண்டு. 1940இல் சென்னையில் பெரிய அளவில் தொடங்கிய இவ்விதழ் பின்னர் சுருங்கிய தென்றாலும், புதிய முறையில் எடுப்பிலும் தொடுப்பிலும் முடிப்பிலும் மிகவும் எழில் நிரம்பியதாக வெளிவந்தது. இது திரு. வை. கோவிந்தனை நிர்வாகியாகவும் தி. ஜ. ர., சுப. நாராயணன், ரகுநாதன் ஆகியோரை ஆசிரியர்களாகவும் கொண்டு பல ஆண்டுகள் நடைபெற்றது. முகப்பில் தமிழ்ப் பெருமக்களின் உருவப் படங்களைத் தாங்கி, புதுமை நோக்குடன் விரிந்த மனப்பான்மையுடன் நடைபெற்ற அருமையான திங்கள் இதழ் இதுவாகும்.

''ஆனந்த விகடன்'' 9-3-1926இல் சென்னையிலிருந்து மாத இதழாகத் தொடங்கிப் பிறகு 1928 முதல் திரு. எஸ். எஸ். வாசனை நிர்வாக ஆசிரியராகக் கொண்டு மாத இருமுறையாகிப் பின்னர்க் கிழமை இதழாக மாறி, சிரிப்பூட்டுதலும், சிந்திக்கவைத்தலும், கருத்துப்படம் போடுவதிலும், ஆடல் பாடல்களைத் துய்க்கச் செய்வதிலும் கருத்தைச் செலுத்தி வளர்ந்து தமிழர் வாழும் இடங்களிலெல்லாம் சிறந்து மிளிர்கிறது.

திரு. ரா. கிருஷ்ணமூர்த்தியை ஆசிரியராகக் கொண்ட ''கல்கி'' சென்னையிலிருந்து 1-8-1941 முதல் பிறை இதழாகத் துவங்கியது; பின்னர் இவ்விதழ் மாத மும் முறையாகி, அடுத்து வார இதழாக மாறியது ''குமுதம்'' இதழ் முதலில் மாத இதழாகத் தொடங்கிப் பிறகு பிறை இதழாகவும், அடுத்து மாத மும்முறை இதழாகவும், கிழமை இதழாகவும்

வளர்ச்சியடைந்துள்ளது. திரு. எஸ். பி. அண்ணுமலை இதன் அசிரியராக உள்ளார். சில சமயம் தலை எது வால் எது என்று கண்டுபிடிப்பது கடினமாக அமைக்கப்படுவதுண்டு. ஏதாவது மாற்றங்கள் செய்து கொண்டிருப்பதே இதன் புதிய உத்திகளாகும். குறைந்த காலத்திற்குள் 'ஆனந்தவிகடன்' 'கல்கி'யைப் போன்று எல்லோர் கையிலும் இருக்கக்கூடிய பொழுதுபோக்கு இதழாக மாறிவிட்டுள்ளது.

## துறைதோறும்

மருத்துவத் துறையில் ஆயுர்வேத பாஸ்கரன் (1908), வைத்திய போதினி (1910), சித்தர் திரு உள்ளம் (1920), தமிழ் வைத்தியக் களஞ்சியம் (1922), தமிழ் வைத்தியம் (1923) மருத்துவன் (1929), மூலிகைமணி முதலான பதினைந்துக்கு மேற்பட்ட இதழ்கள் வெளிவந்துள்ளன. கூட்டுறவு, நாட்டு நிருவாகம் முதலிய துறைகளிலும் 1910 முதலே பத்திரிகைகள் வந்துள்ளன. "மாதச் சட்டப்பத்திரிகை" என்னும் சட்டத் தமிழ் இதழ் 1893இல் தொடங்கியுள்ளது. இத்துறையில் வெளிவந்த வக்கீல் குமாஸ்தா ஜர்னல் (1914), பத்திரலேகரி, (1922), வக்கீல் (1949) 'லாயர்' முதலியனவும் குறிப்பிடத்தக்கவை.

இவை தவிர, அச்சுத் தொழில், ஆடல் பாடல், விஞ்ஞானம் முதலான துறைகளிலும் 1900 முதலே இதழ்கள் வருகின்றன. 1900த்தில் தொடங்கிய 'விநோத விசித்திப் பத்திரிகை' மருந்துகள், களிம்புகள், வாணவேடிக்கை முதலியவைபற்றி எழுதியது. மஞ்சரி, திங்கள், குமரி மலர், காதம்பரி, விருந்து முதலிய திரட்டு இதழ்களோடு கவிதை இதழ்கள் பலவற்றையும் பலர் நடத்தியுள்ளார்கள். திரட்டு இதழ்களில் 'மஞ்சரி' செல்வாக்குடன் உள்ளது; கவிதை இதழ்களில் பாரதிதாசனின் 'குயில்' குறிப்பிடத்தக்கது.

திரு. சுரதா, திரு. தெசிணி, திரு. பொன்னடியான், திரு. ப. பரமசிவன் என்பவர்கள் முறையே, 'சுரதா', 'கவிதை', 'முல்லைச்சரம்', 'எழிலோவியம்' என்னும் பெயர்களில் கவிதை இதழ்களை நடத்தி வருகிறார்கள்.

## முடிவுரை

தமிழ்ப் பத்திரிகை உலகைக் கூர்ந்து கவனித்து வந்தால் அது பல காலக் கட்டங்களைத் தாண்டி வந்திருப்பது தெரியவரும். அதன் தொடக்க காலத்தில் எழுந்த இதழ்கள் ஆழமான, நுட்பமான பொருள்களைக் குறித்தெல்லாம் மிகவும் கவனத்துடன் எழுதி, படிப்பவர்களின் சிந்தனையை மேலும் மேலும் பெருகச் செய்வதில் முனைப்பாக இருந்து வந்துள்ளன. அக்கால இதழ்களின் ஆசிரியர்கள் ஆழ்ந்த அறிவும் மக்களை விழிப்புறச் செய்வதில் வேணவாவும் கொண்டிருந்தார்கள்.

தமிழ்ப் பத்திரிகை உலகில் இலக்கியம் பயின்றவர்களின் செல்வாக்கு ஓங்கிய காலமுண்டு; அரசியல்வாதிகளின் செல்வாக்கு

முண்டு; பணம் படைத்தவர்களின் பிடிப்புமுண்டு; மரபுவழி நடப்பவர்களும் உண்டு; மரபே வேண்டாம் என்பவர்களும் உண்டு. இங்குத் தமிழ்மீது உண்மையிலே பற்றுக்கொண்டு அதனை மேம்படுத்த நினைப்பவர்களுமுண்டு, பாடுபட்டவர்களுமுண்டு; பாடுபடுபவர்களும் உண்டு. குறைகள் பல இருந்தாலும் இந்தியாவிலே அதிகப்படியாகச் செலவழியும் தாய்மொழிப் பத்திரிகையில் தமிழகமே முதலிடம் வகிக்கிறது.

—நன்றி: தில்லித் தமிழ்ச் சங்கம் வெள்ளி விழா மலர் 1971.

VII

# கடந்த கால் நூற்றுண்டுக் காலத்தில் தமிழ் இலக்கியப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும்

— நா. பார்த்தசாரதி

(இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கக் கட்டுரை)

## தமிழில் இலக்கியப் பத்திரிகைகள்

இக்கட்டுரையில் தமிழ் இலக்கியப் பத்திரிகைகளின் வளர்ச்சியைப் பற்றிக் கூறுவதற்கு முன் இந்தியாவிலும் தமிழகத்திலும் நவீன பத்திரிகைத் துறை (Modern journalism) எப்போது பரவலாக அறிமுகத்துக்கு வந்தது என்பதை ஓரளவு முன்னுரையாகச் சுருக்கித் தரவேண்டுவது இன்றியமையாதது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய பிரிவுகளுக்கும், இயல், இசை, நாடகம் ஆகிய பிரிவுகளுக்கும் தமிழில் இலக்கணம் இருந்ததுபோல் பத்திரிகைத் துறைக்கு முன்னிலக்கணம் எதுவும் இல்லை. எப்படி நவீன இலக்கியத் துறைகளான சிறுகதை, நாவல், விமர்சனம் முதலியன (Modern Literature) நமக்கு ஆங்கில மொழியின் தொடர்பால் கிடைத்தனவோ அப்படியே நவீன பத்திரிகைத் துறையும் ஆங்கில மொழியின் தொடர்பால் நமக்குக் கிடைத்த ஒன்ருகும். தேசிய விடுதலை இயக்கத்தைப் பற்றிய உணர்வு National Movement) தோன்றிய காலத்தில்—அந்த இயக்கத்துக்கு உறுதுணையாகப் பயன்படும் என்ற காரணத்திஞல்தான் பத்திரிகைத் துறையைப்பற்றியே இந்தியாவிலும் தமிழகத்திலும் முதன் முதலாகச் சிந்திக்க தொடங்கிஞேம். அந்தச் சிந்தனை அப்போது தினப்பத்திரிகை (Daily Newspaper) செய்திப் பத்திரிகை (News magazine) அளவில்தான் வளர்ந்தது. பாரதியாரின் ‘இந்தியா’ சுதேசமித்திரன், இந்து, தினமணி, தமிழ் நாடு போன்றவை இவ்வாறு தோன்றியவையே. தமிழகத்தைத் தவிரத் தமிழ் வழங்கும் பிறநாடுகளான இலங்கை, மலேசியா, பர்மா போன்ற பிற பகுதிகளிலும்

தொடக்க காலப் பத்திரிகைத் தொழில் இந்த எல்லையில்தான் இருந்தது. வாரப் பத்திரிகை, மாதப் பத்திரிகை, இலக்கியப் பத்திரிகை, நகைச் சுவைப் பத்திரிகை, தொழில் துறைப் பத்திரிகை என்றெல்லாம் பிரிந்து பின்பு இன்றுள்ள நிலைக்குக் கிளைத்தது இந்த ஆரம்ப எல்லையி லிருந்துதான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்தப் பிரிவுகளில் இலக்கியப் பத்திரிகை (Literary journal) என்ற பகுதியை மட்டும் எடுத்துக்கொண்டாலும் கடந்த கால் நூற்றாண் டுக்கால அளவில்தான் அது வளர்ச்சியும், வளமும், பல்வேறு வடிவமும் பெற்றிருக்கிறது. தொடக்க காலத் தமிழ் இலக்கிய ஏடுகள் யாவும்—இலக்கண-இலக்கிய ஆராய்ச்சிகளிலும்—புலவர்களின் விவாதங் களிலுமே கவனம் செலுத்தின. பாமரத் தமிழ் மகன் அவற்றில் ஈடுபாடு கொள்ள அவை வாய்ப்பளிக்கவில்லை. மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடான 'செந்தமிழ்', கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடான 'தமிழ்ப் பொழில்', சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் 'செந்தமிழ்ச் செல்வி'—ஆகியவற்றை இந்தத் தொடக்க கால இலக்கிய ஏடுகளில் சேர்த்துக் கொள்ளலாம். இவை தமிழ் இலக்கியப் பத்திரிகைக ளாயினும், நவீன பத்திரிகை உத்திகளை இவை தேடவில்லை. புலமை எல்லையிலேயே (Intellectuals rank) இவை இருந்தன. நச்சினார்க் கினியன், விவேகபாநு, வ. வே. சு. அய்யரின் பால பாரதி, விவேக சிந்தாமணி, பஞ்சாமிர்தம் போன்றவற்றையும் ஏறத்தாழ இந்தத் தொடக்க கால இலக்கிய ஏடுகளில்தான் இணைக்கவேண்டும். நவீன இலக்கியப் பத்திரிகைகளின் வளர்ச்சிக் காலம் என்பது மணிக்கொடி, கலைமகள், திரு. வி. க-வின் நவசக்தி, சந்திரோதயம், பொன்னி ஆகியவற்றிலிருந்து தொடங்குகிறது: தமிழ் இலக்கியப் பத்திரிகை களில் புதுமையும், செழிப்பும் பெருகிய காலம் இதுதான்.

**மணிக்கொடி—காலம் :**

மணிக்கொடி, சுதந்திரச் சங்கு, சக்தி, பாரதமணி, கலைமகள் அ. சீ. ராவின் 'சிந்தனை' காலத்துக்கு முந்திய இலக்கியப் பத்திரிகைக ளான செந்தமிழ், தமிழ்ப் பொழில் போன்றவற்றில், ஓர் இலக்கண முடிவு பற்றிய விவாதமோ, ஒரு பழம் பாடலுக்குப் பொருள் காண்பதில் இருபெரும் புலவர்களுக்கிடையிலுள்ள கருத்து வேறுபாடோ, கல்வெட்டு, சாஸன ஆராய்ச்சிகளோதான் இலக்கிய அம்சங்களாகக் கருதப்பட்டன.

ஆனால், மணிக்கொடி, சுதந்திரச் சங்கு, சக்தி, சிந்தனை, கலைமகள், பிரசண்ட விகடன், குமார விகடன், சுதேசமித்திரன் வாரப் பதிப்பு ஆகிய ஏடுகள் அந்த நிலையை மாற்றி, சிறுகதை, நாவல், இலக்கியத் திறனாய்வு (Literary Criticism) புத்தக விமர்சனம் (Book Review) ஆகிய அம்சங்களையும் இலக்கிய ஏட்டுக்குரியவைகளாக்கி வளர்த்தன. தமிழில் புனைகதை (Fiction) அம்சத்துக்கு இலக்கிய அந்தஸ்து (Literary merit) ஏற்பட இந்தப் பத்திரிகைகளே முதன்

முதலில் பாடுபட்டன என்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது. புதுமைகளையும் சோதனை இலக்கியத் துறைகளையும் (Experimental ways) வளர்க்க இந்த ஏடுகளின் காலத்துக்குப் பின்பே அதிக வாய்ப்புக் கிடைத்தது. இலக்கியப் போக்குக்கள் (Literary trends) உலக இலக்கியத் தரத்துக்குப் பேசத்தக்க சில நிலைமைகள் இந்த இலக்கியப் பத்திரிகைகளால்தான் அறிமுகமாயின. இந்தக் காலகட்டத்தில் மேலை நாட்டின் இலக்கியத் துறைகளோடு தமிழ் எழுத்தாளர்களுக்கு ஏற்பட்ட பரிச்சயமும் இதற்கு ஒரு காரணம். இந்தப் பத்திரிகைகள் வகுத்த வழியில் பின்னால் இலக்கிய அம்சங்களோடு கவர்ச்சிகரமான பொது மக்கள் அம்சங்களையும் (Features of Mass scale journalism) கலந்து தமிழில் சில பத்திரிகைகள் வந்தன. அவை ஹனுமான், இந்துஸ்தான், அணிகலம் போன்றவை. இதே காலத்தில்தான் ரங்கூனிலிருந்து வெ. சாமிநாத சர்மாவின் 'ஜோதி'யும் வெளிவந்தது. பின்னாளில் வெளி வந்த கிராம ஊழியன், கலா மோகினி, காலச் சக்கரம், காதம்பரி, தேனி, சூறாவளி போன்ற பத்திரிகைகளுக்கு எல்லாம் கூட மணிக்கொடி, கலைமகள் ஆகியவை தான் தூண்டுதலாக அமைந்தன. இலக்கியப் பத்திரிகை என்ற பெயரின் பொருள் முழுமை அடையத் தொடங்கிய சமயம் இதுதான் என்று கூறவேண்டும். 'மணிக்கொடி' நடந்து நின்று விட்டாலும் தமிழில் இலக்கியப் பத்திரிகைகளின் வரலாற்றை எழுத அதுதான் மைல் கல்லாக இன்னும் இருக்கிறது. மணிக்கொடியும், கலைமகளும், ஒரு கால எல்லையில் தமிழ் இலக்கியத்தின் புதிய கிளைக ளில் பலசோதனைகளும், சாதனைகளும், செய்து பார்த்த ஏடுகள். அந்தச் சோதனைகளும் சாதனைகளுமே பிற்காலத்தில் பல இலக்கியப் பத்திரிகை களுக்கு முன்மாதிரியாக அமைந்தன. பத்திரிகைத் தொழிலின் இலக்கிய ரீதியான வளம் இந்த இரண்டு பத்திரிகைகளாலும் ஒரு காலத்தில் துல்லியமாகவும், துலாம்பரமாகவும் நிரூபிக்கப்பட்டன. தமிழில் உரை நடை வளர்ச்சியின் திருப்பு முனைக்காலமாக இந்தப் பத்திரிகைகளின் காலம் இருந்ததனால்—இவை புதிய புதிய இலக்கிய வகைகளை வாசகர் களுக்கு அறிமுகப்படுத்தின. பாரதியின் தூண்டுதல் (Influence of Bharathi) இந்தக் காலகட்டத்துத் துணை செய்தது. வசன நடையில் கவிதையின் நளினமும், கவிதையில் வசன நடையின் எளிமையும் விரவுகிற அழகிய தமிழ் அமைப்பைப் பாரதி இந்தப் பத்திரிகைகளுக்கும் இவற்றில் எழுதியவர்களுக்கும் உதவியிருந்தார். பாரதியுகத்தின் உத்வேகம் தமிழ்ப் பத்திரிகைகளின் இலக்கிய எழுச்சிக்கும் துணை புரிந்தன. பிற்காலத்தில் பாரதிதாசனின் 'குயிலும்' சுரதாவின் 'காவியமும்' கவிதை இலக்கிய ஏடுகளாக நடக்கவும் இந்தப் பாரதி யுகத்துத் தூண்டுதலே முன் விளைவாக இருந்திருக்க வேண்டும் என்று அநுமானிக்க இடமிருக்கிறது. தமிழ் இலக்கிய ஏடுகளை ஒரு குறிப்பிட்ட நம்பிக்கையூட்டும் நிலைக்குக் (Promising Stage) கொணர்ந்த காலம் இதுதான்.

## இடைக்காலநிலைகள்

அதன் பின் இடைக்கால எல்லையில் ஜனரஞ்சக அம்சமும் பத்திரிகைத் தொழிலில் கவனிக்கப்பட்டது. 'கல்கி'யின் எழுத்துப்பணி

யால் விகடன், கல்கி, போன்ற இதழ்கள் சிறப்படையத் தொடங்கின. அவை இலக்கிய எல்லையிலிருந்து பெருகித் தம்மை இன்னும் எளிமை யாக்கிக்கொண்டு வியாபாரமாகவும் மாறின. 'இலக்கியப் பத்திரிகைகள்' என்ற பெயர் குன்றிப் 'பத்திரிகை இலக்கியம்' என்று குறிப்பிடத்தக்க சில துணை அம்சங்கள் பத்திரிகைத் தொழிலுக்குக் கிடைத்தன.

அரசியல் தலையங்கம், நகைச்சுவைத் துணுக்குக்கள், தொடர் கதை, போன்ற அம்சங்கள் மிகமிக எளிமையாக்கப்பட்டன. இலக்கிய நிலைகளை விடப் பத்திரிகைத் திறன்கள் (journalistic talents) கவனிக் கப்பட்டன. எவ்வளவு இலட்சம் பேர் படிக்கிறார்கள் என்பதே பெருமை யாக மாறிய காலம் இதுதான். இலக்கியப் பத்திரிகைகள் தங்கள் நிலைக்குப் பயந்து, தயங்கிய காலமும் இதுதான். ஏறக்குறைய மேலை நாட்டுப் பத்திரிகைத் துறையின் விளைவு (Impact of Western journalism) இந்தச் சமயத்தில் தமிழிலும் ஏற்பட்டது. பத்திரிகைத் துறை செல்வாக்கான ஒரு தொழிலாக, ஜனநாயக சாதனமாக மாறியது; மாற்றப்பட்டது. இரண்டொரு இலக்கியப் பத்திரிகைகளையும் இந்த நிலை நன்கு பாதித்தது. இந்தச் செல்வாக்கின் முழுப்பயனைக் 'குமுதம்' போன்ற வெகு ஜன சஞ்சிகைகள் விளைவுறச் செய்தன. இதே சமயத் தில் தென்மொழி, முத்தாரம், போன்ற ஏடுகள் மொழியுணர்ச்சிக்காகப் பாடுபடத் தோன்றியபோது தமிழ்ப்பொழில் போன்ற பழைய ஏடுகளின் நோக்கத்துக்குப் புதிய விறுவிறுப்புப் பிறந்தது.

வெகுஜன சஞ்சிகைகளின் அமோக வளர்ச்சி இலக்கியப் பத்திரி கைக் காரர்களுக்குப் பயத்தை அளித்தது. இந்தப் பயம் இரண்டுவித விளைவுகளை உண்டாக்கியது. வெகுஜன சஞ்சிகைகளிலிருந்து வேறு பட்ட தரமான நல்ல இலக்கியப் பத்திரிகைகளை நடத்த வேண்டுமென்ற பிடிவாதம் சிலருக்கு உண்டாகவும். வெகுஜன சஞ்சிகைகளை ஆதரிப் போர் அந்த வழியிலேயே முற்றிலும் போய்விடவும் நேர்ந்தது. இதனால் இலக்கியத் திறனுள்ள பத்திரிகைகளில் கவனம் செலுத்துவோரும்— அத்தகைய வாசகர்களும் – தனித் தனியே தங்கள் துறைகளில் அக்கறை செலுத்தத் தொடங்கினர். தமிழ் இலக்கியப் பத்திரிகைகளின் வளர்ச் சிக்கு இந்த நிலை ஓரளவு உறுதுணை புரிவதாயிருந்தது—என்பதையும் மறந்து விடுவதற்கில்லை. இலக்கியத் தரமான குழு ஒன்று எழுத்துலகி லும் வாசகர் உலகிலும் உண்டாகவும் இந்த வெகுஜன ரஞ்சகமான இதழ்களே மறைமுகமான தூண்டுதல்களாக இருந்தன - என்று அநு மானிக்கலாம்.

வெகுஜனப் பத்திரிகைத் துறை ஆதிக்கம் (Influence of Popular journalism) இலக்கியரீதியான தனித்தன்மை, அசல் தன்மை (Individuality, Originality) உள்ள பத்திரிகைகளைக் கூடப் பாதிக்க நேர்ந் தது. இந்தக் காலக்கட்டத்தில் இப்படிச் சோதனையைத் தாங்க முடியா மல் நெல்லையிலிருந்து வந்த சாந்தி, சென்னையிலிருந்து வந்த சரஸ்வதி, எழுத்து, இலக்கிய வட்டம் ஆகிய இலக்கிய ஏடுகள், பம்பாய் விந்தியா, போன்றவை சிரமப்பட்டுப் போராடின.

மலேசியாவில் மலைமகள், ஈழத்தில் 'புதுமை இலக்கியம்' 'மரகதம்' போன்ற இதழ்களும் இதே காலகட்டத்தில் இலக்கியத்தரமான செயல்களைச் செய்ய முயன்றன. ரங்கோனில் செய்தி இதழாகப் பர்மா நாடு ஒன்று மட்டுமே இந்தச் சமயத்தில் தமிழ் ஏடாக இருந்தது. கலைமகள் காரியாலயம் வெளியிட்டு வளர்த்துவரும் மஞ்சரி, கோவைக் கலைக்கதிர், தாமரை 'தென் மொழி', போன்றவைகூட வெகுஜனக் கவர்ச்சி இதழ்களின் அளவு செல்வாக்குப் பெற முடியவில்லை.

## தற்கால நிலைமை

சரஸ்வதி, இலக்கிய வட்டம் போன்ற பல இலக்கியப் பத்திரிகைகள் சோதனையைத் தாங்காது நின்றே விட்டன. எழுத்து, தாமரை ஆகிய இதழ்கள், புதுக்கவிதை, விமர்சனம், (Free Verse, Literary criticism) ஆகிய துறைகளில் சோதனை செய்து வருகின்றன. கலைமகள் 1950-ம் ஆண்டுக்கு முன் சிறுகதைத் துறையில் செய்த சோதனை முயற்சிகள் போல் இப்போது செய்வதில்லை. புதிதாகத் தோன்றிய தீபம் மாத இதழ்—இலக்கிய விவாதங்கள், நாடகம், சிறுகதை பற்றிய இலக்கிய ஆராய்ச்சிகள், போன்றவற்றிலும், திறனாய்விலும், தரமான சிறுகதைகளை வெளியிடுவதிலும் விறுவிறுப்பாகக்கவனம் செலுத்தி வருகிறது. பெரும்பாலான பத்திரிகைகள் கதைகளை மட்டுமே இட்டு நிரப்புவதோடு இலக்கியப் பணி நிறைந்து விடுவதாக நினைக்கும் இந்த நாளில் புதிய சோதனைகளைச் செய்ய இலக்கியப் பத்திரிகைகள் கூடத் தயங்குகின்றன.

நாட்டின் அரசியல் பொருளாதார, சினிமா வேகங்கள் நிதானமான போக்குள்ள பத்திரிகை அம்சங்களை ஊக்குவிக்கத் துணை செய்யவில்லை ஒரு சினிமா பத்திரிகை இலக்கிய அம்சங்களில் எதுவுமே இன்றி வெளிவர முடியும் என்பதுபோல் ஓர் இலக்கியப் பத்திரிகை சினிமா அம்சங்கள் எதுவும் இன்றி வெளிவர முடியாது என்ருகிவிட்டது தற்கால நிலைமை. இலக்கியத்தின் புதிய பழைய துறைகளில் ஆழ்ந்தகன்ற கவனம் செலுத்தும் பத்திரிகைகள் சிலவாவது வேண்டும். மொழியின் ஜீவாதாரமான பிரச்னை இது. விதை நெல் சேமித்துவைத்தால்தான் மறுபடி பயிரிட முடியும். இத்தகைய இலக்கியப் பத்திரிகைகள் மொழிக்கு விதை நெல்லைப்போன்றவை. நாளைய இலக்கிய முயற்சிகளைப் பயிர் செய்ய இவை உதவுவதைப் போல வேறெவையும் உதவமாட்டா என்ற உணர்வு நமக்கு இருந்தாலே நல்லது.

## இலக்கிய ஏடுகளின் எதிர்காலம் :—

தமிழ் இலக்கிய இயக்கம் இப்போது வளர்முகமாக இருக்கிறது. அங்கங்கே எழுத்தாளர் சங்கங்கள், வாசகர் பேரவைகள் தோன்றிப் புதுமை இலக்கியம் பற்றி ஆழ்ந்து சிந்திக்க முனைந்துள்ள காலம் இது. இந்தக் காலத்திலும் எதிர்காலத்திலும் இலக்கியத் தரமான பத்திரிகைத் தொழில் (Literary journalism) கொஞ்சம் காலூன்ற வாய்ப்பிருக்கிறது. விமர்சனம், திறனாய்வு, இலக்கியத்தில் சோதனை முயற்சிகள், விவா

தங்கள், போன்றவற்றை நடத்தும் தீவிரமான இலக்கியக்கொள்கை உள்ள பத்திரிகைகளுக்கு எதிர்காலம் இருக்கிறது. எவ்வளவு வெகு ஜனப் பத்திரிகைகள் அழுத்திலுைம் இலக்கியப் பத்திரிகைகள் வளர முடியும் வளர வேண்டும்.

அகநானூற்றிலோ புறநானூற்றிலோ ஒரு பாடலுக்கு விளக்கமும், நயமும் கூறிஞலோ படம் வரைந்து விட்டாலோ அதுவே இலக்கியப் பத்திரிகையின் இலட்சணம் என்று கருதிய காலம் மாறி இலக்கியப் பத்திரிகையின் இலக்கிய நோக்கும் (Literary aim) இலக்கியப் பயனும் (Literary output) நன்கு புரிந்துகொள்ளப்படும் காலமாக எதிர்காலம் இருக்கும். இலக்கியப் பத்திரிகை வளர்ச்சியில் கருத்துள்ள யாவரும் துடிப்பான இந்த எதிர்காலத்தை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். பல்லாயிரம் விதமான பத்திரிகைகள் ஒரு மொழியில் நடந்து வந்தாலும்—அந்த மொழியின் நாளைய நிதிக்குவை என்ற சேமிப்புக்குப் பொருள் வழங்குபவை இலக்கிய ஏடுகளே என்பதை நினைவு வைத்துக் கொள்ளவேண்டும். வாசகர்களில் நல்ல கூட்டம் ஒன்று வெகுஜனப் பத்திரிகைத் தரத்தில்மட்டும் திருப்தி காணுமல் இலக்கியத்தரமான பத்திரிகைகளை எதிர்பார்க்கும் எதிர்காலம் உருவாகவேண்டும். மொழியின் நிலைத்த சிறப்பிற்கு ஒரு காலத்தில் கவிதை இலக்கியம் எப்படி ஓர் அச்சாணியாக இருந்ததோ அப்படியே இலக்கியப் பத்திரிகைகளும் மொழிக்கு அச்சாணியாக இருக்க ஏற்றவை யாகும். 'என்கௌண்டர்' (Encounter) மாடர்ன் ரெவ்யூ (Modern Review) தமிழ்க் கலை (Tamil Culture) போன்ற இதழ்கள் தமிழில் பெருகி வளர வேண்டும். ஒரு நல்ல இலக்கியப் பத்திரிகை பல்லாயிரம் பேருக்குக் கற்பிக்கும் பேராசிரியனைப் போன்றது தரமான பத்திரிகைத் தொழிலுக்கு இலக்கியப் பத்திரிகைகளே முன்னேடிகளாக இருக்க முடியும். பத்துத் தரக்குறைவான பத்திரிகைகளிலிருந்து ஒரு நல்ல விளைவும் ஏற்படமுடியாது. அதேசமயத்தில் ஒரு தரமான இலக்கியப் பத்திரிகையிலிருந்து பத்து நல்ல பத்திரிகைகளாவது விளையமுடியும் என்று கூறி இந்தக் கட்டுரையை முடிக்கிறேன்.

## VIII

# தமிழில் செய்தி இதழ்கள்

இரா. நடராசன் பி.ஏ.,

துணையாசிரியர், தமிழ்க்கலைக் களஞ்சியம்

(உலகத் தமிழ் மாநாட்டுமலரில் வெளிவந்த கட்டுரையின் சில பகுதிகள்)

தமிழ் நாட்டில் *1830* வரையில் தமிழில் தனி இதழ்கள் தொடங்கப் பெறவில்லை. இத்துறையிலும் முதல் முயற்சி மேற்கொண்டவர்கள் பாதிரிமார்களேயாவர். சென்னையிலிருந்த கிறித்தவ சமயப் பிரச்சாரக் கழகம் (Religious Tract Society) *1831*-இல் செய்தி இதழ் ஒன்றை முழுவதும் தமிழில் தொடங்கியது அடுத்து 1832-இல் 'மெட்ராஸ் கிரா

னிக்கிள்' (Madras Chronicle) என்ற பெயரில் தமிழிலும், தெலுங்கிலும் இதழ்கள் வெளியிட மூவர் கூட்டாக அரசினரிடம் அனுமதி வேண்டினர். இது 1835-இல் வெளிவந்தாகத் தெரிகிறது. இதுதான் தமிழில் முதலில் வெளிவந்த செய்தி இதழ் என மார்க்ரெட் பார்ன்ஸ் என்பவர் குறிப்பிடுகிருர். ஆனல், 1833-இலேயே 'விருத்தாந்தி' என்ற பெயரில் தமிழிலும் தெலுங்கிலும் செய்தி இதழ்கள் வெளிவந்து கொண்டிருந்ததாக ஜே லாங் என்பவர் கூறியுள்ளார். இதற்கு அரசினர் (கிழக்கிந்தியக் கம்பெனி) ஆதரவு இருந்தும், 1838-க்குப் பிறகு மறைந்து விட்டது. அடுத்து வெளிவந்த தமிழ் இதழ்களில் முக்கியமானது 'ராஜவர்த்தி போதினி' ஆகும். இது 1855-இல் தொடங்கி மாதம் மும்முறை வெளிவந்தது. இதில் ஆங்கில இதழ்களில் வெளியான செய்திகளின் மொழி பெயர்ப்புக்கள் மட்டுமே இடம் பெற்றன. அதே ஆண்டில் 'தினவர்த்தமானி' என்னும் இன்னெரு தமிழ் வார இதழை மேதகு. பி. பெர்கிவல் (Rev. P. Percival) என்பார் நிறுவினர். இது மக்களிடையே நல்ல செல்வாக்குப் பெற்று விளங்கியது.

1857-இல் முதலாவது இந்தியக் கிளர்ச்சி (சிப்பாய்க் கலகம்) ஏற்படுவதற்கு முன்பு தமிழில் தோன்றிய செய்தி இதழ்கள் மிகச்சிலவே. அவற்றில் ஒன்றிரண்டுதான் 1860, 1870 வரை நீடித்து வாழ்ந்தன.

1857 கிளர்ச்சிக்குப் பிறகு அடிமைத் தளையில் கட்டுண்டுகிடந்த மக்கள் விழிப்படைந்தனர். இக்காலத்தில் பல செய்தி இதழ்கள் தோன்றுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. அதே நேரத்தில் 1879-இல் இயற்றப்பட்ட நாட்டுமொழிச் செய்தி இதழ்கள் சட்டமும், எழுத்துரிமையை வலியுறுத்தி இந்திய மொழிகளில் பல புதிய இதழ்கள் தோன்ற ஊக்கமளித்தது. தமிழ நாட்டில் நூற்றுக்கும் மேலான செய்தி இதழ்கள் வெளிவந்தன. இவற்றில் பல்வேறு பகுதிகளைத் தன்னகத்தேகொண்ட இதழ்கள் சில. சமயவிளக்கங்களும், மறுப்புக்களும் சில இதழ்களில் வெளிவந்தன. சில சமயவளர்ச்சிக்கும், சில பெண்கள் ஆசிரியர், இளைஞர் சிறுவர் பகுதிக்கும் சில தத்துவம் போன்றவற்றுக்கும் சிறப்பாகப் பயன்பட்டன. 1831-இலிருந்து 1900 வரை தோன்றிய தமிழ்ச் செய்தி இதழ்களில் வேறுசில பின்வருமாறு (அடைப்புக் குறிக்குள் தொடங்கிய ஆண்டு.)[1]

1. தமிழ்ப்பத்திரிகை (1831-மாத இதழ்); 2. பால தீபிகை (1840-52, மும்மாத இதழ்); 3. சிறு பிள்ளையின் தேசத்தோழன் (1849-சிறுவர் இதழ்); 4. நற்போதகம் (1848 மாத இதழ்); 5. தர்ம பள்ளி போதகம் (1850-60, மாத இதழ்) 6, தேசோபகாரி (1860-மாத இகழ்); 7. தத்துவ போதினி (1864-மாத இதழ்); 8. அமிழ்தவசனி (1860-பெண்களிதழ்); 9. கலாவர்த்தனி (1866-மாத இதழ்); 10. சுகத்திய வர்த்தமானி (1870-மாத இதழ்); 11. ஜனவினோதினி (1870-மாத இதழ்); 12. தேசாபி

1. பத்தொன்பதாம் நூற்ருண்டின் தமிழ்உரைநடை வளர்ச்சி—அ. மு. பரமசிவானந்தம்.

மானி (1877); 13. நடுத்தா, உயர்தரப்பள்ளி நண்பன் (1879); 14. சித்தாந்த ரத்நாகரம் (1880); 15. பரதத்வ பிரகாசிகை (1881). 16. சைவ உதயபானு (1882); 17. மகாவிகடதூதன் (1882); 18; சுகுணபோதினி (1883); 19. ஞானமிர்தம் (1883) 20. சன்மார்க்க போதினி (1885); 21 மனோரஞ்சித விநோதம் (1886); 22. கலாதரங்கிணி (1886-89), வார இதழ்); 23. திராவிட ரஞ்சனி (1887-மாத இதழ்); 24. பிரமவித்தியா (1887); 25. சுகசீவனி (1887); 26. லோக ரஞ்சனி (1887-மாத இதழ்); 27. சத்திய தூதன் (1887-மாத இதழ்); 28. ஸ்ரீலோக ரஞ்சனி (1887-மாத இதழ்); 29. உபாத்தியாயர் (1887); 30. கிராம வியவஹாரினி (1889); 31. மாதர் மித்திரி (1889); 32. கோயம்புத்தூர் கலாநிதி (1890-மாத இதழ்); 33 சிவபக்தி சந்திரிகை (1890-93); 34. திரிபுரத் தமிழ்ச் செல்வன் (1890 வார இதழ்); 35. ஞான நீலலோசனி (1890-வார இதழ்); 36. சிவரத்நமதடம் (1891); 37. சுகாதாரபோதினி (1891); 38. பெண் மதிபோதினி (1891); 39. விவேக சிந்தாமணி (1892-மாத இதழ்); 40. மாதாந்தர சட்டப் பத்திரிகை (1893); 41. விசயத்துவம் (1893); 42. போலீசுத்தூதன் (1893-மாத மிருமுறை); 43. ஞானபானு (1894-மாத இதழ்); 44 திருச் செங்கோட்டு விவேகா திலகன் (1894-வார இதழ்); 45. ஷண்முக விஜயம் (1894); 46. பகவத்கீதா பாஷ்யார்த்த போதினி (1895); 47. சோமரவி (1895-மும்மாத இதழ்); 48. மாணவர் போதகம் (1895-மாத இதழ்); 49. லோகோபகாரி (1896-வார இதழ்); 50. ஞானபோதினி (1897-1950); 51. சிந்தாந்த தீபிகை (1897-மாத இதழ்); 52. பிரபஞ்ச மித்திரன் (1898-வார இதழ்); 53. மாதர் மனோரஞ்சனி (1899-மாத இதழ்); 54. கிராமாதிகாரி (1900-மாத இதழ்; 55. விநோத விசித்திரப் பத்திரிகை (1900); 56. ஞானப் பிரியன் (1900).

மேற்கண்ட தமிழ் இதழ்களில் பெரும்பாலன காலமெனும் கடுங் காற்றில எதிர் நிற்க மாட்டாமல் தலைசாய்ந்து விட்டன. ஆட்சியாளர் களின் கண்காணிப்பும், கட்டுப்பாடுகளும் இவற்றின் மறைவுக்கு முக்கிய காரணமாயின. சென்ற நூற்றாண்டின் தலைவாயிலில் செய்தி இதழ் உரிமையாளர், ஆசிரியர் ஆகியோர் பற்றிய குறிப்புக்களை இதழில் கடைசிப் பக்கத்தில் அச்சிடவேண்டு மென்ற ஆணையை வைஸ்ராய் (Viceroy) பிறப்பித்தார். மேலும், மாநிலக் கவர்னரும் பல்வேறு கட்டுப் பாடுகளை உண்டாக்கியும் தளர்த்தியும், வளர்த்தும் வந்ததால் அவற்றால் செய்தி இதழ்களுக்கு நலிவும், தாழ்வும் உண்டாயின. ஒரு சில இதழ்கள் சில ஆண்டுகள் வெற்றி முரசு கொட்டி வாழ்ந்தன, இவற்றுள் ஒன்றையும் இன்று காண்பது அரிதாகிவிட்டது. 'சுதேசமித்திரன்' நாளிதழ் மட்டும் இதற்கு விதிவிலக்காய் தோன்றிய நாள் தொட்டு (1882) இன்று வரை நம்மிடையே வாழ்ந்து வருகின்றது.

1885-இல் இந்திய தேசிய காங்கிரசு தோன்றியதும் நாட்டின் அரசியல் துறையில் புதிய வேகம் பிறந்தது. இந்தியச் செய்தி இதழ் களின் வரலாற்றின் புதிய அத்தியாயம் துவங்கியது. சாதாரண மக்களுக்கும் நாட்டு நடப்பை உணர்த்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்போதுதான் தாய்மொழி இதழ்களின் முக்கியத்துவம் உணரப்

பட்டது. தமிழ் நாட்டில் இத்தேவையை முதலில் உணர்ந்து, அதை நிறைவு செய்யும் முயற்சியில் முனைந்தவர் திரு. ஜி. சுப்பிரமணிய ஐயராவார். இவர் ஏற்கனவே 'இந்து' ஆங்கில இதழை 1878-இல் துவங்கி அதன் ஆசிரியராகவும் பணியாற்றி வந்தார். 1882-இல் 'சுதேசமித்திரன்' இதழைத் துவங்கினார். இந்திய நாட்டின் அரசியல் துறையை மூடியிருந்ததிரையை விளக்கி, தமிழ் மக்களுக்கு உண்மை நிலையைப் படம் பிடித்துக்காட்டும் ஒரு சாதனமாக இவ்விதழ் அமைந்தது தமிழ் மக்களின் உணர்ச்சிகளையும், உள்ளக்கிடக்கைகளையும் எடுத்துரைக்கும் கருவியாகவும் இது விளங்கியது. ஆரம்பத்தில் வார இதழாகத் தொடங்கிய இது, மிக விரைவில் மக்களின் பேராதரவைப் பெற்றது. அப்போதிருந்த எல்லாத் தமிழ் இதழ்களிலும் விற்பனையில் இதுவே முதலிடம் பெற்றது. (1500 படிகள்) இதற்கு அடுத்தபடியாக அதிகம் விற்பனையான தமிழ் இதழ் 'தினவர்த்தமானி' (784) ஆகும். அதே காலத்தில் வேறு 13 தமிழ் இதழ்களும் உலவின. அவற்றுள் விகடதூதன், வெற்றிக்கொடியான், பாரியான், ஆரியஜன பாரியான் ஆகியவை குறிப்பிடத்தக்கன. இவற்றிற்கெல்லாம் அரசாங்கத்துக்கு மிகவும் ஆபத்தானது எனக் கருதப்பட்டது சுதேசமித்திரனே யாகும்.

அந்நியராட்சியில் உழன்று, விடுதலைக்குத் துடித்துக்கொண்டிருந்த ஒரு சமுதாயத்தின் உள்ளக்கிடக்கையை—மனக் கொந்தளிப்பைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ்ச் செய்தி இதழ்கள் விளங்கின. அவை எப்படித் தோன்றினும், யாரால் தொடங்கப் பெறினும், அவை அக்கால மக்களின் உள்ளத்தைத் தொடுவனவாய், உறங்கிக் கிடந்த நாட்டுணர்வைத் தட்டி எழுப்புவனவாய், அவ்வுணர்ச்சிகளின் வடிகாலாய் விளங்கின. 1857 கிளர்ச்சிக்குப்பின் ஏற்பட்ட இந்திய மறுமலர்ச்சி, இந்திய தேசியக் காங்கிரசின் துவக்கம், தாய்மொழி இதழ்களின் தோற்றம் இவை அனைத்தும் நாட்டில் எழுச்சிபெற்ற புதிய சக்திகளின் சின்னங்களாய் இலங்கின. செய்தி இதழ்கள் தெரிவித்த கருத்துகளும், மக்களின் கருத்தைத் திரட்டுவதில் அவை கொண்ட பங்கும், அரசாங்கத்திற்கும் செய்தி இதழ் உலகிற்குமிடையே உருவான பெரும் போராட்டத்திற்கு அடிகோலின. அதோடு அரசியல் சமூகச் சீர்திருத்தங்களில் இவ்விதழ்கள் கொண்ட பங்கு மகத்தானது.

### 20-ஆம் நூற்றாண்டில்......

இருபதாம் நூற்றாண்டு தொடங்கியபோது மதுரைத் தமிழ்ச்சங்கம் போன்ற பல சங்கங்கள் தமிழை வளர்க்கத் தோன்றின. அரசியல், சமயம், தொழில், வாணிகம் என்ற எல்லாத்துறைகளிலும் ஊர்தோறும் சங்கங்கள் எழுந்தன. இச்சங்கங்களில் மாத இதழ்களும், பிற வெளியீடுகளும் வெளியாயின. இவற்றுள் சில நீண்டு வாழாமற் போனாலும், அவை அவ்வப்போது தோன்றி தமிழை வளர்த்தன. ஞானபானு, தமிழ்ப்பொழில், செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, ஞான சாகரம், சித்தாந்தம் என்று எத்தனையோ இதழ்களைத் தமிழ்நாடு கண்டுள்ளது.

ஆனால், அவற்றில் அந்நாளில் உயிர்த்துடிப்பைக் காண்பது அரிது. கட்டுரைகளே முதலில் செய்தி இதழ்களில் வெளிவந்தன. சமயம், இலக்கியம் அவ்வப்போது உண்டான அரசாங்கச் சட்டங்கள், விதிகள், விளக்கங்கள் இவை பற்றியனவாகக் கட்டுரைகள் இருந்த நிலை மாறி எல்லாத்துறைகளிலும் அவை பரவலாயின. அரசியல் போராட்டம், பொதுமக்கள் போராட்டமாக வளர்ந்தபோது, அந்த உயிர்த்துடிப்போடு பல செய்தி இதழ்கள் தோன்றின. பாரதியார் தமது சுதந்திர தாகத்தை வெளியிடுவதற்குச் சொந்தமாக ஓர் இதழ் தேவை என உணர்ந்தும், ஒரு தேச பக்தரின் உதவியால் 1907 ஏப்ரலில் 'இந்தியா' என்னும் இதழைத் துவங்கினர். பாரதியின் 'இந்தியா,' பாவலரின் இன்றைய சமாச்சாரம்', திரு. வி. க. வின் 'தேசபக்தன்' ஆகியவை ஓர் புதிய இலக்கிய நடையை செய்தி இதழ் உலகில் பரவ விட்டன. திரு. வி. க. இந்த வகையில் நிகழ்த்திய புரட்சி நிலை பேறடைந்து விட்டது. எல்லோருமே இந்த நடையைப் பின்பற்றத் தொடங்கினர். திராவிட இயக்கத்தின் வெளியீடான 'திராவிடன்', 'குடியரசு' இதழ்களும் இந்த முறையையே பின்பற்றின. பல வார இதழ்களும் தமிழறிவிற் சிறந்த எழுத்தாளர்கள் கையில் வளர்ந்து ஓங்கின. திரு. வி. க. வின் 'நவசக்தி', பாவலரின் 'பாரதி', அவரது 'தேசபக்தன்', வடிவேலுச் செட்டியாரின் 'லோகோபகாரி', இராஜாஜியின் 'விமோசனம்' முதலியவற்றை இங்கு குறிப்பிடலாம். திரு. வி. க. வினிடத்தில் பயிற்சி பெற்ற ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) முதலில் ஆனந்த விகடனிலும், பின்னர் கல்கியிலும் (1941) தொண்டாற்றிப் புகழ் நாட்டினர்; பாரதியார் தொடங்கிய தமிழ் மறுமலர்ச்சியைச் சிறந்த முறையில் வளர்த்துப் பாதுகாத்து நன்கு பலன் தரும்படி செய்தார். மக்களுக்கு எப்படி எழுதினால், எதை எந்த வகையில் சொன்னால் மனதுக்குப் பிடிக்கிறது என்றெல்லாம் ஆராய்ந்து செய்தி இதழ் உலகில் பல புதிய உத்திகளை வகுத்தார். செய்தி இதழ்களின் வாயிலாகத்தான் எழுத்து நடையில் காணப்பெறாத நகைச்சுவை, மேடைப் பேச்சிலிருந்து 20-ஆம் நூற்றாண்டில் இலக்கியத்தில் நுழைந்தது எனலாம். விகடத்திற்கென்றே பல வார இதழ்கள் தோன்றின. விகடரத்தினம், விஜய விகடன், ஆனந்த விகடன், பிரசண்ட விகடன் முதலிய பெயர்களே இதற்குச் சான்று பகரும்.

இந்தியச் சுதந்திரப் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த சமயம் (1942) சில சிறந்த நாளிதழ்களும், பல பருவ இதழ்களும் தமிழகத்தில் வெளியாகின. இவற்றில் 'தினமணி', டாக்டர் பி. வரதராசுலு நாயுடுவின் 'தமிழ்நாடு', திரு. டி. எஸ். சொக்கலிங்கத்தின் 'தினசரி', திரு. எம். பக்தவத்சலத்தின் (தமிழக முன்னாள் முதலமைச்சர்) 'பாரததேவி' ஆகிய மூன்று நாளிதழ்களும் குறிப்பிடத்தக்கன.

## வெளிநாடுகளில்......

தமிழ்நாட்டில் மட்டுமின்றி இலங்கை, மலேயா, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளிலும் தமிழ் இதழ்கள் பல தோன்றின. இலங்கையில்

முதன்முதலில் தமிழ் இதழ் தோன்றியது, 1841-இல் ஆகும். அவ்விதழின் பெயர் 'உதய தாரகை'. இது யாழ்ப்பாணத்திலிருந்து மாதம் இருமுறை வெளிவந்தது. இது பத்தாண்டுகள் வாழ்ந்ததாகத் தெரிகிறது. கொழும்பிலிருந்து 1848-இல் 'இலங்கை நேசன்' என்ற மாத இதழ் வெளியாகியது. யாழ்ப்பாணத்தில் 1876-இல் தோன்றிய 'சத்தியவேத பாதுகாவலன்' என்ற இதழும், 1889-இல் வெளியான 'இந்து சாதனம்' என்னும் சைவ சமய இதழும் இன்னும் நற்றொண்டாற்றி வருகின்றன. 'ஞானதீபம்' என்ற மாத இதழ் கண்டியிலிருந்து 1892-இல் வெளிவந்தது. 'ஞானசித்தி' என்ற இதழ் யாழ்ப்பாணத்தில் 1908-இல் தொடங்கி சில ஆண்டுகள் நிலை நின்றது. 1922-இல் 'தமிழ்' என்னும் மாத இதழ் தொடங்கியதாகத் தெரிகிறது. அக்காலத்தில் 'தமிழ்ப்போதினி', 'கலாவல்லி' என்ற இதழ்களும் தொடங்கப் பெற்றன. 'வீரகேசரி', 'ஈழகேசரி' என்ற இதழ்கள் 1930-இல் கொழும்பில் தோன்றின. 1932-இல் 'தினகரன்' வெளிவரலாயிற்று. 1933-இல் கலா நிலையத்தாரால் 'ஞாயிறு' என்ற இதழ் வெளியிடப்பெற்றுச் சிறிது காலத்தில் நின்றுவிட்டது. ஆரிய திராவிட பாஷா விருத்தி சங்கத்தினர் 'கலாநிதி' என்ற முத்திங்களிதழைத் தொடங்கினர். இப்பொழுது கொழும்பிலிருந்து வீரகேசரி, மித்திரன் (மாலைப் பதிப்பு) தினபதி, தினகரன் ஆகிய நாளிதழ்கள் வெளியாகின்றன. வார இதழ்களில் செய்தி (கண்டி) சுதந்திரன் (கொழும்பு) ஈழ நாடு (யாழ்ப்பாணம்) ஆகியவையும், மாத இதழ்களில் கலைச்செல்வி, விவேகி, மல்லிகை (யாழ்ப்பாணம்), இளம்பிறை (கொழும்பு) முதலியனவும் குறிப்பிடத்தக்கனவாகும்.

மலேயாவில் தமிழ் இதழ்கள் தோன்றுவதற்கு வழிகாட்டியது பினாங்கு நகராகும். அங்கு 1888-இல் 'இந்து நேசன்' தொடங்கப் பெற்றது. அதே ஆண்டில் 'பினாங்கு விஜய கேதனன்' என்ற இதழ் தோன்றி 1889 வரை வாழ்ந்தது. 'பினாங்கு வர்த்தமானி,' 'உலக நேசன்' என்ற இரு இதழ்களும் 1897-இல் வெளிவந்தன. பேராக்கிலிருந்து 'தேஜோபிமானி' என்ற இதழ் 1896-97-இல் வெளிவந்தது. சிங்கப்பூரில் 'சிங்கை நேசன்' 1887-இல் தோன்றி 1890 வரை வெளியாயிற்று. இப்பொழுது திரு கோ. சாரங்கபாணியின் தமிழ் முரசு (சிங்கப்பூர்), தமிழ் மலர் (சிங்கப்பூர்), தமிழ் நேசன் (கோலாலம்பூர்) ஆகிய நாளிதழ்களும், பொன்னி (கோலாலம்பூர்), மனோகரன் (சிங்கப்பூர்) ஆகிய மாத இதழ்களும் செல்வாக்குடன் விளங்குகின்றன.

### இன்றைய நிலை :

பொதுவாக இந்தியாவிலும், குறிப்பாகத் தமிழ்நாட்டிலும் செய்தி இதழ்களின் இன்றைய நிலையை இங்கு கூறுவது பொருந்தும். 1966-ஆம் ஆண்டின் இறுதி நிலவரப்படி இந்நாட்டில் 46 மொழிகளில் நாளிதழ்களும், பருவ இதழ்களுமாக மொத்தம் 10,977 இயங்கி வருகின்றன.

---

2. Press in India. 1966 Report of the Reg istrar of Newspapers for India

தமிழகத்தில் ஆங்கிலம், தெலுங்கு, உருது, கன்னடம், மலையாளம், இந்தி, குஜராத்தி, மராத்தி ஆகிய ஒன்பது மொழிகளில் மொத்தம் 759 செய்தி இதழ்கள் வெளிவருகின்றன. இவற்றில் தமிழில் வெளியாகும் இதழ்கள் மட்டும் 457 இவற்றுள் நாளிதழ்கள் 30; வார இதழ்கள் 59; மாதம் இருமுறை இதழ்கள் 95; மாத இதழ்கள் 214.

முடிவுரை :

சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றி இன்று தமிழ் நாட்டில் பேச்சு இலக்கியத்துக்கு அடுத்தபடியாகச் சிறந்த இலக்கியச் செல்வங்களாகச் செய்தி இதழ்கள் உருப்பெற்றிருக்கின்றன. நாட்டின் முதுகெலும்பாகவும் இவை கருதப்படுகின்றன. செய்தி இதழானது எல்லோர்க்கும் விளங்க எழுதிவரவேண்டும். அப்போதைக்கப்போது உலகில் நிகழும் செய்திகளையும், புதிய புதிய மாறுதல்களையும், கருத்துக்களையும் எழுதிவரவேண்டும்.

இக்காலச் செய்தி இதழ்களில் சில சிறு நிகழ்ச்சியையும் உணர்ச்சி யூட்டும் வகையில் பெரிது படுத்தி எழுதி (Sensationalism) வருகின்றன. இந்த முறை பல சமயங்களில் மக்களிடையே அச்சத்தை பரப்புவதாகவும், அவர்களைத் தவறானவழியில் செலுத்தவதாகவும் அமைகிறது எனவே, இம்முறையினைச் செய்தி இதழ்கள் கூடியவரை தவிர்க்கவேண்டும். தமிழகச் செய்தி இதழ் உலகம் குழவிப் பருவத்தைக் கடந்து இன்று காளைப்பருவத்தை எட்டிவிட்டது என்றாலும், இத் தொழில் ஒருதிட நிலையை அடைந்துவிட்டதாக இதற்குள் கூறிவிட முடியாது. சில தராதாரங்களை வகுத்துக்கொண்டு, அதன் வரம்புக்குள் நின்று, ஆக்கமுறையில் தொண்டு செய்வதற்குரிய நேரிய வழியினை வகுத்துக்கொடுக்கவேண்டியது இன்றைய தமிழ் இதழ்களின் கடமையாகும்.

## IX

# தகவல் சாதனங்களில் மொழிபெயர்ப்புச் சிக்கல்

தகவல் சாதனங்கள் என்பவை பத்திரிகைத் துறை, வானொலி, தொலைக்காட்சி முதலியன ஆகும். இன்றைய நவீன உலகத்தில் மனித சமுதாயத்தின் வளர்ச்சியிலும் வாழ்விலும் இச்சாதனங்கள் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

ஒரு மொழியின் அடிப்படைப் பணி தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும் கருத்துக்களைப் புலப்படுத்தவும் கருவியாகப் பயன்படுவதே ஆகும். அப்படிப் பார்த்தால் தகவல் சாதனங்களுக்கும் மொழிக்கும் உள்ள பிரிக்கமுடியாத தொடர்பு நன்கு புலனாகும்.

நம் தமிழ்மொழியைப் பொறுத்தவரையில் பத்திரிகைத்துறை முதலான தகவல் சாதனங்களில் அதன் நிலை எப்படி இருக்கிறது, எதிர்நோக்குகின்ற சிக்கல்கள் யாவை என்பதையே இக்கட்டுரையில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்,

தமிழ்ப் பத்திரிகைத் துறை—குறிப்பாக நாளேடுகளும், கிழமை, திங்கள் இதழ்களும் நன்கு வளர்ச்சியடைந்து மக்களின் பெருத்த ஆதரவைப் பெற்றிருப்பது உண்மை. தமிழகம், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நான்கு நாடுகளிலும் தமிழ்ப் பத்திரிகைத் துறை குறிப்பிடத்தக்க இடத்தை வகித்துவருகிறது. நாளேடுகள் இரண்டு லட்சம், மூன்று லட்சம் பிரதிகள் வரை விற்று இந்தியாவில் தாய் மொழிப் பத்திரிகைகளுக்கு மத்தியில் தமிழ்மொழிப் பத்திரிகைமுதலிடம் வகிக்கின்ற நிலையும் இருக்கிறது வார, மாத இதழ்களை எடுத்துக் கொண்டாலும் மூன்று லட்சத்தையும் மிஞ்சுகிற அளவுக்குத் தமிழ் மொழி இதழ்கள் சில முன்னேறியிருக்கின்றன. வார, மாத இதழ்களில் தமிழகத்தில் வெளியாகும் வெளியீடுகளின் வளர்ச்சி பிரமிக்கத்தக் கதாகும். இலங்கையிலும் தமிழ் இதழ்களின் வளர்ச்சி மிகவும் பரந்த அடிப்படையில் இருக்கிறது. இலங்கையிலுள்ள ஒவ்வொரு பத்திரிகை நிறுவனமும் ஏராளமான தமிழ் இதழ்களைப் பல்வேறு துறைகளுக்காக வெளியிட்டுவருகின்றன. நாளேடுகளைப் பொறுத்தவரையில் மலேசியா, இலங்கை, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் பக்கங்களின் எண்ணிக்கை, தோற்றம், அமைப்பு, செய்திப் பரப்பு ஆகியவை தமிழக நாடுகளைவிட ஒரு படி மிஞ்சி நிற்கின்றன என்று சொல்வதில் தவறில்லை.

செய்திப்பரப்பு வளர்ச்சிக்கேற்ப தமிழ்ப் பத்திரிகைத் துறையில் மொழியாக்கம் செப்பம் அடைந்திருக்கிறதா என்ருல் நாம் முழு மன நிறைவு கொள்ளத்தக்க அளவு பத்திரிகைத்துறையின் மொழி நடை செம்மை பெறவில்லை என்றுதான் கூறவேண்டும். சுப்பிரமணிய பாரதியார், திரு. வி கல்யாணசுந்தரனுர், வரதராஜுலு நாயுடு, டி. எஸ். சொக்கலிங்கம் போன்ற பெரியவர்கள் பத்திரிகைத்துறையின் சொல் லாக்கத்திற்கும், தமிழ்ப் பத்திரிகைத்துறை வாசகர்களுக்கு எந்தச் செய்திகளையும் பொருள்புரிகின்ற மாதிரி வழங்குவதற்கும் அற்புதமான பணி புரிந்திருக்கிருர்கள். இன்று பத்திரிகைத் துறையில் வழக்கி லுள்ள தெளிவான பல சொற்கள் முன்னேடிகளான இப்பெரியோர் களின் முனைப்பான முயற்சிகளால் உருவானவை என்பது வெளிப்படை.

சட்ட மறுப்பு, ஒத்துழையாமை, அறப்போர் போன்ற சொற்கள் இன்று நமக்கு இயல்பான சொற்களாகிவிட்டன. ஆனால் இவற்றை நமக்கு வழங்கிய திரு. வி. க. போன்றவர்களின் ஆரம்பப் பணிகளை

---

குறிப்பு:— தமிழகத்தில் ''தினத்தந்தி'' விற்பனையில் முதலிடம் வகிக்கிறது. ''குமுதம்'' வார இதழின் விற்பனை—3,23,000.

இச்சமயத்தில் நாம் நினைவு படுத்திக் கொள்ளவேண்டும். அந்த ஆரம்ப நாட்களில் நடைபெற்ற மாதிரி முனைப்பான, மனப்பூர்வமான சொல் லாக்கப்பணி தமிழ்ப் பத்திரிகைத்துறையில் இப்பொழுது நடைபெறுவ தாகத் தோன்றவில்லை."

ஒவ்வொருநாளும் பத்திரிகைகளில் நடைபெறுகிற முக்கியமான பணி மொழிபெயர்ப்பே ஆகும். பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் தமிழ்ப் பத்திரிகைகள் ஆங்கிலத்திலிருந்தே செய்திகளையும் கட்டுரை களையும் மொழிபெயர்ப்புச் செய்ய வேண்டியிருக்கிறது. எங்கள் மலேசியாவில் இப்பொழுது தேசிய மொழியான மலாய் மொழியிலி ருந்தும் செய்திகளை மொழிபெயர்த்து வருகிறோம். தமிழகம், இலங்கை, மலேசியா சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலுள்ள நம் தமிழ்ப் பத்திரிகைகள் எதிர்நோக்கும் மொழிபெயர்ப்புச் சிக்கல்கள் பல உண்டு. அவற்றுக்குப் பரிகாரம் காண்பதற்கு நான்கு நாடுகளின் தமிழ்ப் பத்திரிகையாளர் களும் ஆண்டுக்கு ஒரு முறையாவது சந்தித்துப் பேசுவது இன்றியமை யாதது. இதற்கென்று நிலையான ஒரு செயற்குழு இயங்குவதுகூடப் பயனளிக்கும். அந்தச் செயற்குழுவின் தலைமை அலுவலகம் தமிழகத் தில் இயங்கி வர வேண்டும்.

குறிப்பாகப் பத்திரிகைத் துறையைப்பற்றி நான் குறிப்பிட்ட போதிலும் வானொலி தொலைக்காட்சி ஆகியவற்றின் செய்திப் பிரிவுகள் எதிர்நோக்குகின்ற மொழி பெயர்ப்புச் சிக்கல்களும் ஏறத்தாழ ஒரே மாதிரியானவை என்றே சொல்லவேண்டும். மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் ஒவ்வொரு நாளும் செய்திகள் தமிழ் மொழியில் ஒலிபரப் பாகின்றன. பத்திரிகைகளில் செய்திகளைப் படிக்கின்றோம்; வானொலி யில் செய்திகளைச் செவிமடுக்கின்றோம்; தொலைக்காட்சியில் செய்திகளைக் கண்ணால் பார்ப்பதோடு காதாலும் கேட்கின்றோம். ஆகவே இம்மூன்று துறைகளிலும் சொல்லாக்கம், கையாளுகின்ற நடை, சொற்றொடர் அமைப்பு ஆகியவற்றில் நுணுக்கமான சில வேறுபாடுகள் தேவைப் படுகின்றன. இந்த அம்சம் குறித்துக் கட்டுரையின் இறுதியில் ஒரு சிறிது சொல்வேன். வானொலியில் பணி புரிகின்ற செய்தி ஆசிரியர் களும், மொழிபெயர்ப்பாளர்களும் இதுபற்றித் தனி ஆய்வுக் கட்டுரைகள் பல எழுதவேண்டும்.

மொழிபெயர்ப்புப் பணியில் தமிழ்ப் பத்திரிகைத் துறை எதிர் நோக்குகின்ற முதலாவது சிக்கல் செய்தி மொழிபெயர்ப்புக்கு உதவக் கூடிய முறையான கருவி நூல்கள் இல்லாமல் இருப்பதாகும். இப்பொழு துள்ள ஆங்கில—தமிழ் அகராதிகள் பத்திரிகைத் துறையின் அவசரத்

---

திரு. வி. க. வின் "தேச பக்தன்" முதன்முதலில் கையாண்டவை இச்சொற்கள்.

சட்ட மறுப்பு—Civil Disobedience

ஒத்துழையாமை—Non-Cooperation

தேவைக்குப் பெரிதும் பயன்படவில்லை என்பதே என் அனுபவமாகும். அண்மைக் காலத்தில் மூன்று தொகுதிகளாக வெளிவந்திருக்கிற ஆங்கிலம்—தமிழ் அகராதி கூடப் பத்திரிகைத் துறைத் தேவைகளை ஒரு பகுதிதான் நிறைவேற்றுகிறது. கலைச் சொல்லாக்க முயற்சிகள் ஆட்சித்துறை, கல்வித்துறை ஆகியவற்றில் விரிவாக நடந்திருக்கின்றன என்றாலும் அந்தத் தொகுதிகள் தகவல் சாதனங்களுக்கு அத்துணை கைகொடுக்கவில்லை என்பதே என் கருத்து.

குறிப்பாக விலங்குகள், பறவைகள், செடிகொடிகள் போன்றவற்றின் பெயர்களை ஆங்கிலத்திலிருந்து தமிழில் அவற்றுக்குச் சரியான பெயர்களோடு மொழிபெயர்க்கத் தற்சமயமுள்ள எந்த அகராதியும் உதவவில்லை. பெரும்பாலும் ஒரு மரம், ஒரு விலங்கு என்றே அகராதிகளில் பெரும்பாலான பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.* இப் பெயர்களை அகர வரிசையில் திட்டவட்டமான பெயர்களோடு குறிப்பிட வேண்டும்.

இது தவிர தகவல் சாதன மொழிபெயர்ப்பாளர்கள் பயன்படுத்துவதற்கென்று பத்திரிகைத் துறைச் சொற்கள், மரபுத் தொடர்கள், சொற்றொடர்கள் அடங்கிய தனி அகர வரிசை வெளியிடப்படுவதும் இன்றியமையாததாகும். தகவல் சாதனங்களில் ஒவ்வொருநாளும் பயன்படுத்துகின்ற சொற்களும், சொற்றொடர்களும் ஏராளம். அவற்றைத் தொகுத்து நூல் வடிவில் வெளியிட்டால் மொழிபெயர்ப்பாளர்களுக்கு நல்ல கையேடாக அது பயன்படும்.

இரண்டாவது சிக்கல்—தமிழகம், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நான்கு நாடுகளிடையே வழங்கும் பத்திரிகைத் துறைச் சொற்களில் ஒருமைப்பாடு இல்லாத நிலைமை. அதுமட்டுமன்றித் தமிழகத்திலுள்ள ஏடுகளிடையே கூடச் சொல்லாக்கத்தில் ஓர் உடன்பாடு இருப்பதாகச் சொல்ல முடியாது. ஏடுகள் ஒருவிதமாகவும், வானொலிகள் மற்றொரு விதமாகவும் சொற்களைப் பயன்படுத்துவது இயல்பாக இருக்கிறது. ஒவ்வொரு நாட்டிலும் சிறப்பாக பயன்படுத்தப்படுகிற சொற்களும் உண்டு.

இலங்கை ஏடுகள் விளக்கமறியல், நீதியரசர்* போன்ற சிறப்புச் சொற்களையும், மலேசிய-சிங்கப்பூர் ஏடுகள் நாடாளுமன்றம், பேராளர், போன்ற சொற்களையும் பயன்படுத்தி வருகின்றன. காசோலை போன்ற சொற்கள் முதலில் இலங்கை ஏடுகளில் வழங்கி இப்பொழுது மலேசிய, சிங்கப்பூர் ஏடுகளிலும் செல்வாக்குப் பெற்றுள்ளன.

---

* பல்பொருள் ஆங்கிலத் தமிழ் அகர வரிசை—சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

*விளக்க மறியல்—Remand Custody

நீதியரசர்—Judge

திரை நீக்கம்—Unveiling

நாடாளுமன்றம்—Parliament

பேராளர்—Delegate

காசோலை—Cheque

குறிப்பிட்ட நான்கு நாடுகளிலும் பத்திரிகை, வானொலி, தொலைக் காட்சி, அரசாங்கத்தின் தகவல் துறை முதலிய எல்லாப் பிரிவினரும் ஒரே மாதிரியான சொற்களைப் பயன்படுத்துவதற்கு நான்கு நாடுகளுக்கும் இடையே கூட்டுறவு முயற்சிகள் நடைபெற வேண்டும். கலைச் சொல் லாக்கத் துறையை ஒருமுகப்படுத்துகின்ற முயற்சிகள் பற்றி இலங்கை யிலிருந்து வந்திருக்கும் மாண்புமிகு அமைச்சர் திருச்செல்வம் பேசியிருக் கிறார். குறிப்பாகத் தகவல் சாதனங்களுக்கிடையே இந்த ஒருமைப்பாடு மிகவும் இன்றியமையாதது.

சொல்லாக்கத்தில் மட்டுமன்றிச் சிறப்புப் பெயர்களை எழுதுவ திலும் உடன்பாடு தேவை. குறிப்பாக எங்கள் மலேசியாவின் பேரரசர், பிரதமர் ஆகியோரின் பெயர்களைத் தமிழ்நாட்டு ஏடுகள் விதம்விதமாக வெளியிடுவதைப் பார்க்கிறோம். அனைத்திந்திய வானொலி கூட எங்கள் நாட்டுத் தலைவர்களின் பெயர்களைப் புதுமையாகக் கூறுவதைக்கேட்டு நாங்கள் ரசிப்பதுண்டு. அதைப்போல இந்திய நாட்டுத் தலைவர்களின் பெயர்களை, மலேசிய, சிங்கப்பூர் ஏடுகள் தப்பும் தவறுமாக எழுதும் சந்தர்ப்பங்களும் உண்டு. அதனைப் பார்த்துத் தமிழகப் பத்திரிகை யாளர்கள் சிரிக்கின்ற நிலைமையும் இருக்கிறது இவ்வகையில் சிறப்புப் பெயர்களின் பட்டியல்களை நாடுகளுக்கிடையே குறிப்பாகத் தகவல் சாதனங்களுக்கிடையே அடிக்கடி பரிமாற்றம் செய்துகொள்ளுவதற்கும் ஓர் நிலையான ஏற்பாடு இன்றியமையாதது.

கலைச் சொல்லாக்கத்துறையில் நடைபெறுகிற பொது முயற்சிகள் தகவல் சாதனத் துறைக்கு ஓரளவு மட்டுமே பயன்படுகின்றன. ஆகவே தகவல் சாதனங்களின் தேவைக்கேற்ற கலைச் சொல்லாக்கத்திற்குக் கூட்டுறவு அடிப்படையில் தனித்த முனைப்பான முயற்சிகள் தொடங்கப் பட வேண்டும்.

"தகவல் சாதனங்களின் மொழிபெயர்ப்புத்துறை இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னரும் 'செம்மை' அடையாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் முறையான தமிழ்ப் பயிற்சி உள்ளவர்களுக்கு தகவல் சாதனங்களில் முதன்மை அளிக்கப்படாததே ஆகும்". ஆங்கில மொழித் தேர்ச்சியும் செய்தித்துறைத் தகுதியும் கவனிக்கப்படுகிற அளவு தமிழ் மொழித்தேர்ச்சியும் கண்டிப்பாய்க் கவனிக்கப்பட்டதால்தான் தமிழ் ஏடுகளில் வருகின்ற தமிழ் பிழையற்ற-செம்மையான தமிழாக அமையும். பத்திரிகைகள் மூலம் தமிழ் மொழியைப் பயின்று வருவோர் எங்கள் மலேசிய நாட்டில் மிகுதி. தமிழகம் முதலிய இடங்களிலும் பத்திரிகைகள் மொழிப் பயற்சிக்கு கருவிகளாக ஓரளவு பயன்படுவது கண்கூடு. ஆகவே பத்திரிகைகள் எழுதுகின்ற மொழி வளரும் வளமிக்க மொழி யாக—பிழையற்ற—தமிழ் மரபுக்கும் இலக்கணத்திற்கும் பொருந்தியதாக அமைவது இன்றியமையாதது. தகவல் சாதனங்களில் தமிழ்த் தேர்ச்சி யுள்ளவர்களுக்கு முதன்மை அளிக்கத் தொடங்கினால் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. வின் 'தமிழ்த் தென்றல்' நடையில் நம் ஏடுகள் வெளிவர முடியும். இப்பொழுது பெரும்பாலான தமிழ் ஏடுகள் ஒவ்வொரு நாளும்

தமிழ்மொழியைக் கொலை செய்து வருகின்றன். இப்படிக் கொலைக்களமாகத் தமிழ் ஏடுகள் இருக்கின்ற நிலைமை மாறி மொழியை வளர்க்கும் தமிழ்ச் சங்கங்களாக ஏடுகள் பவனிவர வேண்டும் என்பதே என் விருப்பம்.

"சொல்லாக்கத்தில் தனித் தமிழ் அன்பர்களுக்கும் மணிப்பிரவாள மறுமலர்ச்சியாளர்களுக்கும் இடையேயுள்ள மோதுதலும் தகவல் சாதனங்கள் எதிர்நோக்குகின்ற மற்றொரு சிக்கல் என்று சொல்ல வேண்டும். செய்திகளைப் புரிகின்ற எளிய மொழியில் கொடுப்பது பத்திரிகைகளின் கடமை ஆகும். தனித்தமிழ், மணிப்பிரவாளச் சண்டைகளை மறந்து இரு தரப்பாரும் வடதுருவம், தென்துருவமாக வெவ்வேறு திசைகளில் சொற்களை உண்டாக்காமல் எளிய, இனிய— மக்களிடையே வழக்கிலுள்ள சொற்களைப் பயன்படுத்த முன்வர வேண்டும். விவாக சுபமுகூர்த்தம், சஷ்டியப்தபூர்த்தி போன்ற மணிப் பிரவாள காலம் மாண்டு மடிந்துவிட்டது. அபேட்சகர் போன்ற நெடு வழக்குள்ள சொற்களைக்கூட வேட்பாளர் போன்ற பொருட் பொலி வுள்ள சொற்கள் ஓட்டிவிட்டன. வளரும் தமிழில் இம் மாறுதல்கள் இயற்கை. இவ்வகையிலும் புரிந்துணர்வும் கூட்டுறவும் உடன்பாடும். இன்றியமையாதவை."

இன்னும் பல ஆங்கிலச் சொற்களை தமிழில் சரிவர மொழி பெயர்க்க முடியாத நிலைமை இருப்பது ஏடுகளிலும். வானொலிகளிலும் பணி புரிகிற தமிழ்ப் பத்திரிகையாளர்களுக்கு ஓர் அறைகூவல் என்று தான் சொல்லவேண்டும்.

Supplies என்னும் சொல் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. Minister of Supplies, Supply to the army, Water supply முதலிய தொடர் களைச் சரிவர மொழி பெயர்ப்புச் செய்ய இயலாமலிருப்பதை நாம் ஒப்புக் கொள்ளவேண்டும். Civil, Public என்னும் சொற்களும், இத்தகைய சிக்கல்களைத் தருகின்றன. சொல்லாக்கத் துறையில் ஈடுபட்டிருக்கிற புலவர்கள் இதுபற்றிச் சிந்திக்கவேண்டுகிறேன். Technical என்னும் சொல்லும் மொழி பெயர்ப்பில் பெரிய தலைவலியை உண்டாக்குகிறது. It is only a Technicality* என்னும் தொடரை எப்படி மொழி பெயர்ப்பது? தகவல் சாதனங்களில் உள்ள மொழிபெயர்ப்பாளர்களின் கூட்டு முயற்சிகள் மூலமாகவே இத்தகைய முட்டுக்கட்டைகளைத் தகர்க்கமுடியும்.

தகவல் சாதனங்களின் மொழிபெயர்ப்புக்களில் காணப்படுகிற சிந்திக்கத்தக்க சில தவறுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

---

* The fact that he was on leave before retirement on Nov. 5 was only a technicality.

**He was killed in road accident** — அவன் சாலை விபத்தில் கொல்லப்பட்டான் என்பதுதான் பெரும்பாலான தமிழ் ஏடுகளின் மொழி பெயர்ப்பாக இருக்கிறது. **Killed** என்பதை கொல்லப்பட்டான் என்று சொல்லுவது மாற்ற முடியாத பழக்கமாகி விட்டது. நம் தமிழ் மரபுப்படி சொல்ல வேண்டுமானுல் அவன் சாலை விபத்தில் உயிரிழந்தான் ; மரித் தான் அல்லது மரணமுற்றுன் என்றுதான் சொல்லவேண்டும். கத்தியால் குத்தியோ கழுத்தை நெரித்தோ துப்பாக்கியால் சுட்டோ கொல்லும்போதுதான் அதாவது கொலை நடந் திருக்கும் கட்டங்களில் மட்டுமே கொல்லப்பட்டான் என்று சொல்லுவது சரி. சாலை விபத்து, விமான விபத்து, தீ விபத்து ஆகியவற்றில் சர்கிறவர்களை உயிரிழந்தார் என்று தான் சொல்லவேண்டும்.

**Elder Brother, Younger Sister** என்பதை மூத்த சகோதரர், இளைய சகோதரி என்று பல தமிழ் ஏடுகளில் மொழி பெயர்க்கிருர்கள். அண்ணன், தங்கை என்று மொழி பெயர்ப் பதுதான் தமிழ் மரபாகும்.

**The visiting American Journalist made a courtesy call on the Honourable Minister** — இதனை 'இந் நாட்டுக்கு வந்திருக்கிற அமெரிக்கப் பத்திரிகையாளர் மாண்புமிகு அமைச்சரை மரியாதைக்காகச் சென்று பார்த்தார்' என்றே பெரும்பாலும் மொழிபெயர்க்கிருர்கள். மரியாதை வருகை புரிந்தார் என்றும் சில ஏடுகள் எழுதுகின்றன. மரியாதைக்காகப் பார்த்தார் என்று கூறுவதைவிட அமைச் சரைக் கண்டு மரியாதை செலுத்திஞர் என்று எழுதுவதுதான் பொருள் பொதிந்த தமிழ் மரபுக்கேற்ற மொழி பெயர்ப்பாகும்.

இத்தகைய பல தவறுகளைத் திருத்தித் தகவல் சாதனங் களின் மொழிபெயர்ப்புத் துறையை ஒருமுகப்படுத்தி ஒழுங்கு படுத்தவேண்டியது இன்றியமையாதது. தமிழுக்கு ஆக்கம் தருகின்ற பல திட்டங்களை மேற்கொண்டிருக்கும் தமிழக அரசு இவ்வகையில் திட்டவட்டமான முயற்சிகளை மேற்கொண்டால் மலேசியா, சிங்கப்பூர் இலங்கை அரசுகளும் கைகொடுப்பது திண்ணம்.

**முருகு சுப்பிரமணியன்**

**ஆசிரியர் " தமிழ் நேசன் "**

கோலாலம்பூர்

மலேசியா

**(உலகத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு—1968.)**

X

# குழந்தைகளுக்குப் பத்திரிகை

பல விதமான தகவல்களைத் தருவது, அறிவு வளர்ச்சிக்கு உதவுவது, பொழுதுபோக்காகப் பயன்படும் இனிய கட்டுரை கவிதை கவிதைகளைத் தாங்கி நிற்பது இவைதான் பொதுவாகப் பத்திரிகைகளின் முக்கியமான அம்சங்கள். இந்த அம்சங்களுக்குத் துணை புரிபவை சித்திரங்கள், காகிதச் சிறப்பு, அச்சுச் சிறப்பு, அமைப்புச் சிறப்பு, ஆகியவை. பொருளிலே ஆரோக்கியமும் தொனியிலே கண்ணியமும் நடையிலே அழகும் சிந்தனையிலே செறிவும் சொல்லிலே அடக்கமும் இருப்பது பண்பாட்டை உயர்த்துவிக்கும் மேன்மையான பத்திரிகைகளின் லட்சணம். இதெல்லாம் பெரியவர் பத்திரிகைகளுக்கு பொருந்தும்: சிறுவர் பத்திரிகைகளுக்கும் பொருந்தும்.

ஆங்கிலத்தில் குழந்தைகளுக்கென்று பல பத்திரிகைகள் பல விலைகளில்—மூன்று பென்னியிலிருந்து சில ஷில்லிங்குகள் வரை விலை உள்ளவை இருக்கின்றன. சிறந்த கதைகள், ஒலியின்பமும் கருத்தழகும் வாய்ந்த கவிதைகள், அறிவு புகட்டும் கட்டுரைகள், கண்ணுக்கினிய சித்திரங்கள், மனம் மகிழச் செய்யும் பொழுதுபோக்குகள், உடல் நலந் தரும் விளையாட்டுகள், பல தகவல்கள்—இப்படிப் பல அம்சங்களையும் கொண்டு விளங்குகின்றன, சிறந்த குழந்தைப் பத்திரிகைகள். இப்படி இங்கே தமிழ் நாட்டிலும் குழந்தைப் பத்திரிகைகளை நடத்தும் முயற்சிகள் சுமார் முப்பது ஆண்டுகளுக்குள்ளேதான் தொடங்கின. அதற்கு முன்னே, 1930-க்கு இரண்டு மூன்று ஆண்டுகள் பின்னே, 'ஆனந்த விகடன்' 'கலைமகள்', 'சக்தி' போன்ற சில பெரியவர்கள் பத்திரிகைகளில் அப்போதப்போது குழந்தைப் பகுதிகள் இடம் பெற்றதுண்டு. ஆனால் முற்றும் குழந்தைகளுக்கென்றே 1940-க்குச் சிறிது பின்னேதான் ஏராளமான பத்திரிகைகள் தோன்றின. முதல் முதல் மிக விலை மலிவாக வெளியான பல பத்திரிகைகளுள் அழ. வள்ளியப்பாவை ஆசிரியராகக் கொண்ட மூன்றை இங்கே முக்கியமாகக் குறிப்பிடலாம். அவற்றுள் 'பாலர் மலர்' முதலாவது; அடுத்தது, 'டமாரம்'; மூன்றுவது, 'சங்கு'. மாதம் இருமுறையான ஓர் அணுப் 'பலர் மலர்' 17 ஆயிரம் பிரதிகளும், வாரம் ஒரு முறையான அரையணு 'டமாரம்' 20 ஆயிரம் பிரதிகளும் வாரம் இருமுறையான காலணுச் 'சங்கு' 25 ஆயிரம் பிரதிகளும் விற்றன என்று அவற்றை வெளியிட்ட புதுக்கோட்டை 'தமிழ்நிலைய' உரிமையாளர் வெ. சுப. நடேசன் கூறுகிறுர். அதே சமயம் இன்னும் ஏராளமான மலிவு விலைக் குழந்தைப் பத்திரிகைகள்—சுமார் 60, 70-க்கு மேல் இருக்கும்—வெளிவந்தன. இந்நாளில் சற்று முன் பின்னுகத் தொடங்கிய வாஹினியின் 'அம்புலி மாமா', 'சக்தி' அதிபர் வை. கோவிந்தனின் சகோதரர் தியகராஜனுடைய 'பாப்பா', 'சாந்தி பிரஸ்' இராம. அருணுசலம், சித. இராமநாதன் இவர்களின் 'பூஞ்சோலை' மூன்றும் சுமார் நாலணு விலையில் வெளிவந்தன. இவற்றுள் கடைசியாக

காலாண்டுக்காலம் தொடர்ந்து நடந்த 'பூஞ்சோலை'யின் ஆசிரியரும் அழ. வள்ளியப்பாவே. அது சுமார் எண்ணாயிரம் பிரதிகள்வரை விற்பனையாயிற்று. லட்சியக் குழந்தைப் பத்திரிகை என்று அதைச் சொல்லலாம்.

அந்தப் பத்திரிகையில் எத்தகைய விஷயங்கள் வெளிவந்தன என்பதைத் 'தீபம்' பத்திரிகைப் பேட்டியில் வள்ளியப்பாவே அண்மையில் கூறியிருக்கிறார். 'பூஞ்சோலை' பத்து வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களை மனத்தில் கொண்டே வெளிவந்தது. மூவண்ண அட்டை; உள்ளே ஏராளமான படங்கள்; சுவைமிக்க கதைகளும் அறிவியல் செய்திகளும் அதில் அதிகமாய் இடம் பெற்றன. திரு. வி. க., சேதுப் பிள்ளை, நாமக்கல் கவிஞர், மு. வ. போன்ற பெரியவர்கள் 'நான் சிறுவனாயிருந்தபோது' என்ற தலைப்பில் தங்கள் இளமைப்பருவம் பற்றி அதில் எழுதினார்கள். 'நான் பிறந்தது கேரளம்', 'நான் பிறந்தது மைசூர்' என்று அந்த அந்த மாநிலச் சிறுவர் சிறுமியர்கள் தங்கள் தங்கள் மாநிலம் பற்றி அதில் எழுதினார்கள். இன்னும், உலகப் பெரியோர் வரலாறுகள், திருத்தமாக எழுதும் முறைகள் இப்படியெல்லாம் பல விஷயங்கள் வெளிவந்தன. ஸினிமா உலகம் பற்றிய விஷயங்கள், மாயக்கதைகள், மர்மக்கதைகள், வார்த்தைப் பரிசுப் போட்டி, அதிர்ஷ்ட எண் பரிசு இவற்றுக்கெல்லாம் கண்டிப்பாய் அதில் இடம் கொடுப்பதில்லை என்று அதை நடத்தியவர்கள் உறுதியோடிருந்தது போற்றத் தக்க ஒன்று.

குழந்தை இலக்கியப் படைப்பிலும் பத்திரிகைப் பெறுப்பிலும் அநுபவம் வாய்ந்த வள்ளியப்பா போன்ற நண்பர்களின் சில அரிய கருத்துக்களும் யோசனைகளும் இங்கே சிந்திக்கத்தக்கவை.

பத்திரிகைகள்தான் எழுத்தாளர்களை வளர்க்கின்றன; புது முயற்சிகளை வரவேற்றுப் பிரபலப்படுத்துகின்றன.

இன்று குழந்தை எழுத்தாளர்கள் பெருகாததற்கும், உள்ள எழுத்தாளர்கள் வளராததற்கும், குழந்தைகளுக்கான போதிய நல்ல பத்திரிகைகள் இராத பஞ்சமே காரணம்.

மூன்று லட்சம் பிரதி விற்கும் வாரப்பத்திரிகை இன்று தமிழ் நாட்டில் பெரியவருக்காக வெளிவருகிறது. ஆனால் குழந்தைகளுக் கென்று 4, 5 பத்திரிகைகள்கூட வெளிவரவில்லை. வெளிவரும் பத்திரிகைகளிலும் சில, பலவித இடையூறுகளால் தரமாயில்லை.

7 வயது முதல் 9 வயதுக்கு உட்பட்ட சிறுவருக்குப் பல வண்ணப் படங்கள் கொண்ட பத்திரிகை தேவை. கண்டகண்ட பத்திரிகைகளைப் படித்துப் 'பிஞ்சிலே பழுத்து விடாமல்' சிறுவர்களைத் தடுக்கச் சிறப்பான சிறுவர் பத்திரிகை தேவை.

நல்ல கதை, நல்ல கட்டுரை, நல்ல பல பொருள்கள், சித்திரக் கதைகள், அறிவியல் தகவல்கள், வேடிக்கைகள் இவையெல்லாம் சிறுவர் பத்திரிகையில் இடம் பெறுதல் இன்றியமையாதது. அதற்கு அரசினர் ஆதரவுதருவது அவர்களின் கடமை. பாரி கம்பெனி போன்ற வியாபார நிறுவனங்களும், விளையாட்டுச் சாமான்கள் செய்வதிலும் அவற்றின் வியாபாரத்திலும் ஈடுபடும் நிறுவனங்களும் விளம்பரங்கள் தந்து அதை ஆதரிப்பதும் அவசியம்.

'தியாகபாரதி' பத்திரிகை குழந்தைகளுக்கான பத்திரிகைத் துறையில் புதுமையான ஒரு முயற்சி. பிரபல ஓவியர் ரெஸாக் அதற்குப் பக்கபலமாய் நின்று படங்கள் தீட்டி அதை அலங்கரிப்பது அதற்கொரு சிறப்பைத் தருகிறது. எதிர்பாராத சில தடங்கல்களுக்கும் கஷ்டநஷ்டங் களுக்கும் ஈடு கொடுத்துக்கொண்டு தன்னந்தனியாய் உழைத்து, விடாப் பிடியாய் அதை அவர் நடத்துவதன் ரகசியம் என்ன?

வறட்டு அறிவியல் செய்திக் குவியல் மட்டும் மனிதனை உய் வடையச் செய்ய முடியாது; கலையழகும் கற்பனை வளமும் பண்பாடும் இணைந்து இசை பெற்றால்தான் கல்வி நிறைவுறும்—இது அவருடைய திடமான அபிப்பிராயம். குழந்தைகளை இந்த முழுமையான கல்வி பெறச் செய்ய வேண்டும் என்ற ஒரு 'பித்தே' தமக்குப் பிடித்திருப்பதாக அவர் கூறுகிறார். வியாபார ரீதியில் அல்லாமல் சமூகப்பணி என்ற முறையிலே 'தியாகபாரதி' நடக்கிறது; அதில் அரசியல் சார்பு இல்லை; சமய போதம் இல்லை; நீதிநெறிப் படிப்பினை இல்லை; பகட்டு ஏதும் இல்லை. ஆழ்ந்த பொருளும் அமைதியும் வாய்ந்த எதுவுமே எளிதில் மக்களை கவர்வதில்லை; ஆர்பாட்டமும் ஆடம்பரமுமே பிரச்சாரமா கின்றன. குழந்தைகளுக்கான பத்திரிகைத் துறையிலே 'தியாகபாரதி' ஒரு புதுமை. அது கணிசமான வெற்றி பெறுமானால், இந்தத் துறை யிலேயே ஒரு மறுமலர்ச்சி ஏற்படும்; வேறு பல சிறுவர் பத்திரிகை களுக்கு ஊக்கமும் உள்வலியும் உண்டாகும். இன்றைய தமிழ் நாட்டுக் குழந்தை இலக்கியத் தலைவரும் வழி காட்டியுமாய் விளங்கும் வள்ளியப்பாவைப் போன்றோரின் முயற்சியும் உழைப்புமெல்லாம் வெற்றி தரும் வாய்ப்பு இத்தகைய புது முயற்சிகளால் நிச்சயம் ஏற்படும்.

குழந்தைக் கவிஞர்

**அழ. வள்ளியப்பா**

குழந்தை இலக்கியப் பணி வெள்ளி விழா மலர்.

## பிற்சேர்க்கை XI

### பேராசிரியர்

# வையாபுரிப்பிள்ளை அவர்களின் கருத்து

(இலக்கியச் சிந்தனைகள் — ப. 117)

19-ம் நூற்றாண்டின் முக்கிய சிருஷ்டி என்று சொல்லத்தகுவது பத்திரிகை உலகம். முதன்முதலில் மக்களுடைய கல்வி அறிவு பெருகவேண்டும் என்ற கருத்தோடு இப்பத்திரிகைகள் தொடங்கப் பட்டன. இடையிடையே இலக்கியம், மதம் முதலியவற்றைப் பற்றிய வாதப் பிரதிவாதங்களும் கருத்துக்களும் இவற்றில் வெளியிடப் பட்டன. முதன்முதலில் தோன்றிய பத்திரிகைகளுள் முக்கியமானது தினவர்த்தமானி யாகும். இது சென்னையிலிருந்து 1856-ல் வாரப் பத்திரிகையாக வெளிவந்தது. சென்னைக் கல்வி இலாகாவிலிருந்து 1870-ல் ஜனவிநோதினி என்னும் பத்திரிகை பிரசுரிக்கபபட்டது. மாதப் பத்திரிகைகளுள் இதுதான் முதலாவது தோன்றியது.

பின்பு, செய்திப் பத்திரிகையாகிய சுதேசமித்திரன் 1882-ல் தொடங்கப்பெற்றது. செய்திப் பத்திரிகைகள் நாளடைவில் பிரபல மடைந்து, தேசிய உணர்ச்சி நாட்டில் பெருகப்பெருக இச் செய்திப் பத்திரிகைகள் மிகவாகப் பெருகின.

ஜனவிநோதினி முதலிய மாதப் பத்திரிகைகளில் வெளிவந்த வற்றுள் முக்கியமானவை மொழிபெயர்ப்புக்களும் விஞ்ஞான சாஸ்திர விஷயங்களுமாகும். இவ்வாறு 19-ம் நூற்றாண்டில் நிகழ்ந்த பெரும் முயற்சிகளே தற்காலத்தில் பல துறைகளிலும் நமது அறிவு விருத்தி யடைந்து இலக்கியம் பெருகுவதற்குக் காரணமாயுள்ளன.

---

## பிற்சேர்க்கை XII

## தமிழ் ஏடுகள்

### தங்கள் இதழ்களைக் கணக்கிடுவதில் காட்டும் வகைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மலர் | ... | இதழ் | சம்புடம் | ... | இலக்கம் |
| மதி | ... | ஒளி | தொகுதி | ... | புத்தகம் |
| மாலை | ... | மணி | புத்தகம் | ... | எண் |
| தொகுதி | ... | பகுதி | புத்தகம் | ... | நம்பர் |
| தொகுதி | ... | இதழ் | வால்யூம் | ... | நம்பர் |
| புத்தகம் | ... | இலக்கம் | வயது | ... | மாதம் |
| சிலம்பு | ... | பரல் | புத்தகம் | ... | பிரதி |
| தொகுதி | ... | எண் | வெண்டாமரை | | இதழ் |
| மாலை | ... | மலர் | வால்யூம் | ... | பாகம் |
| ஆண்டு | ... | பதிப்பு | ஆண்டு | ... | மதி |
| மாலை | ... | முத்து | மணி | ... | கதிர் |
| தடாகம் | ... | தாமரை | பருவம் | ... | மழை |
| வாள் | ... | வீச்சு | வாலம் | ... | இலக்கம் |
| வெள்ளி | ... | மணி | சதங்கை | ... | மணி |
| டமாரம் | ... | டம்டம் | வாலியம் | ... | சஞ்சிகை |
| வில் | ... | வர்ணம் | பொய்கை | ... | மலர் |
| முரசு | ... | முழக்கம் | சிலம்பு | ... | பரல் |
| கதிர் | ... | மணி | புத்தகம் | ... | இதழ் |
| தீ | ... | சுடர் | கற்றை | ... | கதிர் |
| சங்கு | ... | நாதம் | கமலம் | ... | இதழ் |
| மைல் | ... | நடை | புத்தகம் | ... | பகுதி |
| குரல் | ... | இதழ் | சம்புடம் | ... | நெம்பர் |
| சுவடி | ... | ஏடு | கொடி | .... | மலர் |
| ஏடு | ... | இதழ் | தாய் | ... | பிள்ளை |
| புத்தகம் | ... | இலக்கம் | உயிர் | ... | மெய் |
| புத்தகம் | ... | சங்கியை | பாஸ்கரன் | ... | கிரணம் |
| புத்தகம் | ... | சஞ்சிகை | சம்புடம் | ... | சஞ்சிகை |
| கொத்து | ... | மலர் | சஞ்சிகை | ... | பத்திரிகை |
| மலை | ... | அருவி | வருடம் | ... | மாதம் |
| அனல் | ... | காய்தல் | தாய் | ... | சேய் |
| மணி | ... | ஓசை | இதழ் மலர் | ... | இதழ் |
| ஒலி | ... | அலை | புது மலர் | ... | இதழ் |
| சம்புடம் | ... | புத்தகம் | தொகுதி | ... | கதிர் |
| பதுமம் | ... | இதழ் | கடல் | ... | அலை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அஷ்டகம் | ... | அத்தியாயம் | நம்பர் | ... | இலக்கம் |
| ஆரம் | ... | முத்து | களஞ்சியம் | ... | மணி |
| கதிர் | ... | கலை | சிமிழ் | ... | திலகம் |
| கோவை | ... | மணி | உழவு | ... | விளைவு |
| ரோசா | ... | இதழ் | சுருள் | ... | எண் |
| தொகை | ... | வகை | சதங்கை | ... | மணி |
| இதழ் மாலை | ... | மலர் | கலை | ... | விகலை |
| கட்டு | ... | சிட்டம் | ஓசை | ... | அலை |
| சுடர் | ... | கதிர் | கலை | ... | சித்திரம் |
| ஒளி | ... | சுடர் | பயிர் | ... | கதிர் |
| குரல் | ... | இசை | அரசு | ... | மொழி |
| தொகுதி | ... | புத்தகம் | குரல் | ... | ஒலி |
| கலை | ... | நூல் | பவனி | ... | காட்சி |
| பொழில் | ... | மலர் | எழுச்சி | ... | குரல் |
| ஏர் | ... | சால் | மறை | ... | பாடம் |
| சோதி | ... | சுடர் | மணி | ... | ஓசை |
| ஆண்டு | ... | திங்கள் | | | |

XIII

# சில பழைய இதழ்கள் பற்றிய விவரங்கள்

**ஆண்டு**

*1831* **"தமிழ்ப் பத்திரிகை":** திங்கள் இதழ். கிறிஸ்து சமயப் பத்திரிகை "மதராஸ் ரிலிஜியஸ் டிராக்ட் ஸொஸைடி"யால் சென்னையில் அச்சிடப்பட்டது. கிறிஸ்துமத சம்பந்தமான கட்டுரைகள் இதில் எழுதப்பட்டன. தமிழில் முதல் முதல் வெளிவந்த பத்திரிகை இதுவே. அடிக்கடி ஆசிரியர்கள் மாறியபடியால் வெளிவருவதில் தவக்கம் ஏற்பட்டது.

*1840* **"பாலதீபிகை":** சிறுவர்களுக்கான பத்திரிகை. மூன்று மாதத்துக்கொருமுறை நாகர்கோவிலிலிருந்து வெளிவந்தது. 1852 வரையில் நடந்தது.

*1740* **Missionary Gleance:** இந்தக் கிறிஸ்துவத் தமிழ்ப் பத்திரிகை நாகர்கோவிலிலிருந்து வெளிவந்தது. பல ஆண்டுகள் நடைபெற்றது.

1840 **Friendly Instructor :** இந்தக் கிறிஸ்துவத் தமிழ்ப் பத்திரிகை பாளையங்கோட்டையிலிருந்து வெளிவந்தது.

1840 **நற்போதகம் :** பாளையங்கோட்டை சர்ச்சு மிஷன் அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. பல ஆண்டுகள் நடை பெற்றது.

1841 **ஜனசிநேகன் :** சென்னையிலிருந்து வெளிவந்தது, மாதம் இருமுறை.

1841 **சுவிசேஷ பிரபாவ் விளக்கம் :** நாகர்கோவிலிலிருந்து வெளி வந்தது.

1842 **The Aurora :** மாதம் இருமுறை வெளிவந்த தமிழ்ப் பத்திரிகை.

1845 **உதய தாரகை :** இலக்கியம், கல்வி, சமயம் முதலியவற்றைப் பற்றிய கட்டுரைகள் இதில் வெளிவந்தன. தமிழிலும் ஆங்கி லத்திலும் வெளிவந்தது.

1849 **சிறுபிள்ளையின் நேசத்தோழன் :** மூன்று மாதத்துக்கொரு முறை நாகர்கோவிலிலிருந்து வெளிவந்தது.

1854 **Tamil Quarterly Repository :** மதுரையில் இருந்த அமெரிக்கன் மிஷன் வெளியிட்ட தமிழ்ப் பத்திரிகை. நான்கு ஆண்டுகள் நடைபெற்றது.

1855 **தினவர்த்தமானி :** பெயரைக் கண்டு தினசரி பத்திரிகை எனக் கருதவேண்டாம். இது வாரப் பத்திரிகை. வியாழக்கிழமை தோறும் வெளிவந்தது. பெர்சிவல் பாதிரியார் (Rev. P Percival) இதைத் தொடங்கி இதன் ஆசிரியராக இருந்தார். தினசரி பத்திரிகையின் பெரிய அளவில் அச்சிடப்பட்டது. செய்திகளுடன், இலக்கியம், விஞ்ஞானம் முதலிய கட்டுரை களும் வெளிவந்தன. அரசாங்கத்தார் மாதம் 200 ரூபாய் இப் பத்திரிகைக்கு நன்கொடையளித்தனர். பெர்சிவல் ஐயர் விலகிக்கொண்ட பிறகு, இந்நன்கொடை நிறுத்தப்பட்டது. அவருக்குப் பிறகு, ஏட்டுச் சுவடியிலிருந்து பல நூல்களைப் பதிப்பித்தவரான சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் இதன் ஆசிரியராகச் சில காலம் இருந்தார். பிறகு விசுவநாத பிள்ளை இதன் ஆசிரியராக இருந்தார். தமிழில் செய்திகளை வெளியிட்ட முதல் பத்திரிகை இதுவே.

1856 **District Gazette :** மாவட்டங்கள் தோறும் அங்கு வழங்கு கிற தாய்மொழியிலும் ஆங்கிலத்திலும் அரசாங்கத்தாரால் அச்சிடப்பட்டது. தமிழ் மாவட்டங்களில் தமிழிலும் ஆங்கி லத்திலும் அச்சிடப்பட்டது. வாரப் பத்திரிகை. சென்னை பட்டினம், தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, கோயமுத்தூர்,

சேலம், மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் தமிழில் எழுதப்பட்டது அந்தந்த மாவட்டம் சம்பந்தப்பட்ட அரசாங்க அறிக்கைகளும், பஞ்சாங்கம், தட்ப வெப்ப நிலை, விலைவாசி முதலியவை இதில் வெளியிடப்பட்டன.

1851 **பாலியர் நேசன் :** யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த சிறுவர்க்கான வெளியீடு.

1859 **தர்மப்பள்ளி போதம் :** நாகர்கோவிலிலிருந்து வெளியாயிற்று.

1861 **தேசோபகாரி :** திங்கள் இதழ், கிறிஸ்துவருக்காகவும் இந்துக்களுக்காகவும் ஓவியங்களுடன் அச்சிடப்பட்டது. 1863-ஆம் ஆண்டிலும் அதன் பிறகும் 16,800 பிரதிகள் அச்சிடப்பட்டனவாம். எடுகேஷன் சொஸைடி என்னும் சங்கத்தாரால் நெய்யூரிலிருந்து வெளியிடப்பட்டது.

1861 **The Lamp of Truth** என்னும் தமிழ் வெளியீட்டை, சென்னை பி.ஃரீ சர்ச்சு மிஷினைச் சேர்ந்த ரெவண்டு ஆர். எம். பாவூ என்பவர் வெளியிட்டார்.

1863 **தென் திருவாங்கூர் கிறிஸ்துவ தூதன்:** இந்த ஆண்டில் வெளிவந்தது.

1863 **திருச்சபைப் பத்திரிகை:** சென்னை லூதரன் மிஷினைச் சேர்ந்த சாமுவேல் பிள்ளை இதனை நடத்தினார்.

1864 **கற்பக விருட்சம்:** இப்பத்திரிகையையும் சென்னை லூதரன் மிஷினைச் சேர்ந்த சாமுவேல் பிள்ளை நடத்தினார்.

1864 **தத்துவ போதினி:** சென்னை பிரம சமாஜத்தினால் நடத்தப்பட்டது. சுப்பராயலு செட்டியார், இராஜகோபாலாசாரியார், ஸ்ரீதரர் என்பவர்கள் இதைத் தொடங்கினார்கள். சென்னை மயிலாப்பூருக்கடுத்த சாந்தோம் என்னும் இடத்தில் தத்துவ போதினி அச்சுக்கூடம் அமைக்கப்பட்டது. இவ்வச்சுக்கூடம் அமைப்பதற்கு பொன்னுசாமி தேவர் அவர்கள் 1000 ரூபா நன்கொடையளித்தார். அதில் இந்துமத, சமுதாய விஷயங்கள் மட்டும் எழுதப்பட்டன. இந்துக்களால் நடத்தப்பட்ட முதல் பத்திரிகை இதுவே.

1865 **விவேக விளக்கம்:** ஷை பிரம சமாஜத்தினால் ஷை தத்துவ போதினி அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது.

1865 **உதய தாரகை:** யாழ்பாணத்திலிருந்து இந்த ஆண்டில் வெளிவந்துள்ளது. எப்போது தொடங்கப்பட்டது என்பது தெரியவில்லை.

1865 **திருச்சபைப் பத்திரிகை:** கிறிஸ்து சமயப் பத்திரிகை. எஸ். சாமுவேல் பிள்ளை இதை நடத்தினார். இவராலேயே

கற்பக விருட்சம் என்னும் பத்திரிகையும் சென்னையில் நடத்தப்பட்டது.

*1867* தேசாபிமானி: கிறிஸ்துவப் பத்திரிகை. சென்னையிலிருந்து வெளியாயிற்று. 1877-இலும் இது வெளி வந்தது.

*1870* **Native-Public Opinion:** திவான் பகதூர் ரகுநாத முதலியார், அரங்கநாத முதலியார், வேங்கடரமண பந்துலு ஆகிய இவர்களால் நடத்தப்பட்டது. சென்னை பாஸ்டர் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது. தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் எழுதப்பட்டன. பிற்காலத்தில் இது ஆங்கிலத்தில் மட்டும் வெளியாயிற்று.

*1871* ஞானபானு: இதன் விவரம் தெரியவில்லை.

*1871* பிரம தீபிகை: சைதாபுரம் காசி விசுவநாத முதலியாரும், பாரிஸ்டர் ராமசாமி ராஜுவும் இதனைச் சென்னையில் நடத்தினார்கள். முதலியார் இறந்த பிறகு இது நிறுத்தப்பட்டது.

*1874* ஜனவினோதனி: திங்கள் இதழ். சென்னையில் சி. கே. எஸ். அச்சியந்திர சாலையில் எம். எஸ். பி & வி. கே. சங்கத்தாரால் அச்சிடப்பட்டது. அரசாங்க ஆதரவு பெற்றது. 1889 வரையில் நடந்ததாகத் தெரிகிறது.

*1875* சிநேக போதன்: கிறிஸ்துவப் பத்திரிகை. திங்கள் இதழ். பாளையங்கோட்டையிலிருந்து வெளிவந்தது.

*1876* ஞானபானு: திங்கள் இதழ். வர்த்தமான தரங்கினி அச்சுயந்திர சாலையில் அச்சிடப்பட்டது. செங்கல்வராய முதலியார் இதன் ஆசிரியராக இருந்தார்.

*1877* சித்தாந்த சங்கிரகம்: சட்ட சம்பந்தமான திங்கள் இதழ். சி. இராமராவ் இதன் ஆசிரியர். 1878 இலும் நடந்தது.

*1879* தத்துவ விசாரிணி: இதைப்பற்றி ஒரு செய்தியும் தெரியவில்லை.

*1879* நடுத்தர உயர்தர பள்ளி நண்பன்: இதன் ஆசிரியர் அண்ணாதுரை ஐயர். சென்னை வித்தியா வர்த்தனி அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது.

*1880* சுதேசமித்திரன்: இது இன்றும் நடைபெறுகிறது தினசரிப் பத்திரிகை.

*1881* கலாநிதி: பகடால எஸ். பி. நரசிம்மலு நாயுடு அவர்களால் சேலத்தில் நடத்தப்பட்டது. இவரே, சுதேசாபிமானி என்னும் பத்திரிகையை இந்த ஆண்டுக்கு முன்பு நடத்தினார். எத்தனை ஆண்டு என்பது தெரியவில்லை.

*1882* தத்துவ விவேசினி: சென்னையிலிருந்து வெளிவந்தது. தமிழ்ப் 'புரொபஸர்' பு. முனிசாமி நாயகர் இதன் ஆசிரியர்.

1882 சத்திய வேதக்கொடி: திங்கள் இதழ். மாசிலாமணி என்பவரால் கிறிஸ்துவர்களுக்காக வெளியிடப்பட்டது.

1883 சுகுணபோதினி: திங்களுக்கு இருமுறை சென்னையில் அச்சிடப் பட்டது. இதன் ஆசிரியர், இ. பாலசுந்தர முதலியார்.

1883 இந்துமத சீர்திருத்தி: பாளையங்கோட்டையிலிருந்து வெளி வந்தது. இதன் ஆசிரியர், கே. ஆறுமுகம் பிள்ளை.

1884 சத்திய வேதானுசாரம்: கிறிஸ்துவமதப் பத்திரிகை. சென்னையி லிருந்து வெளிவந்தது. இதன் ஆசிரியர் எம். சி. யோகப்பிள்ளை.

1886 பிரம வித்தியா: திங்கள் இதழ். தமிழ் வடமொழி இரண்டிலும் எழுதப்பட்டது. கே. ஆர். சீனிவாச தீக்ஷிதரால் சிதம்பரத்தி லிருந்து வெளியிடப்பட்டது. ஸ்ரீஇரண்யகர்ப்ப இரகுநாத பாஸ்கர சேதுபதியவர்களின் பொருளுதவி பெற்று நடந்தது.

1886 கலா தரங்கினி: திங்கள் இதழ். இராஜகோபால செட்டியாரால் சென்னை, சூளை திராவிட ரத்திநுகரம் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது. 1889 வரையில் நடந்ததாகத் தெரிகிறது.

1886 லோக ரஞ்சினி: திங்கள் இதழ். டி. நாதமுனி நாயுடு இதன் ஆசிரியர். பல்லாரி கௌல் பஜார் நியூட்ரல் அச்சியந்திர சாலையில் அச்சிடப்பட்டது.

1887 ஜனோபகாரம்: இதன் விவரம் தெரியவில்லை.

1887 மாதர் மித்திரி: சென்னையில் வெளியிடப்பட்டது.

1887 சிங்கை நேசன்: சிங்கப்பூரிலிருந்து வெளிவந்தது. 1890 வரை யில் நடைபெற்றது.

1887 விவேக போதினி: திங்கள் இதழ். சென்னை ரிப்பன் யந்திர சாலையில் ஏ. எல். இராசு செட்டியாரால் வெளியிட்ப்பட்டது.

1887 லோக ரஞ்சினி: திங்கள் இதழ். வேலூரிலிருந்து சி. ஜி. அப்பு முதலி என்பவர் இதனை வெளியிட்டார்.

1887 திராவிட ரஞ்சினி: திங்கள் இதழ். திருச்சியிலிருந்து வெளி வந்தது. டி. வி. வெங்கடராசு நாயுடு இதன் ஆசிரியர்.

1887 விவேக சுந்தரம்: திங்கள் இதழ். சென்னை ரிப்பன் அச்சு யந்திர சாலையில் அச்சிடப்பட்டு எஸ். நமச்சிவாய செட்டியாரால் வெளியிடப்பட்டது.

1887 ஜனோபகாரம்: திங்கள் இதழ். சென்னை ரிப்பன் அச்சு யந்திர சாலையில் அச்சிட்டப்பட்டு, சி. சடையாண்டி செட்டியாரால் வெளியிடப்பட்டது.

1887 மகாராணி: திங்கள் இதழ். மகளிருக்காக வெளியிடப்பட்டது. சென்னை வி. என். ஜுபிலி அச்சகத்தில் அச்சிடப்பட்டது. வி. கிருஷ்ணமாச்சாரியார் இதன் ஆசிரியர்.

1887 **கிராமப் பள்ளி ஆசிரியன்:** திங்கள் இதழ். கோபாலையர் இதன் ஆசிரியர். சென்னை அல்பினியன் அச்சகத்தில் அச்சிடப் பட்ட து.

1887 **உலக நேசன்:** பினங்கிலிருந்து வெளிவந்தது. ஒரு முகமதிய ரால் அச்சிடப்பட்டது.

1888 **இந்து நேசன்:** திங்களுக்கு இருமுறை. பினங்கில் அச்சிடப் பட்டது.

1888 **சன்மார்க்க போதினி:** திங்கள் இதழ். சிதம்பரத்திலிருந்து சி. ஆர். சீனிவாச சாஸ்திரியரால் வெளியிடப்பட்டது.

1889 **தீர்க்கதரிசன சுப்ரதீபிகை:** திங்கள் இதழ். கிறிஸ்துவருக்காக வெளியிடப்பட்டது. மாசிலாமணி என்பவர் இதன் ஆசிரியர்.

1889 **பிரமவித்தியா:** திங்கள் இதழ். சி. ஆர். சீனிவாச சாஸ்திரி யாரால் வெளியிடப்பட்டது.

1890 **கிறிஸ்துவன்:** இதுபற்றி ஒன்றும் தெரியவில்லை. கிறிஸ்துவப் பத்திரிகை.

1890 **சிவபக்தி சந்திரிகை:** அநந்த வைத்தியநாத சிவன் என்பவரால் திருவாடியிலிருந்து வெளியிடப்பட்டது. 1893 வரையில் வெளி வந்ததாகத் தெரிகிறது.

1890 **வைதிக சித்தாந்த தீபிகை:** திங்கள் இதழ். டி. நாதமுனி நாயுடு என்பவரால் சென்னையிலிருந்து வெளியிடப்பட்டது.

1890 **வேத விளக்கம்:** கிறிஸ்துவப் பத்திரிகை. திங்கள் இதழ். சென்னை அல்பினியன் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1891 **ஞானமித்திரன்:** சென்னை ஸ்டார் ஆப் இந்தியா அச்சுக்கூடத் தில் பிரசுரிக்கப்பட்டது.

1892 **விவேக சிந்தாமணி:** திங்கள் இதழ். சி. வி. விசுவநாதையர் இதன் ஆசிரியர். சென்னை ரிப்பன் அச்சு யந்திரசாலையில் அச்சிடப்பட்டது.

1893 **வித்தியாபானு:** கோயமுத்தூரிலிருந்து வெளியான திங்கள் இதழ். கே. என். ஈசுவரய்யா என்பவர் இதன் ஆசிரியர்.

1892 **வித்தியா விநோதினி:** சென்னையிலிருந்து வெளியாயிற்று.

1892 **ஞானதீபம்:** திங்கள் இதழ். எம். சி. சித்தி லெப்பை என்பவ ரால் கொழும்பில் அச்சிடப்பட்டது.

1893 **மாதச் சட்டப் பத்திரிகை:** திங்கள் இதழ். வி. டி. வேங்கடராம அய்யரால் சென்னையில் வெளியிடப்பட்டது.

1894 **சண்முக விஜயம்:** இதன் ஆசிரியர் டி. ஏ. கிருஷ்ணசாமி ஐயர். சென்னை ரிப்பன் அச்சுயந்திரசாலையில் அச்சிடப்பட்டது.

*1895* **சோமரவி :** தமிழ்-ஆங்கிலம். மூன்று திங்களுக்கு ஒருமுறை சென்னையிலிருந்து சி. ஈ. ஸ்ரீநிவாச ராகவாச்சாரியால் வெளியிடப்பட்டது.

*1895* **கோமாலி :** தமிழ்-ஆங்கிலம். மூன்று திங்களுக்கொருமுறை சென்னையிலிருந்து வெளியாயிற்று.

*1896* **தேஜோபிமானி :** திங்களுக்கு இருமுறை வெளிவந்தது. அம்பலவாணப் பிள்ளை இதன் ஆசிரியர். அரசியல், சமுதாயம், இலக்கியம் முதலிய விஷயங்களை இதில் வெளியிடப்பட்டன. மலாசியா நாட்டிலுள்ள பேரா என்னும் நகரிலிருந்து வெளியிடப்பட்டது.

*1897* **ஞானபோதினி :** எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை இதன் ஆசிரியர். சமயம், தத்துவம், இலக்கியம் விஞ்ஞானம் முதலியவை இதில் எழுதபபட்டன, திங்கள் இதழ். சென்னை.

*1897* **உண்மை விளக்கம் :** அல்லது, சித்தாந்த தீபிகை. திங்கள் இதழ். என். வேதாசலம் பிள்ளை அவர்களால் சென்னையிலிருந்து வெளியிடப்பட்டது.

*1897* **தமிழ்க் கல்வி பத்திரிகை :** திங்கள் இதழ். சென்னையிலிருந்து; கே. பார்த்தசாரதி ஐயங்காரால் வெளியிடப்பட்டது.

*1898* **அருணோதயம் :** திங்கள் இதழ். கிறிஸ்தவப் பத்திரிகை.

கீழ்க்கண்ட இதழ்களும் 19-ஆம் நூற்றுண்டில் வெளிவந்தன. இவை எந்த ஆண்டில் தொடங்கப்பட்டன. யாரால் வெளியிடப்பட்டன என்னும் விவரங்கள் தெரியவில்லை.

**அபிமானி :** திருவனந்தபுரம்.

**அமிர்தவசனி :** திருச்சிராப்பள்ளி.

**இலங்கை நேசன், இலங்காபிமானி, இந்துசாதனம் :** இவை இலங்கை, யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்தன.

**உதயபானு :** யாழ்ப்பாணம்.

**கோயமுத்தூர் பத்திரிகை :** கோயமுத்தூர்.

**சத்திய வர்த்தமானி :** பசுமலை.

**குடந்தை மித்திரன் :** கும்பகோணம்.

**சுதரிசனி :** கோயமுத்தூர்.

**சுதேசாபிமானி :** சேலம்.

**சுதேச நாட்டியம் :** யாழ்ப்பாணம். க. வேலுப்பிள்ளை இதன் ஆசிரியர்.

**சைசூக்குமார்த்த போதினி :** யாழ்ப்பாணம். ஆசிரியர் வல்லவை வைத்தியம்.

**சேலம் பானு :** சேலம்.

**சைவாபிமானி :** யாழ்ப்பாணம், ஆசிரியர் வல்லவை வைத்திய லிங்கம்.

**ஞானப்பிரகாசம் :** யாழ்ப்பாணம். ஆசிரியர் ஆ. சண்முகரத்தின சர்மா.

**ஞானசிந்தி :** யாழ்ப்பாணம். ஆசிரியர், வ திரி தாமோதரம் பிள்ளை.

**தமிழ்ச் செல்வன் :** திருச்சிராப்பள்ளி.

**தக்ஷிணதீபம் :** சேலம்.

**திவாகரன் :** திருசசெங்கோடு. ஸ்ரீ இரணியகர்ப்ப இரகுநாத பாஸ்கர சேதுபதியவர்கள் பொருளுதவியால் நடந்தது.

**தூதன் :** கோயமுத்தூர்.

**தென் இந்திய மித்திரன் :** திண்டுக்கல்.

**தேசாபிமானி :** கடலூர்.

**நீலலோசனி :** நாகைப்பட்டினம். ஸ்ரீ இரணியகர்ப்ப இரகுநாத பாஸ்கர சேதுபதியவர்கள் பொருளுதவி பெற்று நடந்தது.

**நேசன் :** திருச்சிராப்பள்ளி.

**பிரமஞான போதினி :** பெங்களூர்.

**லோக வர்த்தமானி :** சேலம்.

**வித்தகம் :** யாழ்ப்பாணம், தென்கோவை பண்டிதர் ச. கந்தையா பிள்ளை இதன் ஆசிரியர்.

**விவேக திவாகரன் :** யாழ்ப்பாணம்.

**ஜனமித்திரன் :** தஞ்சாவூர்:

**ஜனப்பத்திரிகை :** நாகைப்பட்டினம்.

**ஸ்தலபூஷணி :** ஸ்ரீரங்கம்.

தகவல் : நூலகர்

திரு. இரா. முத்துக்குமாரசாமி.

## XIV சென்னை மறைமலையடிகள் நூலகத்திலுள்ள இதழ்களின் தொகுதிகள்

(அகரவரிசைப்படி)

| | | | |
|---|---|---|---|
| அமிர்தவசனி | (1912) | தொகுதி | 30 |
| அறிவு விளக்கம் | (1901) | ,, | 1 |
| ஆதிதிராவிடன் | (1919) | ,, | 3 |
| ஆனந்தசாகரம் | (1922) | ,, | 1 |
| ஆனந்தபோதினி | (1915) | ,, | 1, 3-5, 7-10, 17-24. |
| இநதியத்தாய் | (1921) | ,, | 1 |
| இராமகிருஷ்ண விஜயம் | (1921) | ,, | 2, 4-16 |
| ஈழகேசரி | (1937) | ,, | 1 |
| உதயதாரகை | (1841) | மலர் | 1, 4 |
| ஊழியன் | (1938) | ,, | |
| கலாசிந்தாமணி | (1915) | தொகுதி | 1 |
| கலாநிலையம் | (1928) | ,, | 1 |
| கலாநிதி | (1929) | ,, | 1, 2 |
| கலைக்கதிர் | (1949) | ,, | 6 |
| கலைமகள் | (1932) | ,, | 1-6, 8, 9, 11, 14. |
| ,, | (1913) | ,, | 2, 4-6. |
| குமரகுருபரன் | (1950) | ,, | 9 |
| குருகுலம் | (1947) | மலர் | 17, 19. |
| சித்தாந்தம் | (1928) | தொகுதி | 1-3, 5-16, 19-25, 27-31, 33-36, 38-43. |
| ,, | (1912) | ,, | 1-8 |
| சுடர் | (1952) | மலர் | 10, 13, 15. |
| சுதந்திரச் சங்கு | (1931) | ,, | 1 |
| செந்தமிழ் | (1900) | ,, | 2-6, 9, 19. |
| செந்தமிழ்ச் செல்வி | (1926) | ,, | 1 |
| செல்வக் களஞ்சியம் | (1927) | ,, | 1 |
| சைவம் | (1915) | ,, | 1, 3-5, 7-9. |
| ஞானசம்பந்தம் | (1941) | ,, | 17 |
| ஞானபானு | (1864) | ,, | 2 |
| ஞானபோதினி | (1891) | ,, | 2-6 |
| தத்துவ போதினி | (1863) | ,, | 2, 4 |

| | | | |
|---|---|---|---|
| தமிழகம் | (1931) | ,, | 1 |
| தமிழர் | (1925) | ,, | 1 |
| தமிழர் நேசன் | (1917) | ,, | 4-7 |
| தமிழன் | (1913) | ,, | 2, 3 |
| தமிழ்ப் பொழில் | (1925) | ,, | 3-6, 14, 18, 19, 28, 32 |
| திருக்கோயில் | (1958) | ,, | 1 |
| திருப்புகழமிர்தம் | (1936) | ,, | 25 |
| தென்மொழி | (1963) | ,, | |
| நந்தி | (1964) | ,, | 4-6 |
| நவசக்தி | (1920) | ,, | 1-5, 7-12, 15, 17-19. |
| நற்போதகம் | (1848) | ,, | 2 |
| நித்திலக்குவியல் | (1962) | ,, | 1 |
| பக்தன் | (1951) | ,, | 7 |
| பஞ்சாமிர்தம் | (1924) | ,, | 1 |
| பலர் கல்வி | (1936) | ,, | 1 |
| பெண்மதி போதினி | (1891) | ,, | 1 |
| மஞ்சரி | (1947) | ,, | 11 |
| மணிமாலே | (1935) | ,, | 1 |
| மாதர் மனோரஞ்சினி | (1905) | ,, | 7 |
| மாருதி | (1926) | ,, | 1 |
| லக்ஷ்மி | (1923) | ,, | 2 |
| வித்தியாபானு | (1910) | ,, | 1, 3, 4, 5, 9. |
| வித்தியாவிகாரிணி | (1909) | ,, | 1-3 |
| விநோ விசித்திரப் பத்திரிகை | (1900) | ,, | 1 |
| விவேக சிந்தாமணி | (1892) | ,, | 2,3,5-11,13,14,18,22 |
| விவேக பானு | (1900) | ,, | 1, 3-6 |
| விவேகானந்தன் | (1925) | ,, | 1 |
| விவேகபோதினி | (1908) | ,, | 5, 6, 8 |
| விவேகோதயம் | (1916) | ,, | 1, 2 |
| ஸ்ரீகாளிதாசர் | (1922) | ,, | 1 |
| ஜனப்பிரியன் | (1900) | ,, | 1 |
| ஜனவிநோதினி | (1870) | ,, | 5, 10, 12-16, 19 |
| ஜீவரக்ஷகன் | (1931) | ,, | 5 |
| ஜோதிசுடர் | (1937) | ,, | 1 |

## XV தமிழக அரசு

## பொது (செய்தி - மக்கள் தொடர்பு)த் துறைக்கு புத்தக இதழ் பதிவுச் சட்டப்படி வரும் தமிழ் இதழ்கள் பட்டியல்.

### (அ) தமிழ்நாட்டிலிருந்து வெளிவருவன.

**I சென்னை மாநகரம்.**

1. மோட்டார்
2. இளம் விஞ்ஞானி
3. பசுங்கதிர்
4. கூட்டுறவு
5. தபஸ்யோகி
6. புதிய ஜெர்மனி
7. நாரதர்
8. கலைப்பூங்கா
9. நூருல் இஸ்லாம்
10. தியாக பூமி
11. நூலகம்
12. சினிமா மஞ்சரி
13. சினிமா குண்டூசி
14. தன்னுட்சி
15. முஸ்லிம் முரசு
16. பாறை
17. பாரதம்
18. பொது ஊழியன்
19. ஆரம்பக்கல்வி
20. தமிழ் உறவு
21. பப்ளிக் சர்வன்ட்
22. குமரி மலர்
23. ஞானரதம், மாலை விமானம்
24. மணி விளக்கு
25. கொங்கு
26. பராசக்தி
27. வைகை
28. திருவிளக்கு
29. அறமுரசு
30. முதல்வர்
31. உரிமைக் குரல்
32. புயல்
33. முழக்கம்
34. மதி ஒளி
35. செய்தி
36. பிலிம்ரோல்
37. கல்வி மலர்
38. நிலவளம்
39. டீம்
40. சோவியத் நாடு
41. சோவியத் பலகணி
42. மின் எழுத்தன்
43. காவியப் பாவை
44. தமிழ்ச் சுடர்
45. குடும்ப நலச் செய்திக்கதிர்
46. தாராமதி
47. செந்தமிழ்ச் செல்வி
48. காந்தி வட்டம்
49. மாருதி
50. கவிமலர்
51. மாலா
52. வைகை
53. கலாவல்லி
54. வேளாளர் நல்வாழ்வு

55. முஸ்லீம் முரசு
56. அறவிளக்கு
57. தமிழ்நாடு
சாரண சாரணியர்
58. வெற்றி நமதே
59. மணிமுடி
60. மறுவாழ்வு
61. பாற்கடல்
62. அமெரிக்கன் ரிப்போர்ட்டர்
63. லீடர்
64. திருப்பதி
65. தொடர்பு
66. கற்சிலை
67. அரும்பு
68. மர்மம்
69. கிராம இயக்கம்
70. சுலோபதி
71. உண்மை
72. பானுமதி
73. இனப்போர்
74. மாதவி
75. உரிமைவேட்கை
76. தமிழ்ப்பணி
77. குணம்
78. உழைப்பாளர் தொழிலாளி
79. அனுவிரதம்
80. கைத்தறி
81. கட்டுப்பாடு
82. ஜவஹரிசம்
83. கதிரொலி
84. ஸ்டுடியோ நியூஸ்
85. சத்ய கங்கை
86. திருவருள் எழிலோவியம்
87. மாணவரிசம்
88. சூரியர்
89. தமிழ்த்தேன்
90. கோகுலம்
91. காவியப் பாவை
92. நித்தியக் குவியல்
93. மாலைமணி
94. தமிழ் தூதன்
95. கணையாழி
96. சமாதானவழி
97. மூவிலைக்காய்
98. உழைப்பாளர் உரிமை
99. இளங்கதிர்
100. செய்திக் கடிதம்
101. முன்னேறும் தொழிலாளி
102. ஜனதீபம்
103. கொங்கு
104. தமிழ் உறவு
105. என். ஜி. ஓ. குரல்
106. ஆரம்பக் கல்வி
107. சினிமா ஸ்டார்
108. சவுக்கடி
109. இந்தியா
110. மணிவிளக்கு
111. தாமரை
112. வங்க ஒற்றுமை
113. செங்கோல்
114. உரிமை
115. விளக்கு
116. சாணக்கியர்
117. கலைப்பாதை
118. ஆசிரியர் கூட்டணி
119. உழவுச் செல்வம்
120. கலைக்கதிர்
121. தமிழகம்
122. தமிழ்மணி
123. ஜயந்தி
124. சமாதான வழி
125. காண்டீபம்
126. தேன்மழை
127. போல்ஸ்டார்

128. மகிழ்ச்சி
129. மாங்கல்யம்
130. வணிக ஒற்றுமை
131. தமிழ்த்தேன்
132. வண்ணச் சிறகு
133. பகலவன் நாடு
134. கமுகு
135. மதிஒளி
136. உலக நாடு
137. இந்தியா

II செங்கற்பட்டு மாவட்டம்

138. காஞ்சி
139. ஊழியன்

III கோவை மாவட்டம்

140. ஏர் உழவன்
141. குடியரசு
142. பொள்ளாச்சி வாசி
143. நாளிதழ்
144. தீனியாத் நவம்
145. தாராமதி
146. சமுதாயம்
147. தமிழ் முனை
148. செய்தி மடல்
149. குழலோசை
150. கோவை
கூட்டுறவுச் செய்தி
151. மெய்ப்பொருள்
152. கலைக்கதிர்
153. பஞ்சசீலம்
154. கற்பகம்
155. கொடிசியா செய்தி
156. ஹெலன்
157. உணர்ச்சி
158. புதிய தமிழகம்
159. சிட்டி நியூஸ்
160. சங்பிரசாத் தூதன்
161. தென் ஒலி

IV தர்மபுரி மாவட்டம்

162. வைகை
163. தர்மபுரி மாவட்ட
சிறப்பு மலர்
164. தமிழ்ச் செல்வி

V கன்னியாகுமரி மாவட்டம்

165. கவியமுது
166. குமரிக்கடல்
167. கைவிளக்கு

VI வட ஆர்க்காடு மாவட்டம்

168. தென்புலம்
169. திப்பு
170. தமிழ்நாடு மின்சார
ஊழியர்கள் சங்கம்
171. ஞானதீபம்
172. சவால்

VII இராமநாதபுர மாவட்டம்

173. கூட்டுறவு
174. சிவகாசி
175. தமிழகம்
176. கூட்டுறவுச் சுடர்
177. பனித்துளிகள்

VIII நீலகிரி மாவட்டம்

178. தோட்டத்தொழிலாளி

IX தென் ஆர்க்காடு மாவட்டம்

179. தோழன்
180. கூட்டுறவுச் செய்தி மடல்
181. உழைப்பாளி
182. அம்பேத்கார் முரசு
183. தென்மொழி

184. தமிழ்ச் சிட்டு
185. மாத 'ஜோதிடம்'

X திருச்சி மாவட்டம்

186. அஞ்சுகம்
187. மறுமலர்ச்சி
188. பஞ்சாயத்துச் செய்தி
189. வைத்திய சந்திரிகா
190. எழுத்தாளன்
191. ஆரோக்கியம்
192. கற்பூரம் ஸ்ரீ சிவசக்தி
193. தமிழ்த் தூதன்
194. சிவாஜி
195. தர்மசக்கரம்
196. டால்மியா
செய்தி கற்பூரம்

XI தஞ்சை மாவட்டம்

197. சௌராஷ்டிரமணி
198. சர்வோதயம்
199. தஞ்சைமணி
200. ஞானசம்பந்தம்
201. தமிழ்ப் பொழில்
202. ஹோமியோபதி
203. குடந்தை கூட்டுறவு
204. வியாபாரக் குரல்
205. சங்கமம்
206. அன்னையின் அருட்சுடர்
207. திருவிடம்

XII சேலம் மாவட்டம்

208. கற்பகம்

XIII திருநெல்வேலி மாவட்டம்

209. ஞானதூதன்
210. கலையமுது
211. தொழில் அணி
212. என். ஜி. ஓ. குரல்
213. குமர குருபான்
214. சாந்தி
215. புத்துயிர்
216. வரிச் செய்தி
217. தேன் முல்லை
218. தென் ஒளி
219. கவியமுது
220. கைவிளக்கு
221. சேனையர் குரல்
222. வருகைத் தூதன்
223. சுடரொளி
224. ஆராய்ச்சி
225. சிராஜ்

XIV மதுரை மாவட்டம்

226. சேவை
227. சாரணியர்
228. யுகப்புரட்சி
229. தமிழ்நாடு
230. குறிஞ்சி
231. கிராமராஜ்யம்
232. பாரதி
233. மஹாஜனம்
234. மதுரை கூட்டுறவு
235. சத்ய வர்த்தமானி
236. கைகாட்டி
237. பொய்யா விளக்கு
238. குர்ஆனின் குரல்
239. தமிழகம்
240. சிவில் சர்வன்ட்
241. தென்னரசு
242. செந்தமிழ்
243. சமாதான வழி
244. யாதவ மித்ரன்
245. கண்ணகி
246. செம்மலர்
247. தோழன்
248. தீச்சுடர்

249. சமுக ஜோதி
250. சமய ஜோதி
251. நாயுடு சமுதாயம்
252. மின்கதிர்
253. கடைசி எக்காளம்
254. சௌராஷ்டிர ஜோதி
255. நற்பண்பு
256. வீரகேசரி

(ஆ) பிற மாநிலங்களிலிருந்து வெளிவரும் தமிழ் இதழ்கள்

257. வஞ்சி நாடு
258. சைனிக் சமாசர்
259. ஸப்தகிரி
260. புதிய ஜெர்மனி
261. உயிரொளி
262. கேயிஸ்
263. நட்புறவு பிணைப்புக்கள்
264. தோட்டப் பயிர்கள்
265. கொடிசியர் செய்தி
266. புதுவைச் செய்திகள்

நன்றி :

SCRUTINY OFFICER

Public (I. & P.) Dept.

---

## XVI தமிழ்நாட்டில் வெளியிடப்படும் தமிழ் நாளிதழ்கள்

| எண் | பெயர் | பதிப்புக்கள் | வெளியிடும் நகரங்கள் |
|---|---|---|---|
| 1 | தினத்தந்தி | 7 | சென்னை, மதுரை, வேலூர், கடலூர், திருச்சி, நெல்லை, கோவை. |
| 2 | மாலைமுரசு | 7 | சென்னை, மதுரை, வேலூர், சேலம், திருச்சி, நெல்லை, கோவை. |
| 3 | தினமணி | 2 | சென்னை, மதுரை. |
| 4 | முரசொலி | 1 | சென்னை. |
| 5 | நவசக்தி | 1 | சென்னை. |
| 6 | நாத்திகம் | 1 | சென்னை. |
| 7 | நவ இந்தியா | 1 | கோவை. |
| 8 | மதுரை மணி | 1 | மதுரை. |
| 9 | தமிழ் முரசு | 2 | மதுரை, சென்னை. |
| 10 | தினமலர் | 2 | திருச்சி, நெல்லை. |

| | | | |
|---|---|---|---|
| 11 | அறமுரசு | 1 | சென்னை. |
| 12 | தீக்கதிர் | 1 | மதுரை. |
| 13 | விடுதலை | 1 | சென்னை. |
| 14 | சுதேசமித்திரன் | 1 | சென்னை. |
| 15 | தென்னகம் | 1 | சென்னை. |
| 16 | அலை ஓசை | 1 | சென்னை. |
| 17 | நவமணி | 1 | சென்னை. |
| 18 | மக்கள்குரல் | 1 | சென்னை. |
| 19 | சம நீதி | 1 | சென்னை. |
| 20 | அன்னை நாடு | 1 | சென்னை. |
| 21 | செய்தி | 1 | மதுரை. |
| 22 | இனமணி | 1 | சென்னை. |

## XVII தரமோ தரம்!

தமிழ் இதழ்களின் தரம் குறைவு என்று, சொற்பொழிவின் மூன்ரும் பகுதியில் குறிப்பிட்டிருக்கிறேன்.

சான்று: இராமநாதபுர மாவட்டம் திருப்பத்தூரில் ஓர் அன்பர் மணிவிழாக் கொண்டாடுவார் என்று மதுரையிலிருந்து வெளிவரும் மூன்று தமிழ் இதழ்களும் (தினமணி அன்று) சென்னையிலிருந்து வெளிவரும் காலைப் பதிப்பு ஒன்றும் 6 பக்கங்கள் முதல் 8 பக்கங்கள் வரை சிறப்புக் கட்டுரைகள் முதலியனவற்றை 1975 பிப்ரவரி மாதத்தில் வெளியிட்டன. ஆனல் குறிப்பிட்ட அறுபான் ஆண்டு மண விழா நடைபெறவில்லை என்ற செய்தியை அந்த இதழ்கள் ஒரு வரியில் கூட வெளியிடவில்லை. இதுதான் தமிழ் இதழ்கள் பெரும்பாலானவற்றின் தரம், ஒழுக்கம்.

## XVIII S. A. P. ANNAMALAI

Sathappa Annamalai Palaniappa Annamaḷai was born in 1924 with a silver spoon in his mouth. He strayed into journalism to keep himself active by taking up some hobby. His associates (especially P. V. Parthasarathy, his friend from school-days) and himself have built *Kumudam* into India's largest cirulated weekly with an ABC figure more than five lakhs. Kumudam has a presence in most literate Tamil households.

The secret of SAP's success lies in his ability to pack each issue with maximum possible materiaḷ covering a wide spectrum. Sales shōt up with the issue of gift of bonus supplements of booklets or on the spot photo-features and articles like the one on C. N. Annadurai's illness in New York. This bonus issue was the only source of comprehensive coverage to hungry public.

SAP's film-reviews are bold, sharp, spicy, short and telling, spelling the box-office hit or the financial ruin of the film reviewed.

By nature, SAP is shy and retiring. He likes a good joke and has the capacity to laugh at himself. He is not deeply attached to money and is known to be extremely generous. Nurtured in the national movement, he is imbued by a high degree of idealism. Always clad in Khadi, he appears in a half-sleeve shirt but with a full, endearing and friendly smile.

SAP's success in journalism is in striking contrast to the prejudice of the Chettiars towards anyone who ever dared to read a newspaper in the early decades of this century and indicates the distance travelled by the community and its diversification of business.

**Dr. A. ALAGAPPAN (ALJI)**
M.A, M.Sc., Ph. D., BARRISTER-AT-LAW,
Chief, Water Resources, United Nations.

## XIX எஸ். ஏ. பி.

திரு. அண்ணுதுரை ஆட்சிக்கு வந்து, 'தமிழ் நாடு' என்ற பெயரை சட்டமன்றத்தில் பிரகடனப்படுத்துவதற்கு முன்பே, அதைத் தம் பத்திரிகையின் முகவரியில் பிரகடனப்படுத்தியவர் திரு எஸ். ஏ. பி. அது மட்டுமல்ல, அதுவரை எல்லாப் பத்திரிகைகளிலும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டு வந்த முகவரியை முதன் முதலாகத் தமிழில் வெளியிட்டதும் இவர் தான்.

பத்திரிகை என்ருல் அது இப்படித்தான் இருக்க வேண்டும். அதற்குப் பொருளடக்கம் உண்டு. கடைசிப் பக்கத்தில் விளம்பரம் உண்டு என்பது போன்ற சம்பிரதாயங்களைத் தகர்த்தெறிந்தவர்.

சொந்த வாழ்க்கையில் பெரும் ஆத்திகராக விளங்கும் இவர், தம்முடைய பத்திரிகையில் அந்த வாடையே அண்ட விடுவதில்லை.

ஆயினும் அண்மையில் அதில் ஏற்பட்டிருக்கும் ஒரு சிறு மாறுதல்: 'வாரியார் விருந்து'.

ஒருவேளை, பக்திச் சுவையோடு நகைச் சுவையும் அதில் கலந்திருப்பதுதான் அதற்குக் காரணமாக இருக்குமோ, என்னவோ?

தமிழ் வாரப் பத்திரிகைகளின் போக்கிலிருந்து முற்றிலும் மாறுபட்ட தனித்தன்மையுடன் புதுமைப் புரட்சிகள் பல செய்து, அவற்றில் வெற்றியும் கண்டு வருவது இவரை ஆசிரியராகக் கொண்ட 'குமுதம்'

ஆசியாவிலேயே இன்று அதிக விற்பனை எண்ணிக்கை கொண்ட பத்திரிகை எது தெரியுமோ? 'குமுதம்' தான்.

இந்த விந்தை மனிதரைப் பொது நிகழ்ச்சிகள் எதிலும் பார்க்க முடியாது. அப்படியே ஒரு வேளை அத்தி பூத்தாப் போல் எங்காவது பார்த்தால் அங்கே சுவாமி சின்மயானந்தாவின் சொற்பொழிவு நிகழ்ந்து கொண்டிருக்கும்.

எளிமையும் அடக்கமும் மிக்க இவரை நேரில் சந்திப்பவர் 'இவரா அவர்?' என்று வியக்க நேரிடும்.

கடுஞ் சொல் என்பதே தெரியாதவர். எப்பொழுதும் முகமலர்ச்சியுடன் காணப்படும் எஸ். ஏ. பி. அண்ணுமலைக்கு ஒரு தனி அழுத்தமும் கண்டிப்பும் உண்டு.

ஆண்டுதோறும், இவர் தவருமல் ஆற்றி வரும் ஒரு கடமை: 'குமுத'த்தின் கௌரவ ஆசிரியராக இருந்து மறைந்த டாக்டர் அழகப்பச் செட்டியார் அவர்களை நினைவு கூர்ந்து ஓரிரு பக்கங்கள் எழுதுவது; அல்லது பிறரை எழுத வைப்பது.

பகவத் கீதையில் ஈடுபாடு உள்ள இவர் ஒரு உண்மையான கர்மயோகி.

இந்தச் சாது மனிதர் எப்போதும் அணிவது துல்லியமான அரைக்கைக் கதர்ச் சட்டை. இவருடைய பேச்சும் எழுத்தும்கூட அளவோடு துல்லியமாகவே இருக்கும். சிரிப்பு-அடக்கம்-பண்பு இம்மூன்றின் சுருக்கமே எஸ். ஏ. பி.

— தினமணி கதிர்

## XX சேலம் மாவட்டத்தில் வெளிவந்த இதழ்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ........................ | கிழமை | திருச்செங்கோடு | |
| 2. | விவேகதிவாகரன் | மாதம் | ,, | 1915 |
| 3. | ஆரிய வைசிய அபிமானி | ,, | சேலம் | 1915 |
| 4. | வைசிய மித்திரன் | ,, | ,, | 1920 |
| 5. | தாய்நாடு | கிழமை | திருச்செங்கோடு | 1923 |
| 6. | கொங்கு மண்டலம் | மாதம் | ,, | 1924 |
| 7. | தர்மபோதினி | ,, | சேலம் | 1924 |
| 8. | கொங்கு வேளாளமித்திரன் | வாரம் | திருச்செங்கோடு | 1925 |
| 9. | தென்னாடு | கிழமை | சேலம் | 1926 |
| 10. | விமோசனம் | மாதம் | திருச்செங்கோடு (காந்தி ஆசிரமம்) | 1929 |
| 11. | விசயலட்சிமி | மாதம் | தர்மபுரி | 1932 |
| 12. | ஆத்திக மித்திரன் | ,, | தர்மபுரி | 1934 |
| 13. | கதாநிதி | ,, | சேலம் | 1936 |
| 14. | திருக்குறள் ஆட்சி | ,, | இராசிபுரம் | 1943 |
| 15. | பூந்தோட்டம் | ,, | சேலம் | 1947 |
| 16. | சுதந்திரம் | ,, | திருச்செங்கோடு | 1948 |
| 17. | தினத்தந்தி | நாளிதழ் | சேலம் | 1948 |
| 18. | பகுத்தறிவு | மாதம் | சேலம் | 1951 |
| 19. | தமிழ்மன்னன் | மாதம் | தர்மபுரி | 1954 |
| 20. | தமிழ்நாடு | நாள் | சேலம் | 45 ஆண்டுகளுக்குமுன் |
| 21. | தீண்டாதார் துயரம் | மாதம் | சேலம் | 35 ,, |
| 22, | மக்கள் குரல் | வாரம் | சேலம் | 15 ,, |
| 23. | புதுவாழ்வு | வாரம் | சேலம் | 15 ,, |
| 24. | செங்குந்தன் | மாதம் | நாமக்கல் | 5 ,, |
| 25. | பெரியாரிசம் | ,, | சேலம் | 15 ,, |
| 26. | பாரதம் | ,, | சேலம் | 15 ,, |
| 27. | நகரசோதி | ,, | சேலம் | 25 ,, |
| 28. | ஸ்ரீ லோகமித்திரன் | மாதம் | நாமக்கல் | |
| 29. | நடை | காலாண்டு இதழ் | சேலம்-3. | |

## இன்று நடப்பவை

| இதழின் பெயர் | வகை | இடம் | காலம் |
|---|---|---|---|
| 30. முதன்மொழி | மாத இதழ் | சேலம் | |
| 31 தேனமுதம் | மாத இதழ் | ,, | |
| 32. மனம் | ,, | ,, | |
| 33. சங்கொலி | மாத ஈரிதழ் | ,, | |
| 34. மாலைமுரசு | நாளிதழ் | ,, | |
| 35. சேலம் மாங்கனி | இலவச மாத இதழ் | ,, | |
| 36. சேலம் சேவகி | மாத இதழ் | ,, | |
| 37. வள்ளல் பாரி | கிழமை இதழ் | ,, | |
| 38. மல்லி | மாத இதழ் | ,, | |

நன்றி: தமிழகத் தமிழாசிரியர் கழகம்
13-வது மாநாடு மாநாட்டு மலர், சேலம், 1972.

## XXI நூல் விவரப் பட்டியல்


1. THE PRESS IN INDIA :
   Annual report of the Registrar of Newspapers, I & B, Ministry, New Delhi.

2. THE SMILE OF MURUGA :
   Tamil Literature of South India, Kamil Zvelebil, Leiden.

3. Proceedings of the III International Conference Seminar of Tamil Studies : (Institut Francais de' Indologie, PONDICHERRY 1973) pp. 245—254. ANALYSIS OF SOME SELECT TAMIL JOURNALS IN 1969 — Rev. Fr. V. M. GNANAPRAKASAM.

4. TAMIL POLITICAL JOURNALISM :
   The Pre-Gandhian Period by V. SUBRAMANIAN (TAMIL CULTURE Vol. X No. 4 Oct—Dec 1963)

5. The History of the Tamil Press:
Dr. K. K. PILLAY. Paper presented in 1966 at Mysore at the Fourth Annual Conference of the Institute of Historical Studies, 21, Kenderdine Lane, Calcutta 700—012.

| | | | |
|---|---|---|---|
| 6. | 19-ம் நூற்றுண்டில் தமிழ் | — | அ. மு. பரமசிவானந்தம் (தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம்) |
| 7. | தேசியம் வளர்த்த தமிழ் | — | கா. திரவியம் பழனியப்பா பிரதர்ஸ் சென்னை. 1974. |
| 8. | கிழமை, வார இதழ்கள் | — | தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை. |
| 9. | எனது ராஜினுமா | — | டி. எஸ். சொக்கலிங்கம் |
| 10. | திரு.வி.க. வின் வாழ்க்கைக் குறிப்புக்க்ள். | | |
| 11. | எழுத்தாளர் கல்கி | — | முருகு சுப்பிரமணியன் |
| 12. | வ. வே. சு. ஐயர் | — | டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் |
| 13. | பாரதியார் கட்டுரைகள் | — | பெ: தூரன் |
| 14. | பேனு மன்னர் சொக்க லிங்கம் | | |
| 15. | தினத்தந்தி வெள்ளி விழா மலர் | | |
| 16. | தினத்தந்தி | — | கையேடு (உதவி ஆசிரியர் களுக்காக.) |
| 17. | திரு. வி. க. | — | (கல்கி நினைவுச் சொற்பொழிவு) அ. ச. ஞானசம்பந்தம் பாரி நிலையம், சென்னை. |
| 18. | அச்சுக்கலை | — | மா. சு. சம்பந்தம் பாரி நிலையம், சென்னை. 1960. |
| 19. | விடுதலைப் போரில் தமிழ் வளர்த்த வரலாறு | — | ம. பொ. சி. (இன்ப நிலையம், சென்னை-4, 1970) இந்நூலில் பக்கம் 224 முதல் 245 வரையுள்ள பத்திரிகையுலகில் தமிழ்த் தொண்டுஎன்ற பகுதி ஆராய்ச்சி மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும். |

20. குத்தூசி குருசாமி — குருவிக்கரம்பை வேலு (வளவன் பதிப்பகம், 274, இந்திரா நகர், சென்னை-20.) 1975

21. கல்கியைப் பற்றிக் கல்கி இதழில் சுந்தா எழுதி வரும் கட்டுரைத் தொடர்.

22. குழந்தை இலக்கிய வரலாறு — பூவண்ணன்

23. குழந்தை இலக்கிய மலர் — பழநியப்பா பிரதர்ஸ் சென்னை.

24. இதோ தமிழ் இதழ்கள் — மறைத்திரு. வி. எம். ஞானப் பிரகாசம் (இலயோலாக் கல்லூரி, சென்னை)

25. A. B. C. (AUDIT BUREAU OF CIRCULATIONS) Certificates for leading Tamil Journals including Break-up figures district-war.

26. செட்டிநாடும் தமிழும் — 'சோமலெ' (இந்நூலில் இதழ்கள் பற்றி ஒரு விரிவான கட்டுரை உளது).

27. கல்கி வெள்ளி விழா மலர்

28. புதுத்தமிழ் முன்னேடிகள் — டாக்டர் சாலை இளந்திரையன் (இந்நூலில் திரு. வி. க. வின் பத்திரிகைப் பணி பற்றிய ஆய்வுக் கட்டுரை உளது. இது தமிழ்ப் புத்தகாலய வெளியீடு).

29. தேர்தல்களில் தந்தி, தினமணி முதலிய நாள் இதழ்களின் செல்வாக்குக் குறித்து 1968 அளவில் ஓர் அமெரிக்கர் ஆராய்ந்துள்ளார். ஆங்கிலத்தில் அமைந்த இக்கட்டுரையின் தட்டச்சுப்படி மதுரைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத் துறையில் உளது.

30. கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையினர் முதுகலைப் பொருட் கட்டுரையாக தமிழ்ப் பத்திரிகைகள் பற்றி குளத்தூரன் என்பவர் எழுதியிருப்பதை 1975 சூன் திங்களில் வெளியிடுவார்கள் என்று தெரிகிறது.

31. அமைச்சர் ஆதித்தனார் — எழுதியவர் குரும்பூர் குப்புசாமி (ராணி பதிப்பகம், சென்னை-7). 1969

———

## XXII பிற்சேர்க்கை

'தினத்தந்தி' வெளியீடாகிய வெள்ளி விழா மலரோ, கையேடோ கிடைக்கவில்லை என்பதை 5-ம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளேன்.

இந்நூல் அச்சாகி முடியும் நிலையில் 'தினத்தந்தி'—யின் இயக்குநர் திருவாளர் பா. சிவந்தி ஆதித்தன் அவர்கள் அவருடைய அலுவலகத்தில் இந்த வெளியீடுகள் இருப்பதைப் பார்த்துக் கொள்ள வாய்ப்பு நல்கினார்கள். அதன் பயனாக, பின்வரும் பகுதிகளை இங்கே வெளியிடுகிறேன். இப்பகுதி தினத்தந்தி வெள்ளிவிழா மலரிலிருந்து எடுக்கப்பெற்றது.

# தினத்தந்தியின் 25 ஆண்டுப்பணி

'தந்தி' யினாலேயே தமிழ் படித்தவர்கள், பலர். தமிழகத்தில் வாழ வந்த பல பிற மொழியாளர்கள் 'தந்தி' யின் எளிய தமிழைப் படித்துப் படித்து தமிழ் கற்றுக் கொண்டார்கள்.

### கல்வி வளர்ச்சி

தமிழகத்தின் கல்வி வளர்ச்சியிலும் "தினத்தந்தி" க்குப் பங்கு உண்டு.

ஆண்டுதோறும் பள்ளி இறுதி வகுப்பு (எஸ். எஸ். எல். சி.) தேர்வில் தமிழகத்திலேயே முதன்மையாகத் தேறும் மாணவ-மாணவிக்கு "தினத்தந்தி" ரூ. 1,000 பரிசு அளிக்கிறது.

இந்தியாவிலேயே எந்த ஒரு பத்திரிகையும் செய்யாத அரும் பணி, இது.

### முதன் முதலாக!

தமிழ் பத்திரிகைத் துறைக்கு 'தந்தி' ஆற்றியிருக்கும் பணி மிகப் பெரிதாகும். இந்தியாவிலேயே பத்திரிகைத் துறையில் தமிழகத்தை முதலிடத்தில் கொண்டுவந்து வைத்திருப்பது, 'தினத்தந்தி' தான்.

தமிழ்ப் பத்திரிகைகளில் நாள்தோறும் தொடர்ந்து கருத்துப்படம் (கார்ட்டூன்) வெளியிடும் வழக்கத்தை உண்டாக்கியது, 'தினத்தந்தி' தான்.

படக்கதை, சிரிப்பு போன்ற பொழுதுபோக்கு அம்சங்களுக்கு வழிகாட்டியதும் 'தந்தி' தான்,

"கடல் கன்னி" (சிந்துபாத்) படக்கதை கடந்த 8 ஆண்டுகளாகத் 'தந்தி'யில் தொடர்ந்து வெளிவருகிறது. பெரியோர் சிறியோர்

அனைவரும் இந்த படக்கதையைப் படிக்கிறார்கள். எந்தத் தமிழ்ப் பத்திரிகையும் செய்யாத சாதனை, இது.

"இண்டர்டைப்" என்று சொல்லக் கூடிய அச்சுக் கோக்கும் எந்திரமும், "லெட்லோ" என்று சொல்லப்படும் தலைப்பு கோக்கும் எந்திரமும் 'தினத்தந்தி'க்கு இருக்கின்றன. இந்த வசதிகளையுடைய ஒரே தமிழ்ப் பத்திரிகை 'தந்தி' தான்.

## தினத்தந்தி

மதுரையில் 'தந்தி' தொடங்கப்பட்ட பின், 1948-ல் சென்னையில் "தினத்தந்தி" தொடங்கப்பட்டது லஸ் பகுதியில் ஒரு வாடகைக் கட்டிடத்தில் இருந்த 'தினத்தந்தி', 1959-ல் பெரிய ரோட்டரி அச்சு, வசதியுடன் மவுண்டுரோடுக்கு முன்னேறியது. 1960-ல் எழும்பூரில் சொந்தமாக நாலு மாடி கட்டிடம் கட்டிக் கொண்டு குடியேறியது. இவ்வளவு பெரிய சொந்தக் கட்டிடத்தில் இருந்து வெளிவரும் ஒரே நாளிதழ் "தினத்தந்தி" தான்.

இன்று மதுரை, திருச்சி, கோவை, திருநெல்வேலி, சென்னை ஆகிய நகரங்களில் இருந்து "தினத்தந்தி" அச்சாகி வெளிவருகிறது.

நாள்தோறும் எட்டுப் பக்கங்களுடன் வெளிவரும் ஒரே நாளிதழ் "தினத்தந்தி" தான்.

கடைசி நேரச் செய்தியையும் வாசகர்களுக்குச் சுடச்சுட கொடுப்பதற்காக 'தினத்தந்தி' சென்னைப் பதிப்பு இரண்டு அச்சு எந்திரங்களில் அச்சிடப்படுகிறது.

இவையெல்லாம் 'தினத்தந்தி' யின் வளர்ச்சியையே காட்டுகின்றன.

## காகித ஆலை

பத்திரிகைகள் நடத்த பத்திரிகைத் தாள் முக்கியமாகத் தேவை. வெளிநாடுகளில் இருந்து பெருமளவில் பத்திரிகைத்தாளை இந்தியா இறக்குமதி செய்கிறது. எத்தனை நாளைக்கு நாம் பிறர் கையையே எதிர்பார்க்க முடியும்? அதோடு மேல் நாடுகளில் பெரிய பத்திரிகைகள் எல்லாம் சொந்தத்திலேயே காகித ஆலைகளும் வைத்திருக்கின்றன.

'தந்தி' தொடங்கிய பொழுது பத்திரிகைத் தாள் கிடைக்காமல் வைக்கோலை அரைத்து காகிதம் செய்து அச்சிட்டார்கள். ஒரே நேரத்தில் ஐந்து ஊர்களில், 'ரோட்டரி' அச்சு எந்திரத்தில், பல இலட்சக் கணக்கான பிரதிகள் அச்சிட்டு வெளியிடும் இன்று அவ்வாறு செய்ய முடியுமா? ஆகவே காகித ஆலை ஒன்று தொடங்க ஆதித்தனார் முயற்சி எடுத்துக் கொண்டார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உடை மரங்கள் ஏராளமாக வளர்கின்றன. இந்த மரங்களை விறகாக எரிப்பதற்கு மட்டுமே மக்கள் பயன்படுத்தி வந்தார்கள். இந்த மரத்தை அரைத்துக் கூழாக்கி காகிதம் செய்ய முடியுமா என்ற ஆராய்ச்சியில் ஆதித்தனார் இறங்கினார். அவரே மரத்தை வெட்டி, துண்டாக்கி, தூளாககி, காகிதம் செய்து பார்த்தார். உடை மரத்தில் இருந்து காகிதம் தயாரிக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. உடனே, உடை மரத்துண்டுகளை வெட்டி டேராடுனில் உள்ள காட்டுவள ஆராய்ச்சி நிலையத்துக்கு அனுப்பினார். அங்கேயுள்ள நிபுணர்கள் பரிசோதனைகள் நடத்தி, உடை மரத்தில் இருந்து காகிதம் தயாரிக்க முடியும் என்பதை உறுதிப்படுத்தினார்கள்.

